# Union Special

SOUVENIR

2007



# யூனியன் சிறப்பு மலர்

# UNION'S SPECIAL SOUVENIR

யா / யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

J / UNION COLLEGE, TELLIPPALAI

# யூனியன் சிறப்பு மலர்

## 2007

# எமது அதிபர்



திரு. சு. புண்ணியசீலன்
B.Ed. SLPS I



# சமர்ப்பணம்

எமது கல்லூரியின் 2007ம்

ஆண்டுக்குரிய பரிசளிப்பு நிதியுதவியை

வழங்கிய

டாக்டர்.திரு.கந்தையா வைத்தியநாதன்

அவர்களின்

தந்தையார்

ஆசிரியமணி அமரர் கந்தையா

அவர்களுக்குச்

சமர்ப்பணம்



# யா / யூனியன் கல்லூரி

## கொடிக் கீதம்

தெல்லியூரில் ஆதியாக வந்த அன்னையே - என்றும்  
ஏற்றமோடு நாம் துதிப்போம் ஒன்று கூடியே  
கல்வி ஓங்க கலை சிறக்க வந்த அன்னையே  
தெல்லியூரின் யூனியன் கல்லூரி வாழ்க வாழ்கவே.

அதிபர் துரை ரத்தினம் ஐயாவின் சேவையால்  
எங்கள் கல்லூரி வளர்ந்தது பல்வளங்கள் கொண்டதாய்  
பெருகும் பெருமை பேணிக்காக்க பச்சை நீலமாய்  
கொடியை ஏற்றிடுவோம் எங்கள் அன்னை பாதம்பணிந்தே

ஆயிரத்தெண்ணூற்றிப் பதின் ஆறாம் ஆண்டிலே  
மக்கள் அறிவுத்தாகம் தீர்க்க வந்த அன்னை ஜோதியே  
ஆயிரம் பல்லாயிரம் அறிஞர் கூட்டத்தை - நம்  
நாட்டிற்கீயும் யூனியன் கல்லூரி வாழ்கவே.

செந்தமிழோடாங்கிலமும் கணிதம் விஞ்ஞானம்  
சேரும் அழகியலும் தொழில்நுட்பம் சமயம் சமூகம்  
சுந்தர மனையியலும் வர்த்தகம் விளையாட்டிலும்  
சிந்தை நிறை வெற்றி தரும் கல்லூரி வாழ்கவே.

அதிபரோடு ஆசிரியர் மாணவர் வாழ்க  
வெற்றிமேலே வெற்றி நல்கும் எங்கள்  
அன்னையே வாழ்க என்று கொடியை ஏற்று  
அன்னை பாதம் பணிந்து போற்றுவோம் - எங்கள்  
யூனியன் கல்லூரி வாழ்க வாழ்க வளர்கவே.

# முகாமைத்துவக்குழு



பிரதிஅதிபர்
**திரு. இ. சண்முகேஸ்வரன்**
BSC, Dip.in.Ed,M.Ed



அதிபர்
**(பொன் பரமானந்தர் ம.வி)**
**திரு. சோ. இராமநாதன்**
B.COM, Dip.in.Ed



உபஅதிபர்
**திரு. வே. சந்திரசேகர்**
BSC, Dip.in.Ed,M.Ed



பகுதித் தலைவர் (தரம் 6 - 7)
**திருமதி. நா. சிவஞானராஜா**
SP.Trd in Technical Subject



பகுதித் தலைவர் (தரம் 8 - 9)
**செல்வி. பு. இளையதம்பி**
BA, Dip.in.Ed



பகுதித் தலைவர் (தரம் 10 - 11)
**திரு. சி. ஜெயரூபன்**
BA, Dip.in.Ed

# துர்க்காதுரந்தரியின் ஆசிச்செய்தி

## தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சிறப்பு மலர் – 2007



எமது யாழ் மண்ணில் வலி வடக்குப் பிரதேசம் மிகவும் நெருக்கடியான நிலைக்கு உள்ளாகி இருக்கும் இடம் என்பதை அனைவரும் அறிவார்கள். இந்த நிலையிலும் கல்விக் கடமைகளையும், சமூகக் கடமைகளையும் மனப்பூர்வமாக ஆற்றிவரும் நிறுவனங்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. மக்கள் நடமாட்டம் குறைந்த தெல்லிப்பழைச் சந்தியில் விளங்கிவரும் யூனியன் கல்லூரியின் பணிகளையும், அதிபர், ஆசிரியர்கள் அனைவரது ஈடுபாட்டையும் நாம் அனைவரும் மனப்பூர்வமாகப் போற்றுகிறோம். பரீட்சைப் பெறுபேறுகளிலும், விளையாட்டுத் துறையிலும் பாடசாலை மட்டப் போட்டிகளிலும் இக்கல்லூரி தரமான இடத்தைப் பெற்றுவருவது கண்கூடு.

சமய நிகழ்ச்சிகளிலும் ஆசிரியர்களும், மாணவர்களும் சிறப்பாக ஈடுபட்டு வருகின்றனர். நெருக்கடியில் ஞானம் பிறக்கும் என்பதற்கு ஏற்ப இக் கல்லூரிச் சமூகம் அனைவராலும் பாராட்டத்தக்க பணிகளை ஆற்றிவருவது வரவேற்கத் தக்கதாகும். மேலும் மேலும் கல்வி வளத்திலும், கடமை உணர்விலும் உயர்ந்து ஓங்க வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா

# அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி



"நாற் பயனடைதல் நூற் பயனாமே" எனும் மகுட வாசகத்தினைத் தாங்கி, அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள்ளும் கூட மாணவச் செல்வங்களை வளர்த்தெடுக்கும் பணியைச் செவ்வனே மேற்கொள்ளுகின்றது. யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை என்லாம்.

கல்வி, விளையாட்டுத்துறைகளில் வாண்மை விருத்தியை ஏற்படுத்துவதோடு, சாரணியமும் சளைக்காது செயற்படுகின்றது. 2007 ஆம் ஆண்டிற்குரிய ஜனாதிபதி சாரணா் விருது இக்கல்லூரி மாணவனுக்குக் கிடைத்ததென்பது யாழ் மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும்.

இவ்வாறே அகில இலங்கை ரீதியில், கலைத்துறையில் முதலிடங்களைப் பெற்றுக்கொண்டமையும், வலைப்பந்தாட்டக் குழுவில் இணைந்து அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற Warverly Netball Centre International School இடையேயான போட்டியில் கலந்து கொண்ட மாணவியும் தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பெருமை சேர்த்தவர் எனலாம்.

"வறுமையில் செம்மை" என்பதற்கு ஏற்ப சேமிப்புப் பழக்கத்தால் மக்கள் வங்கியின் சாதனையாளா் விருதைப் பெற்றுக்கொண்டமையும் பாராட்டத்தக்கதொன்றாகும்.

"யூனியன் சிறப்பு மலர்" சிறப்புற வெளிவர சாதனை படைத்து ஊக்குவிக்கும் மாணவச் செல்வங்களும் வாண்மையை விருத்தி செய்யும் பாடசாலைச் சமூகமும் பல்லேறு வழிகளிலும் சிறந்தோங்க வாழ்த்துவதோடு, இப்பாடசாலை சா்வேதச தரத்திற்கு உயரவும் என் உளமார்ந்த நல்லாசிகள் உரித்தாகட்டும்.

க. கணேஷ்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாணம்.

# வடமாகாணக் கல்விப்பணிப்பாளரின் ஆசிச்செய்தி



யா/யூனியன் கல்லூரி தனது பரிசளிப்பு விழாத் திருநாளில் "யூனியன் சிறப்பு மலர்" என்ற சஞ்சிகையை வெளியிடவுள்ளது. 2006, 2007 காலப்பகுதிகளில் கல்லூரியின் செயற்பாடுகளுடாக பெருமைகளைத் தேடித் தந்த அடைவுகள், சாதனைகள் ஆகியவற்றை இம்மலர் தாங்கி வெளிவருகிறது.

பற்றுணர்வுடன் சமூகப் பின்னணியைக் கொண்ட இக்கல்லூரி அறிவுசார் அடைவுகளில் உயர் நிலையிலுள்ளது. க.பொ.த (சா/த), (உ/த) தொடர்ச்சியான உயர் பெறுபேறுகள் அனைவரையும் கவர்ந்துள்ளன. வருடாவருடம் கல்வியியல் கல்லூரி அனுமதிகள், பல்கலைக்கழக அனைத்துத்துறை அனுமதிகள் ஆகியவற்றின் போது கணிசமான மாணவர்கள் இடம்பெறுவதால் இக்கல்லூரியின் வளர்ச்சி அபிமிதமானது.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் இக்கல்லூரி தடம் பதித்துள்ளது. வலைப்பந்தாட்ட நிகழ்வுகள், சாதனைகள் நெஞ்சைவிட்டகலாதவை. இந்நிகழ்வில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற மாணவி வெளிநாட்டு வலைப்பந்தாட்டப் போட்டிக் குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்டமையும் இக்கல்லூரிக்குக் கிடைத்த ஒரு சிறப்பு அம்சமாகும். அத்துடன் கல்லூரியின் ஒரு மாணவன் 2007ம் ஆண்டிற்கான ஜனாதிபதி சாரணர் விருதையும் பெற்றுள்ளார்.


சிறுசிறு விடயங்களுக்கப்பால் நின்று கல்லூரியின் பொதுநலனைப் பார்க்கின்ற போது வித்தியாசமான சூழலில் இக்கல்லூரி அமைந்தபோதிலும் மாணவர்களின் நல்லொழுக்கம், விடாமுயற்சி, அதிபரின் கடும் உழைப்பு, ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை, கல்லூரியை நம்பிக்கையுடன் எதிர்நோக்கும் சமூகம் ஆகிய அனைத்துச் சக்திகளும் சேர்ந்து யூனியன் கல்லூரி என்ற விருட்சத்தின் மேம்பாட்டிற்கு வித்துக்களாக அமைந்துள்ளன.

இத்தனை சிறப்புக்கள் கொண்ட இக்கல்லூரி "யூனியன் சிறப்பு மலர்" என்ற சஞ்சிகையை வெளியிடுவதனையிட்டு அகமகிழ்வதோடு சம்பந்தப்பட்ட அனைவரையும் பாராட்டுகின்றேன்.

**வரோதயநகர்,**
**திருகோணமலை.**

**வீ. இராசையா,**
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
மாகாணக்கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்,
திருகோணமலை.

# பதில் உபவேந்தரின் ஆசிச்செய்தி



தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இரு வருடங்களுக்கொருமுறை வெளிக் கொணரும் யூனியன் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பதினெட்டுத் தசாப்தங்களுக்கு மேலான பெருமைமிக்க வரலாறும், நீண்ட பிரகாசமான கல்விப் பாரம்பரியமுமுடையது யூனியன் கல்லூரி. ஆரம்பம் முதலே அறிவு தொடர்ந்து பிரவாகிக்கும் ஊற்றாக விளங்கி வட வலிகாமத்தைச் செழுமைப்படுத்தி வந்துள்ளது. அர்ப்பணிப்பு மிக்க சேவை காரணமாக மாணவர்களாலும், பெற்றோராலும் பெரிதும் மதித்துப் போற்றப்பட்ட பல அதிபர்களும், ஆசிரியர்களும் இக்கல்விச்சாலையை அலங்கரித்து அதனை வளர்த்தெடுத்துள்ளார்கள். இவர்களதும், இவர்களைப் போன்ற ஏனைய உயர்ந்த உள்ளம் கொண்ட பெரியோர்களதும் ஓய்வற்ற முயற்சியே இக்கல்வி நிறுவனத்தை வந்தடைந்த மாணவர்கள் சிறந்த உத்தம குணங்களுடைய பெரும் புலமையாளர்களாக உருவாகக் காரணமாயமைந்தன.

யாழ் குடாநாட்டில் நிலவும் யுத்தசூழ்நிலையால் அதிகளவு பாதிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுள் யூனியன் கல்லூரியும் ஒன்று. 1990 முதல் பல இடப் பெயர்வுகளுடன் தற்காலிக நிலையங்களில் பலவாண்டுகள் இயங்கி வந்த இக்கல்லூரி எதிர்கொண்ட பல்வேறு சவால்களை இக்கல்லூரிச் சமூகத்தினர் மிகவும் மெச்சத்தக்க முறையில் வெற்றிகொண்டு கல்லூரியை வளர்ச்சிப்பாதையில் இட்டுச்சென்றதை - இட்டுச்செல்வதைக் கண்டு பூரிப்படைகிறேன். 1996 ஆம் ஆண்டு முதல் அதிபராகப் பணிபுரிந்து வரும் திரு.சு.புண்ணியசீலன் அவர்கள் இப்புகழ்பூத்த கல்லூரியின் பெருமையையும் உயர்நிலையையும் மங்கவிடாது காப்பாற்றி மேலும் பிரகாசமடைய வைக்கச் சங்கற்பித்து நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. சவால்களுக்கும், இடர்பாடுகளுக்கும் முகங்கொடுத்துக்கொண்டு இக்கல்லூரி தேசிய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் பல்வேறு துறைகளில் ஈட்டிய, ஈட்டிவருகின்ற சாதனைகள் இதற்குச் சான்றுகளாயமைகின்றன. இதற்காக அதிபர் அவர்கள் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவர். திரு.சு.புண்ணியசீலன் அவர்கள் தமது கல்லூரி மாணவர்கள் எப் பரீட்சைக்குத் தோற்றினும், எங்கு எப்போட்டியிற் பங்குபற்றினும் அங்கு தாமே நேரில் பிரசன்னமாயிருந்து மாணவர்களை ஊக்குவிக்கும் பண்பை நான் அவதானித்துள்ளேன். இத்தகு அர்ப்பணிப்புடன் செயற்படும் அதிபரின் வழிநடத்தலின் கீழ் இக்கல்லூரி வருங்கால சந்ததியினருக்கு ஒரு கலங்கரை விளக்காகத் திகழும் என்பதில் எனக்கு எதுவித ஐயமுமில்லை.

இம்மலர் வெளிவருவதற்கு அயராது உழைக்கும் மலராசியருக்கும், சமூகத்தினருக்கும் எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இக்கல்லூரி சமூகத்தின் எதிர்கால முயற்சிகள் வெற்றியடைய எனது மனப்பூர்வமான நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இ. குமாரவடிவேல்

**பேராசிரியர் இ. குமாரவடிவேல்**
பதில் உபவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# பதில் உபவேந்தரின் ஆசிச்செய்தி



செல்வி பத்மா யுவராஜா கல்லூரி இசை நடனத்துறையினூடாக வெளிக் கொணரும் முயற்சி சிறந்த மகத்தான சாதனையே. அதற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பரதநாட்டியக் கலையானது மேலான பேறுடைய கலைகளுள் ஒன்றாகும். நடன ஆசிரியர்கள் பலர் பாடப்புத்தகங்கள் இல்லாமல் கற்பித்து வருகின்றனர். இந்நூல் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரிதும் பயன்படும். பரதநாட்டியம் பற்றிய நூல்கள் தமிழில் குறைவாகவே உள்ளன. இக்குறையைப் போக்கும் வகையில் இந்நூல் வெளிவருவது பாராட்டுக்குரியது.

யாழ் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் 1990 முதல் பல ஆண்டுகளாக நடனத் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். 1996 ஆம் ஆண்டு முதல் நடனத்துறைத் தலைவராகவும் பணியாற்றுகின்றார். இவரது கலைப்பணியும் கற்பித்தல் அனுபவமும் இந்நூலுக்கு வலுச் சேர்க்கின்றன.

இந்நூல் வெளிவருவதற்கு உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ. குமாரவடிவேல்

பேராசிரியர் இ. குமாரவடிவேல்
பதில் உபவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வலயக் கல்விப்பணிப்பாளரின் ஆசிச்செய்தி



புகழ்பூத்த யூனியன் கல்லூரியில் இவ்வருட பரிசு நாளன்று வெளிவரும் யூனியன் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவகையடைகிறேன். இம்மலர் கல்லூரியின் சிறப்புக்களைப் பழைய மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் அறியப்படுத்துவதுடன் அவர்களுக்கும் கல்லூரிக்கும் உள்ள தொடர்புகளை மேலும் வலுப்படுத்தும் சாதனமாகவும் அமையும். மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் சாதனமாகவும் இம் "மலர்" அமைகிறது.

பல்வேறு இடப்பெயர்வுகள், இன்னல்கள் வந்தபோதும் பிரபல பாடசாலை அந்தஸ்தினை இக்கல்லூரி தக்கவைத்துக் கொண்டிருப்பது அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணமான சேவையினாலாகும். தரம் 9, தரம் 11, உயர்தர வகுப்புக்களின் பெறுபேறுகள் கடந்த பல வருடங்களாக முன்னிலையில் இருப்பது இக்கல்லூரியின் தனித்துவமாகும்.

விளையாட்டுத்துறையில் இக்கல்லூரி மாணவர்கள் மாவட்ட, மாகாண நிலையில் வெற்றிபெற்று தேசிய நிலையில் தமது திறன்களை ஒவ்வொரு வருடமும் வெளிக்காட்டி வருவது யாவரும் அறிந்ததே. ஏனைய இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் தேசிய நிலையில் இக்கல்லூரியின் மாணவர்கள் முத்திரை பதிப்பதில் தவறுவதில்லை.

ஏழேழு பிறப்பிற்கும் தொடர்ந்து வரும் கல்விச் செல்வத்தினை வழங்கிவரும் இக்கல்லூரியின் சாதனைகள் தொடர இறையருளைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

வலிகாமம் வலயம்,
மருதனார்மடம்,
சுன்னாகம்.

ப. விக்னேஸ்வரன்
வலயக் கல்விப்பணிப்பாளர்

# பிரதிக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



சமூக வரலாற்றுத் தடங்களில் அவ்வப்பொழுது கோலோச்சுகின்ற தலைமைகளின் சிந்தனை நீரோட்டங்களின் பிரதிபலிப்பாகவும் அவர்களின் குறுகிய, நீண்டகால இலக்குகளை எய்துவதற்கான பிரயத்தனங்களின் குவிமையமாகவும், கால ஓட்ட அறிவியற் பரப்பின் விரிவாக்கங்களுக்கேற்ப இளவயதினரைச் சமூக இசைவாக்கம் செய்கின்ற பணிகளில் ஈடுபடுகின்ற பல்வேறு சமூக, சமய நிறுவனங்களில் முதன்மைவாய்ந்த நிறுவன அமைப்பாக கல்விக்கூடங்கள் விளங்குகின்றன. இந்தவகையில் 19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணச் சமூகத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த அமெரிக்க மிசனரிமாரினால் 1816 இல் ஆரம்பிக்கப்பட்டு சுமார் இரு நூற்றாண்டு காலமாக சமூக விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்து ஆலவிருட்சம் போல் கல்விக்கிளை பரப்பி பல வித்துக்களை உருவாக்கி உலகம் பூராகவும் புகழ்பரப்பி நிற்கும் இக்கல்விக்கூடம் வழமைபோல் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கும் களம் அமைக்கின்ற யூனியன் சிறப்பு மலர் வெளியீட்டுக்கு எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வரலாற்று நிகழ்வுகள் மற்றும் சாதனைகளை பிற்காலச் சமூகம் அறிந்து கொள்வதற்கும், அதனூடாக எதிர்கால மாணவர் பரம்பரை பாடசாலையின் மகுட வாசகம், நோக்கக்கூற்று, பணிக்கூற்று என்பவற்றிற்கேற்ப தம்மை சுயகட்டுப்பாட்டுக் குட்படுத்தி செம்மைப்படுத்தி வழிப்படுத்துவதற்கும் இம்மலர் வெளியீடுகள் கலங்கரை விளக்குகளாக வழிகாட்டுவதாக அமைகின்றன. எனவே இம்மலர் வெளியீட்டு முயற்சிகள் எத்துணை இடையூறுகள் வந்தாலும் தொடர்ந்து வெற்றிபெற இறை ஆசியை வேண்டுகின்றேன்.

**திரு. சு. சுந்தரசிவம்**
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம் வலயம்.

# கோட்டக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



தெல்லிப்பழை கல்விக்கோட்டம் மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் கல்விப் பெறுபேற்றிலும், இணைப்பாடச் செயற்பாட்டிலும் சாதனை நிலைநாட்டிக் கொண்டிருக்கும் பெருமையைக் கொண்டிருக்கிறது.

அத்தகைய சாதனைகளைப் படைக்கும் பாடசாலைகளில் ஒன்றான தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் "யூனியன் சிறப்புமலர்" இன்று மலர்ந்து மணம்வீசப்போவதை உணரும்போது உளம் மகிழ்ந்து என் இனிய வாழ்த்துக்களை முன்வைக்கின்றேன்.

மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் சோர்வின்றி வளர்ந்து வரும் இப்பாடசாலையை அரவணைத்து ஊட்டமும் ஊக்கமும் வாரிவழங்கி அயராது உழைக்கும் அதிபர், ஆசிரியர் மற்றும் கல்லூரி சார்ந்த அனைவரும் பாராட்டப்பட்ட வேண்டியவர்கள்.

ஈராண்டுக்கு ஒருமுறை மலரும் யூனியன் மலர், பாடசாலை மாணவரின் கல்விப் பெறுபேற்று வளர்ச்சி, பல்துறை சார்ந்த சாதனைகளையும் இதழ்களில் பரவி மலர்கிறது. இத்தகைய சாதனையாளர்கள் யூனியன் வரலாற்றிலே பதியப் படுகிறார்கள். மேலும் வரலாற்றில் இடம்பெறவுள்ள இன்னும் பல மாணவர்களை உருவாக்க இம்மலர் வழிகாட்டியாகும்.

இன்று மலர் மணம் வீசுகிறது. தொடர்ந்தும் பல மலர்கள் மலரும் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்துகின்றேன்.

**திரு. ச. கைலாசநாதன்**
கோட்டக் கல்விப்பணிப்பாளர்,
தெல்லிப்பழைக் கல்விக்கோட்டம்.

# The Unions

Old Students Association of Union College
Tellippalai, Sri Lanka
theunions.org.uk

26 Bromyard Avenue,
London W3 7AU
01/01/07

## Message from OSA President UK branch




The Union College Students Association in the United Kingdom (UNIONS UK) wishes The principal, staff, students and parents a memorable Prize Day. The UNIONS UK is proud to learn of the various achievements of the students of Union College, Tellippalai in various examinations and sports. And all this success being achieved under high security conditions that deprive basic essentials to the local citizens. The UNIONS UK congratulates the principal, staff, students and their parents for this incredible success.

The UNIIONS UK was formed 13 years ago. We have through various functions and generous donations raised funds that have supported many essential and activities at Union College, Tellippalai for many years. We pledge our continued support to our alma mater for justified courses in the foreseeable future.

Our best wishes to all

President: R.T.N Thayalan

# பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி



எமது யூனியன் கல்லூரியின் யூனியன்ஸ் சிறப்புமலர் 15.10.2007ம் திகதி வருடாந்தப் பரிசளிப்பு விழாவுடன் வெளிவருவதையும், அம்மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையுமிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

10.09.2002ம் திகதி எமது கல்லூரி தனது சொந்த இடத்தில் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. எந்தவித வளங்களும் அற்ற நிலையில், மாணவர்களுக்கான அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் கல்லூரியைத் தொடர்ந்து நடாத்த முடியுமா? என்ற ஏக்கநிலை கல்விச் சமூகத்தினை வாட்டியது.

இந்நிலையிலும் தளராத கல்லூரி அதிபர் திரு.சு.புண்ணியசீலன் அவர்கள் கல்விப்பணிப்பாளர்கள், அரசஅதிபர், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புகள் கொண்டு பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன்விரும்பிகள், ஆகியோரது பக்க உதவியுடன் கடும் செயலாற்றி மிகக் குறுகிய காலத்தில் கட்டட வசதிகளுடன் மாணவர்கள் கல்வி கற்பதற்கான பௌதீக வளங்களை ஏற்படுத்தினார்.

நிர்வாகத்திறன் கொண்ட பிரதிஅதிபர், உபஅதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்களின் கடும் உழைப்பினால் எமது பிள்ளைகளின் கல்வித் தேர்வுகள், விளையாட்டுத்துறை, தமிழ்மொழித்தினம், வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டம் வரை வெற்றிகளை ஈட்டிக்கொண்டிருக்கின்றன. 2006ம் ஆண்டு A/L பரீட்சைப் பெறுபேறுகளின்படி 79 மாணவர்கள் பல்கலைக்கழகத் தகுதி பெற்றனர். 2006ம் ஆண்டு O/L பெறுபெறுகளின்படி தொடர்ந்து 8 வருடங்களாக வலயத்தில் முன்னணியில் நிற்கின்றது. 2006ம் ஆண்டு நடைபெற்ற 9ம் தரத்திற்கான மாகாண மட்டப் பரீட்சையில் 9 பாடங்களிலும் 100% சித்தியைப் பெற்றனர். முக்கிய பாடமாகிய கணிதத்தில் 98.9% சித்தியைப் பெற்றுள்ளனர். இதே நிலையில் விளையாட்டுத் துறையிலும் எமது கல்லூரி கல்வியுடன் சமாந்தரமாக வெற்றிகளை தேசிய மட்டத்திலும் பெற்றுள்ளது. 17, 19 வயது வலைப்பந்தாட்டப் பெண்கள் அணியினர் 1ம் இடத்தைப் பெற்று அகில இலங்கைப் போட்டியில் கலந்து கொண்டார்கள். வலைப்பந்தாட்ட வீராங்கனை இ.மைதிலி அவர்கள் ஒரேயொரு தமிழ் மாணவியாக அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேசப் பாடசாலைகள் வலைப்பந்தாட்டப் போட்டிக்குச் சென்று எமது கல்லூரிக்குப் பெருமையைத் தேடித் தந்துள்ளார். இதுமட்டும் இல்லாமல் தமிழ்த்தினப் போட்டிகளில் எமது கல்லூரி

வில்லுப்பாட்டுக் குழுவினர் அகில இலங்கை ரீதியாக போட்டியில் 1ம் இடத்தைப் பெற்றத் தங்கப்பதக்கத்தினைப் பெற்றனர்.

இத்தகைய வெற்றிகளுக்குப் பின்னணியாக ஊக்கமும் ஆக்கமும் கொடுக்கும் எமது கல்லூரி அதிபர் அவர்கள் சிறந்த அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டு வெளிநாட்டுக்குச் சென்று வந்தார்கள்.

எமது கல்லூரி உயர்பாதுகாப்பு வலயத்துள் அமைந்துள்ளது. பல தடைகளையும், சோதனைகளையும், கெடுபிடிகளையும் தாண்டியேதான் மாணவர்கள் குடாநாட்டின் பலபகுதிகளிலிருந்தும் வருகின்றார்கள். போக்குவரத்து வசதி மிகக் குறைவான நிலையிலும் பிள்ளைகளை அனுப்புவதற்குப் பெற்றோர்கள் மேற்கூறிய காரணங்களுக்காகவே விரும்புகிறார்கள்.

எமது கல்லூரியின் வளர்ச்சி மென்மேலும் வளர்ந்து பல கல்விமான்களை உருவாக்குவதற்கான தன்னலமற்ற சேவையினை அதிபர், பிரதிஅதிபர், உபஅதிபர், ஆசிரியர் குழாம் ஏனைய கல்விச் சமூகத்தினருக்கும் ஒருமித்த கருத்துடன் செய்ய வேண்டும் என்று கல்லூரியின் வளாகத்தில் கோவில் கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை புவனேஸ்வரியின் துணைவேண்டி ஆசிகூறி அமைகின்றேன்.

**திரு. பொ. தங்கராசா**
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

# பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி



எமது கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவான 15.10.2007 அன்று வெளிவர இருக்கின்ற "யூனியன் சிறப்பு மலர்" க்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். இரு ஆண்டுகளுக்கு ஒரு தடவை என்பதற்கிணங்க 2001 இல் இருந்து யூனியன் சிறப்பு மலர் வெளிவந்த வண்ணம் இருக்கின்றது. அந்தவகையில் நான்காவது மலர் இந்த ஆண்டு வெளிவருகின்றது.

யூனியன் சிறப்பு மலரானது பாடசாலையின் வரலாற்று ஆவணம் போன்றது. எதிர்காலச் சந்ததிக்கு நிகழ்காலத்தில் நடப்பதை எழுத்துருவாக்கி வைக்கும் ஆவணம். தற்காலச் சூழலில் இது கடினமான முயற்சி, ஆனாலும் அவற்றுக்கெல்லாம் ஈடுகொடுத்து எடுக்கப்படுகின்ற முயற்சி பாராட்டுதற்குரியது.

2002 இலிருந்து சொந்த இடத்திலே இயங்கத் தொடங்கிய கல்லூரியின் கற்றல் கற்பித்தல், இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் தொடர்ந்தும் உயர்ந்த நிலையிலேயே காணப்படுகின்றது. ஆனாலும் பாடசாலைக்கு நினைத்த மாத்திரத்திலே யாரும் சென்றுவர முடியாத துர்ப்பாக்கிய நிலையே தொடர்ந்தும் உள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்ந்தும் மற்றைய பாடசாலைகளை விட முன்னணியில் காணப்படுகின்றது. அத்துடன் ஏனைய போட்டிகளைப் பொறுத்தளவில் தேசியமட்டம் வரை செல்கின்றது. இது தொடர் சாதனையாக விளங்குகின்றது. இத்தோடு இரு ஆண்டுகளாக இரு மாணவருக்கு ஜனாதிபதி சாரணர் விருது கிடைத்ததோடு வலைப்பந்தாட்ட வீராங்கனை ஒருவர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் பங்குபற்றியமை கல்லூரியின் பெயரை சர்வதேச அரங்கில் உயர்த்தியுள்ளது.

இவ்வாறான சாதனைகளுக்கெல்லாம் துணைநிற்கின்ற அதிபர், பிரதிஅதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் ஆகியோரை எமது சங்கம் சார்பில் பாராட்டி இந்நிலை தொடர இறையருளை வேண்டி அமைகின்றேன்.

**திரு. த. வாமதேவன்**
பழைய மாணவர் சங்கம்
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

# [illegible]

## வாழ்த்துச் செய்தி

[illegible] 13.10.2007 [illegible]



[illegible]

2002 [illegible]

[illegible]

[illegible]

[illegible]

# 2007.10.15

# யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை

## பரிசுத்தினம்

## 2006 - 2007

எமது ஏற்றத்திற்கு உறுதுணையாக இருந்து அருளாசி நல்கிவரும், அன்னை புவனேஸ்வரியின் பாதாரவிந்தங்களைப் பணிந்து, இன்றைய இந்நன்னாளில் நடப்பாண்டிற்கான அதிபரறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மதிப்பிற்குரிய திருவாளர் கந்தையா கணேஷ் அவர்கள் யாழ் மண் பெற்றெடுத்த புதல்வன், மும்மொழித் தேர்ச்சியுடையர்; 1961 இல் பொது எழுதுநர் சேவையில் தன்னை இணைத்துக் கொண்டவர்; தன்னார்வத்தால், முயற்சியால் 1978 இல் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து 28 வருடங்கள் சேவையாற்றி தன்னையும் உயர்த்திக்கொண்டவர்.

ஆரம்ப காலங்களில் அம்பாந்தோட்டை, அநுராதபுரம் போன்ற இடங்களில் பணியாற்றி பின்னர் தமிழ்ப்பகுதிகளில் சேவையாற்றியவர். செட்டிக்குளத்தின் உதவி அரச அதிபரானார்; 1981 இல் மன்னாரில் கமநலசேவை சிரேஷ்ட உதவி ஆணையாளராய் இருந்தபோது மன்னாரின் செழிப்பிற்கென சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை உலகவங்கி நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தியதுடன் மட்டுமல்லாது, நீர் முகாமைத்துவத்தில் நிபுணத்துவம் பெற இந்தியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா போன்ற வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலாவையும் மேற்கொண்டவர். 1991 இல் அரச அதிபராய் சேவை புரிந்தபோது இயல்புநிலை பாதிக்கப்பட்டு கஷ்டமான சூழ்நிலையில் இருந்த மன்னாரில் சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டவர். இக்காலப்பகுதியில் பாங்கொக், காட்மண்டு போன்ற வெளிநாடுகளில் முகாமைத்துவப் பயிற்சியில் பங்குகொண்டு தம் மக்களுக்காக உழைத்தவர்.

1995 மிகவும் இக்கட்டான காலப்பகுதி. வவுனியா அரச அதிபராகப் பதவியேற்ற காலம். வடக்குப் பிரதேசங்கள் யாவற்றிலிருந்தும் வாழ்விடங்களை, வாழ்வாதாரங்களை விட்டு நிர்க்கதியாக இடம்பெயர்ந்து வவுனியா நோக்கி வந்தவர்களுக்காகவும், அரச கட்டுப்பாடற்ற பிரதேசத்து மக்களுக்காகவும் அத்தியாவசிய தேவைகளை, போக்குவரத்து ஒழுங்குகளை தடைகள் பலவற்றின் மத்தியிலும் பெற்றுக்கொள்ள வழிசமைத்தவர்; நலனோம்பு நிலையங்களில் இவர்களைக் குடியமர்த்தி ஆவன செய்தவர்.

இத்தகையவரது சேவையை 2005 இல் பெற்றுக்கொள்கிறது யாழ் மண். இங்கும் இவரது முகாமைத்துவத்தின் கீழ் பல சேவைகள் தொடர்ந்தன். ஆழிப்பேரலை அனர்த்தங்களைச் சந்தித்தோருக்காக துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு புனர்வாழ்வளித்தவர். 2006.08.11 இற்குப் பின் பொருளாதார, போக்குவரத்து நெருக்கடிகளுக்கு இன்றுவரை முகங்கொடுத்து வரும் எம்மக்களது தேவைகளறிந்து சேவை நல்கும் இவரது பணி கண்டு பாராட்டுகின்றோம். இவரது சேவையில் யாழ் மண் சுபீட்சம் அடையப் பிரார்த்திப்போமாக. இத்தகையவர் இன்றைய நன்னாளில் பிரதம அதிதியாகப் பிரசன்னமாகியதையிட்டு கல்லூரி பெருமிதமடைந்து நிற்கிறது. இவரை கல்லூரி கரங்கூப்பி வரவேற்கிறது.

இவர்தம் உயர்ச்சிக்கு பின்புலமாக இருந்து, இன்றைய காலத்து மக்களுக்குச் சேவைகளைப் பெற்றுக்கொடுக்க அல்லும்பலகலும் உழைத்து நிற்கும் தன் கணவரது தேவைகளை நிறைவேற்றி வரும் திருமதி பரமேஸ்வரி கணேஷ் அவர்களது கரங்களால் எம் மாணவச் செல்வங்கள் பரிசில்கள் பெறுவதையிட்டும் நாம் உவகையுறுகின்றோம். இவரையும் வரவேற்று நிற்கிறது கல்லூரி.

கல்வியால் ஒளிபெறும் வடமராட்சி மண் பெற்றெடுத்த தவச்செல்வி திலகவதி பெரியதம்பி. தன் ஆரம்பக் கல்விதனை சிம்மியா மெமோறியல் பாடசாலையில் ஆரம்பித்து, பருத்தித்துறை மெதடிஸ்ற் கல்லூரியில் உயர்கல்வி வரை கற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்து விஞ்ஞானமாணியுமானார். தொடர்ந்து பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும், அதன் பின் விவசாயம், பொருளியல் ஆகிய துறைகளில் M.Sc பட்டத்தையும் பெற்று தனக்கும் தன் தாய் மண்ணிற்கும் பெருமை சேர்த்தார்.

இத்தனையும் பெற்ற இவர் 1966 இல் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் முதல் சேவையைத் தொடர்ந்ததுடன், கல்வியமைச்சின் பாடவிதானச் செயற்பாடுகளை ஆற்ற தன்னை இணைத்துக்கொண்டார். யாழ்ப்பாணத்தில் 1971 இல் விவசாயப் பாடக் கல்வி அதிகாரியாக, வடமராட்சியில் 1987 இல் கோட்டக் கல்வி அதிகாரியாக, 1989 இல் யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளராக, 1990 இல் வடக்கு கிழக்கு மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராக, 1993 இல் மீண்டும் யாழ் கல்விப் பணிப்பாளராய், 1995 இல் மாகாணக் கல்விப் பணிப்பாளராய் சேவைகள் பல செய்து, 1997 இல் ஓய்வினைப் பெற்றுக்கொண்டார். எனினும், தொடர்ந்து யாழ் மண்ணின் கல்வியைக் கருத்திற்கொண்டு அதன் அபிவிருத்திப் பணிகளுக்காக இன்றுவரை உழைத்து நிற்கும் இவர் இன்று எமது கல்லூரிக்குச் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிப்பதையிட்டு நாமெல்லாம் பேருவகையுறுகின்றோம். இவரையும் அன்புக் கரங்கூப்பி வரவேற்று நிற்கிறோம்.

எமது கோட்டத்துள் அமைந்திருக்கும் பாடசாலைகளது உயர்ச்சிக்காக உழைத்து நின்று, அதன் தேவைகளறிந்து சேவைகளாற்றி ஆலோசனை கூறி வழிநடத்தும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர் இன்று சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பது பெருமைக்குரியதே. இவரையும் நாம் அன்போடு வரவேற்கின்றோம்.

**உயர் பாதுகாப்பு வலயத்தினுள்ளும் உயர்ச்சி பெறும் கல்லூரி.......**

சிந்தனைகள் புத்தக வடிவமாக்கப்பட்ட போதிலும் எம்மத்தியில் செயல்வடிவம் பெறாதது ஏனோ? இது உரியவர்களது சிந்தனைக்கு. இன்னும் ஒன்பது வருடங்களில் இரண்டாவது நுற்றாண்டைக் காணவுள்ள எம் கல்லூரி, இடம்பெயர்ந்து மீண்டும் சொந்த இருப்பிடமேகி வருடங்கள் ஐந்தைத் தொட்டுவிட்ட போதிலும், களநிலைமைகள் நாளாந்தம் வலுப்படுத்தப்பட்டு, ஆக்கிரமிப்பாளரது ஆதிக்கம் மிகுந்த பிரதேசமாகி விட்ட நிலையில், அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையிலிருந்து மீளமுடியாது, கல்லூரிச்சமூகத்தினரது பாதுகாப்பு கேள்விக்குறியாகவுள்ள நிலையில், பல அசௌகரியங்களை அன்றாடம் சந்தித்தவர்களாய் இருக்கின்றபோதும், நம்பிக்கையுடன் வருகைதரும் மாணவர்களது கற்றற் செயற்பாடுகள் உன்னதம் பெற உழைத்து நிற்கும் கல்லூரி ஆசிரியர்களதும் நிர்வாகத்தினரதும் பூரண ஒத்துழைப்பும், அயரா உழைப்பும், கல்லூரி சாந்தவர்தம் உதவும் மனப்பாங்கும், இனிவரும் காலங்களிலும் கல்லூரி உயர்ச்சிக்கு உறுதுணையாக இருக்குமென உறுதியோடு நம்புவோமாக.

“வரும் ஆண்டில் பயன் பெற பயிர் நடுங்கள், வரும் பத்தாண்டில் பயன் பெற மரம்நடுங்கள், வரும் நூற்றாண்டில் பயன் பெற புதிய பாடசாலைகளையும் கல்விநிறுவனங்களையும் உருவாக்குங்கள்'' என்ற இத்தீர்க்கதரிசனம் புறக்கணிக்கப்பட்ட நிலையில், “சவால்கள் நிறைந்தால்தான் ஆர்வம் பெருகும்” என்பதற்கு அமைய ஆட்சியாளரதும், எம் அரசியலாளர்களதும், கல்வியாளரதும் பாராமுகமும், மாற்றாந்தாய் மனப்பாங்கும், மௌனநிலையும், “கல்வியில் சமவாய்ப்பு” மறுக்கப்பட்ட நிலையில் கடந்தகாலத்து குடாநாட்டு பணிமுடக்கங்களும், சுதந்திரமாக நடமுடியாத அச்சுறுத்தலான சூழலில், குடாநாட்டிற்கான பல முனைகளிலான போக்குவரத்துகளும் தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட நிலைகளில் பாதுகாப்புக் கெடுபிடிகளினிடையே அழுத்தம் நிறைந்தவர்களாய் செயற்படவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை காணப்பட்டது.

2006. 08. 11 லிருந்து 82 நாள்கள் நாமும் கல்லூரியும் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட பாதகமான சூழ்நிலையில் கல்லூரி வளங்களுக்கு ஏது நடக்குமோ என்ற அச்சநிலையில், மாணவர்தம் கற்றற் செயற்பாடுகள் மட்டுமன்றி புறக்கிருத்தியச் செயற்பாடுகளும் முற்றாக முடக்கப்பட்ட நிலையில், கல்லூரி மாணவரதும் ஆசிரியரதும் குடும்பங்களது வாழ்விடம் பறிபோன நிலையில், அசாதாரண போக்குவரத்துநிலையில் என பல பரிமாணங்களில் பல முனைகளில் அழுத்தப்பட்ட வேளையிலும் தனிமைப்படுத்தப்பட்ட திறந்தவெளிச்சிறைக்கூமாகத்திகழும் கல்லூரி தனது செயற்பாட்டில் வருடாந்தம் உயர்ச்சி கண்டு வருவது பெருமைக்குரியதே. இதற்கு கல்லூரிச் சமூகத்தினரது ஆர்வம் மிகுதியே காரணமாகும்.

## கசப்பானவை ஆனாலும்.....

கசப்புகள் மிகுந்த காலங்களைக் கடத்திவிட்டது 2006. வீண்விரயமாகிய இக்காலம் போன்று இனி வரும் காலங்கள் அமைந்துவிடக்கூடாது என்பதற்காக இறைவனை வேண்டி நிற்போமாக. நாளாந்த உணவுத்தேவைக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்யமுடியாத நிலை, ஊரடங்கு தளர்த்தப்பட்ட வேளைகளில் கடைகள் தோறும் வரிசையில் நின்ற அவலநிலை, பொருளாதார முடக்கம் என்னையும் சுடலாம் உன்னையும் சுடலாம் எவ்விடத்திலும் சுடப்படலாம் என்ற பயப்பீதியில் வீட்டிற்குள் முடங்க வேண்டிய கட்டாயம். இந்நிலையில் எமது மாணவர் நிலை கேள்விக்குறியாகியது. அதிலும் மாகாணப்பரீட்சைக்குத் தோற்றவேண்டிய தரம் 9, பொதுப்பரீட்சைக்கு முகங்கொடுக்கவேண்டிய தரம் 11 மாணவர்கள் நிலையோ பெரும் இக்கட்டாகியது.

இம் மாணர்களது நலனைக் கருத்திற் கொண்டு விரைந்து செயற்பட்டனர் பிரதியதிபரும், உதவி அதிபரும், ஆசிரியரும், கல்லூரி நிர்வாகத்தினரும். அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் அமைந்த எமது கல்லூரிக்குச் செல்வதற்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்ட போதும், ஏமாற்றங்களைச் சந்தித்த போதும், பிரதி அதிபரது தலைமையில் நிர்வாகத்தினரதும் முகாமைத்துவக் குழுவினரதும், நேரம்பாராது செய்தொடர் முயற்சியால், முக்கியமான ஆவணங்கள், தளபாடங்கள் நகர்த்தப்பட்டு, மாணவர் கற்றல் நடவடிக்கைகள் தொடர வழிசமைத்தனர். குடாநாட்டு ஏனைய பாடசாலை களுக்கு மாணவர்கள் சென்று வரும் சாதகநிலை இருந்தபோது, எமது மாணவர்களுக்கு அது பாதகமாகவே அமைந்தது. இந்நிலையில் மாணவரை வரவழைத்து, ஆசிரியர்தம் மனைகளிலும் (திரு.இ.நவகேதீஸ்வரன், செல்வி.ப.பிரபா) தனியார்கல்வி நிறுவனங்களிலும் (ஆசிரியர்.வி.துஸ்யந்தன், வினைல்ஸ், ஸ்ரார்) வசதியீனங்கள் பல இருந்தும், பல தடைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் சிரமங்கள் பல இருந்த போதிலும் ஆசிரியர்கள் துரித செயற்பாட்டை மேற்கொண்டனர். குறுகிய காலத்துள் பரீட்சைகளுக்குத் தயார்செய்ய வேண்டிய கடப்பாட்டில் செயலட்டைகள் வழங்கப்பட்டு, வழிகாட்டப்பட்டனர், அதற்கான பலனையும் பெற்றுக்கொண்டனர். கல்லூரி வளர்ச்சி கருதி அதீத பிரயத்தனத்துடன் செயலாற்றிய, செயலாற்றி வரும் நிர்வாகமும், ஆசிரியர் குழாமும், சக உத்தியோகத்தினரும் கல்லூரியால் என்றும் நினைவு கூரப்படுவர். காலம் கசப்பாகக் கடந்தபோதும் அவை உவப்பாகவே அமைந்தன. கடந்த காலம் இவர்கள் பெற்ற அனுபவங்களை சொல்லில் வடித்து விடமுடியாது. ஆர்வம் மிகுந்த செயற்பாடுகள் சவால்களை எதிர்கொள்ளக் காலாகியது என்பதில் மிகையேதுமில்லை.

## நம்மோடு பயணிப்போர்.....

கல்லூரி அன்றாடம் சந்தித்து வரும் போராட்ட நீரோட்டத்தில் யா/பொன் பரமானந்தர் ம.வி.யும் ஓடி வருகிறது. அதிபரும் ஆசிரியர்களும் எம்மோடிணைந்து கடந்த ஆண்டு கஷ்டங்களுக்கு ஆளாகி கல்விச் செயற்பாட்டை மேற்கொண்டனர். இவர்களுக்கும் கல்லூரியின் நன்றிகள் உரித்தாகுக.

## ஏற்றந் தரும் ஏணிகளாய்.....

அனைத்து விருத்திக்கும் மையத்தளமாக இயங்கி வரும், வினைத்திறன்களை அதிகரித்து வரும், உயிர்த்துடிப்பான, உணர்வுபூர்வமான, மனச்சாட்சியுடைய ஒற்றுமை மிக்க, அர்ப்பணிப்புடைய, விதிக்கப்பட்ட நேரத்தைவிட மேலதிக நேரத்தைச் செலவிட்டு தம் மாணாக்கருக்காகவும், கல்லூரி மதிப்பை உயர்த்தவும், ஆரோக்கியமான சூழலை உருவாக்கிவரும் நம் ஆசிரியர்குழாத்தின் கல்விச் செயற்பாடுகள் வரவேற்கத் தக்கவை, பாராட்டுதற்குரியவை.

மாணவர் ஏற்றம் கருதி ஏணிகளாய் நிற்கும் இவர்களது வாண்மை விருத்திக்கும் நல்வாழ்விற்கும் ஆண்டவன் அருள்புரிவாராக. கடந்த காலத்து அழுத்தங்கள் பல இவர்களை அலைக்கழித்த போதும் கல்லூரி வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்து வருகின்றமை, உயர் பெறுபேறுகள் பெற்றிட உதவியாயின. பிரதியதிபரதும், உதவியதிபரதும், நிர்வாகதத்தினரதும், முகாமைத்துவக் குழுவினரதும், ஆசிரியர்களதும் பூரண ஒத்துழைப்பிற்கு நன்றிகள் பற்பல.

இன்று கல்லூரி 43 நிரந்தர ஆசிரியர்களையும் பகுதிநேர ஆசிரியர் ஒருவரையும் கொண்டு செயற்பட்டு வருகிறது.

## வேற்றிடம் சென்றோர்.....

சமூகக்கல்வி போதித்தவரும், சாரணர் பொறுப்பாளரும், விளையாட்டுத் துறையில் முக்கிய பங்கு வகித்தவருமான ஆசிரியர் திரு.வை.முருகதாஸ் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்று தன் சேவை தொடருகின்றார். விளையாட்டுத்துறைக்கு வெற்றிகள் பெற உதவிய ஆசிரியருக்கு நன்றிகள் கூறும் அதேவேளை, எதிர்காலம் செழிப்புறவும் வாழ்த்தி நிற்கிறோம்.

ஆய்வுகூட உதவுநர் திரு.து.குகன் அவர்களும் இடமாற்றம் பெற்று வேற்றிடத்தில் பணி தொடர்கின்றார். இவருக்கும் நன்றிகளும், எதிர்கால வளமான வாழ்விற்கு வாழ்த்துக்களும்.

## சேவைக்கு ஓய்வு தந்தவர்.....

எல்லோர்க்கும் தாய் போன்று செயற்பட்டவரும் தரம் 6, 7 மாணவர்களுடன் பெரும்பொழுதைக் களித்தவரும் விஞ்ஞானத்தைப் போதித்தவருமான ஆசிரியை திருமதி. தோ.சச்சிதானந்தம் அவர்கள், தமது சொந்த நலனைக் கருத்திற் கொண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவராற்றிய வைக்கு நன்றிகள் கூறுவதுடன், இவர்தம் குடும்பத்தோடு வளம்பெற்று வாழவும் வாழ்த்தி நிற்கிறோம்.

**வந்தனர் இவர்களும்.....**

கல்லூரி அமைவிடம் கண்டு அஞ்சினாலும் எம்மோடு சேவையாற்ற இவர்களும் முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கது. செல்வி.பி.பத்மநாதன் (நூலக விஞ்ஞானம்), சொற்பகாலம் வெளிமாவட்டத்தில் பணியாற்றி மீண்டும் எம்மோடிணைந்த திரு.ம.ரவீஸ்வரன் (விஞ்ஞானம்), திரு.லம்போதரன் (பகுதிநேர ஆங்கிலம்) ஆகியோரது வருகையும் அவர்தம் சிறப்பான சேவையும் பாராட்டுதற்குரியது. இவர்தம் பணி தொடர்ந்திட வேண்டுவோம்.

**உதவி நிற்போர்.....**

கல்லூரி ஏற்றத்திற்கு நிர்வாகத்தோடு காலம் பாராது கைகொடுத்து உதவி நிற்கும் முகாமைத்துவ உதவியாளர், அலுவலக உத்தியோகத்தர், ஆய்வுகூட உதவுநர், காவலாளி, தோட்டப் பராமளிப்பாளர், ஆகியோருக்கு அவர்தம் பணிக்கு நன்றிகளும் செழிப்பான வாழ்விற்கு வாழ்த்துகளும் உரித்தாகுக.

**நாளைய உலகின் நாயகர்கள்.....**

தமது எதிர்கால வாழ்வின் சவால்களை வெற்றி கொண்டு தொழில் ஒன்றினை சுயவிருப்புடன் செய்து முன்னேறும் நற்பிரஜைகளாக, ஆளுமையுடைய மனிதர்களாக, உயிர்த்துடிப்புள்ள எதிர்காலத்து தலைவர்களாக உருவாக்கப்படுகின்றனர் இம்மாணவர். எமது ஆசிரியர்களின் சரியான வழிகாட்டலில், நகர்ப்புறப் பாடசாலைகளில் புலமைப் பரிசில் பெற்றவர்கள் நிறைந்து வழிந்த மிகுதி எச்சங்களான இவர்கள் கற்றலை மேற்கொண்டு, அதன் விளைவாக பெறுபேறுகள் பலவற்றைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை தேடிவருகின்றனர். இவர்களது தேடலும், ஊக்கமும், செயலாற்றி முடிவெடுக்கும் ஆளுமையும், குழுவுணர்வும், ஒத்துழைப்பும், ஆளிடைத்தொடர்புகளும், அபிவிருத்தி மனித விழுமியப்பண்புகளும் ஒன்றுசேரும் இடத்து சாதனைகள் படைத்துவிடல் எளிதாகிவிடும். இத்தகையோர் நாட்டுப்பற்றுள்ள சமூக அபிவிருத்தி நோக்கிய சிந்தனையுள்ளவர்களாக உருவாகுர். இவர்களால் கற்ற கல்லூரியும் பெருமிதம் அடையும்.

இதற்கமைய எமது மாணவர், கடந்தகாலத்தில் தடைக்கற்கள் பல, செயற்பாட்டை முடக்கச்செய்த போதும் நம்பிக்கையுடன் தமது பாட, இணைபாட விதான செயற்பாடுகளில் ஊக்கங்காட்டியமையால் வலிகாமம் கல்வி வலயத்தில் தமது கல்லூரியை முன்னணியில் திகழச் செய்துள்ளனர்.

2006 க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 82.24 வீதத்தினர் சித்தியடைந்து உயர் தரக்கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றனர். இப் பெறுபேற்றுவீதம் வலிகாமம்கல்வி வலயத்தில் முதன்மை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுள் செல்வன்கள் ந.நிரோஷ், அ.சயந்தன், சி.கோபி, செல்வி.தே.தாரணி, நா.கீர்த்திகா ஆகியோர் ஏழு பாடங்களில் அதிவிசேட சித்திகள் பெற்று கல்லூரிக்குப் பெருமை தேடினர்.

க.பொ.த(உ/த) பரீட்சையிலும் 2006இல் செல்வி.வி.ஜீவிகா, செல்வன் பூ.சுகந்தகுமார் ஆகியோர் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்திகள் [3A] பெற்று புகழைத் தக்கவைத்தனர். 79 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கான தகுதியைப் பெற்றிருந்தபோதிலும் 20 பேருக்கே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்றது. இது ஒப்பீட்டடிப்படையில் 20 வீதம் ஆகும்.


மக்கள் வங்கியின் “சிசு உதான சாதனையாளர்” விருதை இரண்டாவது தடவையும் எமது கல்லூரி வலைப்பந்தாட்ட வீராங்கனை இ.மைதிலி இவ்விருதைப் பெற்று கல்லூரிக்குப் பெருமைசேர்த்தார். பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதியினால் இவர் கௌரவம் பெற்றார். “2007 ஜனாதிபதி சாரணர் விருது” எமது மாணவன் இ.அஜன் அவர்களுக்குக் கிடைக்கப்பெற்றது.


நாளைய உலகை ஆளவுள்ள இம்மாணவர்களுக்கு கல்லூரிச்சமூகம் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்து நிற்கின்றது. இம்மாணவர் தம் உயர்ச்சிக்கு உந்துசக்தியாக இருந்து உழைத்து வரும் எம் ஆசான்களுக்கு நன்றிகள் பற்பல. வரும் காலங்களிலும் சகலரதும் ஒத்துழைப்புடன் ஏற்றம் மிகுந்த பெறுபேறுகள் பெற்று கல்லூரி பெருமையடைந்திட ஆண்டவன் அருள்பாலிப்பாராக.


# க.பொ.த (சா/த) பெறுபேறு


| பாடம் | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சைவம் | 91 | 98.4 | 99.3 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| றோமன் கத்தோலிக்கம் | 83.3 | – | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| றோமன் கத்தோலிக்கம் அல்லாதது | 33.3 | – | 100 | 100 | 100 | – | 100 | 100 | 100 | 100 | 00 | 100 |
| தமிழ்மொழி | 90 | 90.7 | 95.3 | 99 | 96 | 98.4 | 100 | 95.3 | 98.5 | 100 | 98.8 | 98.13 |
| ஆங்கிலம் | 11.3 | 38.9 | 9.2 | 21 | 37 | 16.1 | 45.7 | 24.5 | 38.2 | 61.76 | 44.2 | 31.7 |
| விஞ்ஞானம் | 47 | 59.8 | 61.1 | 72 | 71 | 87 | 97.1 | 97.2 | 86.7 | 90.36 | 79.3 | 76.63 |
| கணிதம் | 47 | 67.2 | 80.5 | 89 | 78 | 87 | 91.4 | 88.7 | 85.1 | 93.2 | 88.6 | 87.85 |
| சமூகக்கல்வியும் வரலாறும் | 75.3 | 81.2 | 90.7 | 97 | 95 | 96.8 | 96.7 | 69.6 | 98.5 | 83.13 | 93.1 | 98.13 |
| சித்திரம் | 67.2 | 67.9 | 86.7 | 97 | 100 | 66 | 51.5 | 62 | 48.6 | 71.79 | 100 | 88.8 |
| சங்கீதம் | 51 | 66.6 | 77.4 | 76 | 73 | 90.6 | 92 | 100 | 76.2 | 71.79 | 76.2 | 73.9 |
| நடனம் | 22 | 100 | 75 | 58 | 63 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| நாடகம் | – | – | – | – | – | – | – | – | – | – | 100 | 100 |
| வர்த்தகம் | 81.4 | 84.1 | 97.1 | 94 | 91 | 100 | 100 | 100 | 76.3 | 83.87 | 91.7 | 86.88 |
| விவசாயம் | 882. | 94.4 | 88.4 | 100 | 100 | 100 | 100 | 97.6 | 92.6 | 95.83 | 100 | 100 |
| மனைப் பொருளியல் | 86.6 | 81.8 | 75 | 100 | 14 | 100 | 100 | 60 | 100 | 75 | 100 | 100 |
| தோற்றியோர் | 131 | 116 | 108 | 79 | 76 | 62 | 70 | 106 | 68 | 83 | 86 | 107 |
| சித்தி | 93 | 68 | 102 | 66 | 69 | 61 | 70 | 101 | 63 | 75 | 78 | 88 |
| உயர்கல்வித் தகுதி பெற்றோர் | 91 | 68 | 88 | 59 | 63 | 60 | 65 | 99 | 63 | 68 | 78 | 88 |
| சித்தி வீதம் | 68.9 | 58.6 | 75.8 | 74.6 | 82.8 | 96.7 | 90.4 | 93.4 | 92.6 | 90.36 | 90.7 | 82.24 |


# க.பொ.த (சா/த) பெறுபேறு


சமூகக்கல்வியும் வரலாறும்
120
100
80
60
40
20
0
சித்தி வீதம்
75.3
81.2
90.7
97
95
96.8
96.7
89.6
98.5
83.1
93.1
98.13
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு



விஞ்ஞானம்
120
100
80
60
40
20
0
சித்தி வீதம்
47
59.8
61.1
72
71
87
97.1
97.2
86.7
90.36
79.3
76.66
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு


கணிதம்
சித்தி வீதம்
ஆண்டு
1995 1996 1997 1998 1999 2000 2001 2002 2003 2004 2005 2006
47 67.2 80.5 89 78 87 91.4 88.7 85.17 93 88.6 87.8
0 10 20 30 40 50 60 70 80 90 100



ஆங்கிலம்
சித்தி வீதம்
ஆண்டு
1995 1996 1997 1998 1999 2000 2001 2002 2003 2004 2005 2006
11.3 38.9 9.2 21 37 16.1 45.7 24.5 38.2 61.7 44.2 31.7
0 10 20 30 40 50 60 70




சித்திரம்
120
100
80
60
40
20
0
சித்தி வீதம்
67.2
67.9
86.7
97
100
66
51.5
62
48.6
71.8
100
88.8
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு


விவசாயம்
102
100
98
96
94
92
90
88
86
84
82
சித்தி வீதம்
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு


கர்நாடக சங்கீதம்
20
00
80
60
40
20
0
51
66.6
77.4
76
73
90.6
92
100
76.2
71.8
76.2
73.9
சித்தி வீதம்
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு



பரதநாட்டியம்
120
100
80
60
40
20
0
22
100
75
58
63
100
100
100
100
100
100
100
சித்தி வீதம்
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு




சைவசமயம்
102
100
98
96
94
92
90
88
86
சித்தி வீதம்
91
98.4
100 100 100 100 100 100 100 100 100 100
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு


தமிழ்மொழி
102
100
98
96
94
92
90
88
86
84
சித்தி வீதம்
90
90.7
95.3
99
96
98.4
100
95.3
98.5
100
98.8
98.13
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு





வணிகக்கல்வியும் கணக்கீடும்
120
100
80
60
40
20
0
சித்தி வீதம்
81.4
84.1
97.1
94
91
100
100
100
76.3
83.8
91.7
86.88
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு


மனைப்பொருளியல்
120
100
80
60
40
20
0
சித்தி வீதம்
86.6
81.8
75
100
14
100
100
60
100
75
100
100
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு



கிறிஸ்தவம்
105
100
95
90
85
80
75
100 100 100 100 100 100 100 100 100 100 100
83.7
சித்தி வீதம்
1995 1996 1997 1998 1999 2000 2001 2002 2003 2004 2005 2006
ஆண்டு


கிறிஸ்தவம் (றோ.க. அல்லாதது)
120
100
80
60
40
20
0
100 100 100 100 100 100 100 100 100 100
34.3
0
சித்தி வீதம்
1995 1996 1997 1998 1999 2000 2001 2002 2003 2004 2005 2006
ஆண்டு





## க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறு





பொருளியல்
120
100
80
60
40
20
சித்தி வீதம்
79.9
63
100
91.4
95.2
91.3
83.3
71.7
82.6
77.5
74.5
80
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு



அளவையியலும் விஞ்ஞானமுறையும்
120
100
80
60
40
20
0
சித்தி வீதம்
98.8
95
100
90.4
97.5
87.5
93.3
71.1
73.2
90
100
83
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு



கர்நாடக சங்கீதம்
120
100
80
60
40
20
0
சித்தி வீதம்
100 100 100 100 100 100 0 100 100 100 90 87.5
1995 1996 1997 1998 1999 2000 2001 2002 2003 2004 2005 2006
ஆண்டு


பரதநாட்டியம்
120
100
80
60
40
20
0
சித்தி வீதம்
0 66.1 100 100 0 100 0 50 100 78 83.3 100
1995 1996 1997 1998 1999 2000 2001 2002 2003 2004 2005 2006
ஆண்டு





தமிழ்
120
100
80
60
40
20
0
சித்தி வீதம்
54.4
92.3
90.9
100
96.3
93.3
91.6
83.3
58.3
85
79.6
96
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு






இந்துநாகரிகம்
120
100
80
60
40
20
0
சித்தி வீதம்
100
92.3
90.9
100
96.5
96.2
96.8
89.5
93.6
93
96.2
75
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு



புவியியல்
120
100
80
60
40
20
0
100
100
75
100
89
91.2
100
சித்தி வீதம்
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு


உயிரியல்
120
100
80
60
40
20
0
90
100
86.7
85.7
60
60
55.6
90.9
சித்தி வீதம்
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு



பௌதிகவியல்
சித்தி வீதம்
ஆண்டு
60.9
54.8
68.4
80
82.7
65.7
75
74.5
69.5
66
74.2
75
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006


இணைந்த கணிதம்
சித்தி வீதம்
ஆண்டு
90.9
70.3
83.3
69
64
68.2
94
2000
2001
2002
2003
2004
2005
2006


இரசாயனவியல்
100
90
80
70
60
50
40
30
20
10
0
50
75.5
63
92
69
56.5
61.3
53.3
42
44
54.8
46
சித்தி வீதம்
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு


வணிகக்கல்வி
120
100
80
60
40
20
0
79.9
63
100
91.4
95.3
91.3
83.3
71.7
82.6
77.5
70.6
73.6
சித்தி வீதம்
1995
1996
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
ஆண்டு

**க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறு,**
**பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் சதவீதம்**




## தரம் 9 - மாகாண மட்டப் பரீட்சை பெறுபேறுகள்
**(சதவீதத்தில்)**

| பாடம் | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|---|
| தமிழ் | 100 | 98.8 | 100 | 100 | 99 | 100 |
| ஆங்கிலம் | 14.5 | 67 | 87.7 | 62.6 | 23.3 | 62.7 |
| விஞ்ஞானம் | 88.4 | 98.8 | 100 | 98.2 | 94.1 | 100 |
| கணிதம் | 53.6 | 100 | 97.8 | 99.1 | 95.1 | 98.9 |
| சமூகக்கல்வி | 44.9 | 100 | 100 | 100 | 72.8 | 100 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 94.2 | 100 | 97.8 | 99.1 | 87.3 | 100 |
| சைவசமயம் | 97.1 | 100 | 100 | 99 | 98.9 | 100 |
| றோமன் கத்தோலிக்கம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| றோ.க. அல்லாதது | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| சித்திரம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| நடனம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| சங்கீதம் | 97.1 | 97.4 | 100 | 97.8 | 91.1 | 100 |

# இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

| நிகழ்ச்சிகள் | இடம் | 2006 | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் |
| தமிழ்மொழித்தின எழுத்தாக்கங்கள் | 1 | 04 | 01 | 01 | 01 | - |
| | 2 | 02 | 01 | - | - | - |
| | 3 | - | - | - | - | - |
| தமிழ்மொழித்தின பேச்சு | 1 | 03 | - | - | - | - |
| | 2 | 02 | 02 | - | - | - |
| | 3 | - | 01 | - | - | - |
| தமிழ்மொழித்தின பாவோதல் | 1 | 01 | - | - | - | - |
| | 2 | 03 | 01 | - | - | - |
| | 3 | - | - | - | - | - |
| தமிழ்மொழித்தின இசை (தனி) | 1 | 02 | 02 | 01 | - | - |
| | 2 | 02 | - | 01 | 01 | - |
| | 3 | - | - | - | - | - |
| தமிழ்மொழித்தின நடனம் (தனி) | 1 | 01 | 02 | - | - | - |
| | 2 | 02 | - | 01 | - | - |
| | 3 | - | - | 01 | - | - |
| தமிழ்மொழித்தின குழு நிகழ்ச்சிகள் | 1 | 01 | 01 | 01 | 01 | 01 |
| | 2 | 01 | - | - | - | - |
| | 3 | - | - | - | - | - |

# பாடரீதியான போட்டிகள்

| நிகழ்ச்சிகள் | இடம் | 2006 | | | | 2007 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் |
| விஞ்ஞான வினாடிவினாப் போட்டி | 1 | 3 | 1 | - | - | 2 | 2 | - | - |
| | 2 | 1 | 2 | - | - | 2 | - | - | - |
| | 3 | 1 | - | - | - | - | 1 | - | - |
| கணித வினாடிவினாப் போட்டி | 1 | 1 | - | - | - | 1 | 1 | - | - |
| | 2 | 2 | 1 | - | - | 2 | - | - | - |
| | 3 | 1 | - | - | - | 1 | - | - | - |
| சமூகக்கல்விப்போட்டி | 1 | 2 | 2 | - | - | 2007 இல் சமூகக் கல்விப் போட்டி நடத்தப்படவில்லை | | | |
| | 2 | 4 | - | - | - | | | | |
| | 3 | 2 | - | - | - | | | | |
| | 4 | 2 | 2 | - | - | | | | |
| மனைப்பொருளியல் போட்டி | 1 | 2006 இல் மனைப் பொருளியல் போட்டி நடததப்படவில்லை | | | | 2 | - | - | - |
| | 2 | | | | | 3 | - | - | - |
| | 3 | | | | | 1 | - | - | - |
| வணிகக்கல்விப் போட்டி | 1 | - | 2 | - | - | 1 | - | - | - |
| | 2 | - | - | - | - | 2 | - | - | - |
| | 3 | - | - | - | - | 1 | - | - | - |

# English Day Competitions - 2006 & 2007

| Event | Places | 2006 Divisional | 2006 Zonal | 2006 District | 2007 Divisional | 2007 Zonal | 2007 District |
|---|---|---|---|---|---|---|---|
| Copy Writing | 1 | 2 | - | - | 2 | 2 | - |
| | 2 | 1 | 1 | - | 3 | - | - |
| | 3 | 1 | - | - | 6 | 1 | 1 |
| Recitation | 1 | 2 | - | - | 1 | - | - |
| | 2 | 1 | 1 | - | 2 | - | - |
| | 3 | 2 | - | - | 4 | - | - |
| Dictation | 1 | 2 | - | - | 3 | 1 | - |
| | 2 | 4 | - | - | 2 | 2 | - |
| | 3 | 3 | 1 | - | 3 | - | - |
| Cråative Writing | 1 | 2 | - | - | 2 | - | - |
| | 2 | 3 | 1 | - | 3 | - | - |
| | 3 | 3 | - | - | 1 | 1 | - |
| Oratory (Prepared) | 1 | - | - | - | 2 | 1 | - |
| | 2 | 2 | - | - | 1 | - | - |
| | 3 | 2 | - | - | - | - | - |
| Oratory (Impromptu) | 1 | 1 | - | - | - | - | - |
| | 2 | 1 | - | - | - | - | - |
| | 3 | - | - | - | - | - | - |

# இணைப்பாட விதானச் செயற்பாடுகள் 2006 / 2007

| நிகழ்ச்சிகள் / ஆண்டு | கோட்டம் | | | வலயம் | | | மாவட்டம் | | | மாகாணம் | | | தேசியம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | U15 | U17 | U19 | U15 | U17 | U19 | U15 | U17 | U19 | U15 | U17 | U19 | |
| Net Ball - 2006 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | - | 2 | 1 | - | 1 | 1 | - |
| 2007 | | | | | | | | | | | | | |
| Tabel Tinnes | | | | Boys | | Girls | Girls | | Girls | Girls | | Girls | |
| - 2006 | - | - | - | 1 | - | 1 | 3 | - | 1 | - | - | 2 | - |
| 2007 | - | - | - | 1 | - | 1 | 3 | - | 1 | - | - | - | - |
| Soccer - 2006 | - | 2 | 3 | - | 1 | - | - | 2 | - | - | - | - | - |
| 2007 (Sril Lanka Fedaration) | - | - | - | 2 | - | - | 1 | - | - | - | - | - | - |
| Cricket - 2006 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 2007 | - | - | 1 | - | - | 3 | - | - | - | - | - | - | - |
| Badminton - 2007 | - | - | - | - | - | Girls 3 | - | - | - | - | - | - | - |

## மெய்வல்லுநர் போட்டிகள் 2006 / 2007

| இடங்கள் | 2006 வலயம் | 2006 மாவட்டம் | 2006 மாகாணம் | 2007 கோட்டம் | 2007 வலயம் | 2007 மாவட்டம் | 2007 மாகாணம் | 2007 தேசியம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 11 | 06 | 02 | 39 | 19 | 14 | - | - |
| 2 | 08 | 02 | 01 | 37 | 05 | 07 | - | - |
| 3 | 03 | 01 | - | 14 | 01 | 02 | - | - |

## சதுரங்கம் 2006 / 2007

| இடங்கள் | 2006 | | 2007 | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வலயம் | மாவட்டம் | கோட்டம் | | | வலயம் | |
| | U19 B | | U19 B | U15 B | U17 G | U19 B | U15 B |
| 1 | 1 | - | 1 | - | - | - | - |
| 2 | - | - | - | - | - | 1 | 1 |
| 3 | - | - | - | 1 | 1 | - | - |

### வழிநடத்துமிவர்கள்.....

கல்லூரி நிர்வாகத்துக்கும் ஆசிரியர்களுக்கும் அடுத்து கல்லூரியை வழிநடத்தி "சிறந்த கல்லூரி" என்ற பெயரை நிலைநிறுத்தி வழிகாட்டிகளாய் திகழ்கின்றனர் மாணவதலைவர்கள். தமக்கென தரப்பட்ட கடமைகளை நிறைவேற்றி கல்லூரியின் ஒழுக்கம், பண்பாடு, விழுமியங்களைக் காத்து தம சகோதர மாணவர்களை வழிநடத்தி வருகின்றனர். சிரேஸ்ட மாணவ தலைவனாக த.மகிந்தன், தலைவியாக சி.கேசலா ஆகியோரும், ஆலோசனை கூறி வழிப்படுத்துபவர்களாக அதிபர், பிரதியதிபர், உபஅதிபர், பகுதித்தலைவர்கள் ஆகியோரும் இருந்து வருகின்றனர்.

### புகழ் தேடித்தரும் புறக்கிருத்தியங்கள்

எதிர்காலத்தை எதிர்கொள்ள வல்ல சமுதாயத்தை உருவாக்கும் களங்களாக அமைகின்றன புறக்கிருத்தியச் செயற்பாடுகள். இன்றைய போட்டிகள் நிறைந்த கல்வியுலகில் உயர்கல்விக்கான தகுதியைப் பெற்றுத்தருவதில் இத்தகைய செயற்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. பாடசாலைகளில் இவற்றிற்கான செயற்பாடுகள் அமையுமிடத்து மாணவரிடையே மறைந்து கிடக்கும் அறிவு, திறன், மனப்பாங்கு, விருத்திபெற்று நாளைய உலகை எதிர்கொள்ளும் ஆற்றல் படைத்தவர்களாக அமைந்துவிடுவர். இவர்களால் பாடசாலை மட்டுமல்ல பெற்ற தாய்நாடே பெருமையுறும்.

### வெற்றிகள் குவித்து வரும் விளையாட்டுத்துறை

பணிகள் முடக்கப்பட்டாலும், மைதான வசதிகள் இல்லாத போதிலும், நேரக்கட்டுப்பாடு விதிக்கப்பட்ட போதிலும், பயிற்சிகள் போதுமானவை கிடைக்காத போதும், பட்டாளத்தாரது கெடுபிடிகள் தொடர்ந்த போதிலும் நம்பிக்கை ஒன்றை மனதிலிருத்தி, மாணவர்கள் போட்டிகள் பலவற்றிலும் பங்குகொண்டு தம் கல்லூரித்தாய்க்கு வெற்றிகள் குவித்து வருகின்றனர்.

### மெய்வன்மைப் போட்டி

2006இல் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் வலயமட்டத்தில் 11 - 1ம் இடங்கள், 8 - 2ம் இடங்கள், 3 - 3ம் இடங்களும், மாவட்ட மட்டத்தில் 6 - 1ம் இடங்கள், 2 - 2ம் இடங்கள், 1 - 3ம் இடமும், மாகாண மட்டத்தில் 2 - 1ம் இடங்கள், 1 - 2ம் இடமும் கிடைக்கப்பெற்றன.

இவ்வாண்டு நடைபெற்ற போட்டிகளில் கோட்டமட்டத்தில் 39 - 1ம் இடங்கள். 37 - 2ம் இடங்கள,. 14 - 3ம் இடங்களும் கிடைக்கப்பெற்ற அதேவேளை ஏழு வீரர்கள் சம்பியன்களாகத் தெரிவாகினர்.

வலயமட்டத்தில் 19 - 1ம் இடங்கள், 5 - 2ம் இடங்கள், 1 - 3ம் இடமும் கிடைத்ததுடன், மாவட்டத்தில் 14 - 1ம் இடங்களும், 7 - 2ம் இடங்களும், 2 - 3ம் இடங்களும் கிடைக்கப்பெற்றன. மேலும் மாவட்டத்தில் 1ம் இடம் கிடைத்த மாணவர்கள் 16 பேர் தேசிய மட்டத்தில் பங்குகொண்டனர். செல்வன் ச.சோபன் சட்டவேலியில் 4ம் இடம் பெற்றமை பாராட்டுக்குரியது.

### மேசைப்பந்து

கடந்த ஒன்பதாண்டுகளாக மேசைப்பந்தாட்ட அணிகளில் பெண்களணி 2006இல் மாவட்டப் போட்டியில் வெற்றிக்கேடயத்தை தமதாக்கியதுடன் மாகாணப்போட்டியில் இரண்டாம் இடத்தைத் தட்டிக்கொண்டது. செல்விகள் த.அபிதா, த.அனிதா, த.பிரதீபா, த.சரண்யா, செ.திருமகள் ஆகியோரே இவ்வீராங்கனைகள்.

2007 இலும் பெண்களணி வலயமட்டத்தில் முதலிடத்தைத் தக்கவைத்து மாவட்டத்திலும் முதலிடத்தைத் தட்டிக்கொண்ட அதேவேளை, ஆண்களணி மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டது. முதலாம் இடம் பெற்ற பெண்கள் தேசிய மட்டத்தில் கலந்துகொண்டமை சிறப்புக்குரியதே.

மேலும் யாழ் மத்திய கல்லூரியில் 2007 அக்டோபரில் யாழ் மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட மாவட்ட மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டியில் 19 வயதின் கீழ் ஆண், பெண் இரு அணிகளில் இருவர் 1ம் இடம் பெற்றுச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டு வெற்றிக்கிண்ணங்களையும் பெற்றுக் கொண்டனர். 19 வயது ஆண்கள் பிரிவு செல்வன். ஜெனா (தரம் 10), 19 வயது பெண்கள் பிரிவு செல்வி.இ.தரணிகா (தரம் 12 கலை).

## துடுப்பாட்டம்

2007 கோட்டமட்ட துடுப்பாட்டத்தில் 19 வயதணி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

## உதைபந்து

நடைபெற்றுமுடிந்த உதைபந்துப்போட்டிகளில் 2006 இல் 17வயதணி கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களில் முறையே 2ம், 1ம், 2ம் இடங்களைப் பெற்றுக்கொண்டது. அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் மற்றும் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கமும் இணைந்து நடாத்திய மாவட்டமட்டப் போட்டியில் 15 வயதணி 1ம் இடத்தைப் பெற்று தேசியமட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளது.

**அணியினை அலங்கரிப்போர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | க.இராகுலன் | (2) | உ.சாயிரம் | (3) | இ.பிரசாந்த் |
| (4) | சா.மதனகோபி | (5) | இ.ஆகீசன் | (6) | க.சிலோஜன் |
| (7) | ம.ஜோகிரேசியன் | (8) | க.அனுஷியன் | (9) | சி.சயந்திரன் |
| (10) | க.கௌதமன் | (11) | பி.துவாரகன் | (12) | ந.அஜெறின் |
| (13) | யோ.அனோஸ் | (14) | பா.பானுஷன் | (15) | சாயிசங்கர் |

## சதுரங்கம்

சதுரங்கத்தில் ஆண்களணிகள் வலயமட்டத்தில் 2006 இலும் 2007 இலும் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டன.

| | **19 வயதணி** | | **15 வயதணி** |
|---|---|---|---|
| (1) | சி.பவகணேஸ் | (1) | க.ராகுலன் |
| (2) | யோ.பிரசாந் | (2) | மோ.சோதீபன் |
| (3) | கு.கபிரசன்னா | (3) | க.அனுசியன் |
| (4) | ஜெ.பிரதாபன் | (4) | சி.கஜானனன் |
| (5) | பா.லோகிதகுமார் | (5) | க.பிரகாஸ் |
| (6) | சு.ரிஷாந்த் | (6) | ந.நிருபன் |
| | | (7) | பா.கஜேந்திரன் |

## வலைப்பந்து

கல்லூரித்தாயின் புகழைப் பாரெங்கும் பரப்பி நிற்கும் வலைப்பந்து அணிகள் மாகாணமட்டத்தில் தமது தாயின் பெயரைப் பொறித்து தசாப்தம் ஒன்றைக் கண்டுவிட்டன. 2006 லும் வழமைபோன்று 15, 17, 19 வயதணிகள் கோட்டமட்டத்தில் வெற்றிக்கேடயத்தை தமதாக்கியதுடன் வலயமட்டத்தில் 15, 19 வயதணிகள் முதலாம் இடத்தையும் 17 வயதணி இரண்டாமிடத்தையும் பெற்று, மாவட்டத்தில் 19 வயதணி முதலிடத்தையும் 17 வயதணி இரண்டாமிடத்தையும் தட்டிக்கொண்டதுடன், மாகாணத்தில் இவ்விரு அணிகளும் முதலிடம் பெற்று வெற்றிக்கேடயத்தை பெற்று வந்தன.

தொடர்ந்தும் இவ்வாண்டிலும் மூன்றணிகளும் கோட்டமட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றதுடன் வலய, மாவட்ட மட்டத்திலும் 15, 17 வயதணிகள் 1ம் இடத்தைப்பெற 19வயதணி வலயமட்டத்தில் 3ம் இடத்தைப் பெற்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்ட நிலையில் எமது இவ்வணிகள் (15, 17) வடமாகாணத்தில் போட்டிகளின்றி நேரடியாக தேசியமட்டப்போட்டிகளில் கலந்து கொண்டன.

நடப்பாண்டும் Rotract club நடாத்திய மாவட்டப் போட்டிகளில் 17, 19 வயதணிகள் பங்குகொண்டு வெற்றிக்கேடயத்தைக் கல்லூரிக்குப் பெற்றுக்கொடுத்தன. அணி வீராங்கனைகள்

| **19 வயதணி** | **17 வயதணி** | **15 வயதணி** |
|---|---|---|
| த.அபிதா | சி.அபிராமி | இ.மோகனா |
| செ.திருமகள் | வ.மிதுலா | சி.தர்சிகா |
| ப.தர்ஷிகா | வ.கஜீபா | த.சரண்ஜா |
| கு.நிலானி | ப.அனிதா | ச.தர்ஜினி |
| த.பிரதீபா | த.அகலிகா | தி.லகிதா |
| க.கோபிகா | நா.ஜீவிதா | சி.கீர்த்திகா |
| பா.கஜநிலா | தி.அகிலினி | ச.கஷ்மீரா |
| ச.திவ்யா | ச.பார்த்தீபா | த.தர்சனா |
| | த.ரேகா | |
| | எஸ்.சதுஜா | |

2006இல் “Warrerley Netball Center International Schools” இடையே அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் ஒரேயொரு தமிழ் மாணவியாக பெரும்பான்மையினரது அணியில் தெரிவாகி, கலந்துகொண்டு விளையாடிய எமது கல்லூரி வீராங்கனை இ.மைதிலி அவர்களை கல்லூரிச் சமூகம் மட்டுமன்றி தமிழ்ச் சமூகமும் வாழ்த்தி நிற்கிறது.

யாழ்மாவட்ட வலைப்பந்தாட்ட அணியில் பங்குகொள்ளும் எமது வீராங்கனைகள் கு.நிலானி, சி.வக்சலா, இ.மைதிலி, செ.திருமகள் ஆகியோர் தேசியமட்டப் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ளனர்.

இவ்வகையில் ஆண்டுதோறும் இவ்வணிகள் பாடசாலைக்கு வெளியேயான போட்டிகளில் அதிகம் பங்குகொண்டு வெற்றிகள் குவிப்பது பெருமைக்குரியதே.

இவ்வாறாக விளையாட்டுத்துறை பெரும் வெற்றிகளைக் கல்லூரித்தாய்க்குப் பெற்றுத்தந்தமைக்கு ஒவ்வொரு வீர, வீராங்கனைக்கும் பாராட்டுத் தெரிவிப்பதுடன், இவர்களது வெற்றிகளுக்குப் பக்கபலமாக இருந்து உழைத்து வரும் பயிற்றுநர்களும் ஆசிரியர்களுமான திருமதி ஜெ.ஜெயதரன், திரு.இ.இராஜராஜன், செல்வி.பி பரமேஸ்வரன்,

திரு.சோ.இராமநாதன், செல்வி.பி.பத்மநாதன், திரு.ப.வாமதேவன் ஆகியோருக்கும் திரு. ஐ.புஸ்பராஜா அவர்களுக்கும் கல்லூரியின் நன்றிகள் பற்பல.

கடந்த காலத்து நாட்டின் அசாதாரண சூழல் குடாநாட்டுவீரர்களைத் தேசியப் போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்ய முடியாத போதும், உயிரைத்துச்சமாக மதித்து போட்டிகளில் கலந் கொண்ட துரதிஸ்டமான நிலையிலும், எமது மாணவர்கள் பெற்றுத் தந்த வெற்றிகள் பெறுமதி மிக்கவையே.

## மன்றுகளால் வந்தவை.....

மாணவர்தம் ஆளுமை விருத்திக்கு, அவர்தம் விரத்தி வெளிப்பாட்டிற்கு உதவி நிற்கும் களங்களாக அமைகின்றன இம்மன்றுகள். வருடாந்தம் தம் திறமைகளை வெளிப்படுத்தி கல்லூரிக்குப் பெருமை சேர்த்து வரும் இம்மன்றுகள் கடந்த காலத்து அசாதாரண நிலைமையால் முழுமையாகச் செயற்படமுடியாத நிலை ஏற்பட்டது. ஆயினும் கல்விப்புலத்தினராலும் தனியார் அமைப்பினராலும் நடாத்தப்படும் போட்டிகளில் மாணவரைப் பங்குகொள்ளச் செய்து வெற்றிகள் திரட்டி வருகிறது.

## உயர்தர மாணவர் மன்று

அறிவு, திறன், மளப்பாங்குகளை வெளிப்படுத்தவும் பெற்றுக்கொள்ளவும் மாணவர்களை ஒன்றுகூடச் செய்து பயனுள்ளவற்றை ஆற்றிவருகிறது உயர்தர மாணவர் மன்று. மன்றச்செயற்பாட்டிற்கு உதவி நிற்பவர்களாக தலைவர் வ.பார்த்தீபன், செயலாளர் ரி.சுதர்சன், ஆகியோரும் வழிநடத்துபவர்களாக ஆசிரியர்கள் திரு.அ.தயாபரன், திரு.ந. மனோரஞ்சிதன், செல்வி.ஜெ.செந்திவேல் ஆகியோரும் இருந்துவருகின்றனர்.

## இந்து மன்றம்

அன்னை புவனேஸ்வரியின் அருட்கடாட்சத்தோடு செயலாற்றும் இந்து மன்றம் வழமை போன்று பூசை வழிபாடுகளையும், கூட்டுப்பிராத்தனையையும், வருடாந்த முக்கிய சமய நிகழ்வுகளையும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் 9ம் திருவிழாவையும் செவ்வனே ஆற்றிவருகின்றது. தவைவர் க.பிரசாந்தன், செயலாளர் செ.கிருஷ்ணபிரசாத் ஆகியோருடன் பொறுப்பாசிரியர்கள் திரு. ஏ.அனுசாந்தன், செல்வி.பு.இளையதம்பி ஆகியோரும் மன்றச் செயற்பாட்டிற்கு உதவி நிற்கின்றனர்.

## கிறிஸ்தவ மன்று

கணிசமான கிறிஸ்தவ மாணவர்களைக் கொண்டு இயங்கி வரும் இம்மன்று தம் மதநிகழ்வுகளை நடாத்தி வருகிறது. தலைவர் இ.ஜொனிபிரகலாதன், செயலாளர் ப.லீனஸ் சகாயதாஸ் ஆகியோருடன் ஆசிரியர்கள் திரு.ம.யூ.கலிஸ்ரஸ், திருமதி ஜெ.தவேந்திரராஜா, திருமதி L.S லொயிட் ஆகியோரும் செயலாற்றி வருகின்றனர்.

## தமிழ் மன்றம்

பொங்கு தமிழை மங்காது காத்து வரும் இம்மன்று 2006 இல் நடைபெற்ற தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகளில் கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களில் கூடிய இடங்களைப்பெற்ற அதேவேளை, மாகாணப்போட்டிகளிலும் வெற்றிபெற்று தேசியரீதியில் தங்கம் சூடிக்கொண்டது. கோட்டமட்டத்தில் 13 - 1ம் இடங்கள், 11 - 2ம் இடங்களும், வலயத்தில் 6 - 1ம் இடங்கள், 4 - 2ம் இடங்கள், 1 - 3ம் இடமும், மாவட்டத்தில் 3 - 1ம் இடங்கள், 2 - 2ம் இடங்கள், 1 - 3ம் இடமும், மாகாணத்தில் 1 - 1ம் இடமும், 2 - 2ம் இடங்களும் கிடைக்கப்பெற்றன. செல்வன். அ.சண்முகப்பிரியன் "தனியிசை பிரிவு 2", செல்வி.யோ.காயத்திரி "திறனாய்வு" ஆகியோரே இரண்டாம் இடத்தைப்பெற்றவர்கள்.

தேசிய மட்டத்தில் வில்லிசை தங்கம் சூடியது. செல்வன்கள் கு.குணறோயன், பா.கிறதீப், க.தனுசன், கு.சங்கர், க.நிசந்தன், அ.சண்முகப்பிரியன், ச.பிரிசாந் ஆகியோரே தங்கம் சூடிக்கொண்டவர்கள்.

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற "முதிர்விலுதவி கட்டுரை 2006" இற்கான போட்டியில் எமது மாணவி க.பவித்திரா சிரேஸ்ட பிரிவில் முதலிடம் பெற்றுக்கொண்டார்.

2006இற்கான கையெழுத்துச்சஞ்சிகைப் போட்டியில் "அமிர்தகலசம்" [பிரிவு 3] வலயத்தில் 1ம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

2007ம் ஆண்டிற்கான கோட்டமட்ட கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் மூன்று முதல் இடங்களும், போருட் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட சஞ்சிகைப் போட்டியில் (சாளரம்) கோட்ட மட்டத்தில் 1ம் இடம் பெற்று ரூபா 5000 பணப் பரிசும் கிடைத்தது. இதற்கு வழிகாட்டி ஆசிரியர் செல்வி. பு.இளையதம்பி அவர்கட்கும், ஆக்கங்களை வழங்கிய மாணவர்கட்கும் பாராட்டுக்கள்.

## கவின்கலை மன்றம்

2006 கலைத்திறன் போட்டிகளில் தனியிசை, தனி நடனம், வில்லுப்பாட்டு ஆகிய போட்டிகளில் பங்குகொண்டு கல்லூரிக்குப் புகழ் சேர்த்தது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நடாத்திய "அழகெழல்" 2006 இற்கான போட்டியில் செல்வன்கள் பா.கிறதிப் தனிநடிப்பில் 1ம் இடத்தையும், ந.நிரோஸ் சித்திரம் வரைதலில் சிறப்புக் கேடயத்தையும் பெற்றுக்கொண்டனர்.

வெற்றிகள் பெற்றுத்தந்த இம்மாணவர்களுக்கு வாழ்த்துகள் கூறும் அதேவேளை இவர்களைப் பயிற்றுவித்து வழிநடாத்திய ஆசிரியர்கள் திருவாளர்கள் ந.தவசோதிநாதன், ஏ.அனுசாந்தன், சி.ஜெயரூபன், திருமதிகள் கோ.தேவதாசன், ம.பிறேம்குமார், செல்விகள். ஜெ.முருகையா, பி.பரமேஸ்வரன் ஆகியோருக்கு கல்லூரியின் நன்றிகள் பற்பல.

## ஆங்கில மன்று

ஆங்கிலமொழிக் கல்வியின் அத்தியாவசியம் உணரப்பட்டநிலையில் அதனை மாணவர் மத்தியில் நடைமுறைப்படுத்தி வரும் இம்மன்று, ஆங்கிலதினப் போட்டிகளில் 2006 இல் கோட்டம் 11 - முதலிடங்கள், 9 - இரண்டாமிடங்கள், 8 -மூன்றாமிடங்களையும், வலயத்தில் 3 - இரண்டாமிடங்களையும் ஒரு 2ம் இடமும் பெற்றுக்கொண்டது. 2007 ற்கான போட்டிகளில் கோட்டம் 10 - முதலிடங்கள், 11 - இரண்டாமிடங்கள், 14 - மூன்றாமிடங்களும், வலயத்தில் 4 - முதலாமிடங்களும், 2 - இரண்டாமிடங்களும், 2 - மூன்றாமிடங்களும் கிடைக்கப்பெற்றன. 2007 இல் மாவட்ட மட்டத்தில் க.சிவகௌரிநாயகி (Copy Writing) 3ம் இடமும் பெற்றுள்ளார். 2005 இல் செல்விகள். பா.அபிராமி மாவட்டத்தில் 2ம் இடத்தையும் [Gr. 11 -Creative Writing ], வி.ஜீவிகா மாகாண மட்டத்தில் 1ம் இடத்தையும் [Oratory Prepared] பெற்றுக்கொண்டனர்.

வெற்றிகள் தந்த இம்மாணவர்களுக்குப் பாராட்டுக்களும், நெறிப்படுத்தி வழிப்படுத்திய ஆசிரியர்கள் செல்வி.வ.வைத்திலிங்கம், திருமதி C.ஜெயமனோன், திருவாளர்கள் ம.சிவானந்தம், K. லம்போதரன் ஆகியோருக்கு நன்றிகளும் உரித்தாகுக.

## கணித விஞ்ஞான மன்றம்

மாறிவரும் புதிய உலகை எதிர்கொள்ள வல்ல சமுதாயத்தை உருவாக்கி நிற்கும் இம்மன்றம், 2006 இல் நடாத்தப்பட்ட கணித வினாடி வினாப் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் ஒரு முதலிடத்தையும், 2 - 2ம் இடங்களையும், 1 - 3ம் இடமும் பெற்றுக்கொண்டது. வலய மட்டத்தில் 1 - 2ம் இடம் கிடைத்தது. 2006 இல் நடைபெற்ற விஞ்ஞான வினாடி வினாப் போட்யில் கோட்ட மட்டத்தில் 3 - 1ம் இடங்களும், 1 - 2ம் இடமும், 1 - 3ம் இடமும், வலய மட்டத்தில் 1 - 1ம் இடமும், 2 - 2ம் இடங்களும் கிடைத்தன. இவ்வாண்டிற்கான கோட்டமட்ட கணித வினாடிவினாப் போட்டியில் ஒரு முதலிடமும், 2 - 2ம் இடங்களும், ஒரு மூன்றாமிடமும், விஞ்ஞான வினாடிவினாப் போட்டியில் 2 - முதலிடங்களும், 2 - இரண்டாமிடங்களும், வலயத்தில் 2 - 2ம் இடங்களும், 2ம், 3ம் இடம் ஒவ்வொன்றும் கிடைக்கப்பெற்றன. இவர்களில் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்திய போட்டியில் செல்வி.க.கபீர்த்தனா தரம் 11, செல்வன்.சொ.தர்மதன் தரம் 9 ஆகியோர் 3ம் இடத்தைப் பெற்றுக கொண்டனர். மாகாண மட்டப் போட்டியில் செல்வி.க.கபீரத்தனா, செல்வன்.சொ.நர்மதன் ஆகனியோர் பங்குபற்றவுள்ளனர்.

வலிவடக்குப் பிரதேசசபை நடாத்திய போசாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சியில் மத்திய பிரிவு முதலாமிடத்தையும் மேல், அதிமேற் பிரிவுகள் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

இம்மாணவர்களுக்கும் பயிற்றுவித்த ஆசிரியர்கள் திருவாளர்கள் பா. தர்மசீலன், எம்.ஜே.கலிஸ்றஸ், இ.விஜியேந்திரன், ம.இரவீஸ்வரன், த.மதியழகன், வி.துஷ்யந்தன் திருமதிகள் ர.மல்லிகா, ந.கமலநாதன். ஜெ.தவலிங்கம், செல்விகள் அ.சர்வாயினி, த. பொன்னம்பலம் ஆகியோருக்கும் பாராட்டுகளும் நன்றிகளும் உரித்தாகுக.

## தொழினுட்ப மன்று

இம்மன்று, கேட்டமட்டத்தில் நடைபெற்ற மனைப்பொருளியற் போட்டியில் 2 - 1ம் இடங்களையும், 3 - 2ம் இடங்களையும், 1 - 3ம் இடத்தையும் பெற்றுத்தந்தது. போட்டிகளில் வெற்றி பெற்ற இம்மாணவர்களுக்கும் பயிற்றுவித்த ஆசிரியை திருமதி ரே.தர்மசீலன் அவர்களுக்கும் பாராட்டுகளும் நன்றிகளும் உரித்தாகுக.

## வணிகமன்று

வலய மட்டத்தில் 2006ல் நடாத்தப்பட்ட பொதுஅறிவு, கட்டுரை ஆகிய போட்டிகளில் இரு முதலிடங்களைப் பெற்றுத, 2007 இல் கோட் மட்டத்தில் 1 - 1ம் இடம், 1 - 2ம் இடம், 2 - 3ம் இடங்களும் கிடைக்க வழிவகுத்தது வணிகமன்று. இதற்கு உழைத்த திரு.சோ.இராமநாதன், திரு.இ.நவகேதீஸ்வரன், செல்வி.ஜெ.செந்தில்வேல் அவர்களுக்குப் பாராட்டுக்கள் பற்பல.

## சமூகக் கல்வி மன்று

2006 இல் வலயமட்டத்தில் நடாத்தப்பட்ட சமூகக்கல்விப் போட்டியில் சமூகக்கல்வி மன்று இரு முதலிடங்களை பெற்றுக்கொண்டது. வெற்றிகள் தந்த இம்மாணவர் களுக்குப் பாராட்டுக்களும் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். 2007 இல் இப்போட்டிகள் திணைக்களத்தால் நடாத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இடைவினைக்கழகம்

இக் கழகம் இவ்வாண்டில் மாணவர்களுக்கு பயன்தரவல்ல இறுவட்டுகளை வெளியீடு செய்தது. தெல்லியூர் துர்க்கையம்மன் ஆலய பெருந்திருவிழாவின் போதும், மாவைக்கந்தன் ஈருருளிப்பாதுகாப்பு நிலையம் அமைத்து, கழகத்திற்கென ஒருதொகை நிதியினைச் சேமித்துக்கொண்டது. செல்வன். த.மகிந்தன் அவர்களது தலைமையில் செயலாற்றும் இம்மன்றின் பொறுப்பாசிரியர்களாக திரு.அ.தயாபரன், திருமதி L.S.லொயின் ஆகியோர்கள் இருந்துவருகிறார்கள்.

## சாரணரும் வழிகாட்டிகளும்

சேவையொன்றே ஆனந்தத்தைத் தரும் என்ற உணர்வுபூர்வமான சிந்தனை கொண்ட இவர்கள் கல்லூரி நிகழ்வுகளில் தமக்கென ஒதுக்கப்பட்ட பணிகளை செவ்வனே நிறைவேற்றி வருகிறது. ஜனாதிபதி சாரணர் விருதை 2006 இல் செல்வன் அ.தர்சனும், 2007 இல் செல்வன்.இ.அஜனும் பெற்றுக்கொண்டனர். இவர்களை வழிப்படுத்துபவர்களாக ஆசிரியர்கள் திரு. ப.அருந்தவம் திருமதி ந.கமலநாதன் ஆகியோர் இருந்து வருகின்றனர். இம்மாணர்கள் அனைவருக்கும் பாராட்டுகள் பற்பல. 2006 இல் நடைபெற்ற காங்கேசன்துறை மாவட்ட சாரணர் ஜம்போறியத்தில் எமது கல்லூரி 3ம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**ஆசிரியர் கழகம்**

ஆசிரியர் நலனைக் காத்து, இக்கட்டான காலகட்டங்களில் உதவிகள் பெற்றுத்தரும் இக்கழகம், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு இடைஞ்சலாகவுள்ள ஆசிரியர்களை வெளியேற்றுவதிலும் பின்நிற்பதில்லை. அதிபர் [யா∴ பொன்பரமானந்தர் ம.வி] திரு.சோ.இராமநாதன் அவர்களைத் தலைவராகவும், ஆசிரியர்கள் திருமதி ந.கமலநாதன், திரு.பா.தர்மசீலன் ஆகியோரை செயலாளர், பொருளாளராகக் கொண்டு செயலாற்றி வருகிறது.

இம்மன்றுகளும் கழகங்களும் இக்கட்டான சூழலிலும் தம் செயற்பாடுகளை ஆற்றி கல்லூரிக்குப் பெருமை சேர்த்திட்டமை பாராட்டப்படவேண்டியது. நிர்வாகத்தினதும், ஆசிரியர் குழாத்தினதும், மாணவரதும், ஒன்றுபட்ட செயற்பாட்டால், அயராமுயற்சியால் கல்லூரி வெற்றிகளைத் தமதாக்கியது. வரும் காலங்களில் விக்கினங்கள் ஏதுமின்றி வினைகள் தொடர, வெற்றித்திருயுயர விக்கினேஸ்வரனை வேண்டிநிற்போமாக.

**கல்லூரி வளர்ச்சிக்குக் கைகொடுப்போர்.....**

எந்தவொரு பிரஜையும் தனக்குக் கல்வி தந்த தாயை மறந்துவிடுவதில்லை. அந்த வகையில் எமது கல்லூரிப் பழைய மாணவர்களும் கல்லூரியின் வளர்ச்சிக்கு அதன் தேவைகளறிந்து கைகொடுத்து வருகின்றனர்.

❋ நாட்டின் யுத்த நிலைமை, தொழில்வாய்புக்கள் கருதி புலம் பெயர்ந்து கடல் கடந்து அந்நிய நாடுகளில் அடைக்கலம் புகுந்த எம் கல்லூரிப் பழைய மாணவர்கள் தூரநோக்குடன் கல்லூரியின் தேவைகள் அறிந்து தமது உதவும் கரங்களைத் தொடர்ந்தும் நீட்டி வருகின்றனர். வழக்கம்போன்று 2003ம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டும் பரிசுத்தினத்தை நடாத்திட நிதியுதவி நல்கிய கனடாவில் வாழும் கல்லூரியின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி கந்தையா வைத்தியநாதன் அவர்களின் தாராள மனம் கண்டு பெருமைப் படுகின்றோம். இவருக்கும் இவர்தம் குடும்பத்திற்கும், கனடாப் பழைய மாணவர் சங்கத்தினருக்கும் கல்லூரிக் குடும்பம் தனது நன்றிகளைத் தெரிவிக்கிறது.

❋ இலண்டன் பழைய மாவணர் சங்கம் இந்த ஆண்டு விளையாட்டுப் போட்டிக்கென ரூபா நாற்பதினாயிரமும் (40000/-), மாணவர்களின் மதிய உணவுக்காக எண்ணூறு ஸ்ரேலிங் பவுண்களையும் அனுப்பி வைத்தமையை கல்லூரிச் சமூகம் என்றும் நன்றியுடன் நினைவு கூருகிறது. மேலும் இந்த யூனியன்ஸ் சிறப்பு மலர் முழுமையாக வெளிவருவதற்கும் இலண்டன் பழைய மாணவர் சங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்றுள்ளது. அதனையிட்டு கல்லூரிச் சமூகம் மகிழ்ச்சி அடைவதுடன் அச்சங்கத்திற்கு இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

* கல்லூரியின் வளர்ச்சிக்கு அக்கறை காட்டி அதன் அனைத்து செயற்பாடு களிலும் கைகொடுத்து ஒத்துழைப்புகள் நல்கி வரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு.பொ.தங்கராசா அவர்கட்கும், பொருளாளர் திரு.இ.நவகேதீஸ்வரனுக்கும் நன்றிகள் பற்பல.

**கரங்கூப்பி நன்றி கூறி நிற்கும் கல்லூரி.....**

இன்றைய இப் பரிசுத் தினத்தில் பல வேலைப்பளுக்களின் மத்தியிலும், சிரமம் பாராது எமது கல்லூரிக்குச் சமூகமளித்திட்ட பிரதம அதிதியவர்கட்கும், தாய்போல் எம் கல்லூரிக் குழந்தைகளுக்கு பரிசில்கள் வழங்கவுள்ள பிரதம அதிதியவர்தம் துணைவியாருக்கும், கல்லூரிச் செயற்பாடுகள் கண்டு கல்லூரியை கௌரவித்து சிறப்புவிருந்தினராகி சிறப்பித்து நிற்கும் செல்வி.தி.பெரியதம்பி அவர்கட்கும், கல்லூரியின் உயர்ச்சியால் பெருமிதம் கண்டுவரும் எமது சிறப்பு அதிதி, கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.ச.கைலாசநாதன் அவர்கட்கும், இன்றைய விழாவிற்கு வருகை தந்தமையிட்டு தனித்தனி நன்றிகள் பற்பல.

இன்று அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் கெடுபிடிகள் பலவற்றுக்கும் மத்தியில் தனது செயற்பாடுகளையாற்றி, தேசிய மட்டத்தில் மட்டுமல்ல அலை கடலுக்கப்பாலும் எம் குழந்தைகள் சென்று கல்லூரியின் பெயர் பொறித்து கல்லூரியின் இன்றையயுயர்ச்சி கண்டு கல்லூரியின் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும், பாடப்புறக்கிருத்தியச் செயற்பாடுகளுக்கும் பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்து கொண்டிருக்கும் மாகாணக் கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், கணக்காளர், நிதி உதவியாளர், ஆசிரிய ஆலோசகர்கள், எழுதுவினைஞர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

குந்தகம் விளைந்த 2006ல் கல்விச்செயற்பாடுகள் யாவும் முற்றாக முடக்கப்பட்ட நிலமையில், போக்குவரத்துக்கள் தடைப்பட்டு, கல்விச்செயற்பாடுகளின் நிமித்தம் அதிபரும் மாணவர்களும் மாகாண விளையாட்டுப் போட்டிக்குச் சென்று மீண்டும் குடாநாட்டுக்குத் திரும்பி வரமுடியாத நிலையில், பிரதியதிபரது தலைமையில் கல்லூரி நிர்வாகம் கெடுபிடிகளின் மத்தியிலும், அதீத பிரயத்தனத்துடன் ஆற்றிய சேவைக்கு, பிரதியதிபர் திரு.இ.சண்முகேஸ்வரன் அவர்களுக்கும், மற்றும் உபஅதிபர் திரு.வே.சந்திரசேகர் அவர்களுக்கும், பகுதித் தலைவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகுக. கல்லூரி நிர்வாகத்தோடு இணைந்து துரித நடவடிக்கைகளை மேற்கொண்ட யா/பொன்பரமானந்தர் ம.வி அதிபர் திரு.சோ.இராமநாதன் அவர்களுக்கும் எமது நன்றிகள். சிரமங்களைச் சந்தித்தபோதும் அயராது உழைத்து நின்ற கல்லூரி நிர்வாகம், முகாமைத்துவக்குழு, ஆகியவற்றுக்கும் நன்றிகள்.

கல்லூரி உயர்பெறுபேறுகள் பெற உழைத்து நிற்கும் ஆசிரியர்களுக்கும், சாதனைகள் பெற்றுத்தரும் மாணவச்செல்வங்களுக்கும் நன்றிகள் பற்பல. நிர்வாகச் செயற்பாடுகளுக்கு உதவி வரும் கல்விசாரா உத்தியோகத்தினருக்கும் எம் நன்றிகள்.

கல்லூரி மீது நம்பிக்கை கொண்டு மாணவர்களை அனுப்பிவைக்கும் பெற்றோருக்கும், கல்லூரி வளர்ச்சியில் அக்கறை காட்டிவரும் பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், அபிமானிகள், உதவும் மனப்பாங்குடையோர், நலன் விரும்பிகள் யாவருக்கும் கல்லூரி தனது நன்றியறிதலைத் தெரிவித்து நிற்கிறது.

நன்றி.

அதிபர்

2007.10.15

யா/ யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

# மலர்கின்ற மலரில்.......

இலக்கை அடைந்தே தீர வேண்டும் என்ற வைராக்கியமும், முயன்றால் முடியாதது எதுவும் இல்லை என்ற சிந்தனையும் கைகோர்த்து எமது கல்லூரியினை உயர்வான நிலைக்குக் கொண்டு வந்ததெனலாம். கற்றல் கற்பித்தலுக்கு ஏதுவான புறச்சூழல் அமையப் பெறாத ஓரிடத்தில் பல சாவல்களுக்கு மத்தியில் ஐந்து வருடங்களாக இயங்கி உயர்வு கண்டு வருவது சாதனையே!.

சோதனைகளுக்கு மத்தியிலும் சோர்வடையாது அர்ப்பணிப்போடு சேவையாற்றும் ஆசிரியர்கள், தளராது எதிர்நீச்சல் போடும் மாணவர்கள், வினைத்திறன் மிக்க நிருவாகக் கட்டமைப்பு, கல்லூரிச் சமூகத்தின் ஒத்துழைப்பு என்பன எமது கல்லூரியின் முன்னிலைக்கு காரணங்களாக அமைந்தவை எனலாம்.

எம் சாதனைகளை ஆவணப்படுத்தும் வகையில் வெளிவரும் சிறப்பு மலர் உங்கள் கைகளிலே தவழ்கின்றது. இம்மலரில் மாணவரதும். ஆசிரியர்களினதும் பலதரப்பட்ட ஆக்கங்களும் இதழ் விரித்துள்ளன. அதே வேளை சான்றோர்கள் தம் ஆசிகள், வாழ்த்துக்கள் என்பனவும், அதிபர்அறிக்கை, பொற்குவை நல்குவோர் பட்டியல் என்பனவும் மலர்ந்துள்ளன.

மலரின் மலர்ச்சிக்கு ஒத்துழைத்திட்ட அனைத்து நல்லிதயங்களுக்கும் மலர்க்குழு சார்பில் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இனிவரும் காலங்களிலும் மலர் மலர்ந்திட இறைவன் அருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

"பயிற்சி உயர்வு தரும்"

**திரு. வே. சந்திரசேகர்**
(மலர்க்குழு சார்பாக)

உப அதிபர்,
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

S:

(1)

(2)

(3)

(4)

(5)

(6)

(7

W

(1

(2

(3

(4

(5

(6

(7

# கல்லூரியின் நோக்கத்தை அடைவதற்கு உடன்பாடான, முரண்பாடான காரணிகள்

**(SWOC - பகுப்பாய்வு)**

## S: Strength - பலம்

(1) கல்லூரியைத் திறம்பட முன்னகர்த்த கூடிய பௌதீக வளம் இருத்தல்.

(2) பொருத்தமான கேந்திர நிலையத்தில் கல்லூரி அமைந்திருத்தல்.

(3) வினைத்திறன் மிக்கதும், அர்ப்பணிப்புள்ளதுமான அதிபர், ஆசிரியர்களைக் கொண்டிருத்தல்.

(4) சிறந்த முகாமைத்துவக் கட்டமைப்பைக் கொண்டிருத்தல்.

(5) கற்றலில் ஆர்வம் உள்ள மாணவர் குழாமைக் கொண்டிருத்தல்.

(6) கல்லூரியில் அக்கறை கொண்ட பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவற்றைக் கொண்டிருத்தல்.

(7) பாடவிதானம், இணை பாடவிதானம் ஆகியவற்றில் கல்லூரி உயர்ச்சி அடைவு களைக் கொண்டிருத்தல்.

## W: Weaknesses - பலவீனம்

(1) அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் கல்லூரி அமைந்திருத்தல்.

(2) இ.போ.ச, மற்றும் தனியார் பேருந்துகள் கல்லூரிக்கு அண்மையில் வரமுடியாத நிலையில் இருத்தல்.

(3) கல்லூரியின் எந்த நிகழ்வுகளுக்கும் இராணுவத்திடம் அனுமதி பெறவேண்டிய நிலை.

(4) பாடங்களுக்குப் பொருத்தமான ஆசிரியரின்மை.

(5) வறிய மாணவர்களும், கல்வியறிவு குறைந்த பெற்றோர்களும்.

(6) போதிய கட்டட வசதியின்மை.

(7) கிராமப்புறப் பாடசாலை என்பதால் நகர்ப்புறப் பாடசாலையை நோக்கி மாணவர்கள் செல்லல்.

## O: Opportunities - வாய்ப்புக்கள்

(1) கல்லூரியில் தமது பிள்ளைகளைக் கற்பிக்க வேண்டுமென்ற உணர்வுள்ள பெற்றோர் இருத்தல்.

(2) அரசசார்பற்ற நிறுவன்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் உதவி கிடைத்தல்.

(3) நவீன தொழில்நுட்ப வசதிகளான தொலைபேசி, கணனித்தொகுதி, Fax, Internet, Photocopy Mechine, E-mail, Web Side ஆகியன இருத்தல்.

(4) விழுமியங்களையும், ஒழுக்கங்களையும் கையாளும் மாணவர்கள்.

(5) இணைபாடவிதானம் செய்யக்கூடிய சிறந்த விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள் இருத்தல்.

## C: Challenges - அறைகூவல்கள்

(1) இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கல்லூரி அமைந்திருத்தல்.

(2) பெற்றோர்களின் குடும்பப் பின்னணி, கல்வியறிவு.


(3) பொருட்கள், உபகரணங்களைப் பாதுகாப்பதற்கான இடவசதி குறைவு.

(4) போக்குவரத்துப் பிரச்சினையால் மாணவர்கள் பாடசாலைக்கு நேரத்துக்கு வரமுடியாத நிலை இருத்தல்.

(5) தனியார் கல்வி நிலையத்தின் மோகத்திலிருந்து மாணவர்களை விடுபடச் செய்தல்.


(6) கலாசார பழக்கவழக்கங்களின் அதிக நம்பிக்கையினால் நிகழ்வுகளிற்குச் செல்வதனால் பாடசாலைக்கு ஒழுங்காக வரமுடியாமல் இருத்தல்.

# புகழொழி பரப்பும் கல்லூரித் தாரகைகள்



2006 க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களிலும் 3A சித்திகள் பெற்ற கலைப்பிரிவு மாணவி

**செல்வி. வி. ஜீவிகா.**




2006 க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களிலும் 3A சித்திகள் பெற்ற கலைப்பிரிவு மாணவன்

**செல்வன். பூ. சுகந்தகுமார்.**




* தேசிய பாடசாலைகள் வலைப்பந்தாட்ட வீராங்கனையாக அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற சர்வதேச போட்டிகளில் பங்குகொண்டமை.
* மக்கள் வங்கியின் சிசுஉதான சாதனையாளர் விருதினை ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக்கொண்டமை.

**செல்வி. இ. மைதிலி**




2006 இல் ஜனாதிபதி சாரணர் விருதுபெற்ற மாணவன்

**செல்வன். ஆ. தர்சன்**




2007 இல் ஜனாதிபதி சாரணர் விருதுபெற்ற மாணவன்

**செல்வன். இ. அஜன்**




2006 ஆம் ஆண்டு மாகாண மட்டத் தமிழ்த்தினப்போட்டியில் (திறனாய்வு) அதிமேற்பிரிவில் 2ம் இடம் பெற்ற மாணவி

**செல்வி. யோ. காயத்திரி**



2006 ஆம் ஆண்டு மாகாண மட்டத் தமிழ்த்தினப்போட்டியில் கீழ்ப்பிரிவில் தனி இசையில் 2ம் இடம் பெற்ற மாணவன்

**செல்வன். அ. சண்முகப்பிரியன்**



2006 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட முதிர்வில் உதவி (Helpage) கட்டுரைப்போட்டியில் 1ம் இடம் பெற்ற மாணவி.

**செல்வி. க. பவித்திரா**




**Seated (L to R)** Mrs. K. Thevathasan, Miss. P. Elayathampy, Mr. E. Anushanthan, Mr. S. Jeyaroopan, Mr. S. Ramanathan (Principal J/Pon paramanathar M.V), Mr. S. Punniyaseelan (Principal), Mr. R. Shanmugeswaran (Deputy Principal), Mr. V. Chandrasegar (Vice Principal), Mrs. N. Sivagnanarajah, Miss. J. Senthivel, Mrs. N. Kamalanathan.

**Seated (1st Row L to R)** Mrs. S. Ganeshamoorthy, Mrs. M. Raveendran, Miss. P. Pathmanathan, Miss. J. Murugiah, Mrs. C. Jeyamanon, Mrs. R. Pathitharan, Miss. S. Aruppillai, Miss. P. Parameswaran. Miss. V. Vaithilingam, Miss. T. Ponnampalam, Mrs. J. Jeyatharam, Mrs. M. Premkumar, Mrs. R. Tharmaseelan, Mrs. L.S. Loyed, Miss. K. Sivasamy, Mrs. J.Thavalingam

**Standing (2nd Row 1 to R)** Mr. N. Manoranjitham, Mr. M.J. Calistrus, Mr. A. Thayaparam, Mr. R. Vijendran, Mr. M. Raveeswaran, Mr. T. Mathiyalagam, Mr. K. Lampotharan, Mr. P. Vamadevan, Mr. R. Rajarajan, Mr. N. Thavasothynathan, Mr. M. Sivanathan, Mr. B. Tharmaseelan, Mr. V. Thushyanthan, Mr. P. Arunthavam, Mr. R. Navaketheeswaran.

# மலரில் மலர்பவை....

## கவிதைத் துளிகள்!!!


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | என்றும் மறவோமே | 1 |
| 02. | தமிழணங்கே நீ வாழி | 1 |
| 03. | கண்ணாகக் காப்போம் | 2 |
| 04. | மூதறிஞர் உரைத்தவை முத்தானவை | 3 |
| 05. | சூழல் பாதுகாப்பு | 3 |
| 06. | காணிநிலம் | 6 |
| 07. | குறும்பாய் குறும்பா | 7 |
| 08. | யார்க்கெடுத்துரைப்பேன் | 8 |
| 09. | பேசுவது யார் | 8 |
| 10. | Love Nature | 9 |
| 11. | Same of the Great Quotations | 10 |

# என்றும் மறவோமே

தாயாய் தந்தையாய்த் தோழனாய்
தரணியில் எமை நிலைநிறுத்த
குருவாய் நின்று எமை வழிநடத்தும்
ஆசான்களே உமை மறவோமே.

மற்றவர் போற்ற நல்லோராய்
நாம் மாற, நாளும் உழைத்திடும்
அறம்பொருட் தத்துவம் கூறி
எமை வாழ்விக்கும் குருவே மறவோமே.

கரைகாணாக் கல்விக்கடலில்
நாம் நீந்திக் கரையேற
கலங்கரை விளக்காய் ஒளிகாட்டும்
கண்கண்ட தெய்வங்களே உமை மறவோமே

காலங்கள் மாறலாம் கனவுகளும்
சில வேளை நினைவுகள் ஆகலாம்
போரிடும் உலகை எதிர் கொள்ளும்
ஆற்றல் தந்த ஆசான்களே என்றும் மறவோமே.

**செல்வன். ச.**
**சீராளன்**
தரம் $11^{B}$

# தமிழணங்கே வாழி நீ

என்னருமைத் தமிழே!
என்னிதயம் நிறைந்த
கன்னித் தமிழே!
எண்ணத் துணிந்து
எழுதுகோல் கொண்டு
நின்னை எழுதுகையில்
என்னை மறந்திடுவேன்.

எழில் கொஞ்சும்
தமிழ் அணங்கே!
நின் மடியில் துயில் கொள்ளும்
சிறு குழந்தையின் சின்னஞ்சினுங்கல்
எனை மயக்கும், துன்பம் ஓடவைக்கும்.

நின்னை உச்சரிக்கையில்
எத்தனை இன்பமடி!
அழியாத செல்வமாய்
பொலிவோடு பூரித்து
நலியாது நீ வாழ்க!

சங்கத் தமிழே!
மங்காத் தமிழ் முரசே!
நல்லோர் வல்லோர்
கவி வல்லோர்
நினைப்பாடி புகழ் மாலை சூடி
பாரில் முழங்கிட
நயமோடு வாழ்க நீ!

**செல்வி. அ. ஆகன்யா**
தரம் $11^{B}$

# கண்ணாகக் காப்போம்

கண்கண்ட தெய்வங்கள் உண்டென்பேன்
வெறும் கதையல்ல உண்மை என்பேன்
முத்தம் தந்தெமை தூக்கி வளர்த்திட்ட
முதற் தெய்வம் எம் மூத்தோரேயென்று
முரசறைந்து தரணியெங்கும் முழங்கவைப்பேன்

மார்பு மீதும் தோள் மீதும் சுமந்து நின்ற
மாமனிதர் இவரே, மாணவர் நமக்கு ஆசானுமிவரே
நிலவொளியில், தித்திக்கும் வாழ்
நிலையாக்கக் கதைகள் பல கூறி நின்ற
இவர் தமக்கு வந்தனைகள் செய்திடுவோம் நாம்

வயோதிபத்திற்கு ஆளானாலும்
வணக்கத்திற்குரியவர்களும் இவரே
நிந்தித்து சுமையாகக் கருதாமல்
நித்தம் சுகம் தருவோர் என்றெண்ணி
என்றும் போற்றித் துதித்திடுவோம் நாம்

"நன்றி மறப்பது நன்றல்ல" என்றபடி
நன்மை பல செய்த மூத்தோர் இவரை
எத்துன்பம் வதைத்திடிலும்
கண்ணாகக் காத்திடுவோம் நாம்
கனகாலம் வாழவைப்போம். வாழ்க!

**செல்வி. சௌ. பிரதர்சனா**
தரம் 11 A

## மூதறிஞருரைத்தவை முத்தானவை

முன்னனுபவத்தால் பெற்ற பட்டறிவால்
மூதறிஞர் உரை யாவும் முத்தானவையே
இவை யாவும் எம்மைச் சத்தியமாய் வாழ்விக்கும்
ஒழுக்கத்தை உயிராக காத்திடில்
இழுக்கு வராது என்றனர்.

பழந்தமிழ் பண்பாட்டை பாட்டில் எழுதி
ஏட்டில் தந்து, போற்றிடக் கூறினர்
இவர்தம் அமிர்த வாக்குக்கள் கேளாதின்று
ஆலம் உண்டவர் போல் அந்தரித்து நிற்கின்றனர்
அமைதியில்லை, ஆனந்தமோ கிடைப்பதில்லை
ஏக்கமும் கவலையும் அச்சமும் மனதில் நின்று
அகன்றிட மூத்தோர் உரைத்தவழி நடப்போம் நாம்.

**செல்வி. பா. சுவர்ணியா**
தரம் 11 A

## சூழற் பாதுகாப்பு

அன்பார்ந்த
விஞ்ஞானிகளே ! வாருங்கள் !
சூழலைக் கணிப்பிட இனி
வானத்தைப் பார்க்கத் தேவையில்லை
எங்கள் கோப நிலையைப்
பார்த்தே
காலநிலையைக் கணிப்பிடலாம்.

விஞ்ஞான வளர்ச்சியாம்
அது விந்தையாய்
நிகழ்வதாய் செல்லச் செல்ல
சூழலைக் கெடுப்பதாய்
அமைகிறது.

கைத்தொழில் முன்னேற்றமும்
அதன்
சூழல் அவதானமின்மையும்
இனிவரும்
எதிர்கால சமுதாயத்தை
பூமியில் நிலைக்க விட
முடியாமலிருக்கும்.

ஆபிரிக்க நாடுகளில்
உள்ளோரின் உள்ளக்
குமுறல்கள் அமெரிக்காவிலும்
ஐரோப்பாவிலும் ஒலிக்கட்டும்
பசியும், பட்டினியும்
வெயிலும் வறட்சியும்
சேரிப்புற வாழ்வும்
மனிதனின் நிலைகுலைவும்
யாரால் தீரப்போகின்றது?

இரசாயனக் கழிவுகளும்
தொழிற்சாலைப் புகைகளும்
அணு ஆயுத உற்பத்திகளும்
போர் நடவடிக்கைகளும்
ஓசோன் படையைத்
துளைத்துவிட்டன.
இதனால் பாதிப்புறுவது யார்?
வளர்முக நாட்டிலுள்ள நாங்களே.

நகராக்க வளர்ச்சியும்
ஒலி மாசடைதலும்
வளி மாசடைதலும்
தரைக்கீழ் நீர் கெடுக்கப்படுவதும்
சூழற் சமனிலையைக் குழப்பவல்லவா?

எங்கள் வயிற்று நெருப்பை
தொகுத்தால்
வையகத்து வெப்பநிலையைக்
கணிப்பிடலாம்.
எங்கள் கண்ணீரை அளந்தால்
மழைவீழ்ச்சியை அளக்கலாம்.

இன்னுமென்ன
பூமியின் ஒட்சிசனை
காபனீரொட்சைட்டாய்
ஆக்கி விட்டு
செவ்வாயில் ஏன்
ஒட்சிசனைத் தேடுகிறீர்கள்
அங்கும் சென்று விஞ்ஞான
உலகைப் படைக்கவா?
காலநிலையைச் சீர்குலைக்கவா?
சூழலை வெப்பமுறச் செய்யவா?
எங்கள் கோலநிலையைப் பார்த்தே
காலநிலையை அளவிடலாம்.

அரச சார்பற்ற ஊழியர்
மாணவர்
உலக நாடுகள்
அரச நாடுகள்
கைத்தொழிற் செயற்பாட்டிற்கு
சூழலைத் தின்னாத மாற்று
வளத்தை வருவித்து
போர் நடவடிக்கையைத் தவிர்த்து
சூழலைப் பாதுகாக்க
இன்றே ஒன்றிணைவோமாக.

**செல்வி. ஜெ. சஞ்சுதா**
தரம் 12 கலைப்பிரிவு

# காணி நிலம்

காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும் - இங்கு
தெல்லி நகரினிலே நன் - மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் - அந்தக்
காணி நிலத்திடையே –யூனியன் தாய்
உயர்ந்து மிளிர வேண்டும் - அங்கு
வீதி அருகினிலே – நன்மரச்
சோலை நடுவினிலே

பத்து பன்னிரண்டு கணணி – கல்விப்
பாவனைக்கு வேணும் - நல்ல
முத்துச்சுடர் போல நூலகம் - நனி
முன்னேறி வர வேணும் - அங்கு
நித்தம் தமிழோசை சற்றே – வந்து
நிலவும் நிலை வேணும் - மாணவர்கள்
சித்தம் மகிழ்ந்திடவே நன்றானவை
சித்தியாதல் வேணும்

நாட்டு வளமோங்க அங்கே – பல
நிகழ்வு தினம் வேணும் - மாணவர்கள்
கூட்டு முயற்சியிலே – யூனியன் தாய்
குன்றென உயர வேணும்
மூட்டும் முயற்சியிலே அம்பாள் துணை
மேவியுற வேணும் - மாணவர்களின்
தேட்ட மிதுவெனவே வையத்தார் - இதைத்
தேடி வர வேணும்.

**க. சிவகௌரிநாயகி**
**2009 A/L கலை**

# குறும்பாய் குறும்பா

அரிசி மாவில் பிட்டவித்துத்தின்றோம்
இன்றிதற்கு தட்டுப்பாடென்றோம்
கார் இருளால் சூழ்ந்திருந்த
பேக்கரி முன் சண்டையிட்டு
சரியாக நாலரைக்கே நின்றோம்.

மண்ணெண்ணெய் செற் அதனின் முன்னே
நிற்கின்றார் வெற்றி வேலு அண்ணை
கண்ணெல்லாம் நீர் மல்க
நீண்ட நேரம் நிற்க வைத்து
கண்ணியமாய்க் கொடுக்குமிடம் தன்னை

யாழ்ப்பாணம் தலைகீழாய்ப் போச்சு!
இன்னுமொரு வியட்னாமாய் ஆச்சு!
பாழ்பட்டுப் போனதொரு
பஞ்சம் வந்தெங்களையும்
கூழ் குடிக்க வைக்கிறதே காச்சி!

நெடும் பாதை பூட்டியதனாலே
உயிரோட்டம் நின்றதனைப் போலே
கடும் சோகம் வாட்டு தெம்மை
பாதைக்காய் அங்கு சென்று
இடும் ஆணை ; திறக்கத்திரு மாலே!

கோதுமை மா தீட்டலுடன் சீனி,
வேண்டிடலாம் என்றெண்ணி வேணி
சாது போலச் சத்தமின்றி
சங்கத்தில் நின்று பார்த்து
போதுமெனச் சென்றாள் தலை கூனி

அடுத்த வாரம் போகுமென்றார் கப்பல்;
அதை நம்பி போய் நின்றான் அப்பன்;
அடுத்தடுத்து நடைபெற்ற
கடற்சண்டை காரணத்தால்
கடுப்பாகிப் போனான் அச்சுப்பன்

படிப்பாலே உயர்ந்ததெங்கள் தேசம்
இப்பொழுதோ அந்த நிலை மோசம்
அடியோடு அழிந்திடுமோ?
எழுந்திடுமோ என்பதுவே?
இடி போன்று மனத்திலெழும் கோசம்.

**க. சிவகௌரிநாயகி**
**2009 A/L கலை**

## யார்க் கெடுத்துரைப்பேன்............

எப்போதும் இருமிக் கொண்டே பேசும்
என் அப்பா கசநோய் அவரை அப்பிக்கொண்டது
எதற்கும் உபயோகப்பாடாத
ஆழ்கடல் முத்துப்போல அவருக்கு மகனாக நான்

பால்மா விலையேற்றத்திற்குத்தான்
அழுகிறதோவென எண்ண வைக்கும் - என்
அண்ணனின் சின்னமகன் தொட்டிலில்
பாதியிரவோடு படுக்கைக்குச் செல்லுமுன்
மரணித்துப் போகும் மண்ணெய் விளக்கும்
இத்தனையுமாகுமா இக் குவலயத்திலே.....?

இந்த விலை விற்கிறதே என்றேதும் எண்ணாது
வாயில் வந்தவிலை கூறும் அரிசி வியாபாரி
அரைவயிறும் கால்வயிறும் உடல் காக்க உண்டு விட்டு
கிடைக்கும் சிறு நேரத்தில் படித்துக்கொண்டிருக்கையில்
மனமுடைக்கும் வெடிகுண்டுச் சத்தமோ
பள்ளிப் பிஞ்சுகளின் நெஞ்சில் நஞ்சை – விதைக்கின்றன.

ஐயோ இத்தனைக்கும் மத்தியிலே ஓட்டைக்
குடிசையிலே வாழும் என் மன உளைச்சல்களை எழுத
வள்ளுவன் இருந்திருந்தால் இருவரியும் போதாது
பாரதி இருந்தாற் பெரும் பாட்டொன்று அமைத்திருப்பான்
ஔவை இருந்திட்டால் காவியம் படைத்திருப்பார்
இதில் எவரும் இல்லையே நான் யாரோடு நோவேன்?
என் நிலையை யார்க் கெடுத்துரைப் பேன் .......?

**P.GISINTHILA**
**GRADE 8C**

## பேசுவது யார்?

சரித்திரத்தின் சாகரத்தில்
சாத்திரமாம் பூ ‘இதில்
சத்தமின்றி சமாதியாக்கப்பட்ட
இரத்தத்தின் அத்தியாயங்களை
இதழ்களாய் புரட்டிப்பார்க்கிறேன்
வெடிச்சத்தங்கள் யாவும் இரத்தங்கள்
இத்தனைக்கும் மத்தியிலும்
அக்கிரமங்களாகத்
தட்டிக் கேட்கிறேன்.

பித்துப் பிடித்த மனித வர்க்கத்தின்
அத்துமீறல்களை வீரத்தோடு
சுட்டிக் காட்டியுள்ளேன்.

யுத்தத்தின் சத்தத்தில்
சித்தம் கலங்கிய இளம்
குருத்துக்களுக்காய்
சத்தமாய் குரல் கொடுத்துள்ளேன்.

சத்தியமாய் ஏதுமறியாச்
சுத்தமனத்தோடு
வித்தாகி வீழ்ந்து போன
மனிதர்களுக்காய்
உருகி அழுதிருக்கிறேன்
நித்தம் நித்தம் செத்துமடியும்
சமாதான தத்துவத்திற்காய்
இன்னமும்
போராடிக் கொண்டிருக்கிறேன்
புரியவில்லையா? பேசுவது யார்?
பெருமையுடன் பேனாமுனை.

**செல்வி. ந. சிவரூபி**
**2008 A/L ARTS**

# LOVE NATURE

I love nature
It gives me good future.
Nature teaches us to be glad
Man catches trouble to be sad.

Nature makes our thoughts tide
Nature makes our dreams wide.
Nature makes our life bright
Nature leads us to go on a good way as a guide.

Nature never hurries; is always patient.
Nature never speaks; is always silent.
Nature has no words; has deeds.
Nature's deeds are better than men's words.

There is no sweet song except the wind
I always have my ears to hear its sound.
I always have my eyes bright to see the beauty
Nature never misses to do its duty.

**S.PIRANAVAN**
**GRADE 9^A^**

# SAME OF THE GREAT QUOTATIONS

The roots of education are bitter
But the fruit is sweet

While we are postponing
Life speeds by

Man must be prepared
For every event of life,
For there is nothing
That is durable
Men are deceived by
what the eyes see
But the gods are stayed by
what the beart conceals

Hope is a good breakfast
But it is a bad supper

**B.ABIRAMI**
**A/L 2008 BIO**



மாணவத் தலைவர் குழு - 2006



மாணவத் தலைவர் குழு - 2007

# மலரில் மலர்பவை....

## மாணவர் எழுத்தோவியங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | மூத்தோர் சொல் அமுதம் | 11 |
| 02. | சமாதானம் | 11 |
| 03. | தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி | 12 |
| 04. | போதைப்பொருள் பாவனையும் அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் | 14 |
| 05. | பங்குச்சந்தை | 17 |
| 06. | மனித வெளியேற்றமும் பொருளாதாரத் தாக்கமும் | 20 |
| 07. | இலங்கை கைத்தொழில்துறையின் அண்மைக்காலப்போக்கு | 22 |
| 08. | முதியோரை இளையோர் பேணவேண்டும் | 25 |
| 09. | இணைய வணிகமும் மின்னியல் பணமும் | 27 |
| 10. | கணனிக்கும் காய்ச்சல் வரும் | 28 |
| 11. | ஜப்பானிய முகாமைத்துவம் | 31 |
| 12. | எல்லைக்கிரயவியல் கணிப்பீட்டு முறைகள் | 33 |
| 13. | பொருளாதாரக் கட்டளைக் கணியம் | 39 |
| 14. | புதுயுகம் | 42 |
| 15. | சிறப்பு எடுப்பனவு உரிமை | 44 |
| 16. | முதியோர் நலன்களுக்கான நீண்டகாலத்திட்டம் | 46 |
| 17. | நல்லவர்களோடு இணைந்து நன்மையினையே தோற்றுவிப்போம் | 48 |
| 18. | விடியலைத்தேடி | 49 |
| 19. | மனிதன் சூழலுடன் கொண்டுள்ள இடைத்தாக்கங்கள் | 52 |
| 20. | பணிவுவந்தால் உயர்வு வரும் | 54 |
| 21. | Autography About an old dog | 56 |
| 22. | My Hobby | 56 |
| 23. | Displaced people | 57 |
| 24. | The Evolution of Computer | 57 |
| 25. | Social Service and Usefulness | 59 |
| 26. | United Nation Organization | 60 |
| 27. | Source of Knowledge | 61 |
| 28. | Environmental Pollution | 62 |
| 29. | Food | 62 |
| 30. | The Status of English | 63 |
| 31. | John Kennedy | 65 |
| 32. | The Green house effect | 65 |

நாம்
கடமை
அதன்
பெறு
அவர்
பெரி
மூலம்
அதல்
ஆசி
நாடி
நடந்
சொ
முன்

என்
நல்
கா
சம
எல்
வ

அ
கெ
அ
உ

கு
நி
அ

# மூத்தோர் சொல் அமிர்தம்

அறிவு, ஆற்றல், அனுபவம், வயது, ஆகியவற்றால் முதிர்ந்தோரையே நாம் பெரியோர் என்கின்றோம். அத்தகையோரின் சொல் கேட்டு நடப்பது எமது கடமையாகும். ஒருவர் அவரை விடப் பெரியோரின் சொல்லைத் தட்டாமல் கேட்டு அதன்படி ஒழுகிவருவாராயிருந்தால் அவர் பல வெற்றிப்படிகளைத் தாண்டி உயர்வு பெறுவார். நாம் வயது முதிர்ந்தோர், பெரியோர் சொல் கேட்டு நடக்கவேண்டும். அவர்களிடமிருந்து நல்ல அறிவுரைகளைப் பெற்றிட வேண்டும். நமது முன்னோர் பெரியோரது சொற்கேட்டு அதன்படி ஒழுகிவந்தனர். அவர்களது வழிகாட்டலின் மூலம் வளமான வாழ்வினைப் பெற்றனர். இன்று நம்மவர் மூத்தோரின் சொற்கேட்டு அதன்படி ஒழுக பின்னிற்கின்றனர். இந்நிலை மாற வேண்டும். பெரியோரின் ஆசிமொழிகள் எமது வாழ்வை உயர்த்திட உதவும் என்பதை உணர்ந்து அவர்களை நாடி அவர்களது ஆசிமொழிகளைப் பெறவேண்டும். மூத்தோர் வார்த்தை கேட்டு நடந்தால் நாம் உன்னதமான வாழ்வைப் பெறலாம். மாணவர்களாகிய நாம் "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்னும் பழமொழியை என்றும் கடைப்பிடித்து ஒழுக முன்வரவேண்டும்.

**செல்வன். க. யுதீஸ்**
**GRADE - 11B**

# சமாதானம்

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க ஒருவருடைய வாழ்வில் அன்பும் அறமும் நல்ல பயனைத்தருவதால் அன்புதான் எல்லாவற்றிற்கும் மூலமாக அமைந்து காணப்படுகின்றது. இந்த அன்புதான் சமாதானம் என்பபடுகின்றது. அன்பின் மறுவடிவம் சமாதானமாகும். ஒரு நாட்டில் சமாதானம் இருக்கின்ற போது அந்த நாடானது எல்லாத்துறையிலும் உச்சவளர்ச்சியடையும். இங்கு சமாதானமே ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் முக்கிய காரணியாக அமைந்து காணப்படுகிறது.

சமாதானம் தூய்மையின் வடிவமாகும். இச்சமாதானம் உலகில் நிலைக்க அன்னை திரேசா பாடுபட்ட ஒருவராக காணப்படுகிறார். இவ் அன்னையின் அடிப்படைக் கொள்கையே அன்புதான். "அன்பின் வழியதுவே உயிர் நிலை........." அதாவது அன்பின் வழியாக உயிர் வாழ்க்கை அமைகின்ற போது அதுவே சிறந்த உயிர்வாழ்க்கையாகும். இவ் உயிர்வாழ்க்கை நிலைக்க சமாதானமே உதவுகின்றது.

"நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்பார்கள். இங்கும் நல்ல ஒரு குடும்பம் உருவாக வேண்டும் என்றால் அக்குடும்பத்திலே சாந்தியும் சமாதானமும் நிலைக்கவேண்டும். எனவே சமாதானமானது எங்கு வியாபித்துள்ளதோ அவ்விடம் அமைதியின் இருப்பிடமாகவும் மகிழ்வின் உறைவிடமாகவும் காணப்படும்.

சமாதானத்தின் வடிவமாக வெள்ளைப்புறா விளங்குகிறது. நாடுகளிற்கிடையில் சமாதானத்தை உருவாக்குவதற்கு பல அமைப்புக்கள் உருவாகியுள்ளன. அவற்றில் முக்கியமான ஒன்றாக சார்க் அமைப்பு விளங்குகிறது. இது சமாதானத்தை நாடுகளில் நிலைத்திருப்பதற்கு தன்னாலான பங்கை ஆற்றுகின்றது. ஒரு நாட்டிலும்சரி, வீட்டிலும்சரி சமாதானம் காணப்படுகின்ற வேளை அது ஒரு மகிழ்ச்சிகரமான வீடாகவோ அல்லது நாடாகவோ திகழ்ந்து கொள்ளும்.

"மனங்கள் செம்மையானால் மாநிலம் தழைக்கும்" என்பது முதுமொழி ஆனால் அந்தச் செம்மையை அழிக்கின்ற ஓர் ஆயுதம் சீற்றம். இந்தச் சீற்றமே சமாதானத்தையும் அழிக்கின்றது. ஒருவன் தனக்கு ஏற்படும் கொடிய கோபத்தை அடக்குவானாயின் அதுவே சமாதானமாகும். இக்கோபத்தை நாட்டில் உள்ள அனைவரும் அடக்குவார்களேயானால் அந்நாட்டில் சமாதானம் என்றும் நிலைத்திருக்கும்.

இச்சமாதானத்தைக் கடைப்பிடித்தவராக மகாத்மாகாந்தி விளங்குகிறார். இவர் சமாதானத்தைக் கடைப்பிடித்தமையாலே இந்தியா ஒரு சிறந்த நாடாக உருவாகியது.

எனவே ஒவ்வொருவரும் தமது வாழ்வில் சமாதான வாழ்வாகிய அகிம்சையைக் கடைப்பிடிப்பார்களேயானால் இந்நாடானது சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. இறைவன் வேண்டுவதும் சமாதானமே என்பதை விபுலானந்தர் "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.........-" எனக் கூறுகிறார். எனவே நாம் சமாதான வாழ்வை வாழ்ந்து சமுதாயத்தை உயர்த்துவோம்.

**செல்வன். ஜெ. சந்துருகேசன்**
**GRADE - 11A**

# தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி

கணனித் தொழில்நுட்பமும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் இணைந்ததாக பயன்படுத்தப்படும் தொழில்நுட்பமே தகவல்தொழில்நுட்பம் எனப்படுகின்றது. இங்கு தகவல்களை தயாரித்தல், சேகரித்து வைத்தல், பரிமாறுதல் தொடர்பாக பல நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

தற்கால தகவல்தொழில்நுட்ப வளர்ச்சியானது வியாபார நிறுவனங்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது. ஏனெனில் இலத்திரனியல் வர்த்தகம் எனப்படுகின்ற முறையானது கணனி வலையமைப்பு ஊடாக தகவல் பரிமாற்றப்பட்டு இடம்பெறும் ஓர் வர்த்தகம் ஆகும். இங்கு பொருட்கள் தொடர்பான கட்டளைகளை பிறப்பித்தலும் தகவல் பரிமாற்றுதல் போன்ற அனைத்துக்கருமங்களும் கணனி வலையமைப்பூடாக இடம்பெறுகின்றது. தற்போது முகாமைத்துவச்சேவைகள், பொருட்களின் பரிமாற்றம் போன்றன இவ் வலையமைப்பினூடாகவே இடம்பெறுகின்றன.

இத்தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் நிறுவனங்கள் தமது வியாபார நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளவும் நேரத்தினை மீதப்படுத்தவும் முடிவதுடன் நுகர்வோர்கள் வீட்டிலிருந்து கொண்டே பொருட்களை பெற்றுக்கொள்ளவும் முடிகின்றது. இவ் இலகுவான சாதகமான விளைவுகள் தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்றுள்ளமையை எடுத்துக்காட்டுகின்றது.

தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சி பெறுவதற்கான அடிப்படைக் காரணங்களாக சிலிக்கொன் சிப் கண்டுபிடிக்கப்பட்டமையும் டிஜிட்டல் மயமாக்கம் ஏற்பட்டமையை குறிப்பிடமுடியும் இதனால் கணனியின் ஆற்றல் பன்மடங்கு அதிகரித்து முழுஉலகமும் கணனியை பயன்படுத்தும் நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது.

கணனி வலைப்பின்னலமைப்பு பற்றி விரிவாக நோக்கும்போது செய்திப் பரிமாற்றம், தரவு, தகவல் பரிமாற்றம் என்பவற்றுக்காக கணனிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்படுதல் வலையமைப்பு எனப்படுகின்றது. இவ்வலையமைப்பின் ஒரு வகையான Lan எனப்படுவது தனிப்பட்ட தொடர்பாடல் தேவைக்காக தனிப்பட்ட கணனிகளும் வேலைத்தகவல்களும் இணைக்கப்படுதலைக் குறிக்கும். வலையமைப்பின் மற்றொரு வகையான Wan எனப்படுவது மிகப்பரந்த அளவில் தூரத்திலுள்ள கணனிகள் பலவும் வேலைத்தளங்கள் பலவும் வலையமைப்பு மூலமாக இணைக்கப்படுதலை குறிக்கும். Wan அமைக்காக காணப்படும் இணையத்தில் ஆயிரக்கணக்கான கணனிகள் இணைக்கப்பட்டிருப்பதுடன் உலக மட்டத்தில் பரந்துபட்ட ஒரு இணைப்பாகவும் காணப்படுகின்றது. மேலும் இலத்திரனியல் தபால் மூலம் தகவல்களை பரிமாற்றுதலானது தகவல் பரிமாற்றத்தில் விரைவையும் குறைந்த செலவையும் ஏற்படுத்துதல் ஓர் நன்மையாகும். இவ்வாறான புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்கள் தகவல் தொழில்நுட்பத்தினை வளர்ச்சி பெறச்செய்துள்ளது.

உலக நாடுகளிலுள்ள மக்கள் World Wide Web எனப்படுகின்ற உலகிலுள்ள நிறுவனங்களால் அமைக்கப்பட்ட இணையத்தினூடாக இதில் பதிவு செய்யப்பட்ட தகவல்களையும் உலக விடயங்களையும் அறிந்து கொள்ளமுடியும் இம் முறையானது மாணவர்களுக்கான கல்வி விருத்திக்கும் வழிகாட்டலுக்கும் உதவி புரிகின்றதுடன் சில தீமைகளையும் ஏற்படுத்துகின்ற அளவுக்கு தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்றுள்ளது.

இலங்கையில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்படுவதற்காக அரசாங்கம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாரத இலங்கை கட்டிய இழைய கடலடித் தந்தி மற்றும் இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான டிராகு இலங்கை தொலைத்தொடர்பு கட்புல இழைய கடலடித் தந்தி என்பவற்றுக்கான பணிகளை 2006ம் ஆண்டில் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் மின்இலங்கை அரசாங்க வலையமைப்பு, பாடசாலை வலையமைப்பு, தேசிய

தொலைக்கல்வி வலையமைப்பு என்பவற்றினை உருவாக்கி உள்ளமையும் தொலைத்தொடர்புப் பணியை மேற்கொள்வதற்காக சிறிலங்கா ரெலிகொம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளமையும் இலங்கையில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகும். இலங்கையில் வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதிகளை மேற்கொளவதற்கும் உற்பத்தித் துறையை விருத்தி செய்வதற்கும் தகவல் தொழில்நுட்பம் இன்றியமையாததாக காணப்படுகின்றது.

அண்மைக்காலங்களில் கூறப்பட்டு வரும் உலகமயமாக்கலுக்கும் தகவல் தொழில்நுட்பம் பெரும் பங்களிப்புச் செய்கிறது. பக்ஸ் இயந்திரம், இலத்திரனியல் அஞ்சல், செய்மதி தொழில்நுட்பம் போன்ற பல தகவல் தொழில்நுட்பம் நடை முறையில் பயன்படுத்தப்படுவதனால் உலகம் எதிர்காலத்தில் உலக நாடுகளுக் கிடையில் இருந்த பூகோள, கலாச்சார, பொருளாதார இடைவெளி குறைவடைந்து ஒரே வியாபார வலயமாகிவிடும் நிலையில் காணப்படுவதற்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பங்கு குறிப்பிடத்தக்கது.

இலத்திரனியல் தரவுப்பரிமாற்றம் என்பது நிறுவனம் பங்காளர்களுக்கிடையில் அனுப்பப்படுகின்ற கட்டளைகள், சிட்டைகள் உறுதிப்படுத்தல்கள் போன்ற விசேடமாக வடிவமைக்கப்பட்ட நியம வியாபார ஆவணங்களின் இலத்திரனியல் நகர்வு ஆகும் இது கொள்வனவுக் கட்டளைகள், கடன் அனுமதிகள் என்பவை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவும். இம்முறை மூலம் உற்பத்தி நிறுவனங்களின் முகாமைச் செயற்பாட்டின் விருத்தியிலும் தகவல் தொழில்நுட்பம் இன்றியமையாததாக இருத்தல் தகவல் தொழில்நுட்பம் எந்தளவுக்கு வளர்ந்துள்ளது என்பதை காட்டுகின்றது.

இணையத்தினைப் பயன்படுத்தி நிதிச்சந்தைத் தகவல்கள , விமான இருக்கை ஒதுக்கீடுகள், வீட்டு வங்கியியல், அறிக்கைப்பலகை முறைமைகள் போன்ற பல தகவல்களினை பெற்றுக்கொள்ளலாம். இங்கு விரைவான செயற்பாடு காணப படுகின்றமை சிறந்ததொரு அனுகூலமாகும் இத்தகைய நிலமைக்கு தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி வியாபார நிறுவனங்கள், நுகர்வோர், உற்பத்தியாளர் போன்றோருக்கு நன்மைகளை அளிப்பதுடன் மாணவர்களுக்கு சிறந்த அனுபவத்தை பெற்றுத்தரக்கூடிய ஒன்றாகவும் காணப்படுகின்றது.

**செல்வன. து. கிரீசன்**
**2009A/L COM**

# போதைப்பொருள் பாவனையும் அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளும்

போதையைப் பாவித்து மகிழ்ச்சியை வளர்ந்து பின் தமக்கும் தம் சமூகத்திற்கும் பதர்நெற்களாக சமூக சுமைகளாக இளைஞர்களை அழிக்கும் விரோதியே போதைப்பொருள். இப்போதையின் பயங்கரத் தாக்கம் மனிதனுக்கு எவ்வளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது யாவரும் அறிந்ததேயாகும் பல நாடுகள் தற்போது போதைவஸ்துக் கடத்தல், விற்பனை போன்றவற்றில் ஈடுபடுவதால் இது ஒரு சர்வதேச பிரச்சனையாகிவிட்டது. இந்தப் போதைப்பொருளானது எம் இளைஞர் சோலையைப் பாலைவனமாக்கி அழித்துவிடும் தன்மை கொண்டது.

போதைப்பொருட்கள் ஒருவனின் உடலியற் செயற்பாடுகளை மாற்றி அமைக்கும் சக்தி கொண்டவை. உணர்ச்சி, சுயநினைவு என்பவற்றை மாற்றிவிடும் போதைப்பொருட்களை பல்வேறு நோக்கங்களிற்காக பாவிக்கின்றனர். சந்தோசத்திற்கு, மயக்கத்திற்கு, நட்புக்காக, மனச்சுமையிலிருந்து விடுபட, வாழ்க்கை வெறுப்பின் போது, பொதுவாக பல இன்னல்களில் இருந்து விடுவிக்கும் நிவாரணி என எண்ணி பாவிக்கின்றனர். ஆனால் அவை உயிர் கொல்லி மருந்துகள் என்பதை அறியாது அதற்கு அடிமைப்பட்டு வாழ்வை சீரழிக்கின்றனர்.

சில பிள்ளைகள் தமது வாழ்வில் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இவர்கள் இப்பிணியை நீக்கிக் கொள்ள இக்கொடிய அசுரனின் மாய வலைக்குள் சிக்கி மீளமுடியாதுள்ளனர். இளைஞர்கள் கல்வி கற்று பட்டம் பெற்றாலும் அவர்களுக்கு ஏற்படும் வேலையின்மை, அரசியல்சார்பு, இலஞ்ச ஊழல்கள் என்பன அவர்களின் பலத்தை பலவீனமாக்கிவிடுகின்றன. இத்தோல்விகளை தாங்கிக் கொள்ள இயலாதவர்கள் எதிர்மறை உணர்வினால் பீடிக்கப்பட்டு அதிலிருந்து விடுதலை பெறுவதற்காக இப் போதைவஸ்துப் பாவனைகளுக்கு ஆளாகின்றனர்.

போதைப்பொருட் பாவனையை ஊக்குவிப்பன தொடர்பு சாதனங்களேயாகும். தொடர்பு சாதனங்களினூடாக விளம்பரங்களை செய்கின்றனர். இவ்விளம்பரங்களினால் கவரப்பட்ட இளைஞர்கள் தம்மை நடிகர்போல, விளையாட்டு வீரர்போல, நடனகாரர் போல பாவனை செய்து இக்கொடிய நோய்க்கு அதிகமாக இளைஞர்களே ஆளாகின்றனர். கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் மனவெழுச்சி பல சிக்கல்களுக்கு ஆளாக்குகின்றது. அத்தோடு தான் ஒரு "கதாநாயகன்" ஆக இருக்க வேண்டும் என்று விரும்பி அவ்விருப்பம் நிறைவேறாத நிலையில் ஏற்படும் சோர்வு, மனத்தாக்கம், தோல்வி என்பவை போதைக்கு அடிமையாகச் செய்கின்றன.

போதைப்பொருட் பாவனை பெரும்பாலும் குழுக்களாகவே நடைபெறுகின்றன. எமது நாட்டைப் பொறுத்தளவில் கொழும்பில் ஆரம்பமான பாவனை சிறிது சிறிதாக

ஏனைய இடங்களிற்கும் பரவலாயிற்று. இதற்கு அடிமையானவர்கள் பல்கலைக்கழக, பள்ளி இளைஞர்களேயாவர். எமது நாட்டில் "ஹிரோயின்" அடிமையாளர்களாக பலர் உள்ளனர் "அம்பெற்றமீன்" போன்ற ஊக்க மருந்துகளை பள்ளி மாணவர்கள் வகுப்புத் தேர்வுகளின் முன் பாவனை செய்வது 1970 இன் பின் கண்டுபிடிக்கப்பட்டது.

எதிர்காலத்தின் சிற்பிகளாக ஒளிவீச வேண்டிய நம் இளைஞர்கள் இப்பழக்கத்திற்கு ஆளாகி புத்திமங்கி, கருணையற்று, தீயஜனங்களாக மாறிவருவது கவலைக்கிடமானது.

இளங்கன்று பயமறியாது. மதுவோ, புகைத்தலோ, பயங்கரப்போதைப் பொருளோ எவராகினும் அதன் பின் விளைவைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதிர்கால வாழ்வை எண்ணி ஆளுமையை வளர்த்து உயர் குடிமகனாக வரவேண்டும். போதைகட்கு அடிமையாகக்கூடாது. ஒழுக்கம் உயிரினும் மேலானது. ஒருவர் நுண்ணறிவு படைத்தவரானாலும் ஒழுக்கம் என்பது இல்லையானால் அவர் சமுதாயத்தில் வாழ்வது பயனற்றது விழுமியங்களைக்கைக் கொண்டு அறிவோடு ஒழுகி வாழவேண்டும்.

இப்போதை வாய் மூலம், முகர்தல் மூலம், ஊசி மூலம், தோலில் உரோஞ்சுவதன் மூலம் திரவமாகவோ, குளிசையாகவோ எடுக்கப்படுகின்றன. இவைகளை உட்கொள்வதால் பின் விளைவுகள் பல ஏற்படுகின்றன. சோர்வுகள், தூக்கம், மரணம், மனவியாதி, மூளைதடுமாற்றம், மலட்டுத்தன்மை, ஞாபகமறதி, புற்றுநோய், நுரையீரல் பாதிப்பு, குடற்புண், உயர்குருதி அமுக்கம் போன்றவாறு பல பாரிய நோய்களும் வரலாம். எனவே இப்போதைக்கு ஆளாவோரை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

போதைப் பொருட்களின் நடமாட்டத்தை தணித்தலுக்கான நடவடிக்கைகள் மனிதாபிமாகவும் சட்டபூர்வமாகவும் ஏற்படுத்தவேண்டும். பெற்றவர்கள் தமது பிள்ளைகள் மீது கண்காணிப்பிலும் வழிகாட்டலிலும் இருக்க வேண்டும். கல்வியை மாணவரிடையே வளர்க்க வேண்டும். இப்பழக்கத்திற்கு ஆளானவர்களை சிகிச்சை முறைகளுக்குள்ளாக்க வேண்டும். மாணவர்கள் தாமாக தம் சுயசிந்தனை மூலம் நல்லொழுக்கமுள்ளவராக நடக்க வேண்டும்.

இப்பாவனையால் பீடிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த சிகிச்சையும், பீடிக்கப படாதவர்களுக்கு முற்பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளவேண்டும். தொடர்பு சாதனங்கள, பத்திரிகைகள், நாடகங்கள், விவாதம், சுவரொட்டிகள் மூலம் இப்போதையின் தாக்கங்கள் பற்றி விளம்பரம் செய்வதன் மூலம் கொடிய தாக்கம் தொடர்பான அறிவையூட்டலாம்.

இப்பாவனையாளர்களை இனங்கண்டு, அவர்களைக் கைதுசெய்து புனர்வாழ்வு நிலையங்களில் சிகிச்சை பெறச் செய்யவேண்டும். இலங்கையில் அங்கொடை, முல்லேரியா போன்ற இடங்களில் இந்நிலையங்கள் உண்டு. மாணவர் விடுதிகளில் கூடிய கண்காணிப்பு செய்யவேண்டும். ஏனைய மாணவர்களுடன் தொடர்புகொள்ள விடுதல் கூடாது. அவர்களை யோகாசனம், சுவாசப்பயிற்சி என்பனவற்றை செய்விக்க வேண்டும்.. இதிலிருந்து போதைப்பொருள் அடிமையிலிருந்து மீளமுடியும் என டாக்டர் கிரண்சர்மா கூறியுள்ளார்.

இவ்வாறாக எம் சமூக விரோதியான உயிர்க்கொல்லியான இப்போதைவஸ்துப் பொருட்களின் பாவனைகளை அடியோடு அழித்து பண்புடைய ஒழுங்கான ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்ப அனைவரும் உறுதி கொள்வோமாக.

# பங்குச்சந்தை

முதலீட்டாளர் பட்டியலிட்ட கம்பனிகளின் பங்குகள் தொகுதிக்கடன்கள் மற்றும் ஆவணங்களை கொள்வனவு ,விற்பனை செய்வது தொடர்பாக நிகழக்கூடிய தளம் பங்குச்சந்தை என அறிமுகம் செய்து கொள்ள முடியும். இச்சந்தையினை பின்வருமாறு இரு வகைப்படுத்தலாம்.

* முதலாந்தர பங்குச்சந்தை
* இரண்டாம் தரபங்குச்சந்தை

**முதலாந்தர பங்குச்சந்தை**

கம்பனிகளால் பொதுமக்களிற்கு வழங்கப்படும் பங்குகளை முதலீட்டாளர் கொள்வனவு செய்வதனை முதலாந்தரப்பங்குச்சந்தை எனப்படும்.

**இச்சந்தையின் பண்புகள்**

* கம்பனி ஒன்றின் பங்குகள் இதன் முதலில் விற்கப்படும்
* இங்கு கொள்வனவு மட்டும் இடம்பெறும்
* இங்கு புதிய பங்குகள் மட்டும் விற்கப்படும்

**இரண்டாம்தர பங்குச்சந்தை**

முதலீட்டாளர்கள் தங்களிற்கிடையில் பங்குகளை கைமாறிக் கொள்வது தொடர்பான சந்தை இரண்டாம்தரப் பங்குச்சந்தை எனப்படும்.

### இச்சந்தையின் பண்புகள்

- ✸ முதலாம் தர பங்குச்சந்தையில் கொள்வனவு செய்த பங்குகளே மீள விற்பனை செய்யப்படும்.
- ✸ இங்கு கொள்வனவும் விற்பனையும் இடம்பெறும்.
- ✸ இங்கு பழைய பங்குகள் பரிமாற்றப்படும்

### பங்கு வழங்கல் (Share)

கம்பனி ஒன்று ஆரம்பிக்கும் போது மூலதனத்தை திரட்டுவதற்காகவும் ஏற்கனவே இயங்கிய கம்பனி மூலதனத்தை அதிகரித்து கொள்வதற்காகவும் மேற்கொள்ளல் ஒரு நடவடிக்கையே பங்கு வழங்கல் ஆகும். இது

- ✸ ஆரம்ப பொது வழங்கல்
- ✸ பருவகால பொது பங்கு வழங்கல்

என வகைப்படும்

கம்பனி முதன்முறையாக பொதுமக்களிற்கு பங்குகளை வழங்குதல் ஆரம்ப பொது வழங்கல் ஆகும். ஏற்கனவே பங்குகளை வழங்கியுள்ள கம்பனி மூலதனத்தை அதிகரித்து கொள்ள மீண்டும் பங்கு வழங்கல் பருவகால பொது பங்கு வழங்கல் எனப்படும்.

### இலங்கை பங்குச்சந்தையின் தோற்றம்

1896ம் ஆண்டு - பங்குத்தரகர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1904ம் ஆண்டு - பங்குத்தரகர் சங்கம் கொழும்பு தரகர் சங்கமாக பெயர் மாற்றப்பட்டது.

1984ம் ஆண்டு - யூலை 2ம் திகதி வியாபாரத்தளம் நிறுவப்பட்ட பங்குகள் கைமாற்றப்பட்டது.

1984ம் ஆண்டு - ஆகஸ்ட் மாதம் கொழும்புத்தரகர் சங்கத்திற்கு போட்டியாக வரையறுக்கப்பட்ட பங்கு முதல் தரகர் சங்கம் அமைக்கப்பட்டது.

1985ம் ஆண்டு - டிசம்பர் மாதம் கொழும்பு தரகர் சங்கமும், வரையறுக்கப்பட்ட பங்கு முதல் சங்கமும் ஒன்றாக்கப்பட்டு வரையறுத்த கொழும்பு பிணைகள் பரிமாற்று நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

1987ம் ஆண்டு - பங்குச்சந்தையை கட்டுப்படுத்துவதற்கு பிணையங்கள் பேரவை அமைக்கப்பட்டது.

1990ம் ஆண்டு - வரையறுக்கப்பட்ட கொழும்புபிணைகள் பரிமாற்று நிறுவனம் என்பது வரையறுக்கப்பட்ட கொழும்பு பங்குப் பரிவர்த்தனையாக மாற்றப்பட்டது.

1996ம் ஆண்டு - கட்டுப்பாடுகள் இன்றி பங்குகளை கருமபீடத்தில் விற்பனை செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1997ம் ஆண்டு - முழுமையாக பங்குகளை மாற்றல் நடவடிக்கைகள் தன்னியக்க வியாபார முறைக்கு மாற்றப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1999ம் ஆண்டு | - | மிலாங்கா பங்கு விலைச்சுட்டெண் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2000ம் ஆண்டு | - | தெற்காசிய பங்குப்பரிமாற்றுச்சம்மேளனத்தில் உறுப்புரிமை பெற்றது. |
| 2001 இல் | - | பங்கு பரிவர்த்தனைக்கு என தனியான Web side உருவாக்கப் பட்டது. |
| 2004 இல் | - | திறைசேரி உண்டியல்கள் பங்குச்சந்தையின் மத்திய வைப்பகத்தின் ஊடாக கைமாற்றும் முறை அறிமுகம்செய்யப்பட்டது. |

**கொழும்பு பங்குச்சந்தையில் விலைகூறப்பட்ட கம்பனிகள் பதிவு செய்யும் பட்டியல்கள்**

* பிரதான பட்டியல் - Main Board
* இரண்டாந்தரப் பட்டியல் - Second Board

* **பிரதான பட்டியலில் தமது பெயரை பதிவு செய்வதற்கு கம்பனிக்கு இருக்க வேண்டிய தகைமைகள் வருமாறு.**

1. கம்பனியின் மூலதனம் குறைந்தபடசம் 75 மில்லியனாக இருத்தல் வேண்டும்.
2. கம்பனி வழங்கிய மூலதனத்தில் குறைந்த பட்சம் 25% ஆவது பொது மக்கள் வைத்திருக்க வேண்டும். மேலும் மூலதனம் or சந்தை மூலதனத்தில் 500 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட கம்பனிகள் சார்பாக பொதுமக்கள் இத்தொகைக்கு குறைவான சதவீதம் ஒன்றை வைத்திருக்கலாம்.
3. இக்கம்பனி குறைந்தது 3 ஆண்டுகளாவது திருப்திகரமாக செயற் பட்டிருக்க வேண்டும்
4. இக்கம்பனியின் குறைந்தபட்ச பங்குதாரர் 100 பேர் ஆகும்.

* **இரண்டாம் தரப்பட்டியலில் பதிவு செய்வதற்குஇருக்க வேண்டிய தகைமைகள் வருமாறு.**

1. கம்பனி குறைந்தளவு 5 மில்லியன் ரூபா வழங்கிய மூலதனமாக இருத்தல் வேண்டும்
2. கம்பனியின் பங்குகளில் குறைந்தது 10% ஆவது பொதுமக்கள் வைத்திருத்தல் வேண்டும்

கொழும்புபங்குச்சந்தையில் பட்டியல்படுத்தப்படாத (விலைகூறப்படாத) கம்பனிகள் பதிவு செய்யும் பட்டியல் OTC (Over the Counter Board) பட்டியல் ஆகும். கொழும்பு பங்குச்சந்தையில் பிரதான இரண்டாம்தர பட்டியலில் எதிர்காலத்தில் தனது பெயரை பதிவு செய்யும். இப்பட்டியல் மூலம் சாதாரண பங்குகள் கைமாற்றம் செய்ய முடியும்.

**பங்குச்சந்தையில் கைமாற்றப்படும் ஆவணங்கள்**

* சாதாரண பங்கு
* முன்னுரிமைப்பங்கு
* பங்காணைப்பங்கு
* தொகுதிக்கடன்
* வாக்குரிமையற்ற சாதாரணபங்கு
* திறைசேரி உண்டியல்
* திறைசேரி முறி

**பங்குச்சந்தையுடன் தொடர்படும் அமைப்புக்கள்**

* கொழும்புப் பங்கு பரிவர்த்தனை நிலையம்
* ஆவணப் பரிமாற்று ஆணைக்குழு
* மத்திய வைப்புத்திட்ட கம்பனி
* நாட்டு நிதியம்
* பிராந்திய நிதியம்

**செல்வி. நா. லக்சனா**
**2009A/L COM**

# மனிதவள வெளியேற்றமும் பொருளாதாரத் தாக்கமும்

~~~~~~

**சட்டகம்**

1. அறிமுகம்
2. வேலையின்மையின் போக்கு
3. வேலையின் பொருட்டு வெளிநாட்டிற்கு மக்கள் செல்லுதல்
4. மனித வள வெளியேற்றத்தால் ஏற்படும் பொருளாதார தாக்கம்
5. முடிவுரை

ஒரு நாட்டில் இருந்து மருத்துவர்கள், கணக்கியலாளர்கள், பொறியியலாளர்கள் போன்ற தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் வேறு நாட்டிற்கு வேலைவாய்ப்பு போன்ற காரணங்களிற்காக வெளியேறுதல் மனிதவள வெளியேற்றமாக கருதப்படுகின்றது.

மனிதவள வெளியேற்றத்திற்கு பிரதான காரணமாக நாட்டின் வேலையின்மையும், வேலைவாய்ப்பினை உடையவர்களிற்கு கிடைக்கின்ற வருமானம் பற்றாக்குறையாக காணப்படுகின்றமையும் ஆகும். அதாவது தொழிலாளர்கள் தமது
~~~~~~

செயற்திறனையும் வினைத்திறனையும் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற ஊழியம் கிடைக்காமை ஆகும். இலங்கையைப் பொறுத்த வரை வேலையின்மையானது அடிப்படையில் இரு வகையான காணப்படுகின்றது. முதலாவது குறிப்பிட்டதொரு கூலிவீதத்தில் உழைப்புக்கான கேள்வி வழங்கலை விட குறையும் பொழுது வேலையில்லாத் திண்டாட்டம் தோன்றுகிறது. அடுத்து கட்டாய வேலையில்லாமை ஆகும். அதாவது தற்போதைய கூலி வீதத்தில் வேலை தேடினால் வேலை கிடைக்காமை ஆகும். இரண்டாவதாக தனிநபர்கள் வேலைக்குச் செல்லாமல் தமது நேரத்தை வேறு நடவடிக்கைகளில் செலவிடுவதாலும் வேலையில்லாப் பிரச்சனை தோன்றலாம். இதனை தன்னிச்சையான வேலையின்மை எனலாம். கட்டாய வேலையின்மையானது பொருளாதாரக் கட்டமைப்பை பாரியளவில் பாதிக்கும்.

இலங்கையிலும், இலங்கை போன்ற சிறிய பொருளாதார கட்டமைப்பு உடைய நாடுகளிலும் வேலைவாய்ப்பு மிகத் தாழ்ந்த அளவில் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மக்கள் வேலைவாய்ப்பிற்காக செல்வந்த நாடுகளை நோக்கி இடம்பெயர்ந்து செல்கின்றனர். குறிப்பாக 1970ம் ஆண்டு காலப்பகுதியில் எண்ணெய்வள உற்பத்தி நாடுகளில் தொழிலாளர்களிற்கான தேவை மிக அதிகமாக உயர்ந்த போது இலங்கையில் இருந்து தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களும், தேர்ச்சியற்ற கூலி வேலை செய்பவர்களும் கணிசமான ளவில் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி இடம்பெயர்ந்தனர். இவ்வாறு மக்கள் வெளியேறியதிற்கு அத்தாட்சியாக 1994 இன் விமானநிலைய அளவை அமைகின்றது. விமான நிலைய அளவையின் படி 130,027 பேர் வெளிநாடுகளிற்கு சென்றிருந்தனர். இத்தொகையில் 59% ஆன மக்கள் தேர்ச்சியடைந்த நிபுணத்துவம் வாய்ந்த தொழிலாளர்களாகவும் மிகுதி 41%ஆனோர் தேர்ச்சியற்ற தொழிலாளர்களாகவும் காணப்பட்டனர். அத்துடன் மாலைதீவு, சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற நாடுகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலங்கள் அதிகரித்தன் காரணமாக மாலைதீவிற்கு 4.48% இலும், சிங்கப்பூருக்கு 1.05% இலும் மக்கள் வேலைவாய்ப்புத் தேடிச்சென்றனர். இந்நிகழ்வு இலங்கையில் இருந்து மனிதவள வெளியேற்றத்திற்கு உதாரணமாக அமைகின்றது. மேலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தொடர்பான 1985 இன் 21ம் இலக்கச்சட்டம் 1995 ஜனவரி 1ம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்ததால் முகவர் தரகுக்கட்டணம் குறைவடைந்தது. இதன் விளைவால் குறைந்த செலவில் வெளிநாட்டிற்கு செல்லக்கூடியதாக இருந்ததால் வெளிநாட்டிற்கு செல்வோரின் தொகை மேலும் அதிகரித்தது.

இலங்கையில் இருந்து மக்கள் வெகுவாக வெளியேறியமையால் பொருளாதாரத்திற்கு பெரும்பாதிப்பு ஏற்பட்டது. 1978ம் ஆண்டு முதல் தற்போது உள்ள காலப்பகுதிவரை குறைந்த அளவு சதவீத பொருளாதார வளர்ச்சியே ஏற்பட்டுள்ளது. மேலும் வெளிநாட்டிற்கு சென்றவர்கள் தமது செயற்திறனையும் வினைத்திறனையும் சிறந்த வகையில் உள்நாட்டில் வழங்கியிருந்தால் மிக அதிகமான அளவில் பொருளாதார வளர்ச்சியை இலங்கை அடைந்திருக்கும். இலங்கையின்

2006ம் ஆண்டு மத்தியவங்கி ஆண்டறிக்கையின் பிரகாரம் விவசாயத்துறையில் தேசியஉற்பத்தி 28% ஆகவும், கைத்தொழில்துறையின் பங்கு 28% ஆகவும்காணப்பட்டது. இங்கு கைத்தொழில்துறையின் பங்களிப்பு 28% ஆக காணப்படுவதற்கு பிரதான காரணமாக தொழில்நுட்பவியலாளர்களின் பற்றாக்குறை அமைகின்றது. இலங்கையில் ஏற்கனவே காணப்பட்ட தொழில்நுட்பவியலாளர்களும் வெளிநாடுகளிற்கு இடம்பெயருகின்றனர். இவர்களின் பங்களிப்பு இன்மையால் அரசாங்கத்தினால் சிறந்தவகையில் கைத்தொழில்துறையை முன்னேற்ற முடியாது உள்ளது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கைத்தொழில் துறையின் பங்களிப்பு மிக அவசியம் ஆகும். இங்கு தொழில்நுட்பவியலாளர்களின் வெளியேற்றம் பொருளாதாரத்தை வெகுவாக பாதித்துள்ளது. அத்துடன் நாட்டின் யுத்தம் காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக நாட்டில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களும் சிங்கப்பூர், மலேசியா, கனடா போன்ற நாடுகளிற்கு வெளியேறுவதால் பொருளாதாரம் பாரிய அளவில் பின்னடைவை கண்டு வருகிறது. அத்துடன் மாணவர்களும் கல்வியை பெற்றுக்கொள்வதற்காக வெளிநாடுகளிற்கு இடம்பெயருகின்றனர். இதன் விளைவால் தேர்ச்சியுடைய தொழிலாளர்கள் உருவாகும் நிலையும் அற்றுப்போகின்றது. இவ்வாறான நிலைமைகள் தற்போதைய பொருளாதாரத்தை பாதிப்பதோடு எதிர்கால பொருளாதாரத்தையும் பாதிக்கும். இப்பிரச்சனைகள் உள்நாட்டில் வேலைவாய்ப்பினை அதிகூடிய சம்பளத்துடன் வழங்குவதன் ஊடாக ஓரளவிற்கு சீரமைக்கலாம். எந்தவொரு நாட்டிலும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் மனிதவளம் இன்றியமையாததாமும். ஒரு நாட்டில் உற்பத்தி திறம்பட நடைபெறுவதற்கு உற்பத்திகாரணியாகிய உழைப்பு மிகஅவசியம் ஆகும். இவ்உழைப்பினை மனிதவளத்தின் மூலமாகவே பூர்த்தி செய்து கொள்ள முடியும். எனவே எவ்நாடாக இருந்தாலும் அந்நாட்டில் மனிதவள வெளியேற்றம் ஏற்பட்டால் அந்நாட்டின் பொருளாதாரம் பாதிப்பு அடையும்.

**செல்வன். ஆ. பிரசன்னா**
**2009A/L COM**

# இலங்கைக் கைத்தொழில்துறையின் அண்மைக்காலப்போக்கு

இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையத்தில் அமைந்த நாடாக விளங்குவதோடு உற்பத்திக் கைத்தொழில் துறையின் செழிப்பான வளங்களுடன் காணப்படுகின்றது. மனித நுகர்வுக்கு எட்டாதிருக்கும் வளங்களான அந்த செழிப்பான வளங்களை மனித நுகர்வுக்கு ஏற்றவகையில் மாற்றியமைப்பதன் மூலம் பொருட்களுக்கான பெறுமதியை தோற்றுவித்தல் or அதிகரித்தல் உற்பத்தியாகும் இவ்உற்பத்தியினை திறமையாக மேற்கொள்வதற்கு இவ்உற்பத்தியோடு நெருங்கிய தொடர்புபட்டதொன்றே கைத்தொழிலாகும். இலங்கையின் உற்பத்தி துறையானது 2005ம் ஆண்டு 6% வளர்ச்சியை தொடர்ந்து 2006ம் ஆண்டில் 7.4% மாக அதிகரித்துக்

காணப்படுகின்றது. இலங்கையின் உற்பத்திதுறையின் வளர்ச்சியானது 1973ம் ஆண்டு காலப்பகுதிக்கு பிற்பாடான ஒரு உயர்ந்த வளர்ச்சியாகும். இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில் அதாவது பெற்றோலியப் பொருட்களின் விலைத்தளம்பல்கள், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அதிகரித்து வரும் போர்ச்சூழல், போர்ச்செலவுகள் மத்தியில் இவ்வாறு ஒரு வளர்ச்சி காணப்படுகின்றதென்றால் அதற்கு இலங்கையின் உற்பத்தித் துறையும் அதனோடு தொடர்புபட்ட கைத்தொழில் துறையினதும் வளர்ச்சி மிக வலுவான நிலையில் உள்ளதென்பது ஏற்கக்கூடியதொன்றாகும்.

ஒரு தலைக்குரிய வருமானம் எனப்படுவது ஒரு நாட்டுக்கு கிடைக்கின்ற மொத்த வருமானத்தை அந்நாட்டின் மொத்த சனத்தொகையினால் பிரிப்பதன் மூலம் பெறப்படும் அத்தொகையில் 2005ம் ஆண்டு இலங்கையின் ஒரு தலைக்குரிய வருமானமாக 1719 ஐக்கிய அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது. இது 2006ம் ஆண்டு ஒரு தலைக்குரிய வருமானமாக 1355 ஐக்கிய அமெரிக்க டொலராக அதிகரித்தது. இந்த வகையில் ஒரு தலைக்குரிய வருமான அதிகரிப்பு உற்பத்தி கைத்தொழில் துறையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் காரணமாக அமைவதோடு இலங்கையின் வளர்ச்சியில் ஒரு பெரும் பங்கு வகிக்கின்றது.இவ் உற்பத்தி துறையினை விவசாயத்துறை கைத்தொழில்துறை சேவைத்துறை என மூன்று பெரும் பிரிவுகளாக நோக்கலாம். இவ் விவசாயத்துறையினுள் வேளாண்மை காட்டுத்தொழில் கடற்தொழில் என்பவற்றை உள்ளடக்குவதோடு இத்துறை 2005ம் ஆண்டு 17.3% இல் இருந்து 16.8% மாக வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கையின் வளர்ச்சிக்காக வேளாண்மை அமைச்சானது வேளாண்மை ஆராச்சி உயர்விளைச்சல் கொண்ட விதைகளினை சந்தைப்படுத்தியமை ஆழ்கடல் மீன்பிடியை அதிகரிக்கும் பொருட்டு வள்ளங்கள் வழங்கியமை புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள இறால் பண்ணைகளின் உட்கட்டுமானத்தை மேம்படுத்தியமை போன்றவற்றுடன் மேலும் உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் பாதுகாப்பதும் நிலைத்திருக்கக் கூடியதுமான ஒரு திறந்த சந்தை அமைப்பினை உருவாக்கி கொடுத்தமை போன்ற பல செயற்றிட்டங்களை செயல்படுத்திய போதும் விவசாயத்துறையில் ஈடுபட்ட மக்கள் பெரும்பான்மையினர் இதை நாகரிகம் அற்ற துறையாக கருதி புதிய நவீன துறைகளிற்குள் பிரவேசித்தமையே இலங்கையின் உற்பத்தி துறையான வேளாண்மைத்துறையின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைகின்றது.

மேலும் கைத்தொழில் துறையினை நோக்கும் போது சுரங்கத்தொழிலும் கல்லுடைத்தலும் தயாரிப்புத்தொழிலும் மின்னலை நீர் கட்டடவாக்கம் போன்ற பிரிவுகளை உள்ளடக்குகின்றது கைத்தொழில் துறையானது 2005 இல் 27% மாகவும் 2006இ ல் 27%மாகவே மாற்றமின்றி க்காணப்பட்டது. இக் கைத்தொழில்துறைக்காக அரசு பல அபிவிருத்தி செயற்திட்டங்களை மேற்கொண்ட போதும்சில குறைபாடுகள் காணப்பட்டன. குறிப்பாக அதிகரித்துச் செல்லும் கூலியும் மூலப்பொருட்களின் விலை ஏற்றமும் மேலும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் இன்மை தொழில்நுட்பத்திறன் வாய்ந்த கட்டடவாக்க கலைஞர்கள் இன்மை சிறந்த

ஆளணியின்மை சந்தையில் காணப்பட்ட கடுமையான தட்டுப்பாடுகள் போன்றன கைத்தொழில் துறை முன்னேற்றத்திற்கு ஒரு சவாலாகக்காணப்பட்டது.

இலங்கையின் வளர்ச்சியில் சேவைத்துறையே அதிகளவு பங்களிப்பை கொண்டுள்ளதுடன் ஒரு வளர்ச்சியடையும் துறையாகக்காணப்படுகின்றது. இச் சேவைத்துறையினுள் மொத்தச்சில்லறை வர்த்தகமும், போக்குவரத்தும், களஞ்சியப்படுத்தலும், தொடர்பாடல் வசதிகளும் நிதிப்பணிகள், உண்மைச் செலவுகள் வர்த்தகப்பணிகளும், பொதுநிர்வாகமும் அரசபணியும் பாதுகாப்பும் ஏனைய சமூகப்பணியும், தனியாள் சமூகப்பணியும் இதில் உள்ளடங்கப்படும் இச்சேவைத்துறையானது 2005ம் ஆண்டில் 55.7% மாக காணப்பட்டது ஆனால் 2006 இல் 56.2% ஆக அதிகரித்துள்ளது.

இவ்வளர்ச்சிக்கு அரசானது பல செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ளது குறிப்பாக கொழும்பு மற்றும் தென்துறைமுக அபிவிருத்திகள், நிலக்கரி , மின்வலுச் செயற்றிட்டம், அதிவிரைவுப் பாதைகள், புகைவண்டிப் பாதைகள் போன்ற பல அபிவிருத்தி செயற்றிட்டத்தினை மேற்கொண்டுள்ளது.மேலும் சேவைத்துறையின் வளர்ச்சிக்காக உட்கட்டமைப்பு வசதியாக மிகின் ஏயார் விமான நிலையம் அமைக்கப்படவுள்ளமையும் திருகோணமலை பிரதேசத்தில் ஒரு அனல் மின்நிலையமொன்றை அமைக்கவுள்ளமையும் எதிர்வரும் காலத்தில் மென்மேலும் சேவைத்துறை வளர்ச்சியடைய காரணமாக உள்ளமை சேவைத்துறைகளின் வளர்ச்சியடையும் என்பதில் எதுவித மாற்றமும் இல்லை சேவைத்துறையின் வளர்ச்சியானது பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்களிப்பு செய்கின்றது.

இலங்கையில் உற்பத்திதுறையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2005ம் ஆண்டு 2802 பில்லியினாகவும் 12.4% பொருளாதார வளர்ச்சியாகவும் காணப்பட்டது. இவ்வளர்ச்சி 2006 இல் 17.1% மாக அதிகரித்தது.இப்பொருளாதார வளர்ச்சி இலங்கையின் பெரும் வளர்ச்சியாகும். மேலும் 2005ம் ஆண்டு இலங்கையில் காணப்பட்ட வேலையின்மை வீதம் 7.3 சதமாக காணப்பட்டது. இது 2006 இல் 6.5% மாக வேலையின்மை வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. இவ் வீழ்ச்சியானது இலங்கையின் உற்பத்தி துறையின் வளர்ச்சிக்கான ஒரு காரணி ஆகும். இவ்வாறு இலங்கையின் உற்பத்தி துறையின் வளர்ச்சியால் தனியால் முதலானது 26.5% இலிருந்து 28.7% மாக அதிகரித்தது. மேலும் 2005 இல் அரச முதலீடு 4.2% இருந்து 2006 இல் 3.8% மாக வீழ்ச்சியடைந்தது. இதன் மூலம் இலங்கையின் உற்பத்தி துறையானது தனியார் மயப்படுத்தலினால் உச்சப்பயன்பாடுடையனவாகவும் திறமையாகவும் உற்பத்தி நடைபெறும். ஆனால் எதிர்வரும் காலங்களில் இலங்கையின் உற்பத்தித்துறை கைத்தொழில்துறை என்பன வளர்ச்சியடையும் இவ்வளர்ச்சியில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி தங்கியுள்ளமை தெட்டத்தெளிவாக விளங்கிக் கொள்ளக்கூடியதாக அமைகின்றது.

**செல்வன். பா. லோசிதகுமார்**

**2009A/L COM**

# முதியோரை இளையோர் பேணவேண்டும்

"காவோலை விழக் குருத்தோலை சிரிக்கின்றது" என்பது முதுமொழி குருத்தோலையும் ஒரு நாள் காவோலையாக மாற இருப்பதை மறந்து விடுவதாக பெரியவர்கள் வர்ணிப்பர். முதுமை என்பது வயதை வைத்து இளையோர்கள் தீர்மானிப்பது தவறானது என்பதை புரிந்து கொள்வதில்லை. முதுமை என்பது இளையோர் சமுதாயத்துக்கான பெரும் பொக்கிஷம் என்பதே பொருள் கொள்ளவேண்டும்.

ஆயிரம் நூல்களில் இருந்து கிடைக்கமுடியாததை ஒரு அனுபவம் பெற்றுக்கொடுக்கும் என்பார்கள். இந்த அனுபவம் எங்கிருந்து கிடைக்கின்றது என்றால் முதுமையுள் இருந்தே தான் கிடைக்கின்றது.

முதியவர்கள் வாழ்வியலில் அனுபவப்பட்டவர்கள், அடிபட்டவர்கள், வாழ்க்கையைப் போராடி வாழ வேண்டும் என்பதை உணர்ந்தவர்கள். வெற்றிக்கான வழியை சுலபமாகக்கண்டு பிடிக்கக்கூடியவர்கள். நீண்ட கால வாழ்க்கையின் முட்டுக் கட்டைகளை முறியடிக்கக் கூடிய அறிவைப் பெற்றவர்கள். இவர்களுக்கு வாழ்க்கையின் விருப்பு, வெறுப்புக்கள் முதுமையின் இரகசியங்களாக வைத்திருப்பர். இதனால் தான் இவர்களை பெரியவர்கள் / மூத்தோர்கள் முன்னோர்கள், முதியோர்கள் என கௌரவமாக அழைக்கப்படுகின்றனர்.

இளமை என்பது மாறுபட்டது; இன்பத்தை மட்டும் தேட விளைவது; ஓடும் பாம்பை பிடிக்க நினைப்பது; இளமையின் துடிப்பு முன் கோபம் முன் புத்தி கொண்ட இளமை முதுமை அறியாது "இளம் கன்று பயமறியாது" என்பது பழமொழி. இளமையும் முதுமையறியாது. ஆனால் இளமை, முதுமை பற்றி அறிய வேண்டிய நிர்ப்பந்தத்தை ஒவ்வொரு குடும்பமும் தங்கி வாழும் எமது பாட்டன், பாட்டி, தாத்தா, பூட்டி என்ற தமது சொந்த உறவினர்கள் ஆவார். மிகவும் அன்புடனும் பண்புடனும் பழகும் முறைகளுக்கு வழிகாட்ட வேண்டியது அவசியமாகும்.

முதியவர்களை மதிக்னும் சம்பிரதாயங்கள் அரிதானதால் இன்று கௌரவிக்கப்படுவார்கள். இவர்களது வாழ்வியலை பள்ளிக்கூடங்களிலும், வீடுகளிலும் சொல்லிக் கொடுத்தல் அவசியமாகின்றது. காரணம் இளைஞர்கள் முதியவர்களைப் பேணுவது தமது கடமை என்பதை உணரவைப்பதற்கான சந்தர்ப்பத்தை அவர்களுக்கு அறிவிப்பதற்காக வழிகாட்ட வேண்டிய தேவை காணப்படுகிறது.

முதியவர்கள் பக்குவமடைந்தவர்கள் ஆதலால் பக்குவமான முறையால் இளைஞர்களது உரிமைகளை பெற்றுக்கொடுப்பதிலும், தவறுகளை தட்டிக்கேட்பதிலும் அதிக அக்கறை கொண்டவர்கள் என்பது உண்மை. இளைஞர்கள் அவர் வழியில்

பின்பற்றுவது சுய உரிமை ஆயினும் அவர் சொல்லுக்கும், வயதுக்கும், அனுபவத்திற்கும் மதிப்பளிப்பது இளையோரின் கடமை.

இன்று பெருமளவிளான முதியவர்கள் தேடுவாரற்று கண்காணிப்பாரற்று நடுத்தெருவில் நிற்பதும் முதியோர் மடங்களில் தங்கிவருவதும் கொடூரமான வன்செயல் காரணம். நாளை குடும்பங்களில் கட்டுக்கோப்பு, அன்பு, ஆதரவு, அறம் நலிவடைய முதியோர் இல்லங்கள் இடமளிப்பது மறுக்க முடியாத உண்மை. ஆயினும் முதியோர் இல்லங்கள் இல்லாது போனாலும் முதியவர்கள் தங்குவதற்கான சரியான தளம் இல்லாது தத்தளிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் உண்டாகும் என்பது தெளிவு.

இவற்றுக்கு காரணம் முதியோரை இளையோர் பேணாமை என்பது உண்மை இளையோர் ஏன் முதியோரைப்பேண வேண்டும் என்பதற்கு பல காரணங்கள் உண்டு. இளையோர் நாளைய சமுதாயத்தின் தூண்களாக காணப்படப் போகிறவர்கள். முதியவரது ஆதரவு, பற்றுறுதி, அனுபவம், தெளிவு என்பவற்றை இளையோர்களே படித்துக்கொள்ள வேண்டும். இவர்கள் முதியோரை இகழ்ந்தால் கலாச்சாரங்கள், சம்பிரதாயங்கள், சந்ததிகள் என பலதையும் இழந்து நடு வீதிக்கு கொண்டுவரப்படுவர்.

இதனால் இளையோர்களுக்கான சரியான வழிகாட்டி வேண்டும். சரியான எழுதுமுனை இருந்தால் போதாது, முனையிலும் மை வேண்டும். மைதான் முதியவர் இன்று பல இடங்களில் "கிழடு, பழசு, அறளை பேந்து போச்சு" எனக் கீழ்த்தரமான வார்த்தைகளை உபயோகிப்பது கொடுமையான ஒன்றாக தென்படுகின்றது.

இச்சூழல் மாறவேண்டும். இளமைக்கு துடிப்பு மட்டும் போதாது, சரியான பாதையில் வழிகாட்ட முதியவரிடம் நிறைய படிக்க வேண்டியுள்ளது என்பதை மறந்து விடமுடியாது.

இளையவர்கள் முதியவர்கள் மீது அக்கறை அன்பு ஆதரவு கொண்டு ஒழுகுவாரேயாயின் "முதுமைக்கு நரை அழகு" என்பர். அந்த நரையில் மறைந்துள்ள இளமை அழகு அறிவாகவும், அன்பாகவும், அனுபவமாகவும் தென்படுவதை உணர்வர். முதியவர்கள் முதுகெலும்புகள், வழிகாட்டிகள் வாழ்ந்து சவால்களை சாதித்தவர்கள், நன்மையோ, தீமையோ, இன்பமோ, துன்பமோ நேருக்குநேர் நின்று போராடியவர்கள். பின்னனியும் சிறுவர் முதல் இளமை கடந்து முதுமை அடைந்து தான் என்பதை இளையர்கள் கருத்தில் கொண்டு முதியவருக்கான மதிப்பளித்து அவர்களை பேணவேண்டும். இளைஞர்கள் முதியவர்களைப் பேணினால் தூசு படிந்துள்ள ஒவ்வொரு நூலும் அறிவியலுக்கான வெளிச்சத்தை நாடி நகரத்தொடங்கும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

**செல்வி. ம. நிருஷா**
தரம் $11^{A}$

# இணைய வணிகமும் மின்னியல் பணமும்

21ம் நூற்றாண்டை நோக்கி உலகம் நகரத் தொடங்கியவுடன் அதனுடன் சேர்ந்து வணிகமும் நகரத்தொடங்கி விட்டது என்றே கூறலாம். அந்தளவுக்கு வணிகத் துறையினுள்ளும் நவீன முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டது.

நாம் முன்பு பொருட்களை வாங்கியவுடன் பணம் அல்லது காசோலையைக் கொடுப்போம். அல்லது இவற்றிற்குப் பதிலாக பரிமாற்றம் செய்யக்கூடிய நம்பிக்கைக்குரியவையாக ஆவணம் சொத்து காணப்பட்டது. ஆனால் இப்போது நாம் பணத்திற்குப் பதிலாக வரவட்டை அல்லது கடனட்டையைப் பயன்படுத்த முடியும்.

வரவட்டையானது உங்களுடைய வங்கிக் கணக்கிலுள்ள மீதிக்கு சமமாகும் வரை நீங்கள் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தத் தொகை உங்களது வங்கிக் கணக்கில் கழிக்கப்படும். இதேபோல கடனட்டை என்பது வங்கியிடம் அல்லது தனியாரிடம் கடன் பெறுவது போல இதனைப் பாவித்து கடனிற்குப் பொருட்களைப் பெறமுடியும். பின்னர் குறிப்பிட்ட காலத்தினுள் கடனை மீளச் செலுத்த வேண்டும்.

வழக்கமாக நாங்கள் பொருள் விற்பனை நிலையங்கள் வரை சென்று எமக்குத் தேவைப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்கின்றோம். இதற்காக கடை கடையாக ஏறியிறங்கி நேரத்தை விரயமாக்குகிறோம். சில வேளைகளில் விற்பனையாளருடன் பிரச்சினைப்படவும் வேண்டி ஏற்படுகின்றது. ஆனால் இவ்வாறான பிரச்சனைகளை இணையத்தள வணிகத்தளத்தில் காணமுடியாததுடன், விரும்பிய நேரத்தில் நாம் பொருளைத் தெரிவுசெய்யவும் முடியும். இணைய வணிகமுறையில் பணம் செலுத்துவது மின்னியல் பணம் மூலம் ஆகும்.

இணையத்தளம் முலம் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது கணக்குகள் பேணப்படுகின்றன.பின்னர் குறிப்பிட்ட தொகையின் மொத்தமானது உங்களுடைய வங்கிக் கணக்கில் இருந்து பெறப்படும். இதன்படி உங்களது வங்கிக் கணக்கின் எண்ணை கணனி மூலம் வியாபாரத் தளத்திற்குத் தெரிவிக்க வேண்டும். அவர்கள் வங்கிக் கணக்கில் இருந்து குறித்த தொகையைப் பெற்றுக் கொள்வார்கள். இவ்வாறு இணையத்தளம் மூலம் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது நன்மைகளும் தீமைகளும் ஏற்படுகின்றன.

இதன் நன்மைகளாவன,

i. இலகுவாக பொருட்களைத் தெரிவு செய்ய முடியும்
ii. விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இணையத்தளம் மூலம் சென்று பொருட்களைத் தெரிவு செய்ய முடியும்.

iii. ஊழியர்களுடன் பேரம் பேசத்தேவையில்லை

iv. பொருளைத் தெரிவு செய்ய முன்பு குறிப்பிட்ட பொருள் பிடிக்காதுவிடின் அதை இலகுாகத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மேற்குறித்த நன்மைகளுடன் சில குறைபாடுகளும் காணப்படுகின்றது

இதன் தீமைகளாவன,

i. இணைய வியாபாரத்தில் இலகுவாக ஏமாற்றப்படக்கூடிய நிலை காணப் படுகின்றது.

ii. இணையத்தளத்தில் கடனட்டை அல்லது வரவட்டையைப் பயன்படுத்தி பொருள் கொள்வனவு செய்யும் போது சில வங்கிகள் சேவைக்கட்டணம் அறவிடுகின்றன.

iii. அனைவருக்கும் கணணி அறிவின்மை, இணையத்தள வசதியின்மை காணப் படுகின்றது.

இவ்வாறான குறைபாடுகள் காணப்பட்ட போதும் இணையவணிகமானது பரவலாக இடம்பெறுகின்றது.இதற்கு ஒரு காரணம் மின்னியப் பணக்கொடுப்பனவு ஆகும். இந்தப் பணமானது இலகுவாக எடுத்துகொண்டு செல்லக்கூடியதுடன் பாதுகாப்பாகவும் வைத்திருக்க முடிகிறது.

இதனால் மின்னியல் பணத்தின் பாவனை அதிகரிப்பதாகக் கூறப்படுகின்றது.மின்னியல் பணத்தின் பாவனை அதிகரிப்பானது பல வணிக நிறுவனங்கள் தமது இணைய வணிகத்தை அதிகரிக்கவும் , புதிய இணைய வணிகத்தை ஆரம்பிக்க வைக்கவும் தூண்டியுள்ளது.

**செல்வி. மு. மயூரா**
**2009A/L COM**

# கணனிக்கும் காய்ச்சல் வரும்

## *Virus Fever*

அட கணணிக்கும் காய்ச்சல் வரும் என்றவுடன் என்ன யோசிக்கிறீர்கள் அட அது வேறுஒன்றுமில்லை. வைத்தியரிடம் காட்டினால் சரியாகிவிடும் என நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. இந்தக் காய்ச்சல் மிகவும் மோசமானது இது வருவதற்கு முன்னரே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் இல்லை அதையும் தாண்டி வந்து விட்டது எனின் அதனைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். அட என்னங்க கணணிக்கு காய்ச்சல் என்றடன் குழம்பாதீர்கள் அதுதான் கணணிக்குள் பரவும் வைரஸ் மென்பொருளாகும்.இப்போது விளங்கியிருக்கும் கணணிக் காய்ச்சலைப் பற்றி.

ஆம் இந்த வைரஸ் ஆனது கொம்பியூட்டரை தாக்கி இன்றோடு 21 வருடங்கள் முடிந்து விட்டது அட நீங்கள் வைரஸ் என்றவுடன் அது நம்மையும் தாக்குமா எனப் பயப்பட வேண்டாம்! அது இப்போது எம்மைத் தாக்காது. ஆனால் வருங்காலத்தில்??? நான் அறியமாட்டேன். ஆனால் தாக்கலாம் என்பது கணணி விஞ்ஞாணிகளின் ஊகம். இந்த வைரஸ் என்பது இயற்கையான ஒன்றல்ல. இதுவும் எம்மைப் போன்ற மனிதர்களால் கணணியில் எழுதப்பட்ட ஒரு மென்பொருளே தவிர வேறு ஒன்றுமில்லை.

கணணி வைரசுக்கு இன்றுடன் (21.09.07) 21 வயது முடிந்துவிட்டது. இந்த வைரஸ் முதன் முதலில் 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி தனது முதலாவது கொம்பியுட்டரைத் தாக்கியது அப்போது அந்த வைரஸ் ஆனது Opreasting system த்தினைக் கொண்ட Floppy disc ல் காணப்பட்டது. பின்னர் படிப்படியாக வளர்ந்து, இன்று உலகின் பொருளாதாரத்திற்கு பெரும் சவாலாக உள்ளது இப்போது பல்வேறு ஆபத்தான வைரசுகள் காணப்படுகின்றன.

இந்த வைரசுகள் கணணியில் தாம் இணைவதற்கு Hard Disc க்கில் காணப்படும் ஏதோ ஒரு கோப்பினை (File) பயன்படுத்துகிறது. பின்னர் அங்கிருந்தவாறு எல்லாக் கோப்புகளையும் தாக்குகிறது. இந்த வைரஸ் எவ்வாறு பரவுகிறது என நீங்கள் யோசிக்கலாம் இதற்கு பெருமளவில் உதவியாக இருப்பது Internet தான். உடனே நீங்கள் அப்பாடா நான் தப்பினேன் என்று நினைப்பீர்கள். அதுதான் இல்லை! முந்திய காலங்களிலே Internet மூலமே வைரஸ் கணணிகளைத் தாக்கியது ஆனால் இப்போது நாம் அன்றாடம் பாவிக்கும் DATA CD கள் மூலமும் FLASH DRIVE கள் மூலமும் பரவுகிறது எனவும் கேள்வி! எனவே கவனமாக இருங்கள்! இந்த வைரஸ் ஆனது கணணியில் குடிபுகுந்தவுடன் கணணியைத் தாக்கும் என நீங்கள் நினைக்காதீர்கள். அவ்வாறு இல்லை சில வேளைகளில் 3 - 4 மாதங்களும் செல்லலாம்.

இந்த அழிவுக்கு தீர்வே இல்லையா என நீங்கள் என்னிடம் வினவலாம். இருக்கிறது அதுதான் AntiVirus Programe. மனிதன் தான் கண்டுபிடித்த எல்லாவற்றையும் அழிக்கவும் ஒரு பொருளைக் கண்டுபிடித்திருப்பான். இல்லாவிடில் உலகில் சமநிலை குழம்பிவிடும். இதனை நீங்கள் உங்கள் கணணிக்கு Opreting System ஏற்றியவுடன் இதனை Install செய்ய வேண்டும். இப்போது உலக சந்தையில் 1000 த்திற்கும் மேற்பட்ட Anti Virus Softwares காணப்படுகின்றன. அவற்றில் சில Norten, Syentec, PclinKespacky, Mcfee,Virus Guard ,Panda, ApeSym போன்ற பல காணப்படுகின்றன. நீங்கள் Internet பாவிப்பவரா? அப்படியென்றால் நீங்கள் அடிக்கடி உங்கள Anti virus இனை Update செய்யுங்கள் இல்லாவிடில் புதிதாகப்

படையெடுக்கும் Virus களை கட்டுப்படுத்த முடியாது. நீங்கள் Inter net இல்லாதவரா? அப்படியானால் கொஞ்சம் Relax!!

21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அதாவது 2000 ஆம் ஆண்டு Love letter, I Love You போன்ற வைரசுகளால் உலகில் பலகோடி அமெரிக்க டொலர்கள் நட்டம் ஏற்பட்டது. இப்போது நடைமுறையில் பல்வேறுபட்ட வைரசுகள். காணப்படுகின்றன. கிட்டத்தட்ட 200000 ற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் வைரசுகள் காணப்படுகின்றன இவற்றில் இப்போது மிகவும் மோசமாக இருப்பவை சில உங்களுக்காக Blacmal, My wife, Kamasutra,Trojan, Rudaldo.

இந்த காமசூத்ரா மிகவும் மோசமானது இது மின்னஞ்சல் மூலம் கணணிக்குள் பரவுகிறது.

இது எப்படி வருகிறது தெரியுமா "Indian house wife seeking comfort" என்ற செய்தியோடு வரும் மின்னஞ்சலை நீங்கள் ஓபன் செய்தீர்கள் என்றால் போதும். அது உங்கள் கணணக்குள் நுழைந்து பின்னர் உங்கள் கணணியில் இருக்கும் எல்லா மின்னஞ்சல்களிலும் புகுந்து உங்கள் நண்பர்களின் கொம்பியூட்டரையும் தாக்கும்.

இந்த Trojen இப்போது Cryzip Trojen எனும் வடிவில் கொம்பியூட்டரினுள் மிகவும் திறமையாக ஊடுருவி விடுகிறது. இது என்ன செய்யும் தெரியுமா? உங்கள் கணணியில் இருக்கும் கோப்புகளை ZIP எனும் சுருக்க வடிவில் மாற்றி விடும் இவ்வாறு ZIP செய்யப்பட்ட கோப்புகளை நீங்கள் UNZIP செய்ய நினைத்தால் கணணியின் எமன் எருமையில் ஏறிவிடுவான். அதாவது இதனை நங்கள் UNZIP செய்ய நினைத்தால் "Erassed by zippo go Out" என்ற செய்தி தோன்றும். பின்னர் நீங்கள் கிளிக் செய்தால் உங்கள் கோப்புகள் எல்லாம் அழிந்து Zip Files மட்டுமே மிஞ்சும். அவற்றை நீங்கள் திறந்தால் ஏமாற்றமே மிச்சம். மீண்டும் என்ன புதிய Opreating System தான்.

கொம்பியூட்டர் பாவனையாளர்களே! கவனம் இன்னும் 20 வருடங்களில் கணணி வைரஸ் உங்கள் வீட்டையும் தாக்கலாம் என்பது விஞ்ஞானிகளின் ஊகம். சொல்ல இயலாது இன்னும் 50 வருடங்களில் அது நம்மையும் தாக்கலாம்!!!!!

"எப்போதுமே நாமே நமக்கு எமனாகிறோம்"

**S.T.Mahinthan**
**2008 A/L BIO**

# கல்லூரி நிகழ்வுகளின் பதிவுகள்







மே
பி
ப
ம
நா
க
பு
ஏ
இ
கே
இ

1.

எ
எ
செ
செ
மு
செ
எ
ம

2

செ
எ
ந
த
எ
(

# ஜப்பானிய முகாமைத்துவம்
# Japanese Management

இன்றைய உலகில் பிரபலம் பெற்றுவரும் ஒரு முகாமைத்துவமே இதுவாகும். மேலைத்தேய நாடுகளான இங்கிலாந்து, அமெரிக்கா, ஆகிய நாடுகளில் பின்பற்றப்படும் முகாமைத்துவ கோட்பாடுகளை விட யப்பானிய முகாமைத்துவம் பல விசேட பண்புகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பெருமளவு அழிவைச் சந்தித்த ஜப்பான் இன்று வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு நிகரான பொருளாதாரத்தைக் கொண்டிருப்பதற்கு காரணம் அது கடைப்பிடித்து வரும் முகாமைத்துவ கோட்பாடுகளே ஆகும். ஜப்பானிய நிறுவனங்கள் புதிய தொழினுட்பங்களை புகுத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கு அதனூடே பிரதான ஏற்றுமதியாளராகத் திகழ்வதற்கும் ஜப்பானிய முகாமைத்துவம் பெரிதும் உதவியுள்ளது. இதன் காரணமாகத்தான் அமெரிக்கா கூட ஜப்பானிய முகாமைத்துவத்தில் சில கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கத் தயாராக உள்ளது பெரும்பாலும் பின்வரும் 7 இயல்புகளும் ஜப்பானிய முகாமைத்துவத்தின் உடமைகளாகத் திகழ்கின்றன.

**1. கூட்டுத் தீர்மானம் எடுத்தல்**

இது நிறுவனம் ஒன்றிற்கான தீர்மானத்தை எடுப்பதில் பலரை பங்கு கொள்ள வைக்கும் முறையாகும். ஜப்பானிய முகாமைத்துவத்தில் இதனை Ringi System எனக் கொள்வார். இந்த முறையிலே தீர்மானத்தை நடைமுறைப்படுத்த பொறுப்பானவர்கள் பலர் சந்தித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதன் மூலம் பொருத்தமான தீர்மானம் ஒன்றை எடுப்பர். இதன்படி நிறுவனங்களிலே இடைத்தரமட்ட முகாமையாளர் உருவாக்கி மேல்மட்டத்திற்கு அனுப்பி வைக்கும் கடமையைக் கொண்டிருப்பார். இம்முறையிலே கால தாமதமான தீர்மானம் இடம்பெறக்கூடும் எனறாலும், எடுக்கப்படும் தீர்மானம் தவறுகளின்றி பலரது கருத்துகளுக்கு மதிப்பளிப்பதாக இருக்கும்.

**2. ஊழியர் நலனில் அக்கறை காட்டுதல்**

இது ஊழியர்களின் தனிப்பட்ட நலனில் (முகாமை) அக்கறை காட்ட வேண்டும் என்ற கோட்பாட்டைக் குறிப்பதாகும். இதன்படி ஊழியர்களின் வீட்டு வசதி, அவர்களின் போக்குவரத்து வசதி, பிள்ளைகளின் கல்வி வசதி போன்றவற்றில் நிறுவனமே அக்கறை காட்டும். இதனால் ஊழியர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதனூடே அவர்களிடம் இருந்து குழு ஒத்துழைப்பைப் பெற முடியும் என்பதில் ஜப்பானிய முகாமைத்துவம் அக்கறை கொண்டிருக்கும். இதனூடாகவே முதலில் வேலையும், பின்னர் குடும்பமும் என்ற ஒரு கொள்கையை ஊழியர்கள் கடைப்பிடிக்க முடிவாகின்றது.

**3. தரச் சுற்றுக்கள்**

இது உற்பத்திப் பொருளின் தரத்தை தொடர்ச்சியாக உயர்த்துவதற்கு என கையாளப்படும் நடவடிக்கை ஆகும். இதன்படி நிறுவன ஊழியர்கள் நாளாந்தம்

வேலை நேரத்தின் பின்னர் சந்தித்துத் தரத்தை உயர்த்துவதற்கான ஆலோசனைகளை வழங்குவார். இதனூடாகவே உற்பத்திப் பொருளின் தரம் தொடர்ச்சியாக உயர்ந்து விடுவதுடன் உற்பத்தியின் வேகமும் இலாப உழைப்பும் நிறுவனங்களில் உயர்வடையும். புள்ளி விபரங்களின் படி ஜப்பானில் 100000 க்கு மேற்பட்ட தரச்சுற்றுக்கள் செயற்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

## 4. செலவுக் குறைப்புத் தந்திரோபாயம்

இது உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்கான தந்திரோபாயங்களை ஜப்பானிய முகாமை அறிமுகப்படுத்துகின்றது என்பதாகும். இதனையே "Just in time" தந்திரோபாயம் எனக் கொள்வார். இதன்படி எப்பொழுது முடிவுப் பொருளுக்கான கட்டளை பெறப்பட்டதோ, அப்பொழுதே அது உற்பத்தி செய்து வழங்கப்படும். அதேபோல் எப்பொழுது மூலப்பொருள் தேவையோ அம் மூலப்பொருள் கிடைக்க வகை செய்யப்படும். இதனால் களஞ்சியத்தில் பொருட்களைச் சேமிக்கும் பிரச்சினையும், மூலதனத்ததை முடக்கும் பிரச்சினையும் இல்லாமற் செய்யப்பட்டு செலவுகள் குறைக்கப்படும்

## 5. பதவி உயர்வு

ஊழியரிற்கு வழங்கப்படும் பதவி உயர்வு திறமையில் மட்டும் தங்கியிராது அவர்கள் விசுவாசத்தையும் உள்ளடக்கி இருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. அத்துடன் தனியே விரைவுத் தன்மையை கொண்டிருக்காத அனுபவத்தைப் பெறும் வகையில் ஆறுதலாகவே வழங்கப்பட வேண்டும் எனக் கூறுகிறது. இதன்படி விசுவாசம் கொண்ட ஒருவர் குறித்த நிறுவனத்திலேயே பதவி உயர்வு பெறுவார் என்றும், அதனூடாக அவரிடம் அர்ப்பணிப்பு மனப்பான்மை இருக்கமுடியும் என்றும் கருதப்படுகின்றது.

## 6. கூட்டுப் பொறுப்பு

ஒரு கருமத்தை நிறைவேற்றுவது சம்பந்தமாக பலர் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைமையை வலியுத்துவது ஆகும். இதனூடாக ஒவ்வொருவரும் ஒரு கருமத்தை நிறைவேற்றுவதில் அக்கறையுடன் தொழிற்பட வேண்டும். என்பது ஜப்பானிய முகாமைத்துவத்தின் கருத்தாகும். மேலைத்தேய முகாமையாளரும் தனிநபர் பொறுப்பை வலியுறுத்தும் பொழுது ஜப்பானிய முகாமையும் கூட்டாகவே பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

## 7. ஆயுட்கால வேலை வாய்ப்பு

இது ஒருவர் இறக்கும் வரை வேலைகளை வழங்க வெண்டும் என்ற ஒரு வகைக் கோட்பாடு ஆகும். இதற்கமைய இளைப்பாறும் வயது எல்லை என்பதை ஜப்பானிய முகாமையும் வரையறுத்துக்கொள்ளவில்லை. ஒருவருடைய அனுபவம் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அவசியம் என்று கருதப்படுவதனாலேயே ஜப்பானிய நிறுவனங்கள் தனது ஊழியர் எவரையும் இளைப்பாறும்படி கட்டாயப்படுத்துவது இல்லை.

**M.Sorubini**
**2005 A/LCOM**

# எல்லைக் கிரயவியல் கணிப்பீட்டு முறைகள்

## எல்லைக்கிரயவியல் (Marginal Costing)

விற்பனை வருமானத்தில் இருந்து மாறும் செலவுகள் கழித்துப் பெறப்படும் பங்களிப்புக்கு எதிராக குறித்த காலப்பகுதிக்கான நிலையான செலவு முழுமையாகக் கழித்து தேறியலாபம் பெறப்படுமாயின் அது எல்லைக்கிரயவியலாகும். இங்கு விற்பனைக் கிரயமாக மாறும் கிரயம் மட்டுமே கொள்ளப்படும். இங்கு கிரயங்கள் அவற்றின் நடத்தையின் தன்மைக்கு ஏற்ப வேறுபடுத்தப்படுகின்றது.

### எல்லைக்கிரயம் (Marginal Cost)

ஒரு அலகை மேலதிகமாக உற்பத்தி செய்கின்றபோது மொத்தக் கிரயத்தில் ஏற்படும் அதிகரிப்பு எல்லைக்கிரயமாகும். உற்பத்தி இடம்பெறாத போது இக்கிரயம் ஏற்படமாட்டாது. இது நேர்மூலப்பொருள், நேர்க்கூலி, நேர் ஏனையசெலவு, மாறும்மேந்தலை என்பவற்றை உள்ளடக்கி இருக்கும்.

### பங்களிப்பு (Contribution)

விற்பனை வருமானத்திற்கும், மாறும்கிரயங்களிற்கும் இடையிலான வேறுபாடே பங்களிப்பாகும். விற்பனை வருமானத்தில் இருந்து மாறும் கிரயங்களைக் கழிப்பதன் மூலம் பங்களிப்பு கணிப்பிடப்படும்.

இங்கு மாறும் செலவு என்பது உற்பத்தி மட்டத்தில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடும் செலவு ஆகும். உற்பத்தி இல்லாத போது மாறும் செலவு காணப்படமாட்டாது.

நிலையான செலவு என்பது உற்பத்தி மட்டத்தில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கு ஏற்ப குறித்த செலவு மாறுபடாது காணப்படுமாயின் அதனையே நிலையான செலவு என்பர். இது குறித்த காலப்பகுதிக்கு மாறாது காணப்படும். உற்பத்தி இல்லாத போதும் இச்செலவு காணப்படும்.

**உதாரணம்:**

* வரையறுக்கப்பட்ட X கம்பனி ஆனது தனி ஒரு பொருளை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது. இக்கம்பனியின் அடுத்த ஆண்டிற்கான பாதீட்டு விபரம் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| வெளியீடுகள் | - | 180000 அலகுகள் | |
| நிலையான மேந்தலை | - | 60000 அலகுகள் | |
| மாறும் செலவு | - | ஒரு அலகிற்கு ரூபா | 0.75 |
| விற்பனை விலை | - | ஒரு அலகிற்கு ரூபா | 1.50 |

(இவ் விலையில் 180000 அலகுகளும் விற்பனை செய்யப்படலாம்)

பங்களிப்பை கணிக்குக?

**முறை I**

**சமன்பாட்டின் அடிப்படையில் கணித்தல்**

பங்களிப்பு = விற்பனை வருமானம் - மாறும் கிரயம்

$= 180000 \times 1.50 - 180000 \times 0.75$


$= 270000 - 135000$

$= 135000$

**முறை II**

**வரைபட ரீதியாகக் கணித்தல்**

| செயற்பாட்டு மட்டம் | விற்பனை வருமானம் | மாறும் கிரயம் |
|---|---|---|
| 0 | 0 | 0 |
| 20000 | 30000 | 15000 |
| 40000 | 60000 | 30000 |
| 60000 | 90000 | 45000 |
| 80000 | 120000 | 60000 |
| 100000 | 150000 | 75000 |
| 120000 | 180000 | 90000 |
| 140000 | 210000 | 105000 |
| 160000 | 240000 | 120000 |
| 180000 | 270000 | 135000 |



வரைபடத்தின் படி விற்பனை வருமானக்கோட்டிற்கும் மாறும் கிரயக்கோட்டிற்கும் இடைப்பட்ட வித்தியாசத்தை கணிப்பதன் மூலம் பங்களிப்பு கணிக்கப்படும்.

பங்களிப்பு = 270000 – 135000

= 135000

**இலாபநட்டமற்ற புள்ளி / செலவு அளவு இலாப ஆய்வு**
**(Brake even Analysis / Cost Volume Profit Analysis)**

பல்வேறு செயற்பாட்டு மட்டங்களில் கிரயம் , தொகை , இலாபம் என்பவற்றிற்கு இடையிலான தொடர்பை ஆய்வு செய்கின்ற ஒரு பகுப்பாய்வு முறையே இலாபநட்டமற்ற புள்ளி பகுப்பாய்வு ஆகும். இப்பகுப்பாய்வின் போது இலாபமோ / நட்டமோ ஏற்படாத செயற்பாட்டு மட்டத்தினை இலாபநட்டமற்ற புள்ளி எனப்படும்.

**உதாரணம்:**

வரையறுத்த x கம்பனியினது எதிர்வரும் ஆண்டிற்கான பாதீட்டு விபரம் வருமாறு

| | | |
|---|---|---|
| வெளியீடுகள் | - | 240000 அலகுகள் |
| நிலையான மேந்தலை ரூபா | - | 80000 |
| மாறும் செலவு | - | ஒரு அலகிற்கு ரூபா 1 |
| விற்பனை விலை | - | ஒரு அலகிற்கு ரூபா 2 (இவ்விலையில் 240000 அலகுகளும் விற்பனை செய்யப்படலாம்) |

இலாபநட்டமற்ற புள்ளியை கணிக்குக?

**முறை I**

**சமன்பாட்டின் அடிப்படையில் கணித்தல்**

$$\text{இலாப நட்டமற்ற புள்ளி} = \frac{\text{நிலையான செலவு}}{\text{ஒரு அலகிற்கான பங்களிப்பு}}$$

$$= \frac{80000}{(2 - 1)}$$


= 80000 அலகுகள்

**முறை II**

**வரைபட ரீதியாகக் கணித்தல்.**

| செயற்பாட்டு மட்டம் | விற்பனை வருமானம் | மாறும் செலவு | நிலையான செலவு | மொத்தச் செலவு | இலாப / நட்டம் |
|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 80000 | 80000 | (80000) |
| 40000 | 80000 | 40000 | 80000 | 120000 | (40000) |
| 80000 | 160000 | 80000 | 80000 | 160000 | 0 |
| 120000 | 240000 | 120000 | 80000 | 200000 | 40000 |
| 160000 | 320000 | 160000 | 80000 | 240000 | 80000 |
| 200000 | 400000 | 200000 | 80000 | 280000 | 120000 |
| 240000 | 480000 | 240000 | 80000 | 320000 | 160000 |


**(A) இலாப நட்டமற்ற புள்ளி வரைபடம் மூலம் கணித்தல்.**




வரைபடத்தின் படி விற்பனை வருமானக்கோடும் , செலவுக்கோடும் சந்திக்கின்ற புள்ளி இலாப நட்டமற்ற புள்ளி ஆகும்.

இலாப நட்டமற்ற புள்ளி = 80000 அலகுகள்

## (B) இலாபம் அளவு வரைபடம் மூலம் கணித்தல்




வரைபடத்தின் படி இலாபமோ / நட்டமோ காணப்படாத செயற்பாட்டு மட்டம் (இலாப நட்டம் 0 ஆக காணப்படும் நிலை) இலாபநட்டமற்ற புள்ளி ஆகும். இலாபநட்டமற்ற புள்ளி = 80000அலகுகள்

**பாதுகாப்பின் எல்லை (Margin of Safty)**

பாதீட்டு செயற்பாட்டு மட்டத்திற்கும் இலாபநட்டமற்ற புள்ளியில் உள்ள செயற்பாட்டு மட்டத்திற்கும் இடையே உள்ள வேறுபாடே பாதுகாப்பின் எல்லை வரையறுக்கப்படும்.

**உதாரணம்**

வரையறுத்த x கம்பனியின் குறித்த ஒரு பொருள் தொடர்பான விபரம் வருமாறு

| | | |
|---|---|---|
| விற்பனை விலை | - | 7ரூபா (ஒரு அலகிற்கு) |
| மாறும் கிரயம் | - | 5ரூபா (ஒரு அலகிற்கு) |
| பாதீடு செய்த நிலையான கிரயம் | - | 50000 |
| பாதீடு செய்த விற்பனை அலகு | - | 30000 |

பாதுகாப்பின் எல்லையைக் கணிக்குக.

## முறை I

**சமன்பாட்டின் மூலம் கணித்தல்**

பாதுகாப்பின் எல்லை = பாதீடு செய்த விற்பனை அலகு    இலாபநட்டமற்ற புள்ளியில் விற்பனை அலகு


$$= 30000 - \frac{50000}{2}$$

= 5000 அலகுகள் -

முறை II

**வரைபடம் மூலம் கணித்தல்**

| செயற்பாட்டு மட்டம் | விற்பனை வருமானம் | மாறும் செலவு | நிலையான செலவு | மொத்தச் செலவு |
|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 50000 | 50000 |
| 10000 | 70000 | 50000 | 50000 | 100000 |
| 20000 | 140000 | 100000 | 50000 | 150000 |
| 30000 | 210000 | 150000 | 50000 | 200000 |




வரைபடத்தின் படி பாதீட்டு செயற்பாட்டு மட்டத்திற்கும் (30000) இலாபநட்டமற்ற புள்ளி செயற்பாட்டு மட்டத்திற்கும் (25000) இடைப்பட்ட வித்தியாசம் பாதுகாப்பின் எல்லை ஆகும்.

30000 – 25000 = 5000

**செல்வி. ஜெனட் சுதர்சினி**

**2006A/L COM**

# Our Non Academic Staff



**Seated (L - R)**
Mrs. N. Ramesh, Mr. R. Shanmugeswaran (Deputy Principal), Mr. S. Punniyaseelan (Principal), Mr. V. Chandrsekar (Vice Principal), Mrs. S. Ramanathan (Principal) J/Pon Paramanantham M.M.V

**Standing (L - R)**
Mr. M. Kamalanathan, Mr. R. Yogaratnam, Mr. A. Panchadchanam, Mr. T. Thavarajan, Mr. I. Pusharajah



வில்லுப்பாட்டு - 2006
முதலாம் இடம் - தேசிய மட்டம்

கு
அ
பா

எ
கு
செ
க

சி

ச

E
I
(
(

# பொருளாதாரக் கட்டளைக் கணியம்
# Economic Ordering Quantity

இருப்பு பாதுகாப்புக் கிரயமும் கட்டளைக் கிரயமும் சேர்ந்த கிரயம் குறைவாகவுள்ள நிலையில் எத்தனை அலகைக் கொள்வனவு செய்ய முடியுமோ அவ்வெண்ணிக்கை சிக்கனக் கட்டளைத் தொகை எனப்படும். இது பாதுகாப்புக்கிரயமும் கட்டளைக்கிரயமும் சமனாக உள்ள நிலையாகக் காணப்படும்.

இங்கு இருப்புப் பாதுகாப்புக் கிரயமும், கட்டளைக் கிரயமும் ஒன்றுக்கொன்று எதிரானவை. அதாவது அதிக அலகு கொள்வனவு செய்தால் கட்டளைக் கிரயம் குறைவடையும். ஆனால் பாதுகாப்புக்கிரயம் அதிகரிக்கும். குறைந்த அலகைக் கொள்வனவு செய்யும் போது பாதுகாப்புக் கிரயம் குறைவடையும். ஆனால் கட்டளைக்கிரயம் அதிகரிக்கும்.

**சிக்கனக்கட்டளைத் தொகை கணிப்பிடும் முறைகள்**

சமன்பாட்டு முறை - Equation Method
அட்டவணை முறை - Table Method
வரைபடமுறை - Graphical Method

**சமன்பாட்டு முறை**

$$EOQ = \sqrt{\frac{2DCO}{Cc}}$$

EOQ - சிக்கனக் கட்டளைத்தொகை (Economic Ordering Quantity)
D - வருடக்கேள்வி (Demand Per annum)
CO - ஒரு கட்டளைக்கான கட்டளைக்கிரயம் (Ordering Cost Per Order)
CC - பாதுகாப்புக்கிரயம் - ஓர் அலகுபொருளை ஒரு வருடம் பாதுகாக்க (Carrying Cost Per Item Perannum)

**சமன்பாட்டை நிருபித்தல்**

இருப்பு பராமரிப்பு கிரயம் = சராசரி இருப்பு x ஒரு அலகிற்கான பாதுகாப்புக்கிரயம்

$$= \frac{Q}{2} \times Cc$$

கட்டளைக்கிரயம் = கட்டளை எண்ணிக்கை x ஒரு கட்டளைக்கிரயம்

$$= \frac{\text{வருடக் கேள்வி}}{\text{கட்டளைத்தொகை}} \times \text{ஒரு கட்டளைக்கிரயம்}$$

$$= \left[ \frac{D}{A} \times Co \right]$$

$$\frac{Q}{2} \times Cc = \frac{D}{Q} \times Co$$

$$Q^2 \times Cc = 2D \times Co$$

$$Q^2 = \frac{2DO}{Cc}$$

$$Q = \sqrt{\frac{2DCo}{Cc}}$$

$$EOQ = \sqrt{\frac{2DCo}{Cc}}$$

**உதாரணம்:**

ஓர் நிறுவனத்தகவல்கள் வருமாறு

மதிப்பீட்டின் படி மாதம் 4166.66 அலகு தேவைப்படுகின்றது

ஒரு கட்டளைக்கான கிரயம் ரூபா 40

ஒரு அலகின் கிரயம் ரூபா 10 மதிப்பீட்டு பாதுகாப்புக்கிரயம் 10% வருடத்திற்கு

Co - ரூபா 40

D - 50000 வருடத்திற்கு

Cc - ரூபா 10 x 10% = ரூபா 1 வருடத்திற்கு

$$EOQ = \sqrt{\frac{2CoD}{Cc}}$$

$$= \sqrt{\frac{2 \times 40 \times 50000}{1}}$$

$$= 2000$$

∴ சிக்கனக் கட்டளைத் தொகை = 2000 அலகுகள்

**அட்டவணை முறை**


மேற்கூறப்பட்ட நிறுவனத்தின் அதே பொருளுக்கான வெவ்வேறு தொகைக்குக் கட்டளை அனுப்பின் விபரம் வருமாறு

| கட்டளைத் தொகை | கட்டளைகளின் எண்ணிக்கை | கட்டளைக் கிரயம் | பாதுகாப்புக் கிரயம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 5000 | 10 | 40 x 10 = 400 | $2500 \times 10 \times \frac{10}{100} = 2500$ | 2900 |
| 2500 | 20 | 40 x 20 = 800 | $1250 \times 10 \times \frac{10}{100} = 1250$ | 2050 |
| 2000 | 25 | 40 x 25 = 1000 | $1000 \times 10 \times \frac{10}{100} = 1000$ | 2000 |
| 1000 | 50 | 40 x 50 = 2000 | $500 \times 10 \times \frac{10}{100} = 500$ | 2500 |

இங்கு 2000 அலகுக்கே கட்டளைக்கிரயமும் பாதுகாப்புக்கிரயமும் சமனாகக் காணப்பட்டு மொத்தக்கிரயமும் குறைவாக உள்ளதால் 2000 அலகே சிக்கனக்கட்டளைத்தொகையாகும்.

**வரைபட முறை**

மேற்தரப்பட்ட அட்டவணையைப் பயன்படுத்தி ஓர் வரைபடத்தை வரையின்




மொத்தக்கிரய வளையியில் இழிவு நிலைக்குச் சமனான புள்ளியிலுள்ள கட்டளைத்தொகையாகிய 2000 சிக்கனக்கட்டளைத் தொகையாகும்.

**செல்வி. க. நர்மதா**
**2005 Com**

# புதுயுகம்

புதியநாள் பிறப்பதற்கான பிரசவ அறிகுறிகள் ஒவ்வொன்றாகத் தோன்றுகின்றன. சேவல்கள் களிப்புடன் சிறகுகளை அடித்துச் செங்கதிரோனை வரவேற்கின்றன. கீழ்வானம் மெல்ல வெளுக்கத் தொடங்குகின்றது. பறவைகளும் பார்ப்புக்களும் ஆர்ப்பரிக்கின்றன. அந்தக் கிராமமும் மெல்ல விழித்துக்கொள்கின்றது. உழவர்கள் தம் எருதுகளுடனும் ஏர்களுடனும் வயலை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். ஆம் நெல் விதைக்கும் காலம் ஆரம்பமாகி விட்டிருந்தது. பருவமழை மிகவும் அதிகமாகவே உதவி செய்திருந்ததால் உழவு இயந்திரங்களால் வயலை பண்படுத்த முடியவில்லை.

கந்தசாமியும் தன் எருதுகளையும் அவிழத்துக்கொண்டு தன் ஏரையும் எடுத்துக்கொண்டு வயலை நோக்கிச்செல்ல ஆயத்தமாகிக்கொணடிருந்தார். "கமலா கமலா பொழுது நல்லாவிடிஞ்சுட்டுது பிறகு நல்ல வெய்யில் ஏறிடும். பேந்து மாடுகளும் பாவம். நான் வயலுக்குபோறன் பிள்ளை சாந்தனிட்ட தேத்தண்ணியைக் கொடுத்து அனுப்பிவிடு" என்று கூறிவிட்டு வயலை நோக்கி நடக்கத்தொடங்கினார்.

கமலா தேநீரையும் ஊற்றிவிட்டு தன்மகனைத்தம்பி சாந்தன் எழும்படா அப்பா வயலுக்குப்போட்டார். இந்தத்தேத்தண்ணியை ஓடிப்போய்க் கொடுத்திட்டு வந்து முகத்தை கழுவடா. என்ற செல்லமல்லே. என்று எழும்புகின்றார். மகனும் தன் தந்தை தாயின் கஸ்ரத்தைப் புரிந்து கொண்டு தந்தைக்குத் தேநீரைக்கொடுத்து விட்டுவந்து முகம் கழுவிவிட்டு பாடசாலைக்கு செல்கின்றான்.

சாந்தன் A/L பரீட்சையில் வர்த்தகப்பிரிவில் தோற்ற இருப்பதால் கிராமத்தில் உள்ள பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தான். தன் படிப்பிலே கண்ணும் கருத்துமாக இருந்து வந்தான். தன் தாயும் , தந்தையும் தனக்காகப் படும் கஸ்ரங்களை உணர்ந்து அவர்களின் கஸ்ரங்களைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கற்று வந்தான். A/L பரீட்சையும் நிறைவேறியது அவன் பரீட்சையில் 3A சித்திகளைப் பெற்றுப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானான்.

அவனது தாயும், தந்தையும், அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தாய் கிராமத்தில் உள்ள கோயில்களுக்குப் பொங்கல் செய்து நேர்த்திகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தார். இருவருக்கும் மகனை மேலும் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி அவனை ஒரு வங்கி முகாமையாளராக்கிப்பார்க்க வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. கமலா தன்னிடம் இருந்த ஒரே ஒரு சங்கிலியையும் விற்றுத் தன் மகனைப் பல்கலைக்கழகத்துக்காக நகரத்திற்கு அனுப்பி வைத்தனர். நகரம்

அதிக தூரத்தில் இருப்பதால் அவன் அங்குள்ள விடுதியிலேயே தங்கியிருந்து தன்கல்வியை மேற்கொண்டான். அப்போது தான் அவனின் வாழ்க்கையில் ஓர் மாற்றம் ஏற்பட்டது. அங்கு கிடைத்த நண்பர்களின் சேர்வால் பெருமாற்றத்திற்கு உட்பட்டிருந்தான். வார இறுதியில் வரும் மகன் மாதத்தில் ஒருதடவை அல்லது இரண்டு தடைவ வருவதையும் , மகனிலும் பெரும் மாற்றத்தையும் புரிந்து கொண்ட தாயும் தந்தையும் அவனுக்கு பல அறிவுரைகள் கூறினார்கள். ஆனாலும், அவன் அடிக்கடி தாய் தந்தையுடன் காசுக்காக சண்டைபிடித்துக் கொண்டிருந்தான்.

அவனில் வரவரப் பெரும் மாற்றத்தை அவதானித்த தாய் என்னடா சாந்தன் ஏனடா இவ்வளவு காசு, நாங்கள் எவ்வளவு கஸ்ரப்பட்டு உனக்குப் படிப்பித்தோம் என்று தெரியும் தானேடா ஏனடா இப்படி நடக்கிறாய், கண்டகண்ட பெடியன்களோடையெல்லாம் சேராதையையா அவங்கள் காசில் வாழுறவங்கள் அவங்கள் ஏதோ செய்யட்டும் உன் படிப்பு முடிந்த பின்னாவது உன் குடும்பப்பாரத்தை தாங்குவாய் என்று நம்பியிருக்கிறேன். என்று புலம்பினாள். சாந்தனும் அதை பொருட்படுத்தாதவனாக தன் தந்தை தாயிடம் பொய் சொல்லி பணத்தை பெற்று நண்பர்களுடன் சந்தோஷமாகவும் உல்லாசமாகவும் செலவழித்தான். தந்தையும் தாயும் எவ்வளோ சொல்லியும் அவன் அவற்றை செவிமடுக்கவில்லை.

ஒரு நாள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதாக அவனை காவல்துறையினர் வந்து கைது செய்து கொண்டு சென்றார்கள். அவனைப் பார்ப்பதற்கு அவனது நண்பர்கள் ஒருவரும் முன்வரவில்லை. அவனைப் பிணையில் எடுப்பதற்கு அவர்கள் ஒருவரும் முயற்சிக்கவில்லை.

அவனது தாயும், தந்தையும் எப்படியோ இதை அறிந்தார்கள். பதறி அடித்துக் கொண்டு அலைந்து திரிந்து ஒருவாறு காவல் நிலையத்தை அடைந்தார்கள். அங்கு தன் மகனைப் பிணையில் விடுவிப்பதற்காகக் காசாலே முடியும் என்று அறிந்தார் தந்தை. நகரம் என்றால் எல்லாமே காசாலே தான் செய்து முடிக்கமுடியும். ஆகவே தன் மகனை விடுவிக்க தன்னிடம் இருந்த ஒரே ஒரு வயலை விற்றுத்தன் மகனை விடுவித்துக்கொண்டார். அப்போது தான் சாந்தன் தன் தாய் தந்தையின் அறிவுரைகளையும், அன்பையும், ஆழமாகப் புரிந்துகொண்டான். தன் தந்தையையும் தாயையும் கட்டிப்பிடித்து அழத்தொடங்கினான். தன்மகனின் கவலையைப்புரிந்து கொண்டவர்களாக அவர்கள் தங்கள் மகனைத் தேற்றினார்கள் இனிச் சாந்தனின் வாழ்க்கை ஓர் புதுயுகமே.........

**செல்வி. க. கபீர்த்தனா**
தரம் 11A

# சிறப்பு எடுப்பனவு உரிமை
## (Special Drawing Right)

சர்வதேச நாணய நிதியினது உடன்பாட்டு கருத்துக்களின் இரண்டாவது சீர்திருத்தத்தின் அடிப்படையில் சர்வதேச நாணய அமைப்பில் முக்கியமான அல்லது முதன்மையான ஒதுக்குச் சொத்தாக சிறப்பு எடுப்பு உரிமை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. 1970ம் ஆண்டு தை மாதம் சிறப்பு எடுப்பு உரிமை திரவத்தன்மைச் சாதனம் 1969 ம் ஆண்டு சர்வதேச நாணய நிதியின் முதலாவது உடன்பாட்டிற்கு ஏற்ப அறிமுகப்படுத்தப்பட்டது. உலகம் இந்தக் கால கட்டத்தில் அதிகளவான திரவத்தன்மைப் பிரச்சனையை எதிர்நோக்கியது. இதனை ஓரளவு தீர்க்கும் முகமாகவும் சென்மதி நிலுவை பிரச்சனைகளையும் சமச்சீர் செய்வதற்கும் அறிமுகப்படுத்தப்பட்டது எனலாம். இந்த உரிமை எந்த வகையிலும் வாக்குறுதிப்பத்திரமோ அல்லது கடதாசி நாணயமோ அல்ல. சர்வதேச நாணய நிதியிடம் காணப்படுகின்ற பிரத்தியேக அல்லது சிறப்பு எடுப்பனவுக் கணக்காகும். இதனை கடதாசித் தங்கம் எனவும் அழைப்பர். பணஅளவு தங்கத்தினால் பெறுமதியிடப்பட்டாலும் அவை தங்கமாக மாற்றப்படுவதில்லை இன்னொரு வகையில் கூறுவதாயின் மரபு ரீதியான சர்வதேச கொடுப்பனவுகளுடன் மேலதிகமாக இணைக்கப்பட்டதொரு கொடுப்பனவு முறையாகும். சர்வதேச நாணய நிதியின் அங்கத்துவ நாடுகள் மாத்திரம் இந்த நிதிவசதியைப் பெறுவதற்குத் தகுதி பெறுகின்றன. இந்த நாடுகள் தங்களுடைய ஒதுக்கு கோட்டாவில் ஒரு பகுதியைச் சிறப்பு எடுப்பனவு உரிமையில் வைக்கவேண்டும்.

ஆரம்ப காலங்களில் சிறப்பு எடுப்பனவு உரிமையின் பெறுமதி ஒரு அமெரிக்க டொலருக்குச் சமமாகக் காணப்பட்டது. இதனடிப்படையில் ஒரு சிறப்பு எடுப்பு உரிமை 0.88867 கிராம் தங்கத்திற்கு சமமாகக் காணப்பட்டது. இவற்றின் முதலாவது கடன் 5.6 மில்லியன் அலகுகள் மூன்று சமமான தவணைகளில் திருப்பி செலுத்தும் முறையில் நாடுகளிற்கு வழங்கப்பட்டன.

சிறப்பு எடுப்பனவு உரிமையின் முக்கிய பண்புகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. சர்வதேச நாணய நிதியின் முக்கியமான திரவத்தன்மை சாதனமாக உள்ளது.
2. அங்கத்துவ நாடுகள் மட்டுமே இந்த வசதியைப் பெறமுடியும்.
3. சிறப்பு எடுப்பு உரிமையின் பெறுமதி இப்போது கூடை நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகின்றது.
4. திரவத்தன்மைப் பிரச்சனைகளை வேறு மாற்று வழியில் தீர்த்துக் கொள்ள முடியாத நிலையில் S.D.R சலுகைகளைப் பயன்படுத்த முடியும்.

5. சிறப்பு எடுப்பு உரிமை கடதாசி நாணயமல்ல ஆனால் சர்வதேச நாடுகளின் நிதியால் நடைமுறைப்படுத்தப்படும் விசேட கணக்கு முறையாகும். அங்கத்துவ நாடுகளில் கோட்டாவை அடிப்படையாகக் கொண்டு கணக்குகளில் அளவு பேணப்படுகின்றது.

சிறப்பு எடுப்பனவு உரிமையின் அனுகூலங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. தங்கத்தை வைத்திருப்பவர் பெறக்கூடிய நன்மைகள் யாவற்றையும் பெறும் வாய்ப்பு உண்டு.இதனால் தான் இதனைக் கடதாசித்தங்கம் என அழைப்பர்.
2. அங்கத்துவ நாடுகள் மிக இலகுவாகத் திரவத்தன்மைப் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்கின்றன.
3. சர்வதேச சென்மதி நிலுவைப்பிரச்சனைகளை நாடுகள் எந்த வகையிலும் தீர்க்க முடியாது இருக்கும் போது சிறப்பு எடுப்பனவு உரிமையைப் பயன்படுத்தி அதனைத் தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்கின்றது.
4. அங்கத்துவ நாடுகளிற்கிடையில் கொடுக்கல் வாங்கல்களும் சிறப்பு எடுப்பு உரிமை சாதனங்கள் ஊடாக நடைபெறுகின்றன.
5. இது மிகவும் இலகுவானதும் நெகிழும் தன்மை உடையதுமாகும்.

சிறப்பு எடுப்பனவு உரிமையின் பிரதிகூலங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

1. அங்கத்துவ நாடுகளிற்கு முழுமையாக இந்தச் சாதனத்தில் நம்பிக்கை இல்லை
2. அவர்களில் பல்வேறு திரவத்தன்மைப் பிரச்சனைகள் இவர்களால் தீர்க்கப் படவில்லை.
3. அமெரிக்கப் பொருளாதாரப் பிரச்சனைகளிற்கு ஏற்ற முறையில் தான் சிறப்பு எடுப்பு உரிமை வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் அதிகளவுக்கு அமெரிக்கா தான் நன்மை பெறுகின்றதே தவிர ஏனைய நாடுகள் அல்ல.
4. அங்கத்துவம் பெருக ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வறிய நாடுகள் இந்த வசதியின் மூலம் எந்த விதமான முழு நன்மைகளையும் அடைவதில்லை.
5. உலகத்தில் ஏற்படுகின்ற திரவத்தன்மை பிரச்சனை முழுவதையும் தீர்ப்பதற்கு ஏற்ற முறையில் சிறப்பு எடுப்பு உரிமைக்கணக்கு பெறுமானமானதாகக் காணப்படவில்லை.

**செல்வி. மு. மயூரா**
**2005 A/L Com**

# முதியோர் நலன்களுக்கான நீண்டகால திட்டம்

இன்றைய வாழ்வில் இலையுதிர் கிளைகளாக வாழ்வின் இன்ப துன்பங்களை அனுபவித்து விழிம்பில் நிற்கும் முதியோர்களுக்கான நலன்கள் முக்கியமானது ஆகும். அவர்களது தேவைகள், விருப்புகள் என்பவை நிறைவேற்றப்படுவதில்லை. இதனால் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். அவர்களது அபிலாஷைகள் நிறைவேற்றப்படாமைக்கு பல காரணங்களுள்ளன.

இன்றைய உலகில் முதியோர்களிற்கு பல தேவைகள் உள்ளன. அவை நீண்டகால திட்டங்கள் பூர்த்தியாக்கப்படாமல் உள்ளன. உலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தியடையாத நாடுகள் என இருவகையான நாடுகள் உள்ளன. இதில் அபிவிருத்தி அடைந்த நாடுகளினைப் பொறுத்தவரையில் முதியவர்களது நலங்கள் பல திட்டங்களாக வகுக்கப்பட்டு நிறைவேற்றி வருகின்றன. இன்னும் ஊடகங்கள் மூலம் இந் நாடுகளில் வயோதிபர்களுக்கான தேவைகள் அனைத்தினையும் தெளிவாக கூறுகின்றமையை காணலாம். இந்நாடுகளில் வயோதிபர்களது நலன்கள் மீது மிக்வும் அக்கறை கொண்டுள்ளமையை நாம் காணலாம். முதியோர் இல்லங்கள் அமைக்கப்பட்டு அவை நீண்டகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை கண்கூடு நோக்கலாம்.இவ் இல்லங்களில் அவர்களுக்கான உணவுகள், பொழுதுபோக்கு அம்சங்கள் சுகாதார பழக்க வழக்கங்கள் முதலிய இதர தேவைகள் பூர்த்தி யாக்கப்படுகின்றன. பிள்ளைகளால் ஒதுக்கப்பட்ட முதியோர்களது உளவியலில் கூட கவனம் செலுத்தப்படுவதை நாம் காணலாம். அமைதி நாடுகளாக கருதப்படும் நோர்வே, டென்மார்க் போன்றவற்றில் நீண்டகாலமாக பல திட்டங்களும், செயற்பாடுகளும் அமுலில் உள்ளன. அவற்றில் சிலவற்றை நாம் நோக்கலாம். அவர்களுக்கான அடிப்படை தேவைகள் பூர்த்தியாக்கப்படுதல், பயனுள்ள பொழுது போக்குகளை வழங்கல் இவற்றில் விளையாட்டுகள், நவீன தொழில்நுட்பத்துடன் முதியவர்களை இணைத்தல் போன்றவற்றை குறிப்பிடலாம். இவற்றிற்கெல்லாம் அரசு பல கோடிநிதியை ஒதுக்கீடு செய்வதையும் குறிப்பிவேண்டும்.பல அபிவிருத்தியடைந்த நாடுகளில் சுகாதாரங்களை சரியாக பேணுகின்றமையால் அவர்கள் நீண்ட ஆயுளினைப் பெற்றுள்ளமையை காணலாம்.

அபிவிருத்தியடையாத நாடுகளில் பல உள்நாட்டு யுத்தங்கள், பட்டினி, வறுமை போன்றவற்றின் தலையீட்டால் முதியோர்களின் நலன்களின் அக்கறை செலுத்தப்படுவதில்லை. அவர்கள் பல நோய்களுக்கும், பல துயரங்களுக்கும் உட்பட்டிருப்பதைக் காணலாம். பசி, பட்டினி பேஷாக்கின்மை என்பவற்றால் சோமாலியா, எதியோப்பியா போன்ற நாடுகளில் பல முதியோர்களது நிலமைகள் மோசமடைந்து செல்வதை காணலாம். உள்நாட்டு யுத்தங்களால் அவர்களது உடல்நலன்கள், சுகாதார நிலமைகள் என்பன மோசமடைவதைக் காணலாம். இவர்களினை அரசாங்கம் கவனிப்பதில்லை இந்நாடுகளில் இவர்களுக்கான திட்டங்கள்

எதுவும் தீட்டப்படுவதில்லை. அவர்களது ஆயுள் காலம் 60 - 65 வரையாக காணப்படுகின்றன. இவர்கள் தாழாத பட்டினி நோய் போன்றவற்றுடன் சுகாதார வசதிகளும் அற்றவையாக காணலாம்.

அபிவிருத்தியடைந்து கொண்டு செல்லும் நாடுகளை நோக்கின் முதியோர் நலம் ஓரளவு வளம் பெற்றமையாலும் அந்நிய நாட்டு மோகம் , யுத்தம் போன்றவற்றால் இவர்களுக்கான தேவைகள் பெரும்பாலும் நிறைவேற்றப்படுவதில்லை. யுத்தம் காரணமாக பலர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இந்நாடுகளில் பல திட்டங்கள் உள்ள போதும் நடைமுறைச்சிக்கல்களை எதிர்நோக்குகின்றமையை காணலாம். எமது குடா நாட்டில் கூட பல வயோதிபர் நிலையங்கள் உள்ள போதும் அவை எப்போது மூடப்படும் என்ற அபாய நிலையில் உள்ளன. இவற்றிற்கான நிதியினை எமது உறவுகளே தந்துதவுபவர்களாக காணப்படுகின்றனர். அரசின் திட்டத்தின் கீழ் இயங்கப்படாமையால் கூட தனியார்களது நீண்டகால திட்டத்தின் கீழ் சிறப்பாக இயங்கி வருகின்றமையைக் காணலாம்.

உள்நாட்டு யுத்த நிலையை தணிக்கும் சர்வதேச நிதியங்களான யுனிசெப், UNHVCR போன்றவற்றின் நீண்ட கால நலப்பங்களிப்பினை நோக்கின் முதியவர்களது சுகாதாரங்களில் மிகவும் அக்கறை கொண்டவையாக காணப்படுகின்றன. வைத்திய முகாம்களை அமைத்தல் முதியோர் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல் போன்றவற்றினை கூறலாம். இதை விட திட்டம் அமைத்து நலன்களினை காக்கும் நிலையங்களாக பல காலங்கள் எடுக்கும் பணிகளை நோக்கலாம். ஆன்மீக வழியில் இறைநாட்டத்தினை ஏற்படுத்தல் சமூக தொண்டுகளில் ஈடுபடுத்துதல், பொதுஜன ஊடகங்கள் மீது அக்கறை கொள்ளவைத்தல் போன்றவற்றினை அறிமுகப்படுத்துவதால் வயோதிபர்களது மனநிலையும் , உடல்நிலையும் வளம் பெறுகிறது. இதனைவிட மன உழைச்சலால் பாதிக்கப்படும் முதியவர்களது நிலையை மாற்றுவதற்கு மனஉளவளத்துறை ஆளணியினர் (Counsellor) பல கிளை நிறுவனங்களாக இயங்குகின்றமையும் அம் முதியவரகளுக்கான உளைச்சல்களை போக்குவதற்கு ஆலோசனைகளை வழங்கி சமூகத்தில் அவர்களுக்கான அந்தஸ்துகளையும் பெற்றுக் கொடுக்கின்றமையை காணலாம் இவ்வாறு பல நடைமுறை வாழ்வோடு பிணைந்த பணிகளால் முதியவர்கள் சமூகத்தில் ஓரளவேனும் மதிக்கப்படுவதுடன் அவர்களுக்கான தேவைகளும் நிவர்த்தி செய்யப்படுகின்றன.ஆனாலும் கூட இன்று முழுமையாக அவர்கள் கௌரவிக்கப்படுகின்றனரா? உரிமைகள் சரியாக வழங்கப்படுகின்றதா? என்றெல்லாம் நோக்கினால் இல்லை அல்லது முழுமையாக இல்லை என்று தான் விடை வரும்.ஏன் எனில் இவர்களுக்கான வசதிகள் முழுமனதுடன் நிறைவேற்றப்படுகின்றன அல்ல. அவர்களது நலன்கள் நீண்டகாலத்திட்டங்களின் அடிப்படையில் நிறைவேற்றப்படுவதில்லை.திட்டங்கள் நீண்டகாலமாக தீட்டப்பட்டு வந்தாலும் அலை பல மாற்றங்களுக்கு உட்பட்டே நிறைவேற்றப்படுகின்றன. அதாவது குறைக்கப்படுகின்றன. முழுமையாக நிறைவேற்றப்படுகின்றன அல்ல ஏன் எனில் இத்திட்டங்களை ஆக்கியோர் அவை சரியாக நடைபெறுகின்றனவா? என்று, நோக்கத் தவறுகின்றன.

எனவே முதியவர்களது நலன்களுக்கான நீண்டகாலத் திட்டம் தீட்டியே செயல்கள் நடைபெற்றாலும் நீண்ட காலம் என்பது ஆராயக்கூடிய விடையமாகவே உள்ளது. எமது நாட்டினை எடுத்து நோக்கின் நீண்டகாலத்திட்டம் என்பது சாத்தியமாகாத ஒன்று காரணம் உள்நாட்டு யுத்தம் காரணமாக அரசாங்கள் முதியவர்கள் நலன் மீது நீண்டகால திட்டம் எதனையும் தீட்டி நடைமுறைப்படுத்துகிறதல்ல ஆனாலும் ஓரளவேணும் அக்கறை கொண்டாக காணப்படுகின்றன. பிற நாட்டு ஆளணியினர் கூட எம்முதியவர்களது நலனில் அக்கறை கொள்ள முயன்றாலும் இங்கு தங்கியிருக்க முடியாத நிலையினை உருவாக்கியுள்ளன.

திட்டம் எதுவும் இன்றியானாலும் முதியவர்கள் எமது இனத்தின் பிரதிநிதிகள் அவர்கள் அனுபவப் பெட்டகங்கள் காலத்தின் கண்ணாடிகள் . எனவே இவர்களது வாழ்வினை செம்மையாக்கி மேன்மையான முடிவினை வழங்குவது இளைஞர்களான எமது கடமை.

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்"

**R.JEYANTHINI**
**2009A/L Com**

# நல்லவர்களோடு இணைந்து நன்மையினையே தோற்றுவிப்போம்

நெஞ்சுக்கு நிம்மதி வேண்டுமா? அதற்கு நண்பர்களின் பங்களிப்பும் மிகவும் தேவையான தொன்றாகவே உள்ளது. நண்பர்களால் நமக்கேற்படும் துன்பங்களை அகற்றவும் முடியும். துன்பத்தின் மேல் துன்பத்தை கொண்டு வந்து செருகி விடவும் முடியும். எமக்கொரு துன்பம் வரும்போது நழுவிச் சென்றுவிடவும் முடியும். எமக்கொரு துன்பம் வரும் போது நழுவிச் சென்றுவிட்டு இன்பத்தில் மட்டும் இரண்டறக் கலந்து மகிழ வருபவர்கள் எல்லாம் நண்பர்களல்லர். அதுமட்டுமன்றி. எம்மை நெறிப்படுத்துகின்ற செயல்களை எம்மிலிருந்து களைந்து எடுத்துவிட்டு துன்பம் தருகின்ற தீமைகளில் எம்மை இணைத்து வேடிக்கை பார்பவர்களும் உண்மை நண்பர்களல்லர்.

நமது வீழ்ச்சியில் வேடிக்கை பார்ப்பவர்களும் வாய்ப்பேச்சினால் எம்மை வளைத்துப் போட்டுக்கொண்டு வினைகளை விளைய வைப்பவர்களையும் நண்பர்களாக எண்ணிக்கொண்டு அவர்களோடு பயணம் செல்வோமாயின் மீள முடியாத சோகம் தான் எம்மைச்சூழ்ந்து கொள்ளும் முகமலர்ச்சியினை வைக்கும் நண்பர்களைத் தேர்ந்து கொள்ளாமல் உள்ளம் மகிழ வைக்கக்கூடியவர்களையே

நண்பர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். எம்மோடு எந்நேரமும் இணைந்திருப்பவர்கள் மட்டும் தான் நண்பர்கள் எனத்தேர்ந்து கொள்ளாமல் எமது சிந்தனைக்கும் உள்ளத்தின் போக்கிக்கும் ஒத்த நிலையினை உடையவர்களையே நண்பர்களாகத் தேர்ந்து கொள்ளல் வேண்டும். இளைஞர்கள் தமக்கு பக்கதுணையாக உறவுக்காரர்களை வைத்திருப்பதைவிட அதிகமாக நண்பர்களையே வைத்திருப்பர்.

நம் உயிர் நாடியாக வைத்திருக்கும் நண்பர்கள் துரோகம் செய்து விட்டால் மரணம் எம்மைத்தீண்டும் வரை அதன் ரணம் எம்மை விட்டு அகன்று செல்லாது அதனால் நண்பர்களைத் தேர்ந்து கொள்ளும் போது உள்ளத்தூய்மை, அன்பு ,பண்பு உடையவர்களையே நாம் நண்பர்களாக இணைத்துக் கொள்ளவேண்டும்.

நாம் துன்பப்படும் வேளையில் ஆறுதல் கூறுபவனாகவும், உதவுபவனாகவும் நண்பன் இருக்க வேண்டும். எமக்கு துன்பம் வரும் போது தப்பினேன் பிழைத்தேன் என விட்டுவிட்டு ஓடும் நண்பர்களை நீ நண்பர்களாக்காதே. அவர்களை நீயும் கைவிட்டுவிடு.

நண்பர்களாக எம்மோடு இணைந்திருப்பவர்கள் தீங்குசெய்தாலும் அதை அவர்களின் அறியாமை என அலட்சியம் செய்து விட்டு தொடர்ந்தும் அவர்களோடு நட்பினை பகிர்ந்து கொள்வோமாயின் நமது எதிரி கூடநம்மைப் புகழ்ந்து பாடுவான்.

நட்பு வெள்ளத்தில் நீந்திக் கொண்டு இருக்கும்போது அதனை விட்டு விலகிக்கொள்வதென்பது வேதனையான விடயமாகும். ஆனாலும் நீ நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடு அப்போது நீ வேதனைப்படத் தேவையில்லை.

**ந. சிவரூபி**
**2008 A/L Arts**

# விடியலைத்தேடி......

அன்று சூரியன் கிழக்கில் உதிக்க அன்று நடக்கப்போவதை அறியாத சத்தியனும் எழுந்து ஜில்லென்று குளிர்ந்த நீரில் குளித்து விட்டு வந்தான். தனது மகளான நிஷாவைப் பார்த்து "பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு கெதியா வெளிக்கிடு" என்ற கூறியவன் அவளின் பதிலுக்குக் காத்திராமல் தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு வீதியில் இறங்கியவனுக்கு அன்று வெள்ளிக்கிழமை என்பது ஞாபகத்திற்கு வர கோயிலை நோக்கிச் சென்றான். இறைவனை வணங்கியவன் "அளவுக்கு அதிகமாக உறுதியளிப்பவன் எதையும் தருவதில்லை" என்று யாரோ எப்போதோ சொன்ன வார்த்தையை நினைவு படுத்தினான். அப்போது தான் இதனைத் தன் மனைவி கீதாவே கூறியதை உணர்ந்தவனுக்கு அவனுடைய பழைய நினைவுகள் மனத்திரையில் மோதின.

இற்றைக்குச் சுமார் முப்பந்தைந்து வருடங்களுக்கு முன் ஒரு நடுத்தர குடும்பத்திலே ஒரேயொரு பிள்ளையாகப் பிறந்தவன் தான் சத்தியன். அவன் அன்று முதல் இன்று வரை பிறந்த வீட்டிலேயே வசிக்கிறான். சிறுவயதில் பெற்றோரை இழந்தமையால் அவன் தனது சிறிய தந்தையுடனே இருந்தான். இருபதாவது வயதிலே "கீதா" என்ற பெண்ணைத் தனது சிறிய தந்தையின் விருப்பப்படியே மணம் முடித்தான். அவன் தனு என்ற ஆண்பிள்ளையையும் நிஷா என்ற பெண் பிள்ளையையும் பெற்றெடுத்தான். பெற்றோரைப் போன்ற நல்லகுணமுடைய பிள்ளைகள் கல்வியில் ஆர்வமாகத் திகழ்ந்தனர்.

அன்று கீதாவின் பிறந்தநாள் அவளிற்காக கோறிலுக்குச் சென்று வந்த சத்தியன் "கீதா............. கீதா.........." என்றழைத்தான். இதோ இருக்கேன் என்ன? என்று கேட்டுக் கொண்டே வந்தாள். மனதில் ஒரு வித பெருமிதத்துடன "இன்றைக்கு நாங்கள் தியேட்டருக்குப் போவோமா" என்று அவன் கேட்டு முடிப்பதற்குள் "ஆமா அப்பா நாங்க தியேட்டருக்குப் படம் பார்க்கப் போவோம்" என்றனர். அவனின் சுட்டிப் பிள்ளைகள் இருவரும் அவர்களின் மனமகிழ்வை ரசித்தவாறே "எல்லோரும் கெதியா வெளிக்கிடுங்கோ, நான் ஆட்டோ பிடிச்சுக் கொண்டு வாறன்" என்று கூறியவன் தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு "ஆட்டோ பாக்கிற்கு" சென்றான்.

ஆட்டோச் சாரதி ஒருவனைப் பார்த்து "அண்ணே ஆட்டோ விடுறியளா" என்றான். "எந்த இடம்?" என்றான் ஆட்டோச்சாரதி "யாழ்ப்பாணம் தியேட்டருக்கு" என்று பதில் கூறினான். "ஆமா ஆட்டோ கொண்டு வாறன்" என்று கூறிய ஆட்டோச் சாரதி அவன் வீட்டிற்கு ஆட்டோவைக் கொண்டு சென்றான். "நேரமாச்சு எல்லோரும் ரெடியா" என்று கேட்டவனிற்கு "நாங்க எப்போவோ ரெடி" என்று பதில் கிடைத்தது.

மூவரையும் அழைத்துக் கொண்டு தியேட்டருக்குச் சென்றான். "டிக்கெட்" எடுத்துக் கொண்டு தியேட்டருக்குச் சென்ற நால்வருக்கும் அது ஒரு புதிய அனுபவமாகத் தான் இருந்தது. இடைக்கிடையில் கேட்ட ரசிகர்களின் கூச்சல்களும், விசில்ஒலிகளும் அவர்களைப்புதியதொரு உற்சாகத்தில் ஆழ்த்தியது. படம் முடிவடைய வெளியில் வந்தவன் மூவரையும் ஆட்டோவில் ஏற்றிவிட்டு வெளியே நின்று "ஒருவாறாக என் மனைவியையும், பின்னைகளையும் இன்றாவது வெளியில் அழைத்து வந்தேனே.... என்று யோசிக்கும் போதே..... என்ன யோசனை வீட்டை போக மனமில்லையா? என்ற மனைவியின் வார்த்தை செவிப்பறையைத் தட்டத் திடுக்கிட்டவன் "அ" ஒண்டுமில்லை, சரி அண்ணே நீங்க ஆட்டோவை எடுங்கோ... என்றவாறே ஆட்டோவில் ஏறி அமர்ந்தான். "யாருக்காகப் படைத்தான்....." என்ற சினிமாப் பாடலை ஒலித்த படியே ஆட்டோ சென்று கொண்டிருந்தது. பாடலும் நிறைவுக்கு வரும் நேரத்தில் பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்தது. கண்மூடித்திறப்பதற்குள் நடந்து முடிந்த கொடூரச்சம்பவத்தில் அன்பு மனைவி கீதாவையும் பத்தே வயதான மகன் தனுவையும் இரத்த வெள்ளத்தில் கண்டவன் ஓவென்று கதறியழுதான் கதறி அழும் சத்தத்திற்கிடையில் ஒரு முனகல் ஓசையைக்

கேட்டவன் திரும்பிப் பார்த்தான். அங்கே அவன் மகள் நிஷா அரை மயக்கத்துடன் காணப்பட்டாள் .வீரிட்டுக்கதறியவாறெ அவன் தன் மகளை வைத்தியசாலையில் சேர்ந்தான். அவளைப் பரிசோதித்த டாக்டர் "அதிர்ச்சியின் காரணமாகவே இவ்வாறு ஏற்பட்டு விட்டது. "பயப்படுமளவிற்கு ஒன்றுமில்லை ஆனால்.....". என்று இழுத்த டாக்டரிடம் "ஆனால் என்ன டாக்டர் சொல்லுங்கோ டாக்டர், என்ர பிள்ளை எனக்கு உயிரோட வேணும் டாக்டர்" என்று கதி கலங்கி அழுதவனைத் தேற்றிய டாக்டர் "மிஸ்டர் சத்தியன் உங்க மகளுக்கு அவசரமா பிளட் ஏத்த வேணும்....."என்று கூறினார். என்ர பிள்ளைக்கு என்னில இரத்தம் எடுங்கோ டாக்டர் என்று கூறியவனை இரத்த வங்கிக்கு அழைத்துச் சென்ற டாக்டர் அவனிலிருந்து இரத்தம் எடுத்து அவனின் மகளுக்கு ஏற்றி அவளைக்காப்பாற்றினார். தன் மகளைக் காப்பாற்றிய அந்த நடமாடும் தெய்வத்துக்குக் கோடான கோடி நன்றிகளை கண்ணீர்த்துளிகளால் தெரிவித்த அவன் தன் மகளை வீட்டிற்கு அழைத்து வந்தான். வீட்டு வாசலில் காலெடுத்து வைத்தவன் சற்றுத் தயங்கிய படியே சிந்தையில் ஆழ்ந்தான். "நான் ஒவ்வொரு நாளும் வேலையால வரும் போது வாசலில் நின்று வரவேற்கும் என் மனைவியைக் கடவுள் ஏன் தன்னுடன் எடுத்து விட்டார், அவருக்கு நான் சந்தோஷமாக இருப்பது பிடிக்கலையா?" என்று தன் மனதை அலைபாயவிட்டவன் "அப்பா ஏன் வீட்டிற்குள் வராம அங்கேயே நின்று விட்டீர்கள்" என்று அவளுடைய மகள் கேட்கத் திடுக்கிட்டவன் தன் கண்ணீரைத்துடைத்தபடியே வீட்டிற்குள் சென்றான். தாயை இழந்த தன் மகளுக்கு தாயாகவும் , தந்தையாகவும் இருந்தான். அவளுக்கு வேண்டிய உணவுகளைத் தானே சமைத்துக் கொடுப்பான். தனது சிறு வயதிலேயே பல உயிரிழப்புக்களைச் சந்தித்த அவன் தனது "மனைவியின் இழைப்பையும் மகனின் இழப்பையும் போன்ற பெரிய இழப்பைச் சந்திக்கவில்லையே" என்று அடிக்கடி தனக்குள் எண்ணுவான். அவ்வாறு அவர்கள் இருவரின் நினைவும் அவனுக்கு வந்தால் அவனின் நிலைமை "தந்தி அறுந்த வீணை போல" ஆகிவிடும்.

தன் வாழ்க்கையை வெறுத்த சத்தியன் தனது மகளுக்காகவே இவ்வளவு காலமும் வாழ்ந்து கொண்டிருக்கிறான். "நான் என்ர பிள்ளைய நல்லாப் படிப்பிக்க வேணும் அவள் ஒரு டாக்டராக வந்து இந்த நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டும். அன்று அவள் உயிரைக்காப்பாற்றிய டாக்டர் போலவே அவளும் மிகுந்த பற்றுடன் உயிர்களைக் காப்பாற்ற வேணும் ,அவள் மக்கள் போற்றும் ஒரு டாக்டராக இருக்கவேண்டும். நான் தளர்வுற்ற காலத்தில் என்னையும் நன்றாகக் கவனிக்க வேண்டுமல்லவா? என்ர பிள்ளை நிச்சயமாக என்ர ஆசையை நிறைவேற்றுவாள்" என்று எண்ணியவன் தன் மேல் ஏதோ விழுவது போன்ற பிரமை ஏற்படச் சட்டென கண்ணைத்திறந்தவன் தனது கைக் கடிகாரத்தைப் பார்த்தான். கடிகாரம் ஏழு மணி பதினைந்து நிமிடத்தைக் காட்டியது. "பிள்ளைக்கும் பாடசாலைக்குப் போக நேரமாயிருச்சல்லவா" என்று எண்ணியவன் தனது சைக்கிளை வேகமாக உந்தினான். அவனுடைய உடல் மட்டுமே சைக்கிளில் இருந்தது. அவன் எண்ணம் மகளை நோக்கி அலைபாய்ந்தோடியது. வீதியைக் கடக்க முயன்றவன் வேகமாக வந்த லொறியால் மோதுண்டு தூக்கி வீசியெறியப்பட்டான். அவனுடைய சைக்கிள் அவன்

வீட்டு முற்றத்தில் போய் விழுந்தது.இதனைக் கண்ட "நிஷா" "இந்தச் சைக்கிள் அப்பான்ர சைக்கிள் தானே" என எண்ணியவாறு வீட்டுப் படலைக்கு ஓடி வந்தவள் அங்கு கண்ட காட்சி அவள் குருதியை உறைய வைத்தது. அதன் பின் அவள் கால்கள் நகர மறுத்தன. கூடியளவில் உந்து சக்தியைப் பிரயோகித்துத் தனது தந்தையின் சடலத்தருகில் ஓடிச் சென்றவள் "அப்பா" என்றவாறே சத்தியனின் நெஞ்சில் சாய்ந்தாள்........

(யாவும் கற்பனை)

சௌ. பிரதர்சனா
தரம் 11A

# மனிதன் சூழலுடன் கொண்டுள்ள இடைத்தாக்கங்கள்

## - ஓர் சிறிய கண்ணோட்டம் -

இன்னொரு கோளில் வாழத்துடிக்கும் மனிதன் ஏனோ பூமியைப்பேண மறுக்கின்றான். இன்றைய விந்தை மிகு விஞ்ஞான தொழில்நுட்பப் வளர்ச்சியினால் விண்வெளியையே சுற்றிச்சுற்றி வருகின்ற அவன் விண்வெளியில் தனக்கு வாழ்விடம் கிடைக்குமா? என ஏங்குகின்ற அதே வேளை தனக்கு வாழ்விடமளித்துத் தன்னை வாழ வைத்துக் கொண்டிருக்கின்ற பூமியைப் பேணிப் பாதுகாக்க மறந்துவிடுகின்றான்.

ஆரம்பகால மனிதனின் வாழ்க்கை வேட்டையாடல், விவசாயம் என்பவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மனிதக்குடித்தொகை சிறிதாகவும் தேவைகள் சிலவாகவும் இருந்தன. தனது தேவைக்கு அதிகமான வளங்களை மனிதன் சூழலிருந்து எடுக்கவுமில்லை. சூழலுக்கு தீமை தரக்கூடிய பதார்த்தங்களை அவன் சூழலுக்கு விடவுமில்லை. இதனால் சூழல் மாற்றங்களுக்கு உள்ளாகவும் இல்லை.

18ம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சி ஆரம்பமானதன் விளைவாக இயற்கை வளங்கள் எல்லை மீறி நுகரப்பட்டன.மனிதக்குடித்தொகை துரிதமாக வளர்ச்சியடையத் தொடங்கியது.இதனால் சூழலுக்குப்பெருமளவு கழிவுகள் வெளியேற்றப்பட்டு அவை சூழலில் தேக்கமடைந்து "சூழல் மாசாக்கம்" என்னும் நிலையை ஏற்படுத்தியது.

நகரமயமாக்கல் நீர்பாசன வடிகாலமைப்புத்திட்டங்கள் வீதி அபிவிருத்தி போன்றவற்றின் காரணமாக காடுகள் பெருமளவில் அழிக்கப்பட வேண்டிய தேவை மனிதனுக்கு ஏற்பட்டது.இன்று உலகின் மொத்த நிலப்பரப்பில் மிகவும் குறைந்த

சதவீதம் மட்டுமே காடு மூடலைக் கொண்டுள்ளது.இதில் உலகின் நுரையீரல் என வர்ணிக்கப்படுகின்ற அமேசன் காடு மிகவும் பிரதானமானதாகும்.

காடழிப்பானது மனிதன் பூமியில் தொடர்ந்து உயிர் வாழ்வதற்கே ஓர் அச்சுறுத்தலாக அமைகின்றது.காடுகள் ஒளித்தொகுப்புச் செயற்ப்பாட்டினால் வழிமண்டலத்தில் உள்ள $CO_2$ வாயுவை பயன்படுத்துகின்றன.இதனால் $CO_2$, $O_2$ சமனிலை பேணுவதில் காடுகள் உதவுகின்றன. காடுகள் அழிக்கப்படுகின்றமையால் வளிமண்டலத்தில் $CO_2$ இன் செறிவு அதிகரிக்கின்றது. .உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் அதிகரித்த பயன்பாடு $CO_2$ செறிவை மேலும் அதிகரிக்கின்றது.இதன் விளைவாக பூகோள வெப்ப உயர்வு "பச்சை வீட்டு விளைவு" ஏற்படுகிறது. பச்சைவீட்டு விளைவானது இன்று உலகளாவிய சூழல்ப்பிரச்சனையாகும்.

பச்சைவீட்டு விளைவினால் பூமியின் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிக்கின்றது. இதனால் கடல்நீர் வெப்ப அதிகரிப்பு காரணமாக விரிவடையும். துருவப்பகுதிகளில் காணப்படுகின்ற பனிப்படிவுகள் உருகி திரவ நீராகும். கடல்நீரின் விரிவும் பனிக்கட்டி உருகியதால் பெறப்பட்ட திரவ நீரும் சேர்வதனால் கடல் மட்டம் உயர்வடைகின்றது. இதனால் நிலம் தின்னல் அதாவது நிலத்தின் அளவு குறைவடைந்து செல்கின்றது.

பூமியின் மேற்பரப்பு வெப்பமடைவதனால் காற்றோட்டம் , வெப்பநிலை , மழைவீழ்ச்சி என்பவற்றில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு உலகில் காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றது. இந்த விளைவு "ELNINO" என அழைக்கப்படுகிறது. இத்தகைய காலநிலை மாற்றத்தினால் உலகின் பல பகுதிகளில் பெருமளவு இன அழிவுகள் ஏற்பட்டு உலகின் உயிர்ப்பல்வகைமை அழிக்கப்படுகின்றது.

இத்தகைய மனித நடவடிக்கைகளினால் எதிர்காலத்தில் மனிதன் பூமியில் வாழ முடியாத அபாயம் தோன்றும்.எனவே காடழிப்பைத் தவிர்த்து மீள் வளமாக்கலுக்கு கைகொடுத்து இயற்கைச்சூழலின் தரம் மாறுபடாமலும் அதிலுள்ள வளங்கள் இழக்கப்பட்டு அழிவடையாதவாறு இயற்கைச்சூழலின் உயிர்காக்கும் தன்மை தொடர்ந்து நிலைத்திருக்கக் கூடிய வகையில் இந்த இயற்கைச் சூழலை எமது எதிர்கால சந்ததியினரிடம் கையளிப்போமாக!

நன்றி

**ந. கீர்த்திகா**
**2009 A/L Com**

# பணிவு வந்தால் உயர்வு வரும்

"எல்லோர்க்கும் நன்று ஆம் பணிதல்- அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து"

என்னும் திருக்குரளில் பணிவைப் போற்றி பொய்யாமொழிப்புலவர் குறிப்பிடும் போது பணிவாக நடத்தலானது எல்லோர்க்கும் சிறப்பானது நன்மை தான் எனினும் கல்விச் செல்வம், பொருட்செல்வம், உடல்நலச்செல்வம், வீரம் போன்ற செல்வங்களை கொண்டவர்களிடம் பணிவு இருந்தால் அவர்களுக்கு மேலும் பெருஞ்செல்வம் சேர்ந்தது போன்ற சிறப்புடையதாகும் என்கிறார்.

"பெருக்கத்து வேண்டும் பணிதல் -சிறிய
சுருக்கத்து வண்டும் உயர்வு"

என்ற குறள் மீது பணிவைப் பற்றி அவர் மேலும் விளக்குகின்றார். செல்வம் குறைந்த போதும் கூட பணிவைக் கைவிட்டு தாழ்ந்த நிலையை அடைந்துவிடாது தொடர்ந்து பணிவைப் பேணி உயர்வாக நடந்து கொள் என்கிறார்.

எம்மைவிடப் பெரியோர்களிடமும், சான்றோரிடமும், உயர்ந்தவர்களிடமும் மாத்திரமே பணிவு காட்ட வேண்டும் என்பதில்லை அன்றாடம் சந்திக்கும் தொடர்பு கொள்ளும் அனைவரிடமும் பணிவோடு நடந்து கொள்ளல் வேண்டும். எம்மைவிடக் கல்வியிலோ,வயதிலோ, வசதியிலோ குறைந்தவர்களிடம் கூடப் பணிவோடு நடந்து கொள்ள வேண்டும். இதையே ஔவையார் "தாழ்ந்தோராயினும் தாழ உரை" என்கிறார் "கேட்பவர் எம்மைவிடத் தாழ்ந்தோராக இருந்தாலும் பணிவோடு பேசு" என்று கூறுகிறார் "நீ வருந்துபவராயினும் அவர் மனதைப் புண்படுத்தாது பணிவாகப் பேசு" என்றும் எமக்க பணிவுடமை தொடர்பாக அறிவுரை கூறுகிறார். "நைபவர் எனினும் நொய்யா உரையே" என்கிறார் ஔவையார் தனது கொன்றை வேந்தனில். இத்தனை பெருமைகளையும்,சிறப்புகளையும் எமக்களிக்கும் பணிவை நாம் பல கோணங்களில் பார்க்கலாம். பெற்றோரிடம் காட்டும் பணிவு,குரவிடம் காட்டும் பணிவு,கடவுளிடம் காட்டும் பணிவு,குடும்பத்தில் உள்ள மூத்தாரிடம் காட்டும் பணிவு, எனப் பலவாறு நோக்கலாம்.

இவற்றுள் பெற்றோரிடம் காட்டும் பணிவை எடுத்துக் கொண்டால் இதற்கு சிறந்த உதாரணமாக ஸ்ரீராமரைக் குறிப்பிடலாம் அரண்மனையில் சுகபோகங்களை அனுபவித்து வாழ்ந்த அயோத்தி இளவரசன் ஸ்ரீராமபிரான் தனது சிறிய தாயார் கையேகி "இது தந்தையின் ஆணை நீ பதிநான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டும்" என்றதும் அன்றலர்ந்த செந்தாமரை போன்ற முகத்துடன் சிற்றன்னையை வணங்கி ஆசி பெற்று விடை பெற்றுச் சென்றான். இது பெற்றோர் மீது காட்டும் பணிவுக்குச் சிறந்த உதரணமாகும்.

மகாபாரதப் போர் மூழ்வதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருந்த சமயத்தில் துரியோனனும்,பார்த்தனும் சர்க்கரதாரியிடம் வந்திருந்த வேளையில் கிருஸ்ணர் தயிலில் ஆழ்ந்த இருந்தார் அப்போது அர்ஜுனன் அவரின் காலடியிலும் ஆனால் தரியோதனன் யாரிடமும் பணிய மாட்டான் எனவே ஸ்ரீ கிருஸ்ணரின் தலைமாட்டிலும் அமர்ந்தனர் சர்க்கதாரி வழித்ததும் முதலில் காண்டீபம் ஏந்தியவனைக் கண்டார் உடனே அவனும் மிகவும் பணிவாக அவரின் கால்களைத் தொட்டு வணங்கினான் ஆனால் துரியோதனனோ அவரை ஏலனமாக வணங்கினான் உடனே அவர் “அட பார்த்தா நீ எப்பொது வந்தாய் எனறு கேட்க” துரியோதனன் நானே முதலில் வந்தேன் என்று பணிவில்லாமல் கூறினான் எனவே கிருஸ்ணர் மதலில் பார்த்தனுக்கே முன்னுரிமை வழங்கினார் இது பணிவின் உயர்வைக் காட்டுகிறது. அப்போது பார்த்தன “பகவானே போரில் நீங்கள் நீங்கள் மட்டும் எனக்குப் போதும் எனறு உரைத்தான்” பகவானும் ஒத்துக்கொண்டு “நான் உனககு சாரதி அகின்றேன்” எனக் கூறினார் துரியோதனனோ பகவானை விட்டுவிட்டு படைகளை மட்டும் பெற்றுக் கொண்டான் ஆனால் இறுதியில் பாண்டவர்களே வென்றனர் காரணம் கடவுளே மனிதனுக்கு சாரதியாக மாறினார் ஏனெனில் அவர்களிடம் பணிவு காணப்பட்டது. இதுவே தெய்வத்திடம் காட்டும் பணிவிற்கு சிறந்த உதரணமாகும்.

பணிவில் பார்த்தனை விட ஏகலைவன் குறைந்தவன் அல்ல அவன் ஆச்சாரியார் துரோனரின் வில்வித்தைகளை மறைந்து இருந்து அவரின் சிலையை குருவாக எண்ணிக் கற்றுக் கொண்டிருந்தான் இதனை அறிந்த குரு அவனிடம் சென்று எனக்கு குரு தட்சனையாக உனது வலது கைப் பெருவிரலைக் கேட்டார் பெருவிரல் இல்லாமல் பானம் செலுத்த முடியாது என்று அறிந்தும் தனது குரவிற்கு பணிந்து இன்முகத்துடன் அதனை அவரின் கால் அடியில் இட்டான் இது அவன் குருவிற்கு காட்டிய பணிவை எடுத்துக் காட்டுகிறது.

வீரகாவியங்களிலும், இதிகாசங்களிலும் மாதா, பிதா, குரு, தெய்வ ஆசி பெற்றவரும் பணிவுடையாருமே பாட்டுடைத் தலைவர்களாகப் போற்றப்பட்டுள்ளனர். இதற்கு மாறாக அவர்களது ஆசி இல்லாதோர் வீரம் உடையவர் எனினும் அழிவடைகின்றனர்.

எனவே இன்றைய காலகட்டத்தில் எல்லோருமே பணிவுடன் கூடியதான எளிமையான வாழ்வு உயர்வான நோக்கு,பரந்த மனப்பாண்மை அன்பு உள்ளம் என்பவற்றை வாழ்வில் நன்கு பேணி வருபவர்கள் எல்லா விதச் சிறப்புகளையும் எய்துவார்.

**செல்வி. பாரதி வரதராஜசர்மா**

(2009 உயர் தரம் கலைப பிரிவு)

# AUTOBIOGRAPHY ABOUT AN OLD DOG

Old age comes to all. Look at me now. My sight is weak and I hear only loud noises. Patches have appeared on my coat of fur. You should have seen me then an active, attractive, clever dog, wearing a soft thick fur coat. Other dogs envied my white bushy tail. My master called me "pretty" I would have been a real pretty .My place was a big kennel. I love to run around my master's house in the morning ,chasing squirrels and birds. So they never mode friends with me. But now they come near not only that, some peck on my tail. May be because my tail is only skin and bone now .When I was young my playmates were birds and squirrels.

They never could play long My master praised me. Today I can hardly work. My master still loves me. He knows that I cannot digest hard bones and I am fed with soft meat, fish and biscuits. Now, I spend my life between sleeping and eating.

R JENATHTHANI
GRADE 7$^{A}$

# MY HOBBY

Many children have different hobbies like reading, collecting stamps, post cards and stickers, keeping pets .....Etc. Of them my favorite hobby is collecting sea shells .I like reading books and collecting stickers too .I have more than one hundred sea – shells. Some of them coloured. I make small chains for my dolls with them. I have my tiny sea –shells in a plastic box and keep the others in my fish tank. I do not live near the seaside. But I go to the beach every week. I spend my time there in collecting sea – shells.

One day I got a gift from my friend. That was a big box full of sea shells. I was very happy. Of them there was a big white one. I often spend my leisure time in counting them .I mean that as a useful one. So, I like this hobby very much.

R.DURKAYINI
GRADE 8$^{A}$

# DISPLACED PEOPLE

Due to many reasons people have to give up their own places and move to other places to continue their life. Many varieties of troubles displace people for many centuries .Such as war, natural disasters (earthquake, tsunami, and cyclone) and many other factors. Disasters can occur in two ways. They are the natural disasters or man made disasters.

Nowadays war force many people to leave their native places. Displace means people who displace from their own places. They have to face many unbearable hard ships. Displacement is an unforgettable miserable incident in once's life. They have to miss the opportunity to live in their own places where they were born. They have to miss the opportunity to share their happiness or sorrow with their relations who live together. They happen to miss the opportunity to live in their homes properties and belongings which are collected by hard earning have to be lost.

Displaced people have to lose a lot economically .The jobs people have to earn for their life are snatched out. People are made jobless. They have to bear unbearable hard ships to rebuild their new lives, although their lost lives will never return.

As displaced people have to depend on reliefs and aids which are given by NGO's. They miss an independent life. They don't enjoy a satisfactory life.

**J .GOPIPIRASATH**
**GRADE 11A**

# THE EVOLUTION OF COMPUTER

Starting from abacus, going under research as adding machine, analytical engine, etc, it came up as valve computer, transistor computers, and IC computers and thus evolved into microprocessor computers for the use of multimedia purposes. The first electronic computer was produced in 1940s.Since then a series of radical break through in electronics have occurred. With each break through the computer which based on older form of electronics have been replaced by the new generation are classified as follows.

1. **The First Generation : 1946 – 1958 (The Vacuum Tube)**

Early computers using electronic valves.

Technology:-

- I Vacuum tubes as their main logic elements.
- II Punch cards to input and externally store data.
- III Rotating magnetic drums for internal storage of data and programs.
- IV Programs written in
  - * Machine language
  - * Assembly language
- V Requires a compiler

**Examples: -** ENIAC (1946), AVIDAC (1946), MARK – I (1949). SEAC (1950), UNIVAC I (1951), JOHN VON NEUMANN'S IAS (1952), IBM 701 (1953), IBM 650 (1954), SAGE (1958), NEAC 1101(1958)

2. **The Second Generation :-1959-1963 (The Transistor)**

The Transistors were smaller than vacuum tubes were used for circuitry .Transistor is an electronic switch that allow or does not allow electronic signal to pass. However, computers that used transistors were not produced in quantity until over a decade later. The second generation emerged with transistors being the brain of the computer. High -level programming languages E g: - FORTRAN and COBOL

**Examples: -** IBM Stretch (1959), PDP – I (1960), IBM 1401 (1961), LINC -8 (1962), CDC 6600 (1964)

3. **The Third Generation :- 1964 – 1970 (Integrated circuits- Miniaturizing the Computer)**

Advances in electronics, technology made possible to prepare integrated circuit elements which are called as IC, made up of silicon known as chip. Computers that were designed with the use of integrated circuits were called third generation computers. Advanced programming languages like BASIC developed.

**Examples:-** PDP -8 (1965), I LLIACIV (1966), NOVA (1968), Apollo Guidance Computer (1968)

4. **The Fourth Generation : 1971- Today (The Microprocessor)**

Initially, the integrated circuits contained only about ten to twenty components. This technology was named small scale Integration (SSI). With the advancement in technology for manufacturing ICS, it became possible to integrate up to a hundred

components on a single chip. This technology came to be known as medium scale integration (MSI). Then came the era of Large Scale Integration (LSI). Then it was possible to integrate over 30000 components onto a single chip. Effort is still on and it is expected that more than one million components will be integrated on a single chip know as very large scale integration. (VLSI)

**Examples:-** Kenbak 1 (1971), HP-35 (1972), Xerot Alfo (1974), Tandem – 16 (1975), Apple -1 (1976), CrayI (1976), Commodore PET (1977), VAX 11/780 (1978), APOLLO DN 100 (1981)

**5. The Fifth Generation (Present and beyond)**

There are many predictions that by the end of this century computers will have been developed which will be able to converse with people in human like manner and which will be able to mimic human sense, manual skills and intelligence based on artificial intelligence.

It must respond natural language input and be able to learning and self – organization. They aim to bring us machines with genuine IQ, the ability to reason logically, and with real knowledge of the world.

**T.MOHANARAMANAN**
**2008 A/L MATHS**

# SOCIAL SERVICES AND ITS USEFULNESS

We are living in a society for which our services should be useful. You can have peaceful atmosphere only if the society is healthy. Individual's life is linked with the society.

To improve the society you must spend some time for it. Social services in any form is a must to all. There are also so many ways to do social services. If you have mind you can pick up some work for the benefit of the society.

Social service has gained momentum nowadays there are so many social associations and clubs. There is a separate department in the Government to solve the problems of people. Some ladies clubs are also doing services to the poor and the

needy by providing facilities to teach handicrafts, weaving and panting. Some are running night schools to enable the working women also to attend the school.

There are so many free dispensaries in the cities, run by charitable institutions, provide medical facilities to the poor. We can donate some money regularly for the working of these dispensaries.

Blood is needed for a healthier living. In hospitals many patients need blood. Some patients need blood before and after operations they have under gone. Young men and women may donate blood voluntarily .Blood donation is harmless and painless. It will save many dying patients. In all hospitals arrangements are made to take blood from the voluntary donors. This is a best method of social service.

Educating young and old is also a good service .All the members of the poor family are going to work to meet their daily demands. They think that earning is more important than educatation of their children. It is not their mistake their financial position is like that. Running night schools convince them to send their children to school.

You can teach them about sanitation also.Our village peoples are living in ignorance. It is the duty of the educated young men to go to villages periodically and instruct them about sanitation and the importance of giving education to their children. We can help the desering poor boys with clothes, books, food, etc.

Kindness will bring forth kindness, says a Tamil proverb. In the creation of god all are equals. There is no difference

**K.PIRASANNA**
**2009 A/L Com**

# UNITED NATIONS ORGANIZATION

The United Nations is an international organization of countries. It was created to promote world peace and to prevent another world war. The UNO was founded, during the Second World War .In 1945 it was started officially. Its mission is to maintain world peace, develop good relations between the countries, safe guard their culture their human rights and to solve world's problems.

The UNO was created by the great three leaders' effort. The three leaders were the United States president Franklin Roosevelt, British president Winston Churchill and Soviet premier Joseph Stalin. UNO membership is open to any country. Each country has an equal voice and vote and also pays dues to support the UNO. As of 2007 the UNO has 192 members. The 192nd member is Montenegro. Vatigan and Dhaivan are the audience countries.

The UNO has six councils they are the general assembly, the Security Council, the Secretariat, the Economic and social council, the International court of justice and the trusteeship council .Bangimoon is the president of the UNO. The UNO'S head office is in New York. The five members of the Security Council are called powerful countries. They have got veto authority. The powerful countries are USA, UK, France, Soviet union and China. Nowadays UNO'S decisions are neither accepted nor respected by the authoritative countries. They engage in war. For example USA and UK, Iraq, and USA –Afghanistan. The UNO could not control them because they provide a lot of financial assistance for their functioning. The powerful countries use their veto power for their own sake. Though the third world countries have a large membership, they are helpless because they are economically very poor and they're developing countries.

The third world countries expect that UNO will give more support for them and safe guard from the authoritative powerful countries.

T.THARANI
**Grade 12 Bio (2009)**

# SOURCE OF KNOWLEDGE

Man is a social animal who always search new things and knowledge, So as to develop him to overcome the troubles and difficulties which can give him obstacles. As man always searches knowledge and he has an endless hunger of knowledge. He can develop beyond all imaginations. It is rightly insisted. "Knowledge is power". There are many sources of knowledge around us. Books, newspapers, magazines, journals and all sorts of media help us to develop our knowledge.

In fact a book has many valuable news and views which can help develop knowledge of a person. Book is an ancient and traditional source of knowledge for many people in the world. A book is like a bridge between many people generations.

Many famous persons themselves developed their knowledge through reading. Public libraries were suitable places for them to earn enough knowledge. Abraham Lincon, Mahatma Gandhi, Jawaharlal Nehru and many other scientists, economists were moulded through reading.

Although there are many sources of knowledge, book has a unique feature. Even now many people love books .They like to store many news and information in books. So we should read a lot. To get good reading good books should be chosen. The time of reading should be regular. We should read deeply. When reading, some times we have to read repeatedly.

SWARNIYA
**GRADE 11 A**

# ENVIRONMENTAL POLLUTION

The Environment has drawn the attention of all the Seientists and thinkers of the world today . Special branches of study and research have been set up in countries to meet with the menace of environmental pollution.

Pollution of the environment arises chiefly from heavy industrialization and other human habitation. Therefore it has become necessary for all humans to take remedial measures to fight pollution.

In many countries government have set up separate ministries to deal with environment and pollution. It is the duty of each one of us to keep our environment. Clean and free from Bollution. Healthy growth free from diseases and starvation requires a healthy environment. our atmosphere land and water have to be maintained.

G.SANGEETHA
**GRADE 7A**

# FOOD

Food is necessary for all of us to live and to do our daily activities. It is a fuel for us. Without food we cannot live. Our food must have all the nutritional values. We can divide them as carbohydrate, protein , fat , vitamins and minerals, Every nutrition is seen in certain foods, so we must include the food items to get all the nutritional value in our daily diet. Carbonydrate is in wheat flour, rice and potatoes .This gives us energy for our work.

Protein helps the growth of body. It is in milk, cheese, nuts, dhal and gram. Fat reforms temperature of body and give energy. It is in butter ,vegetable oil , nuts and other oils. Minerals build bones and teeth, It enrich the body fluids and regulate the body functions. It is in red raw rice, green leaves and fruits. Vitamins give vitality and protect the body from sickness. Fresh fruits, green vegetables, meat and fish have vitamins. Hence, a balanced diet is necessary to human body.

**G.SANGEETHA**
**GRADE 7A**

# THE STATUS OF ENGLISH

When the English came to our country they of course brought their language with them , and it has been spoken in srilanka more or less for over 100 years. At First of course very few srilankans learnt it. But now it is spoken, written and read by large numbers and it is the medium of instruction in colleges and the upper classes of some schools.

It is not an easy language to learn. The spelling and pronunciation being very irregular. But its advantages are so great so that we can't well do without it

The language English would carry us all over the world. It will be a link between us and the rest of the mankind.

The students of Medical and E-faculty are bound to study English .Now a days people without the basic knowledge of English cannot survive in foreign countries. Because the main problem is the communication.

When Srilanka is represented at various organizations such as UNO,UNICEF,IMF SAARC English is used as an official communication language. The people those who participate in these conferences will be able to contribute effectively it they have a good knowledge of English.

Our Srilankan studens have to read more and more books to update their English knowledge. They also need to know what is happening around the world. It can happen only through an International language.

English is the language of trade. With the recent development in the open market economy in the country. We need more people who could use English to carryout the task demanded by the world trade.

It is the language of mass communication. There has been a great revolution in the fields of information and education with the coming of television and computer. Better an more effective methods of receiving information and passing them into the masses have been possible with this system. All these facilities demand more and more people capable of handling English with a high degree of efficiency.

People in farming and agriculture are interested in modern technology They need modern and scientific knowledge in the selection of better seeds and the control of pests and weeds. The quickest way to get information is only through English language.

LastlyI indicate that English is a noble language and possesses one of the finest literature in the world.

Most people believe that language English could act as a link language to promote good relations among the various communities of our country.

Nowadays, a Knowledge of English introduces a man to the society as an Educated one.

The abbreriation for school

**S - Sincerity**
**C - Capacity**
**H - Honesty**
**O - Obedience**
**O - Order**
**L - Loyal**

**B.ABIRAMI**
**A/L 2008 BIO**

## 2007ம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் முதலாமிடம் பெற்ற வலைப்பந்து குழு (17 வயது பிரிவு)



**நிற்பவர்கள்:** ச. பார்த்தீபா, தி. அகிலினி, பா. அகல்யா, வ. மிதுலா, ப. அனிதா, கு. ரேகா, வ. கஜீபா, நா. ஜீவிதா

**இருப்பவர்கள்:** திரு. தி. ராஜராஜன், திரு. சோ. இராமநாதன், திரு. வே. சந்திரசேகர், திரு. R. சண்முகேஸ்வரன், திரு. சு. புண்ணியசீலன், ச. அபிராமி, ஜெ. ஜெயதரன், திருமதி. L. லொயிட், செல்வி. பி. பரமேஸ்வரன்

## 2006ம் ஆண்டு மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்ற மேசைப்பந்து குழு



**நிற்பவர்கள்:** ச. திவ்யா, க. கோபிகா, செ. திருமகள், ச. அபிராமி, த. பிரதீபா

**இருப்பவர்கள்:** திரு. தி. ராஜராஜன், திரு. சோ. இராமநாதன், திரு. வே. சந்திரசேகர், திரு. R. சண்முகேஸ்வரன், திரு. சு. புண்ணியசீலன், செல்வி. இ. தரணிகா, திருமதி.ஜெ. ஜெயதரன், செல்வி. பி. பத்மநாதன், செல்வி. பி. பரமேஸ்வரன்

US
the
pe
he
by
an
or
A
a t
er
re
to
d
o
1
n
v
c
N
a
c

# JOHN F KENNEDY

John Fitzgeral Kennedy was one of the most popular president of USA. He was also the first Roman catholic and the youngest American to be elected to the office of the president of USA .He was particulary very popular with the youngest people and he represented their hopes and aspiration .In the 1960 presidential election he was demogratic party's candidate and was elected by defeating his republican rival by a narrow margin. John Kennedy was born on 29th may 1917 in Boston Massachusetts and was the son of Joseph Kennedy a successful business man and a politician of Irish origin. Kennedy graduated from harward university in 1940,and in 1943 he joined the American Navy. During the second world war he was decorated for bravery .When as a torpeds board commander, he saved the lives of his crew members. When the war ended Kennedy joined politics as a democrat and was first elected to the house of representative in 1945 and was reeiected for two more terms. In 1952 he was elected to the American senate. In the presidential election held in November 1960 Kennedy defeated the Republican candidate Richard Nixon by a small margin. The presidency of Kennedy was remarkable for the courageous handling of the Cuban missiles crisis in 1962 and advocacy of civil right for Negroes. In the Cuban missile crises Kennedy made it clear that he would not hesitate to use even nuclear weapon if USSR did not withdraw missilies from cuba. Kennedy was opposed to the further expansion of communism. Kennedy was a friend and well wisher of India. On the fateful day of 23rd November 1963 Kennedy was assaiainated while he was going with his wife to deliver a public speech at Dallas. In his death ,world lost a forsighted statesman and a great champion of Democracy and peace.

**R .JOHNY PIRAKALATHAN**
**2008 A/L MATHS**

# THE GREEN HOUSE EFFECT

The sun is so hot that it emits high energy radiation .The sun's rays can pass easily through the glass of a green house. The plants in the green house are at a much lower temperature. They send out infra – red radiation.

Radiant energy from the sun falls on the Earth and warms it. The Earth radiates heat energy back into space as infra – red radiation. Unlike sunlight , infra –red radiation cannot travel freely through the air surrounding the Earth. Both water vapour and carbon dioxide absorb some of the infra – red radiation Sine carbon dioxide and water vapour act like the glass in a greenhouse , their warming effect is called the green house effect.

without carbon dioxide and water vapour, the surface of the earth would be at 40 °C Most of the green house effect is due to water vapour.

The Earth does , however, radiate some wavelengths which water vapour cannot absorb some of the radiation which water vapour lets through.

The surface of the Earth has warmed up by 0.75oc during the last century. one reason for the increase in the Earth's temperature is that we are putting too much carbon dioxide into the air. The combustion of coal and oil in our power stations and factories sends carbon dioxide into the air.

The second reason is that we are felling too many trees. In south America ,huge areas of tropical forest have been cut down to make timber and to provide.

So we aren't cut the trees and using nature like things. All people are sheltering the earth.

NIROSH
**2009 A/L BIO**

## 2006ம் ஆண்டு வட கிழக்கு மாகாண மட்டத்தில் (முதலாமிடம்)
## 19 வயது பிரிவு வலைப்பந்து குழு



நிற்பவர்கள்:
செல்வி. பா. கஜநிலா, கு. நிலாணி, ச. அர்ச்சனா, இ. மைதில், க. கோபிகா, த. விஜயநிதியா

இருப்பவர்கள்:
திரு. தி. ராஜராஜன், திரு. சோ. இராமநாதன், திரு. வே. சந்திரசேகர், திரு. R. சண்முகேஸ்வரன், திரு. சு. புண்ணியசீலன், செல்வி. சி. வக்சலா, திருமதி. ஜெ. ஜெயதரன், செல்வி. த. பொன்னம்பலம்

## 2006ம் ஆண்டு வட கிழக்கு மாகாண மட்டத்தில் (முதலாமிடம்)
## 15 வயது பிரிவு வலைப்பந்து குழு



நிற்பவர்கள்:
த. தர்ஷனா, தி. லகிதா, ச. கஸ்மீரா, சி. கீர்த்தனா, சி. தர்ஷிகா, ச. தர்ஜினி

இருப்பவர்கள்:
திரு. தி. ராஜராஜன், திரு. சோ. இராமநாதன், திரு. வே. சந்திரசேகர், திரு. R. சண்முகேஸ்வரன், திரு. சு. புண்ணியசீலன், இ. மோகனா, திருமதி. ஜெ. ஜெயதரன்,செல்வி. பி. பரமேஸ்வரன்

# மலரில் மலர்பவை....

## ஆசான்களின் பேனாவிலிருந்து


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | நாட்டாரிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் | 67 |
| 02. | கல்வித்தர மேம்பாடும் கற்பித்தல் நுட்டபங்களும் | 72 |
| 03. | மொழியும் கலைத்திட்டமும் | 76 |
| 04. | இன்று ஒரு தகவல் - இறுதி முடிவெடுத்தல் | 80 |
| 05. | எயிட்ஸ் | 81 |
| 06. | நூலகமும் கற்றலுக்குமான வளநிலையங்களின் வளர்ச்சியில் தகவல் விஞ்ஞான ஆசிரியரின் பங்கு | 84 |
| 07. | கொலஸ்திரோல் | 87 |
| 08. | மனித நடவடிக்கையில் குழுக்களின் செல்வாக்கு | 92 |
| 09. | தமிழில் சைவசித்தாந்தம் வளர்ந்த வரலாறு | 96 |
| 10. | வைரஸ் மற்றும் தகவல் திருடுதல் | 100 |
| 11. | அரச அலுவலரும் விடுமுறையும் | 105 |
| 12. | எனது பார்வையில் யூனியன் கல்லூரியின் ஒரு தசாப்தம் | 110 |

கன
கன
இய

என
தெ
வ
தா
மு
என

ம
ஈ
வ
வ
ல
ல
ந

# நாட்டாரிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

எளிமையும், பகடின்மையும் ,ஈர்ப்புசக்தியும்,இசைநயமும் நிறைந்த தீங்கற்ற கலைக்கருவூலங்களாய நாட்டார் இலக்கியங்கள் ஏட்டில் எழுதப்படாதவை. "எவ்வளவு கலைவல்லுநர்களாயிருப்பினும் - கவிஞராக இருப்பினும் நாட்டுப்பாடல்களை இயற்றமுடியாது. அந்த உலகமே வேறு" – என்பர் கி.வா.ஜகந்நாதன்.

தமிழிலக்கிய வரலாற்றிலே நாட்டார் பாடல்களின் தோற்றம் , வளர்ச்சி என்பவற்றை ஆராயப்புகின் அது மிகப்பழையது. ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியங்கூட வாய்மொழி, பிசி, முதுசொல் என்று மூன்று நாட்டாரிலக்கிய வகைகளைப் பேசுகின்றார். "வாய்மொழி" என்பது பிறப்பிலிருந்து இறப்பு வரை தாலாட்டு, விளையாட்டுப்பாடல்கள், தொழிற்பாட்டுகள், காதற்பாட்டுகள், ஒப்பாரி முதலாக விளங்கும் பாடல்களைக் குறிக்கும். பிசி என்பது விடுகதைகள், நொடிகள் என்பவற்றைக் குறிப்பதாகும்.

வாய்மொழிப்பாடல்கள் அபாரமான சக்தி வாய்ந்தன. பாம்பாட்டியின் மகுடியிசை நாகத்திற்குப் பித்தேற்றுகிறது. ஆயரின் தீங்குழலோசை கன்றுகாலிகளை ஈர்க்கின்றது. தாயின் தாலாட்டைக் கேட்டதும் குழந்தை சொக்கிவிடுகிறது வண்டிக்காரனின் வண்டிப்பாட்டு வண்டியிழுக்கும் மாடுகளின் களைப்பையோட்டி விடுகிறது. உறவை இழந்து துடிப்பவளின் ஒப்பாரி செவியுறுவோரையும் உருகியழ வைக்கிறது. உழவனும், உழத்தியும் பாடும் வயற்பாட்டுக்கள் தொழிலலுப்பை விரட்டிவிடுகின்றன. இங்ஙனம் உயிரினங்களைத் தம்வயப்படுத்தும் அதீத ஆற்றல் நாட்டுப்புறப்பாடல்களுக்குண்டு.

தமிழிலக்கிய வரலாற்றில் முதன்முதலிலே சங்கமருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்திலேதான் வாய்மொழியிலக்கியங்களின் தோற்றுவாயைக்காண முடிகிறது.கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர்குரவை வாழ்த்துக்காதை முதலிய ளபகுதிகளில் அவற்றைக் காணமுடிகிறது.

இவ்வாறே சங்கமருவிய கால அறவிலக்கியங்களிலொன்றான பழமொழி நானூறு "முதுசொல்" எனும் நாட்டுப்புற இலக்கியத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

"பாம்பின் கால் பாம்பறியும்"
"குலவித்தை கல்லாமல் பாகம்படும்"
" கல்தேயும் சொல் தேயாது"
"இறைத்தொறும் ஊறும் கிணறு"

போன்ற பழமொழிகளை இந்நூலிலே காணக்கூடியதாயுள்ளது.

பல்லவர்காலத்துப் பக்தியிலக்கியங்களைப்பாடிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் சிறந்த நாட்டாரிலக்கிய வடிவங்களையமைத்துப் பாடியிருக்கின்றனர். உருக்கமான பக்திப்பாடல்களைப் பாடியுள்ள மணிவாசகசுவாமிகள் இளம் பெண்கள் ஆடிப்பாடும் பாடல் வடிவங்களைத் தேர்ந்தெடுத்து - அவர்களுக்குதவுமாறு பாடியுள்ளார். திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருத்தோணோக்கம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல் ஆகிய பகுதிகள் அத்தகையன. பெண்கள் உட்கார்ந்து ஆடுவது அம்மானை; வாசனைப் பொடியிடித்தவாறு பாடுவது பொற்சுண்ணம் ; மலர் பறிக்கும் போது பாடுவது பூவல்லி; ஊஞ்சலாடும் போது பாடுவது ஊசல் என்றவாறு இவற்றின் நாட்டுப்பாடலமைதி தெளியப்படுகிறது.

ஆழ்வார்களுள் பெரியாழ்வார் பாடிய கோசலை தாலாட்டும் குலசேகராழ்வாரால் இராம பக்தி மேலீட்டினாற் பாடப்பட்ட "இராகவனே தாலேலோ" எனும் மகுடமமைத்துப்பாடிய பிரபந்தங்களுமே தமிழிலுள்ள தாலாட்டுப்பாடல்களின் தோற்றுவாயாகக் கொள்ளப்படுகின்றன.

திருமங்கையாழ்வார் பாடிய பல்லிப்பாட்டுக்களும் நாட்டார் இலக்கியச் செறிவுடையன.

"கொட்டாய் பல்லிக்குட்டி
குடமாடி உலகளந்த
மட்டார் பூங்குழல்
மாதவனை வரக்
கொட்டாய் பல்லிக்குட்டி"

எனும் பாடல் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சங்கமருவியால, பல்லவர்கால இலக்கியங்களில் ஆங்காங்கே பதிவாகியுள்ள நாட்டாரிலக்கியங்கள் பலவாகப் பல்கிப்பெருகி நுழையாத துறைகளேயில்லை எனும் படியாக வளர்ந்துள்ளன.

"மானங் கிடுகிடுக்க
மத்தளங்களோசையிட
பூமி கிடுகிடுக்கப்
போகுதடி மோட்டார் வண்டி"

என்றும்

பத்துமயில் தூரத்திலே
பறக்குதடி ஏறோப்பிளேன்
செத்துப்பிழைக்கவைப்பான்
சீமை வெள்ளைக்காரனடி"

என்றும் இவை நவீனத்தையும் பாடுகின்றன.

தமிழ் கூறும் நல்லுலகெங்கும் தாலாட்டைக்கேட்கலாம். பொருளறியாப் பருவத்திலும் பொங்கிசையைக் கேட்டு அமைதிப்பட்டுத் தூங்குகிறது குழந்தை. பாடுபவள் தன் குடும்பப் பெருமையை யெல்லாம் பெய்து பாடுகிறாள்.

ஆராரோ ஆரிவரோ ஆரிவரோ ஆராரோ
மாமியடித்தாளோ மல்லிகைப்பூச்செண்டாலே
மாமியடித்தாளோ மாலையிடுங் கையாலே"
என்றவாறு தாலாட்டு நீளும்

பருவ மங்கையரும், கட்டிளங்காளையரும் தம்முள் முகிழ்க்குங் காதலுணர்வைப் புலப்படுத்தவும், விளக்கவும் ஒருவரையொருவர் காணுந்தொறும் பாடலிசைப்பர்.

" வட்டவட்டப் பாறையிலே – குட்டி
வரகரிசி தீட்டையிலே
ஆர் கொடுத்த சாயச்சீலை – குட்டி
ஆலவட்டம் போடுதடி
கானக்கரிசலிலே
களையெடுக்கும் பெண்மயிலே
நீலக் கருங்குயிலே
நிற்கட்டுமா? போகட்டுமா?"
என்று காதலனொருவன் பாடுகின்றான்.

தொழிற்பாட்டுக்களின் ஓசை நயமும், அந்தாதித்தொடையும் கேட்கச் சுவைபயப்பன.

மண்ணை நம்பி ஏலேலோ மரமிருக்க ஐலசா
மரத்தை நம்பி ஏலேலோ கிளையிருக்க ஐலசா
கிளையை நம்பி ஏலேலோ இலையிருக்க ஐலசா
இலையை நம்பி ஏலேலோ பூவிருக்க லைசா

என்றவாறு பாடிக்கொண்டே தோட்டத் தொழிலாளர்கள் வேலை செய்வர். விதைப்புப்பாட்டு, ஏற்றப்பாட்டு, அறுவடைப்பாட்டு, நெல்குற்றும் பாட்டு, சுளகிலிட்டுப் புடைக்கும் போது பாடும்பாட்டு, மீன்பிடிப்பாட்டு, கப்பற்பாட்டு என்றவாறு தொழிற்பாடல்கள் பல்வகைப்படுகின்றன.

நாட்டாரிலக்கியங்களில் "கும்மிப்பாட்டும்" ஒன்றாகும். பெண்கள் குழீஇ நின்று கைகளிரண்டையுங் கொட்டிக்கொட்டிப் பாடி ஆடுவது இதுவாம்.

சீர்திருத்தம் , நாட்டுப்பற்று ,அறிவூட்டல் ஆகியனவற்றை இக்கும்மிகள் பொருளா கொண்டுள்ளன. இப்போதுள்ள கும்மிகளில் மிகப்பழையதாக அகத்திய மாமுனிவரின் வைத்தியக்கும்மி குறிப்பிடப்படுகிறது.

"பித்தம் நாற்பத்திரண்டாகும் - பிற
மேகம் இருபத்தொன்றாகும்
ஏத்துவாதம் எண்பத்து
நாலென் றேத்தி யடியுங்கடி"

என்றவாறு வாத, பித்த, சிலேத்தும நுட்பங்களைத் தேர்ந்துரைக்கும் கும்மி அதுவாகும்.

வாய்மொழி இலக்கியங்களில் ஒப்பாரி மிகவுன்னதமானது.

"ஐயா ஓடோடி வந்திடுவேன் - உங்கள்
ஒழுங்கை தெரியாது
ஐயா பாய்ந்தோடி வந்திடுவேன் - உங்கள்
பாதை தெரியாது"

என்றவாறு ஒப்பாரிகள் உருக்கமாயிசைக்கப்பட்டு வருகின்றன.

தமிழிலுள்ள ஒப்பாரிகளுக்கு மூலமாக பட்டினத்தார் பாடிய "ஐயிரண்டு திங்களாய்" என்று தொடங்கும் ஒப்பாரிகளே அமைந்துள்ளன.

நாட்டாரிலக்கிய வகைகளில் இன்னொன்றான (தொல்காப்பியர் போல்) பிசி – விடுகதை (நொடி)யும் மிகமிக சிறப்புடையதாகும்.

"பிறைகவ்வி மலை நடக்கும்" – யானை
"முத்துப்போல் பூத்து, முகிழிற் கிளிவண்ணம் நெய்த்தோர் குருதி
நிறங்கொண்டு வித்துதிர்க்கும்" - கமுகு
"நீராடான பார்ப்பான் நிறம் செய்யான், நீராடின் ஊராடு
நீரிற்காக்கை" – நெருப்பு

இம்மூன்றும் பேராசிரியரும் , நச்சினார்க்கினியரும் தொல்காப்பிய நாற்பாவுக்குத் தரும் எடுத்துக்காட்டுக்கள். புதிர்கள் எதுகை மோனைகளுடன் ஓசை நயங்கூட்டியும் வினவப்படுவதுண்டு.

"சின்னச் சதுரப்பெட்டி
சிங்கார வர்ணப்பெட்டி
கற்றோர்க்குக் கைப்பெட்டி
விற்றோர்க்குப் பணப்பெட்டி" – (புத்தகம்)

என்றவாறான சந்தச்சிறப்புள்ள புதிர்களுமநேகாநேகமுள.

நாட்டாரிலக்கியங்களில் மற்றையதாய பழமொழியும் மிகச்சிறப்பாக வழங்கிவருதல் கூறவேண்டியதில்லை.

"ஏணி, தோணி, அண்ணாவி ஏறாது"
"ஆடிக்காற்றில் அம்மி மிதக்கும் போது
இலவம் பஞ்சுக்கு என்ன கதி"
"சிறுகக் கட்டிப்பெருக வாழ்"

என்றவாறு சிரிக்க சிந்திக்க வாழ வழிகாட்டும் சிறப்பு பழமொழிக்குண்டு.

தற்காலத்தில் நாட்டாரிலக்கிய வடிவங்களாக வில்லுப்பாட்டு, கோலாட்டம், ஒயிலாட்டம், நாட்டியநாடகம், தாளலயம் முதலியனவும் விளங்கி வருகின்றன. இவற்றை விட நாட்டுப்புறக்கதைகளுக்கும் மக்கள்மத்தியில் சிறப்பிடமுண்டு. ஆமையும் முயலும், சிங்கமும் நரியும் முதலாவற்றைக் குறிப்பிடமுடியும்.

இத்தகுகதைகளும் மனிதக்கதை, மிருகக்கதை, மந்திரக்கதை , தெய்வக்கதை என நான்கு வகைகளிலமைந்து காணப்படுகின்றன. தொல்காப்பியர் கூறும்;

✸ பொருளோடு புணராப் பொய்ம்மொழிகளும் , பொருளோடு புணர்ந்த நகை மொழிகளுமே இவைகளாம்

இவ்வாறாகத் தமிழில் வாய்மொழி, பிசி, முதுசொல் எனப்பல்வேறு வகைகளில் நாட்டார் இலக்கியம் தோன்றி நின்று இயங்குகின்றது.

திரு. ஏ. அனுசாந்தன்
ஆசிரியர்
யா/யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை

# கல்வித்தர மேம்பாடும் கற்பித்தல் நுட்பங்களும்

"கல்விச் செயன்முறையினால் உருவாக்கப்படுபவர்கள் பரீட்சை எழுதுவதற்குரிய மனிதர்களாக தயாரிக்கப்படுகின்றார்களே தவிர வாழ்க்கை அறிதகவு கொண்ட மனிதர்களாக உருவாக்கப்படவில்லை" என்பது தேசிய கல்வி ஆணைக்குழு 1992 ம் ஆண்டில் முதலாவதாக வெளியிட்ட பாடசாலைக் கல்வி தொடர்பான விமர்சனமாகும். பாடசாலைக் கல்வி தொடர்பான விமர்சனங்கள் ஆய்வு செய்யப்பட்டதன் பெறுபேறாக 1997ம் ஆண்டில் புதிய சீர்திருத்தங்களும் நடை முறைகளும் அறிமுகம் செய்யப்பட்டன.

புதிய கல்வி சீர்திருத்தத்தில் கல்வித் தரவிருத்தியின் நன்மை, தீமைகள் பற்றிய இடைக்கால மீளாய்வு. சீர்திருத்தத்தினால் வலுவாக மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. என்பதை உணர்த்தியதனால் 2007 ம் ஆண்டிலிருந்து தரமேம்பாட்டுத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன இவற்றில் மாணவர்மையமான தரமேம்பாட்டு அம்சங்களாவன

(01) கலைத்திட்டத்தின் வாயிலாக மாணவர்திறன் தகவுகளை மேம்படுத்தல்.

(03) கற்றல் செயல்முறைகளை அடிப்படையாகக் கொண்டதாக அமைதல்.


(03) ஆக்கத்திறன், பிரச்சினை விடுவித்தல், சமூகத்திறன், கற்பனையாற்றல் முதலானவற்றை முன்னெடுத்தல்

(04) தேவையற்ற சுமைகளை அதிகரி [illegible] பயனுள்ள அடிப்படைகளை கற்கச் செய்தல்.

(05) நெருக்கீடுகள் இல்லாது பிள்ளை நேயச்சூழலை உருவாக்குதல்.

என்பனவாகும்.

மேற்கூறப்பட்ட தரமேம்பாட்டு எதிர்பார்ப்புக்களை உறுதிப்படுத்துவதற்கு ஆசிரியர் பயனுள்ள வகுப்பறை முகாமையாளராக செயற்படும் பொழுது வெற்றிகரமான ஆசிரியராக முடியும். கற்பித்தல் சாதகமான சூழ்நிலையில் நடைபெறும் பொழுதே பயனுள்ளதாகின்றது. பாடத்தின் குறிக்கோள் அடையப்படுவதற்கு கற்றல்பாணி, கற்பித்தல் பாணி, வளங்களின் தொகுப்பு, கற்றல் கற்பித்தல் மதிப்பீடு என்பவற்றிற் கிடையில் வலிதான தொடர்புகள் காணப்படும் பொழுது கற்பித்தல் பயனுள்ளதாகின்றது.



தரமேம்பாட்டு அம்சங்களிற்கு வகுப்பறைக்குள் செயல் வடிவம் கொடுக்கும் இலக்குடன் 5E மாதிரியை அடிப்படையாகக் கொண்ட கற்றல் கற்பித்தல் அமுல்ப் படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில் பாடசாலையினதும் ஆசிரியரினதும் தகுதிநிலை மாறிவரும் கல்வி நிலைகளின் மத்தியில் பொதுப்பரீட்சை பெறுபேறுகளில் மாணவர் அடைவுமட்ட ஒப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. இத்தகைய யதார்த்த நிலைமையை எதிர் கொள்ள ஆசிரியர்கள் தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

ஆசிரியர்களில் பெரும்பாலானோர் கல்விமுறையின் அடிப்படைத் தத்துவங் களை உணர்ந்து கொள்ளாதவர்களாக தவறான அணுகுமுறைகளை பின்பற்றுவதை அனுபவரீதியாக உணர்ந்து கொள்ள முடியும்.

- ✶ கற்றல் என்பது மாணவர்கள் சொந்தப் பொறுப்பு என்பதை உணரவைக்காமை.
- ✶ திட்டமிடல், ஒழுங்கமைப்பின்றி கற்பித்தல்.
- ✶ பாடவேளை முழுவதையுமே கற்பிப்பதற்கே முன்னுரிமை வழங்குதல்.
- ✶ தொடர்ச்சியாக நீண்ட நேரம் கற்பித்தல்.
- ✶ மாணவர்களிற்கு போதிய பயிற்சிகள், அனுபவங்களை வழங்காமை.

என்பனவாகும்.


ஆசிரியர் வகுப்பறைச் சூழலை மையமாக கொண்ட தவறுகளை நீக்கி கற்பித்தல் அர்த்த பூர்வமாக அமைவதற்கு ஆசிரியர் செயலாற்றுதலின் போது கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள்

- ✶ முன்னாயத்தத்துடன் வகுப்பறைக்குள் செல்லல்.
- ✶ பாட நோக்கத்தை சுருக்கமாக முன் வைத்தல்.
- ✶ கற்றல் பொறுப்பை மாணவர்களிடம் உணர்த்தி வழிகாட்டுதல்களை வழங்குதல்.
- ✶ குழு வேலைகள், ஒப்படைகள் வழங்குதல்.
- ✶ மாணவர்கள் தேடியறிந்து, கண்டறிந்து நூல்களை வாசிப்பதற்கு தூண்டுதல் அளித்தல்.
- ✶ மாணவர்கள் ஊக்கத்துடன், விருப்பத்துடன் குழுக்களாகச் செயற்பட ஊக்குவித்தல்.
- ✶ அட்டவணைகள், உருக்கள், படங்கள் போன்ற கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தல்.

மேற்கூறப்பட்ட விடயங்களுடனான கற்பித்தலுடன் மாணவர்களின் அடைவ மட்டத்தை நிர்ணயிப்பதில் பயிற்சி, ஞாபகம் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஜேர்மன் நாட்டு உளவியலாளர் எபிங்ஹவுஸ் தமது ஆராட்சிகள் மூலம் ஞாபகம் பற்றி கூறியவை முக்கியத்துவமானவை கற்ற விடயங்களில்

| | | |
|---|---|---|
| 1 | மணித்தியாலத்தின் பின் | 50% |
| 9 | மணித்தியாலத்தின் பின் | 64% |
| 2 | நாட்களின் பின் | 72% |
| 31 | நாட்களின் பின் | 79% |

மறக்கப்பட்டுவிடும் என விபரித்தார். கற்றல் என்பது நேரடி அனுபவமாக அமையாத வரை ஞாபகத்தில் வைத்திருப்பது சிரமமானதாகும். கற்றல் கற்பித்தலை 5E மாதிரியை அடிப்படையாக முன்வைக்கும் பொழுது ஹக்பி (Higbee- 1977) எனும் உளவியலாளர் முன்வைத்த SQ3R கற்பித்தல் நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மாணவர் ஆர்வத்தையும், ஞாபகத்தையும் தூண்டமுடியும்.




| | | | |
|---|---|---|---|
| (1) | Survey | – | கற்கும் விடயத்தை ஆய்வு செய்தல், முழுமையான உணர்வை ஏற்படுத்தல். |
| (2) | Question | – | கற்கும் விடயத்தில் வினாக்களை எழுப்புதல். |
| (3) | Read | – | வாசித்தல், விடை காணுதல், தேடியறிதல். |
| (4) | Recite | – | உரத்து வாசித்தல் மூலம் செய்தியை புலனுறுப்புக்களினூடாக மூளைக்கு அனுப்புதல், அனுபவம் பெறுதல். |
| (5) | Review | – | மீள நோக்குதல், அடிக்கடி மீட்டுதல். |

2007 ம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ள தர மேம்பாட்டுத் திட்டங்களுடன் இணைந்த புதிய கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்துவதனால் ஆசிரியர் வினையாற்றல் அதிகரிப்பதுடன் மாணவர்கள் தம்மை யாரென்று அறிய முடிவதுடன் தமது ஆற்றல்களையும் இனங்கண்டு வெளிப்படுத்த முடிவதுடன் வாழ்க்கை அறிதகவு கொண்ட மனிதர்களாகவும் உருவாக முடியும்.

**உசாத்துணை நூல்கள்**

(1) ஸ்டெலா வொஸ்னியாடோ, பிள்ளைகள் எவ்வாறு கற்கின்றார்கள், குமரன் புத்தக இல்லம் கொழும்பு - 2001

(2) ஜெயராசா கல்வியியல் புதிய சீர்திருத்தங்கள், அகவிழி வெளியீடு, கொழும்பு, 2006

(3) சீதா சந்தசீலி சமரசிங்க, நினைவாற்றலை வளர்த்தல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு-2005

(4) ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சி செயற்றிட்டம் GTZ, பாடசாலைமட்டக் கல்வி அபிவிருத்தி, தேசிய கல்வி நிறுவகம், கொழும்பு - 2001.

**திரு. இ. நவகேதீஸ்வரன்**
**B.AF, Dip.in.Ed.**
**J/ Union College,**
**Tellipalai**

# மொழியும் கலைத்திட்டமும்

கலைத்திட்ட உருவாக்கம் கலைத்திட்ட விருத்தி கலைத்திட்டமாற்றம் ஆகிய துறைகளில் மொழி பிரதான இடத்தினை வகிக்கிறது. இன்று உலகம் முழுவதும் செயற்பாடு கொள்ளத் தொடங்கியுள்ள கோளமயமாதல் கலைத் திட்டத்துக்கும் மொழிக்கும் உள்ள தொடர்பை மேலும் வலியுறுத்தத் தொடங்கி உள்ளது. கலைத்திட்ட "மொழி முகாமைத்துவம்" (Language Management in Curriculum) என்ற தொடர் நவீன கல்வி உலகில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. கோள மயமாதல் என்ற பின்புலத்தில் இன்று ஒரு மாணவன் பல்வேறு மொழிகளைக்கற்க வேண்டியுள்ளது. உலகம் சுருங்கி வருகிறது. இனங்கள், நாடுகள் என்பவற்றுக்கிடையே உள்ள தொடர்புகள் அதிகரித்து வருகிறது. எனவே ஒரு மாணவன் சராசரியாக குறைந்து நான்கு மொழிகளையாவது கற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என ஆய்வுகள் எடுத்துக்கூறுகின்றன. எமது நாட்டில் நவீன கலைத்திட்டத்தில் இதற்கான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அதாவது தாய்மொழி, தேசியமொழி, சர்வதேசமொழி உலகிலுள்ள நவீன மொழிகளுள் ஒன்று போன்றவற்றை மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். நவீன உளவியலின்படி மொழியைப் படிப்பதற்கு நவீன உளவியல் உபாயங்கள் இன்று கண்டறியப்பட்டுள்ளன.

மொழிக்கு உளவியல் பரிணாமங்கள் உண்டு. மொழியினூடாகவே ஒரு மாணவன் வெளி உலகை விளங்கிக் கொள்கின்றான். கூடுதலான இடைவினைகளை ஏற்படுத்துகின்றான். சிந்தனை வளர்ச்சிக்குரிய கருவியாகவும் மொழி அமைந்துள்ளது.மொழிக்கும் ஆளுமைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு.ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைத் தெரிந்தவனின் ஆளுமை அதிகரிக்கும். பிறரை வசீகரிப்பதற்கும் சூழ்ச்சித்தனத்திற்கும் மொழி உதவுகிறது.

மொழிக்கும் சமூக வர்க்கத்துக்கும் இடையே தொடர்பு காணப்படுகிறது. மொழி அடிப்படையில் மாணவர்களை இரு குழுவாக வகைப்படுத்தலாம்.

**1. வரையறுக்கப்பட்ட மொழிக்குறியத்தை கொண்டவர்கள்**

இவர்கள் பொதுவாக தொழிலாளர்களின் பிள்ளைகள் மிகத்தாழ் வருமானமுடையோரின் பிள்ளைகள் ஆக காணப்படுவர். அதாவது எளிமையான இலக்கணப்பயன்பாடு வரையறுக்கப்பட்ட சொற்களஞ்சியம் என்பவற்றை இவர்கள் கொண்டிருப்பர்.

**2. விரிவடைந்த செழுமையான மொழிக்குறியத்தை பயன்படுவோர்கள்**

பொதுவாக அதிக வருமானம் கொண்ட குடும்பத்தின் பிள்ளைகள் இவ்வகையில் அடங்கும் சிக்கலான இலக்கணப்பிரயோகம் , அருவமான கருத்துகளின் பிரயோகம் என்பன இவர்களிடத்தில் காணப்படும் அதாவது மொழிப்பாட அடைவுக்கும் ஏனைய பாடஅடைவுக்கும் இடையே நேர்இணைப்புக் குணகம் காணப்படுகிறது.

மொழி, பண்பாடு, கலைத்திட்டம் ஆகிய மூன்றுக்கும் இடையேயும் தொடர்புகள் காணப்படுகின்றன. மொழி ஒரு பண்பாட்டுக்குறியீடு, பண்பாட்டுக் கோலங்கள் மொழியால் வெளிப்படுத்தப்படுகின்றன. ஒரு மொழியை அழிப்பதன் மூலம் ஒரு பண்பாட்டை அழித்து விடலாம் எனச் சொல்வார்கள். பண்பாட்டுக் கருவூலங்கள் மொழியிலேயே அமைக்கப்படுகிறது பண்பாட்டை ஒரு தலை முறையிடமிருந்து இன்னொரு தலை முறைக்கு கையளிப்பதற்கான செயற்பாட்டையே கலைத்திட்டம் செய்து வருகிறது.

மொழிக்கும் பண்பாட்டு விழுமியங்களுக்கும் இடையேயும் தொடர்புகள் உள்ளன. உதாரணமாக பெரியோரை மதித்தல் என்ற விழுமியம் மொழியினூடாகவே கையளிக்கப்படுகிறது. இவ்வாறு ஒழுக்கம், நடத்தை, நல்லெண்ணங்கள் போன்ற விழுமியங்களிலும் மொழியின் ஆதிக்கம் உண்டு.மொழிதான் ஒருவனின் அந்நிய மயமாதலை நீக்குகிறது. மொழியிலிருந்து ஒருவன் அந்நியப்பட்டு விட்டால் அவன் சமூகத்திலிருந்தும் அந்நியப்பட்டு விடுவான்.

மொழி, கலைத்திட்டம், தொடர்பாடல் என்பவற்றுக்கும் இடையேயும் தொடர்புகள் உள்ளன. தொடர்பாடலை ஒழுங்கமைக்கும் ஒரு வடிவமே கலைத் திட்டமாகும். ஒரு கருத்தை யார் வழங்குவது, யாருக்கு வழங்குவது, எவ்வாறு வழங்குவது, எத்தகைய விளைவுகளுடன் வழங்குவது , எவ்வாறு பின்னூட்டல் பெறுவது என்ற தொடர்பாடல் அம்சங்கள் அனைத்தும் மொழியுடன் தொடர்புபட்டது என்பதை LASWEL என்ற தொடர்பாடல் அறிஞர் விளக்கியுள்ளார்.பின்னூட்டல் பெறுவதற்கும் மொழியே கருவியாக அமைந்துள்ளது.ஆசிரியர் கொடுக்கும் செய்தி மாணவனுக்கு சரியாகப் போய் சேராது விடல் மொழியில் ஏற்பட்ட பிரச்சனையினால் ஆனதாகும்.

மொழி ஒரு திட்டவட்டமான கட்டமைப்பைக் கொண்டிருக்கும் அதே வேளை நெகிழ்ச்சித்தன்மையையும் கொண்டிருக்கும் இவ்விரு பண்புகளையும் ஆசிரியர் கலைத்திட்டத்தில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உ+ம்: தமிழ்மொழியில் இலக்கண விதிகள் திட்டவட்டமானவை. ஆனால் தமிழ் மொழியில் பிற மொழிகள் சேர்க்கப்படுதல் நெகிழ்ச்சித்தன்மையான அம்சம் ஆகும்.

மொழியை கலைத்திட்டத்தில் பயன்படுத்தும் போது கீழ்க்குறிப்பிடப்படும் துறைகளில் ஆழமான கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

1. மொழியின் பிரயோகத்தன்மையை கலைத்திட்டத்தினூடாக மாணவர்கள் அறிந்து கொள்ளல் மாணவர்கள் கற்கும் அனைத்துப்பாடத்தினூடாகவும் பிரயோகத்தன்மையை வளம்படுத்தல் வேண்டும்.

2. மொழியின் அடிப்படைத் திறன்களை அனைத்துப்பாடங்களினூடாகவும் விருத்தி செய்ய வேண்டும். பேசுதல், வாசித்தல், கேட்டல், எழுதுதல் போன்ற திறன்கள் எல்லாப் பாடங்களினூடாகவும் வளர்க்கப்படல் வேண்டும்.

3. கலைத்திட்டத்தினூடான ஆற்றுகைத்திறன்களை வளர்த்துக் கொள்ளவேண்டும். மொழி ஒரு ஆற்றுகைக்கருவி என்ற வகையில் கலைத்திட்டத்தை வகுக்கும் எல்லா ஆசிரியர்களும் ஆற்றுகைத்திறன்களை வளர்க்க வேண்டும்

4. மொழிச்சிக்கனத்தையும் கலைத்திட்டத்தின் வாயிலாக பயன்படுத்தவேண்டும். பொருத்தமற்ற, வேண்டாத பிரயோகங்களைத் தவிர்த்தல், பொருத்தமற்ற உவமைகளைத் தவிர்த்தல், ஒரு சொல்லை வலிந்து பிரயோகித்தலைத் தவிர்த்தல், ஒட்டுமொழிகளைத் தவிர்த்தல் என்பன மொழிச்சிக்கனத்தில் அடங்கும்.

5. மொழி ஆளுகையையும் ஒவ்வொரு பாடத்தினூடாகவும் ஆசிரியர் முன்னெடுக்க வேண்டும்.
   உ+ம்: ஒவ்வொரு பாடத்துக்கும் சிறப்பான கலைச்சொற்கள் சிறப்பான பிரயோகங்கள் என்பவற்றை ஆசிரியர்கள் மிகையாக பயன்படுத்த வேண்டும்.

6. ஒரு விடயத்தை எந்தக் குழுவினருக்கு பயன்படுத்துகின்றோம் என்பதற்கேற்ப அந்தக் குழுவினருக்கு ஏற்றபடி மொழிக்கையாள்கையை மேற்கொள்ள வேண்டும். கனங்காத்திரமான விடயங்களை கடினமான சிக்கலான மொழி நடையாலேயே கூற வேண்டும். அதனை எளிமைப்படுத்தினால் அதன் கருத்து மாறிவிடும். அணுக்கொள்கையை எளிமையாகச் சொல்வது அணு வெடிப் பதிலும் பார்க்க ஆபத்தானது என்று ஒரு விஞ்ஞானி கூறியுள்ளார்.

7. மொழியினூடாக விசாரணைத் திறன்களை சகல பாடங்களிலும் வளர்க்க வேண்டும். விசாரணையினூர்டாகவே அறிவைத்திரட்டிக்கொள்ளலாம். வளம் படுத்தலாம். பொருத்தமான வினாக்களை எழுப்பும் திறன்களை மாணவர் களிடத்தில் வளர்ப்பது முக்கியமானது சோக்கிரடீஸ் காலத்திலேயேும் விசாரனைத் திறன்கள் கல்வியில் வலியுறுத்தப்பட்டது.

8. ஆசிரியர்கள் தர்க்கபூர்வமான மொழியைப்பயன்படுத்த வேண்டும். அதாவது மொழியை காரணகாரியத்துடன் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

9. உணர்வு பூர்வமான சிந்தனைக்கும் மொழிக்கும் இடையே தொடர்புகள் உள்ளன. இதனையும் கலைத்திட்டத்தில் வலுப்படுத்த வேண்டும். அகவயமான சிந்தனைகளுக்கும் மொழியைப் பயன்படுத்த வேண்டும்

10. மொழியினூடாக அழகியல் பண்புகளை உணரச்செய்தல், அழகியல் பண்புகளை உணர்த்துதல் என்பன கலைத்திட்டச் செயற்பாடுகளில் ஒன்றிணைக்கப்படுதல் நவீன காலத்தில் வற்புறுத்தப்படுகிறது.

11. விடயங்களைத் தொகுத்துக் கூறுதல், பகுத்துக் கூறுதல் ஒழுங்கமைத்துக் கூறுதல், ஒன்றை விரித்துரைத்தல் போன்ற திறன்களும் கலைத்திட்டத்தினூடாக வளர்க்கப்படும் போதுதான் மொழியை வளம்படுத்தலாம்.

கல்வி ஆளுமையானது ஒருவனது மொழி ஆளுமையுடன் நேரான தொடர்பைக் கொண்டுள்ளது.மொழி ஆற்றல் உள்ளவனே நவீன கல்வி உலகில் தனது ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்தும் திறனைப்பெறுவான்.மொழி வளம் குன்றிய ஒருவன் அனைத்து ஆற்றல்களிலும் அவன் குன்றியவனாகவே கருதப்படுவான் இன்று உலகிலுள்ள எல்லாக்கலைத்திட்டங்களிலும் மொழியை முதன்மைப்படுத்தல் மொழிக்கு அங்கீகாரம் வழங்குதல் என்ற அம்சங்கள் வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

எமது நாட்டிலும் மொழிக்கும் கலைத்திட்டத்துக்கும் உள்ள தொடர்பு எவ்வளவு தூரம் உள்ளது என்பதை ஆய்வுகள் தான் வெளிப்படுத்த வேண்டும். இருப்பினும் புதிய கல்வி மறுசீரமைப்பில் முதலாம் மொழி சர்வதேசமொழி நவீனதொல்சீர் மொழிகளில் ஒன்று ,இரண்டாம் மொழி ஆகிய மொழிகளைக் கற்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் தெரிந்த ஆசிரியருக்கு ஒரு சிறு ஊக்குவிப்பு கொடுப்பனவையும் அரசு வழங்கி வருகிறது. இந்த ஏற்பாடுகள் எல்லாம் கலைத்திட்டத்தில் மொழிக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

**திரு. இ. சண்முகேஸ்வரன்**
**B.Sc., Dip.in.Ed, M.Ed**
பிரதி அதிபர்,
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை

## இன்று ஒரு தகவல்

# இறுதி முடிவு எடுத்தல்

பல்வேறு விடயங்களில் பலர் இறுதி முடிவு எடுக்கும் போது அது பிரச்சினையாக அமைந்து விடுகின்றது. எனவே இறுதி முடிவை எடுக்கும் போது உறுதியாக சிறந்ததாக எடுத்தல் வேண்டும். அம்முடிவு தவறாக அமையின் அது எவருக்கும் நன்மையாக அமையாது. இதற்கு உதாரணமாக ஒரு கதையை எடுப்போம்.

ஓர் ஊரில் ஓர் ஆலயம் மிகவும் பாழடைந்த நிலையில் காணப்பட்டது. அக்கோயில் சிறிது காலத்தில் மெல்ல மெல்ல இடிந்து விழும் நிலையில் காணப்பட்டது. இதனால் அவ்வழியாகச்செல்லும் பாதசாரிகளுக்கும் ஆபத்தாக அமையும். எனவே இப்பிரச்சினை தொடர்பாக அக்கோயிலின் நிர்வாக சபைக்கூட்டம் ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டு கூட்டம் நடைபெற்றது.

அதில் முடிவுகள் எடுக்கப்பட்டன. அவையாவன அக்கோயிலை சற்று அப்பால் புதிதாக நியமித்தல், இதற்கு பழைய கோயிலில் உள்ள தளபாடங்களை எடுத்து புதுக்கோயில் கட்டுவதற்கு பயன்படுத்தல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. எனினும் இறுதியில் ஓர் தீர்மானம் எடுக்கப்பட்டது. முன்னைய கோயிலை இடிக்கக்கூடாது எனவும் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. எனவே புதுக்கோயில் கட்டப்படமாட்டாது என்பது இந்த இறுதி முடிவில் இருந்து தெளிவாகின்றது.

இதே போன்றே எமது உயர்தர மாணவர்களும் தமது ஆரம்ப காலங்களில் அவதானமாகக் கற்காமல் தனியார் கல்வி நிலையங்கள், தனிப்பட்ட வகுப்புக்கள் என அலைந்து திரிவதோடு சினிமா, தனியார் தொலைக்காட்சி நாடகங்கள் போன்றவற்றைப் பார்ப்பதனாலும், உடனுக்குடன் கற்காமல் பரீட்சைக்கு சில காலங்களுக்கு முன்னர் பாடசாலைக்கு வராமல் கற்கலாம் என ஒரு இறுதி முடிவை எடுத்து இருப்பார்கள். அவ்வாறு இறுதிக்காலத்தில் கற்க அவர்கள் ஆரம்பிக்கும் போது அதிக சுமை காரணமாகவும் பாடங்கள் தொடர்பான விளக்கம் குறைவாக இருப்பதனாலும் பரீட்சையை இவ்வருடம் எடுக்காமல் அடுத்தமுறை எடுப்போம் என்ற இறுதி முடிவை எடுத்து விடுவார்கள். இதனால் இவர்களின் வாழ்க்கை தொடர்ந்து பாதிப்படையும்.

இதே போன்றே எமது நாட்டிலுள்ள இனப்பிரச்சினை தொடர்பில் அரசியல் வாதிகள் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம் எனக்கூறி அதற்கு சிலரை அனுசரனையாளர்களாக அழைத்து பேச்சுவார்த்தைக்கான இடங்கள் எல்லாம் தெரிவு செய்த பின்னர் இறுதியில் ஒரு முடிவு எடுப்பார்கள். அதாவது நாங்கள் நேருக்கு நேரே சந்தித்துப் பேசமாட்டோம். என்று ஒரு முடிவை எடுத்து விடுவார்கள். இதனால் தொடர்ந்து நாட்டில் இனப்பிரச்சனை காணப்படும்.

எனவே எல்லோரும் நல்ல இறுதி முடிவுகளை எடுப்பதன் மூலம் தாமும் நாடும் வளமாக இருப்பதற்கு உதவலாம்.

**திரு. அ. தயாபரன்**
ஆசிரியர்,
யா/யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை

# AIDS
## *(Acquired Immuno Deficency Syndrome)*

இது ஒரு உயிர்கொல்லி நோயாகும். இதற்கு இது வரையில் சரியான முறையில் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் இயற்கை மூலிகையில் இதற்கு மருந்து கண்டுபிடிக்கப்படலாம் எனக் குறிப்பிடப்படுகின்றது (பாக்கு). எனினும் அது வரையில் தற்காப்பு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

இந்நோய் 1981ம் ஆண்டளவில் இங்கிலாந்தின் Los Angeles நகரில் கண்டுபிடிக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. இந்நோய்க்குரிய காரணி HIV ஆகும். இந்நோய் ஆரம்பத்தில் மத்திய ஆபிரிக்காவில் Chimpanse எனும் மனிதக்குரங்கில் இருந்தே பரவியதாகவும் நம்பப்படுகின்றது.எனினும் இந்நோய்க்காரணியை Americaவே திட்டமிட்டு பரப்பியதாகவும் நம்பப்படுகின்றது.

நோய்க்காரணி

இந்நோய்க்கான காரணி Virus ஆகும். Virus கள் மிகவும் நுண்ணிய அங்கிளாகும் . இலத்திரன் நுணுக்குக் காட்டியின் ஊடாக மட்டும் அவதானிக்கலாம். மனிதர்களுக்கோ, தாவரங்களுக்கோ, கோழிகளுக்கோ Virus நோய்கள் ஏற்படலாம்.

மனிதர் :- சின்னமுத்து , பொக்குளிப்பான், அம்மை, AIDS , SARS

தாவரம்:- கொத்துநுணி (குறுக்கன்), சித்திர வடிவ நோய்


கோழி :- அம்மை நோய்

சின்னமுத்து, பொக்குளிப்பான், அம்மை போன்ற நோய்கள் ஏற்படும் போது அதற்கு பொதுவாக மருந்து கொடுப்பதில்லை. தானாகவே குறித்த காலத்தில் மாறிவிடும். எனினும் இந்நோய் ஒரு முறை வந்தால் மீண்டும் இந்நோய் வருவது மனிதர்களில் அரிதாகும். ஏனெனில் இவர்கள் இயற்கையாக உயிர்ப்பாக பெற்ற நிர்ப்பீடனம் எனும் வகைக்குரிய ஒரு எதிர்ப்பு செயன்முறையை பெறுவதாகும் எனினும் Aids நிர்ப்பீடனத் தொகுதியையே பாதிப்பதனால் அந்நோய்த் தொற்று ஏற்படும் போது வேறு நோய்களின் தொற்று காரணமாக இறப்பு ஏற்படுகின்றது. 1996 ஆம் ஆண்டில் ஏறத்தாள 1.5 millon வரையான மக்கள் இறந்துள்ளனர். 2000 ஆண்டளவில் 33 million மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 16 million மக்கள் இறந்துள்ளனர்.Africa நாடுகளிலே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஏறத்தாள 20%)

நோய்க்காரணி

**HIV – Human immuno Deficency Syndrome Virus**

(மனித நிர்ப்பீடனத்தை பாதிப்பதனால் ஏற்படும் அறிகுறி)




**தொற்றல்**

இதன் போது எமது உடலில் எதிர்ப்புச்சக்தியை உருவாக்கும். வெண்குருதிச்சிறுதுணிக்கைகள் பாதிக்கப்படும். இதில் உள்ள T வகை கலங்களை பாதிக்கும். இவையே உடலில் நிர்ப்பீடனத் தொகுதியை ஏற்படுத்துவதற்குரிய முக்கிய கல வகையாகும். HIV ஒரு RNA ஐக் கொண்ட Virus ஆகும். இது விருந்து வழங்கியின் பிறப்புரிமைப் பதார்த்தமான DNA யுடன் சேர வல்லது. எனவே DNA இரட்டிக்கும் பொழுது இதுவும் இரட்டிக்கவல்லது. இந்நிலையில் நோயறிகுறிகளை வெளிக்காட்டாது. இது நீண்ட காலத்திற்க்கும் அறிகுறியை வெளிக்காட்டாமல் இருக்கலாம். இந்நிலையில் இவ் வைரசானது விருந்து வழங்கியின் கலங்களை உபயோகித்து தன்னை நன்கு பெருக்கி கொள்ளும் இவற்றினால் வேறு சில நோய்களையும் விளைவிக்கலாம் அவையாவன நியூமோணியா, தோல் புற்றுநோய், கசம் என்பனவாகும். இந்நோய்களின் தாக்கம் காரணமாக இறப்பு ஏற்படலாம். இறப்பை தவிர்க்க முடியாது எனினும் சிறிது காலம் பிற்போட முடியும்.

காரணம்

1. பாதுகாப்பற்ற உடலுறவு
2. குருதி மாற்றீடு
3. தொற்று நீக்கப்படாத ஊசிகளைம் பயன்படுத்தல்
4. ஒரினக்கலப்பு
5. தொற்று ஏற்பட்ட தாயிலிருந்து பிள்ளைக்கு

எனவே இது தொடர்பான அறிவை மக்களுக்கு வழங்குதல் வேண்டும். இதற்காக December 1ம் திகதி Aids தடுப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் இதன் தாக்கம் அதிகளவில் உண்டு. ஏனெனில் சிறுமிகளை விலைக்கு வாங்கி பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகிறார்கள். எனினும் அச்சிறுமிகளுக்கு Aids நோய் ஏற்பட்டவுடன் அவர்களை சொந்த வீடுகளுக்கு அனுப்பிவிடுவதனால் பெரும் பாதிப்பு ஏற்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

பரிசோதனை

இந்நோயை ஒரே பரிசோதனையில் கணித்து விட முடியாது மூன்று பரிசோதனைகளாது செய்தல் வேண்டும்.

1. Elisa Test
2. Westerrn blot Test
3. Latex agglutination test

**மருந்துகள்**

இதற்கு நுண்ணுயிர்கொல்லிகளை (antibiotic) பயன்படுத்த முடியாது. எனினும் இவற்றின் தாக்கத்தை குறைப்பதற்கு சில மருந்துகளை பயன்படுத்தலாம்.

1. AZT
2. Zalcitabine
3. Glycyrrhizin
4. Ribaririn

இந்நோய் ஆரம்பக்கட்டங்களில் யாழ்ப்பாணத்தில் பெரும்பாலும் இருக்கவில்லை. எனினும் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றதிலிருந்து எமது பிரசேத்திலும் இந்நோய் பரவ ஆரம்பித்துள்ளது. எனவே நாம் மிகவும் அவதானமாக இருப்பதுடன், கலாசாரங்களை பேணுவதனாலும் எமது பிரதேசத்திலிருந்து இந்நோயை அகற்றலாம்.

**திரு. அ. தயாபரன்**
ஆசிரியர்,
யா/யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை

# நூலகமும், கற்றலுக்குமான வள நிலையங்களின் வளர்ச்சியில் தகவல் விஞ்ஞான ஆசிரியரின் பங்கு

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பாடசாலை நூலகங்கள் சிறந்த ஒரு கருவியாக செயற்படுகின்றன. இவை பலவகைப்பட்ட கற்றல், கற்பித்தல் சாதனங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு சேவை நிலையமாக தொழிற்படுகின்றன. இன்றைய காலகட்டத்தில் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இலங்கையில் **“பாடசாலை நூலக அபிவிருத்தித் திட்டம் (School Library development project)”** நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் பாடசாலை நூலகங்கள் கற்றல், கற்பித்தலுதக்குத் தேவையான தகவல் சாதனங்கள், கட்புல செவிப்புல சாதனங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளன. இதன்காரணமாக அவை நூல்களை சேகரித்து வைத்திருக்கும் களஞ்சியங்களாக முன்னர் காணப்பட்ட **“நூலகம் (Library)”** என்ற கருத்து நிலையில் நின்று மாறி **“நூலகமும், கற்றலுக்குமான வள நிலையங்கள் (Library and Learning Resource Centers)”** என அழைக்கப்படுகின்றன. இவ் நூலகமும், கற்றலுக்குமான வள நிலையங்களை நிர்வகிக்கும் முகாமையாளர் களாகவே **“தகவல் விஞ்ஞான ஆசிரியர்கள் ( Information Science Teachers)”** ஒவ்வொரு பாடசாலையிலும் நியமிக்கப்பட்டுவருகின்றனர். இவ் தகவல் விஞ்ஞான ஆசிரியர் என்பவர் “அங்கீகரிக்கப்பட்ட கற்பித்தல் தகுதியும், நூலகவியலில் தகுதியும் கொண்ட ஒருவரே தகுதிவாய்ந்த தகவல் விஞ்ஞான ஆசிரியர்” என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

**நூலகமும், கற்றலுக்குமான வள நிலையங்களின் நோக்கங்கள்**

- பாடவிதானத்துடன் தொடர்புடைய நூல்களை சேகரித்து வழங்குதல்.
- பாடசாலையிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அவர்களது தரத்திற்கேற்ற நூல்களை வழங்குதல்.
- மாணவர்களிடையே பொது அறிவு மேம்பாட்டிற்கான நல்ல வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த முனைதல்
- பாடத்தேவைக்கேற்ப தினமும் ஒரு குறிப்பிட்ட நேரமாவது நூலகத்தை பயன்படுவதற்கு மாணவரிற்கு வழிகாட்டல்.
- ஆசிரியர்களுக்கு கற்பித்தலுக்கு தேவையான நூல்களை வழங்குதல். அத்துடன் தொழில் அபிவிருத்திக்கு உதவக் கூடிய நூல்களை வழங்குதல்.

**நூலகமும், கற்றலுக்குமான வள நிலையங்கள் கொண்டிருக்க வேண்டிய தகவல் வளங்கள்**

கீழ் குறிப்பிடப்படும் தகவல் சாதனங்களை தன்னகத்தே கொண்டிருக்கும் நிலையில் இவை சிறப்பான வள நிலையங்களாக செயற்பட முடியும்.

1. அச்சிடப்பட்ட சாதனங்கள் (Printed materals) - நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஆண்டறிக்கைகள் போன்றன.
2. வரைபடங்கள் (Cartographic Materials) - தேசப்பட தொகுதி (Atlas), தேசப்படம் (Map) மற்றும் பூகோளம் (Globe) என்பன.
3. கட்புல செவிப்புல சாதனங்கள். (Audio-Visual Collection)
4. இலத்திரனியல் வளங்கள் (Electronic Resources) - CDs.
5. இணைய வசதிகள் (Internet facilities)
6. அருங்காட்சிப் பொருட்கள் (Artifacts)
7. பாடசாலை வரலாறு சம்மந்தமான விடயங்கள்
8. பத்திரிகைத் துணுக்குகள் (Paper clipes) போன்ற பலவகைப்பட்ட சேர்க்கைகளை கொண்டிருக்க வேண்டும்.

**கற்றல் வள நிலையங்களின் வளர்ச்சியில் தகவல் விஞ்ஞான ஆசிரியரின் பங்கு**

தகவல் விஞ்ஞான ஆசிரியர் பாடசாலை நூலகத்தின் முக்கியத்துவத்தை வெளிக்கொணரும் வகையில் செயற்பட வேண்டும். அதேவேளை ஆசிரியர், மாணவர்களின் தேவைகளை இனங்கண்டு பூர்த்தி செய்யக் கூடியவராக இருக்கவேண்டும். சிறந்த, தரமான நூலக வளங்களை ஆசிரியர், மாணவர்களினது பயன்பாட்டிற்காக சேகரித்து வழங்கவேண்டும். பொதுவாக நூல்களுக்கும் வாசகர்களுக்குமிடையில் ஒரு பாலமாக செயற்படவேண்டும். அந்த வகையில் தகவல் விஞ்ஞான ஆசிரியரால் மேற்கொள்ளக் கூடியவை

- மாணவர்கள் எந்நேரமும் நூலகத்தை நாடி வரக்கூடிய சூழலை உருவாக்குதல்.
- மாணவர் தேடிவரும் தகவல் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய வளங்களை கொண்டிருத்தல்.
- கிடைக்கக்கூடிய தகவல் வளங்களை மாணவர்கள் இலகுவாக பெற்றுக்கொள்வதற்கு உதவுதல்.
- பாடசாலை நூலக, கற்றல் வள நிலையத்தின் வசதி வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்துமாறு மாணவர்களுக்கு ஊக்கமளித்தல்.
- சுய தேடல், சுய கற்றல் திறன் உள்ள மாணவர்களின் மேலதிக தேடல்களை ஊக்குவித்தலும் உதவி வழங்குதலும்.
- வளங்களை பாதுகாத்தலையும், பராமரித்தலையும் உறுதிப்படுத்தல்.

இவ்வகையில் பாடசாலை நூலகமும், கற்றலுக்கான வள நிலையமும் திறம்பட செயற்படுமிடத்து பாடசாலை மாணவர் மத்தியில் பல முன்னேற்றங்களை அவதானிக்கமுடியும்.

1. மாணவர்களின் வாசிப்புத்திறனை விருத்தியடைய செய்யலாம்.
2. மாணவர்களின் பெறுபேறுகளை உயர்த்தமுடியும்.
3. நல்லொழுக்கமும், பண்பும், ஆற்றலுமுள்ள நற்பிரஜைகளை சமூகத்தில் உருவாக்க முடியும்.

4. சுய கற்றல் திறன் படைத்த மாணவ சமுதாயத்தை உருவாக்க முடியும்.
5. மாணவர்களிடையே பொது அறிவையும், ஆக்கத்திறன் விருத்தியையும் ஏற்படுத்த முடியும்.

இத்தகைய விழுமியங்களை மாணவர் மத்தியில் வளர்த்தெடுக்கக் கூடியதாக நூலகமும், கற்றலுக்குமான வள நிலையங்களும், தகவல் விஞ்ஞான ஆசிரியரும் அமைதல் அவசியம். இவ் நூலகமும், கற்றலுக்குமான வள நிலையங்களின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் மாணவர் மத்தியில் உணர்த்தும் பொறுப்பு தகவல் விஞ்ஞான ஆசிரியரிலேயே தங்கியுள்ளது என கூறலாம்.


**Reference**

1. Evans, Evalyn.J, 1966, "Schools Libraries in Ceylon" Unesco Bulletine for Libraries, Vol.XX, no.2, p.71 - 77.
2. Kamaldeen, MS, 2003, "Schools Library: An Introduction", Colombo, p 1 - 4.
3. Lance, keith curry, 2000, " The importance of School Libraries", Colarado
4. University of Madras, 2005, Library and Society, "Academic Libraries", Madras, p245 - 249


**"School Libraries are both the foundation as well as the comer stone for all other types of libraries that are found in society"**
**- Galler, 1989-**


**செல்வி. பி. பத்மநாதன்**
ஆசிரிய நூலகர்,
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

## 2007ம் ஆண்டு இலங்கை உதைப்பந்தாட்ட சங்கம் நடாத்திய 15 வயது பிரிவில் 1ம் இடம் - யாழ் மாவட்டம்



**நிற்பவர்கள்:**
கா. மதனகோபி, இ. பிரசாந், த. அனுசியன், யோ. அனோஸ், க. கௌதமன், ஸ்ரீ. சுயேந்திரன், கி. யோக்கிரேசியன், பி. துவாரகன், பா. பாணுயன், க. சிலோயன், இ. ஆசிகன், உ. சாய்ராம், ந. ஜெரின்.


**இருப்பவர்கள்:**
திரு. ப. வாமதேவன், திரு. சோ. இராமநாதன், திரு. வே. சந்திரசேகர், திரு. சு. புண்ணியசீலன், திரு. R. சண்முகேஸ்வரன், க. ராகுலன், திரு. தி. இராஜராஜன்.

## 2006ம் ஆண்டுக்கானஉதைபந்து குழு 2ம் இடம் யாழ் மாவட்டம்



**நிற்பவர்கள்:**
உ. சாய்ராம், நெ. தர்மீகன், இ. பகில்ராஜ், க. ராகுலன், க. ஸ்ரீரஜிதன், சி. பவீந்திரன், தெ. டினேஸ், சி. விஜிதாகரன், க. லவன்ராஜ், இ. நீல்ஸ், ந. துஸ்யந்தன், மு. நிலோஜன்.

**இருப்பவர்கள்:**
திரு. தி. இராஜராஜன், திரு. சோ. இராமநாதன், திரு. வே. சந்திரசேகர், திரு. R. சண்முகேஸ்வரன், திரு. சு. புண்ணியசீலன், க. சுயாந்தன், திரு. R. விஜயேந்திரன்.



# கொலஸ்திரோல்
## Cholosterol

T.Vijendran (Teacher)

மனித வாழ்க்கையில் ஆரோக்கியம் மிக முக்கியமானது இதனாலையே நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என எமது முன்னோர் குறிப்பிட்டனர். இதனையே ஆங்கிலத்திலும் Healthy man is a wealthy man எனக் குறிப்பிடுகின்றனர். இக்கட்டுரையின் மிக முக்கிய நோக்கம் இன்று உலகலாவிய ரீதியில் மனிதனை ஆக்கிரமிக்கும் போசனை நோய்கள் இரண்டு

1. இதய நோய்கள்
2. சலரோகம்

இவற்றில் இதய நோய்களிலும் கொலஸ்திரோல் மிகுதியால் ஏற்படும் நோய்கள் பற்றியே இங்கு நோக்கப்படும் .

கொலஸ்திரோல் என்பது இலிப்பிட்டின் ஒரு வகை ஆகும்.

Lipids பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது

- Fats- பாலூட்டிகளின் உட்தோலின் கீழ்க் காணப்படும்
- Oils- எல்லா வகை எண்ணெய்கள்
- Waxes-மனித செவியின் மெழுகுச் சுரப்பி
- Terpens- கற்பூரம் , இயற்கை இரப்பர்

இலிப்பிட்டு உணவுகள் மனித உடலில் சமிபாட்டிற்கு உட்பட்டு கொழுப்பமிலமும்,கிளிசரோலும் உருவாக்கப்படும். இவை சிறுகுடலின் சடைமுளையில் உள்ள பாற்கலங்களினால் உறுஞ்சப்பட்டு நிணநீர் சுற்றோட்டத்தின் மூலம் வலது காறை என்பின் கீழ் நாளத்தில் விடுவிக்கப்பட்டு இதயத்தை சென்றவடைவதால் இதயத்தின் முடியுரு நாடிகளில் கொழுப்பு , கொலஸ்திரோல் படிவதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது.

கொலஸ்திரோல் பிரதானமாக விலங்குப் புரத உணவுடன் சேர்ந்து காணப்படுகின்றது, தாவரப் புரத உணவுகளிலே கொலஸ்திரோல் காணப் படுவதில்லை. உணவுகளில் இருந்து பெறப்படும் கொலஸ்திரோல் <u>புறக் கொலஸ்திரோல்</u> எனவும் , மனித உடலில் ஈரலில் ஆக்கப்படும் கொலஸ்திரோல் <u>அகக் கொலஸ்திரோல்</u> எனவும் அழைக்கப்படும்.

| மாமிச வகை (100 கிராம்) | கொலஸ்திரோல் (மில்லி கிராமில்) |
|---|---|
| ➢ பன்றி இறைச்சி | 69 |
| ➢ மாட்டு இறைச்சி | 59 |
| ➢ எருமை இறைச்சி | 64 |
| ➢ கோழி இறைச்சி | 40 |
| ➢ முயல் இறைச்சி | 65 |
| ➢ நண்டு | 95 |
| ➢ இறால் | 151 |

Source – Nutrition & Health Department

மாட்டு இறைச்சியின் பகுதிகளில் உள்ள சொலஸ்திரோல் பற்றிய தகவல்கள்

| 100 கிராம் | கொலஸ்திரோல் மில்லி கிராமில் |
|---|---|
| 1. இறைச்சி | 59 |
| 2. மாட்டின் நாக்கு | 86 |
| 3. மாட்டின் ஈரல் | 50 |
| 4. மாட்டின் இதயம் | 130 |
| 5. குடல் | 95 |
| 6. சிறு நீரகம் | 318 |
| 7. மூளை | 1 672 |

Source- N.H.D

இத்தகவல்களுடன் கொலஸ்திரோல் காணப்படும் ஏனைய உணவுப் பொருட்கள்

➢ எண்ணெய் வகைகள்
➢ முட்டை மஞ்சட்கரு.
➢ தேங்காய்ப்பால்
➢ பால்
➢ பட்டர், மாஜரின்

இவ்வகை உணவுகளுடன் அதிகம் காபோகைதரேற்று உணவுகளையும் உட்கொள்ளுவதால் உடற் பருமன் கூடுவதுடன் பின்வரும் இதய நோய்களையும் சந்நதிக்க வேண்டி இருக்கும்.

➢ மாரடைப்பு – Myocardial infraction
➢ அங்ஜைனா பெக்ரோசிஸ் – Angina Pectosis
➢ உயர் குருதி அமுக்கம் – High Blood Pressure

**மாரடைப்பு**

இதயத்திற்கு குருதியை வழங்கும் முடியுரு நாடி (Coronary Artery) ஏனைய நாடிகளை விட விட்டம் குறைவு இதனால் கொலஸ்திரோல் படியும் வாய்ப்பு ஏற்படலாம்.

முடியுரு நாடிகளில் கொலஸ்திரோல் படிந்து குருதி செல்லுதல் தடைப்படுவதால் இதயத்தின் ஒரு பகுதித் தசைகள் இறந்து விடும் இதனால் இறப்பு நேரிடலாம்.

நெஞ்சு வலியே இந்த நோய்க்குரிய அறிகுறியாகும். இந்நோயினை Angiogram Test மூலம் கொலஸ்திரோல் படிவுகளைக் கண்டறிந்து குருதி செல்வதற்கான மாற்றுப்பாதைகளை Bypass அறுவைச் சிகிச்சை மூலம் ஏற்படுத்தி குணமடையச் செய்யலாம்.

**அஞ்ஜைனா பெக்ரோசிஸ்**

இதயத்திற்கு போதியளவு ஒட்சிசன் கிடைக்காமையினால் நெஞ்சுவலி, சுவாசிக்க சிரமம்,மயக்கம் என்பன ஏற்படலாம் இந்நிலமை உடற்பருமன் அதிகமாக வுள்ளவர்களுக்கு கடின வேலை செய்யும் போதும், நிறைய உணவு உட்கொண்ட சமயமும் ஏற்படலாம் எனவே உடற்பருமனைக் குறைத்து ஓய்வுவெடுக்க நிலமை சீராகும்.

**உயர் குருதி அமுக்கம்**

சுகதேகி ஒருவரின் குருதி அமுக்கம் 120/80 mm Hg ஆகும். எனினும் இப்பெறுமானத்தை விட அதிகரிப்பின் உயர்குருதி அமுக்கம் எனப்படும்.

உம்: 160/90, 160/100 mm Hg இதில்

120 mm Hg – சுருங்கல் அமுக்கம் ஆகும்
80 mm Hg - தளர்வு அமுக்கம் ஆகும்

தளர்வு அமுக்கம் உயர்வாக காணப்படுவது ஆபத்தானது என வைத்திய அறிக்கைகள் கூறுகின்றன. உயர் குருதி அமுக்கம் ஏற்படுவதற்கான காரணங்கள்

1. நாடிகள் விட்டத்தில் குறைதல்
2. கொலஸ்திரோல் படிதல்
3. சிறுநீரகம் பாதிப்படைதல்

ஒருவர் கொலஸ்திரோல் அதிகரிப்பால் பாதிப்படைந்துள்ளார் என்பதை அறிய முதலில் Lipid Profile Test மேற்கொள்ள வேண்டும்

| Test | Results | suggested Normal range | | |
|---|---|---|---|---|
| Total Cholosterol | mg/dl | Normal < 200 mg/dl<br>Borderline high 200-239 mg/dl<br>High >240mg /dl | | |
| Serum Triglycride | mg/dl | Normal<150 mg/dl<br>Border line High 150-200 mg/dl<br>High >300mg/dl<br>Vary High > 500mg /dl | | |
| | | Good | Stderd risk | Increased risk |
| HDL Cholostrol | mg/dl | male >55<br>Female >65 | 35-55<br>45-65 | <35<br><45 |
| LDL Cholostrol | mg/dl | male <50<br>Fermale<60 | 50-170<br>60-170 | >170<br>>170 |
| Tc/HDL | | ↓ | 3-5 | ↑ |
| LDL /HDl | | ↓ | 2.5-4 | ↑ |

Fasting Blood Sugar mg/dl - 60-110 mg/dl

இதன்படி ஒருவரின் மொத்த கொலஸ்திரோல் 5 % அதிகரிப்பின் ஆபத்தானது வைத்திய ஆலோசனைப்படி மருந்து பெற வேண்டி ஏற்படும்.

சாதரணமாக ஒரு நபருக்கு கொலஸ்திரோல் அதிகரிப்பதை எவ்வாறு இனம் அறியலாம்.

- ➢ கை, கால் விறைப்பு ஏற்படும்
- ➢ இலேசான மயக்கம் ஏற்படும்
- ➢ கழுத்து உளைவு ஏற்படும்
- ➢ மூச்சு விடலில் சிரமம் ஏற்படும்

இவ்வாறான சமிஞ்சைகளுடன் அவரின் உடற் பருமனும் அதிகரித்து இருப்பின் வைத்திய உதவியை நாடுதல் அவசியமான ஒன்றாகும்.

**கொழுப்பு அதிகரிப்பால் ஏற்படும் நோய் நிலமைகளை ஏற்படாது தடுக்க எடுக்க வேண்டிய அன்றாட நடவடிக்கைகள்**

- ➢ தினமும் தெவையான அளவு உடற்பயிற்சி செய்தல்,தொடர்ச்சியாக 1 மணி நேரம் பயிற்சியை மேற்கொள்ளும் போதே கொழுப் உடைந்து சக்தியை வழங்கும். எனவே கொழுப்பு அதிகம் உள்ளவர் 1 மணி நேரம் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

- பழங்களை,மரக்கறிகளை அதிகமாக உட்கொள்ளுதல் மரக்கறிகளை அதிகமாக உட்கொள்ளும் போது HDL வீதம் கூடி கொலஸ்திரோல் வீதத்தைக் குறைக்கும் என வைத்தியர் கூறுகின்றார்.
- எண்ணெய் வகை ,இறால்,நண்டு,கொழுப்புக் கூடிய இறைச்சிகள்,பொரித்த உணவுகள்,உட்கொள்ளுவதை நன்கு குறைத்தல்
- மீனை அதிகமாக உட்கொள்ளுதல் மீனின் உடலில் Omega Faty acid இருப்பதால் அது இதயத்தைப் பாதுகாக்கின்றது. எனப் பல ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- பால்த் தேநீர் உட்கொள்ளுவதை நிறுத்துதல் பதிலாக பால் அற்ற தேநீரை அருந்துதல்
- வெங்காயம் ,வெள்ளைளப்பூடு ஆகியவற்றை உணவுடன் அதிகமாகச் சேர்த்தல்
- சொற்ப அளவு மதுசாரமும் கொலஸ்திரோலைக் குறைக்கும்

எனவே மேற்கூறப்பட்ட விடயங்களைக் கடைப்பிடித்து, நோயற்ற ஒரு சூழலை நாம் உருவாக்க முடியும்.

"மருந்தே உணவு, உணவே மருந்து" என்ற பொன்மொழிக்கு இணங்க அளவான உணவை உட்கொண்டு ஆரோக்கியமான ஒரு சமூகத்தை கட்டி எழுப்ப இக்கட்டுரையும் பயன்படும் என நினைத்து நிறைவு செய்கின்றேன்.

***Sources From***

- ***Human Biology***
- ***Nutrition & Health***
- ***Grade 10 Science Book***

***R.Vijendran (Teacher)***
(Na.Din.in(sci) Teach)

# மனித நடவடிக்கையில் குழுக்களின் செல்வாக்கு

மனிதன் ஒரு சமூகப்பிராணி ஆவான். பிற மனிதர்களுடன் கூடிவாழ்வது மனிதனது தனித்தன்மையாகும். ஒவ்வொரு தனிமனிதனும் பிறருடன் கொள்கின்ற இடைவினை உறவுகள் மூலம் தமது சமூக நடத்தைகளை உருவாக்கிக் கொள்கின்றனர். இதன் மூலம் தமது தனிமனித தேவைகளையும் சமூகத் தேவைகளையும் நிறைவு செய்து கொள்கின்றனர். மனிதனது வளர்ச்சியிலும் நடத்தையிலும் அவன் சார்ந்த குழுக்கள் செல்வாக்குப் பெற்றுக் காணப்படுகின்றன. இக்குழுக்கள் தற்காலிகமானவையாகவோ அல்லது நிலைத்தவையாகவோ காணப்படலாம். இக்குழுக்கள் பெரியனவாகவோ அல்லது சிறியனவாகவோ காணப்படலாம். எவ்வாறாயினும் குழுவின் செல்வாக்கிற்குட்பட்ட ஒரு தனிமனிதனில் ஏற்படும் நடத்தை மாற்றம் அவனது சிந்தனை, எழுச்சி, செயல் ஆகிய கூறுகள் யாவற்றிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

## நடத்தை மாற்றம்

ஒருவன் ஒரு குழுவின் உறுப்பினராகிச் செயற்படும் போது அவனது நடத்தையில் மாற்றம் ஏற்படுகிறது. தனித்துச் செயற்படும் போது குறிப்பிட்ட ஒருவகையில் நடந்துகொள்பவன், ஒரு குழுவின் செல்வாக்கிற்கு உட்படும் போது சிறிதோ அல்லது பெரிதோ அவனது நடத்தையில் மாற்றம் ஏற்படுகிறது. இம்மாறுபாடு குழுவின் தன்மையைப் பொறுத்து உயர்வானதாகவோ அல்லது கீழ்நிலைப்பட்டதாகவோ காணப்படும். குழுவின் செல்வாக்கால் ஒருவன் நடத்தை பாதிக்கப்பட வேண்டுமாயின் அக்குழு சிறிது காலமாவது தொடர்ச்சியாக நிலைத்திருக்க வேண்டும். தனியன் குழுவில் தானும் ஓர் உறுப்பினர் என்ற உணர்வைச் சிறிதளவாவது கொண்டிருக்க வேண்டும். குழுவில் பிற உறுப்பினர்களுடன் தனது எண்ணங்களைத் தடையின்றிப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு இருத்தல் வேண்டும். மாறாக சிறிது நேரம் கூடிப்பிரிவோர், குழுவுடன் ஒட்டுதலின்றிப் புறத்தே நின்று அதன் செயற்பாடுகளை நோக்குவோரிடமும் அக்குழு எந்தப் பாதிப்புக்களையும் தோற்றுவிக்காது.

## குழுக்களின் இயங்குமுறை

தனிப்பட்டோரிடம் உள்ள பண்புகள் குழுநிலைமைகளில் வெளிக்காட்டப்பட்டு, குழுவின் குறிப்பான நடத்தையைத் தோற்றுவிக்கின்றன. எவ்வாறாயினும் குழுஉறுப்பினர்களிடையே ஒரு பொதுவான நோக்கம் இருப்பது குழுவின் செயற்பாட்டிற்கு அடிப்படையாகும். இப்பொது நோக்கம் அவர்களிடையே ஒத்த மனப்பாங்கினை ஏற்படுத்தி அவர்களின் சிந்தனை, உணர்வு, செயல் ஆகியவற்றில் ஒத்திருக்கும் நிலைமையைத் தோற்றுவிக்கிறது. பலர் ஒரு குழுவாக இயங்க இந்நிலை இன்றியமையாததாகும்.

உறுப்பினர்களது தனிப்பட்ட நடத்தையினின்றும் குழுவின் நடத்தை முறை மாறுபட்டதாக இருக்கும். குழுவிற்கு சிறந்த தலைவர்கள் கிடைக்கும் போது குழுநடத்தை அதன் உறுப்பினர்களது நடத்தையினின்றும் மேம்பட்டுச் சிறந்து காணப்படும். தனியாகச் செய்ய இயலாத பலசெயல்களை இத்தகைய குழுஉறுப்பினராகிச் செய்து வெற்றிகாண்பது அனுபவம் மூலம் நாம் கண்டுகொள்ளக்கூடிய உண்மையாகும். மாறாக சிறந்த தலைவர்கள் இல்லாத குழுக்களின் நடத்தைத் தரம் மிகவும் கீழ்நிலைப்பட்டமுறையில் அமையும். இத்தகைய செல்வாக்கிற்கு உட்பட்டு, கீழ்த்தரமான முறையில் நடந்துவிட்டுப் பின்பு அதைவிட்டு வெளியே வந்து வெட்கித் தலைகுனிவதும் பல சந்தர்ப்பங்களில் நிகழ்வதுண்டு.

## குழுநடத்தை தோன்றும் முறைகள்

குழுவின் செல்வாக்கு தனிஉறுப்பினர்களது நடத்தையை மாற்றி, குழுவில் அப்போது மேலோங்கிக் காணப்படும் சிந்தனை, உணர்வு, செயல் ஆகியவற்றைத் தனியனை ஏற்கச்செய்து குழுவுடன் ஒன்றிப்போகும் நிலைமையை ஏற்படுத்துகின்றது. இது பின்வரும் மூன்று வகைகளில் ஏற்படலாம்.

1. பரிவு - Sympathy
2. கருத்தேற்றம் - Suggestion
3. பின்பற்றல் - Imitation

## பரிவு

குழுவில் மேலோங்கிக் காணப்படும் உணர்ச்சியோ, மனவெழுச்சியோ தனிப்பட்ட உறுப்பினர்களுக்கும் பரவி அதே உணர்ச்சியை அவர்களும் அனுபவிப்பது பரிவு ஆகும். ஒரு குழுவானது சினம் அல்லது வெறுப்புக் கொண்டு காணப்பட்டால் அது அதன் உறுப்பினர் யாவரையும் பாதித்து அவர்களும் அம்மன உணர்வினைப் பெறத்தூண்டும். இத்தகைய பரிவு குழுஉறுப்பினர்களிடையே ஒற்றுமையை உண்டாக்கவல்ல வலுமிக்க காரணியாகும்.

குறிப்பிட்ட ஒரு உணர்வினை திட்டமிட்டுப் பிறரிடம் தோற்றுவித்து அதில் வெற்றி பெறல் செயலுற்றபரிவு (Active Sympathy) எனப்படும். செயலுற்றபரிவு குறிப்பிட்ட உணர்வையோ, மனவெழுச்சியையோ ஒருவன் பெறக்காரணமாக அமைவதோடு, அவன் அதனால் உந்தப்பட்டு அதற்கேற்ப செயற்படவும் அவனைத் தூண்டுகின்றது. பரிவின் வலுவான செயற்பாட்டைச் சினமடைந்த குழுக்கள் அல்லது அச்சமடைந்த குழுக்களின் நடத்தைகளில் காணமுடியும். உதாரணமாக ஒரு நாட்டின் தலைவர் திட்டமிட்ட சில நடவடிக்கைகள் மூலம் தனது நாட்டுமக்களை அயல் நாட்டுத்தலைவரிடமோ அல்லது அயல்நாட்டு மக்களிடமோ வெறுப்புணர்ச்சி கொள்ளத்தூண்டலாம்.

மாறாக பிறரது நடத்தையிலோ, முகபாவத்திலோ அச்சம், சினம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளைக் காணும்போது பலர் தம்மையும் அறியாமலே தாமும்

அதை அனுபவிக்கத்தொடங்குவர். இவ்வாறான நிலைமை செயலற்றபரிவு (Passive Sympathy) எனப்படும். உதாரணமாகத் தாய் சிரிக்கும்போது அவளது சிறுகுழந்தையும் கைகொட்டிச் சிரித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது. தாயின் கண்களில் கண்ணீரைக் கண்டவுடன் தானும் அழத்தொடங்குகின்றது. செயலற்றபரிவு மகிழ்ச்சியற்ற உணர்ச்சியைச் சார்ந்தோ, மகிழ்ச்சியான உணர்ச்சியைச் சார்ந்தோ எழக்கூடும். ஆனால் இவை இரண்டும் ஒருவரிடம் ஒரே அளவாகக் காணப்படுவது இல்லை. உதாரணமாகச் சிலர் பிறரது மகிழ்ச்சியில் பங்கு கொள்வர். ஆனால துன்பம் வரும் போது விலகி நிற்பர்.வேறு சிலர் பிறரது துன்ப நிலையில் உடனடியாகப் பங்கு கொள்வர். பிறரது மகிழ்ச்சி இவர்களிடம் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது.

**கருத்தேற்றம்**

பிறரால் எடுக்கப்படுகின்ற முடிவுகளையும் அவர் கூறும் கருத்துக்களையும் மதிப்பீடு ஏதும் செய்யாமல் ஏற்றுக்கொள்வது கருத்தேற்றம் எனப்படும். அதாவது பிறர் கூறுவதை ஏற்கத்தகுந்த அறிவுசார் காரணங்களின்றி அவை முழு உண்மையென உறுதியுடன் ஏற்பது கருத்தேற்றமாகும் என மக்கேல் விளக்குகிறார். பிரச்சாரம் அல்லது கொள்கைகளைப் பரப்புதல், விளம்பரம் என்பன கருத்தேற்றத்தை அடிப்படையாகக் கொண்டவை. இவை மக்களை ஆராய்ந்து முடிவெடுக்க வாய்ப்பளிக்காமல் ஒரே கருத்தை திரும்பத் திரும்பக்கூறி அவர்களையறியாமலே ஏற்கத்தூண்டுகின்றன.

எத்துறையில் ஒருவருக்குப் போதிய விடய அறிவோ இல்லாமல் காணப்படுகினறதோ அத்துறையில் பிறர்கூறும் கருத்துக்களை அவர் ஆராயாமல் ஏற்றுக்கொள்ளுகின்றார். உயர் பதவியிலுள்ளவர்கள் அல்லது பிறரால் மதிக்கப்படுபவர்களிடம் இருந்து எழும் கருத்துக்கள் அவற்றின் உண்மை பற்றிய சிந்தனை எதுவுமின்றி பிறரால் ஏற்கப்படும். ஒரு கருத்து திரும்பத்திரும்ப மாறுதல் ஏதுமின்றிக் கூறப்பட்டால் அது பொய்யாக இருப்பினும் நாளடைவில் அது உண்மையென பிறரால் ஏற்கப்படும். ஒரு கருத்தை ஒருவரிடம் நேரடியாகக் கூறுவதைவிட எதேச்சையாகக் கூறுவது போலக் கூறுவதுடன் தான் அதற்கு முக்கியத்துவம் அளிக்காதது போல கூறினால் கேட்பவரிடம் அது வலுவான கருத்தேற்றத்தை உருவாக்கும்.

**பின்பற்றல்**

பிறரது செயல்களைக் கண்டு தாமும் அவ்வாறே செய்ய முற்படுவது பின்பற்றல் அல்லது பார்த்துச் செய்தல் எனப்படும். அதாவது பிறரது செயல்களைப் பின்பற்றுதல் இதுவாகும். உதாரணமாக சிறு குழந்தை பெற்றோரது செயல்களைப் பார்த்துப் பின்பற்றுகிறது. இவ்வாறு பின்பற்றப்படுவது பெற்றோர்களது பாராட்டைப் பொதுவாக அதற்குப் பெற்றுத் தருவதோடு, பின்பற்றல் மகிழ்ச்சியை அதனிடம் தோற்றுவித்து அதனை வலுப்படுத்துகின்றது. இது போல பாடசாலை மாணவர்கள் தமது அதிபர் அல்லது ஆசிரியர்கள் மீது கொண்ட விருப்புக் காரணமாக அவரைப்

போல் நடித்துக்காட்டுவதும் அல்லது வெறுப்புக் காரணமாக அவர்களது நடத்தையைக் கேலியாக நடித்துக்காட்டுவதும் அனுபவ உண்மைகள் ஆகும். குழு ஒன்றின் தலைவன் பேசும் போது அவனது கையசைவு, தொனிவேறுபாடு என்பவற்றைத் தம்மையறியாமல் அவனது குழுவினர் பின்பற்றக்கூடும். தனது சிறப்பான மதிப்பைப் பெற்றவர்கள் குறிப்பிட்ட ஒரு நிலைமையில் எவ்வாறு நடந்து கொள்வர் என ஒருவன் நினைப்பானோ, அம்மாதிரியான சந்தரப்பங்களில் தானும் அவ்வாறு நடந்து கொள்வது இலட்சியப்பின்பற்றலாகும். தன் மதிப்பைப் பெற்றவர்கள்பால் மிகுந்த ஈடுபாடு கொள்வதன் காரணமாக இது ஏற்படுகின்றது.

எனவே சமூகப்பயனுள்ளதும் நம்பண்பாட்டினைப் பிரதிபலிப்பதுமான நடத்தை முறைகளை ஏனையோர் பெறுவதற்கு பெரியவர்களது முன்மாதிரியான நடத்தை அவசியமானது. வீட்டிற்கு வரும் விருந்தினர்களைத் தனது பெற்றோர்கள் இன்முகம் காட்டி இன்சொல் கூறி வரவேற்றலைப் பின்பற்றி குழந்தையும் இப்பண்புகளைப் பெற்றுக்கொள்கிறது. சில நிறுவனங்களில் கடமை புரிவோர் காலை வேளையில் தமது மேலதிகாரியைக் கண்டதும் “குட்மோனிங்” எனக் கூறினால் அவரும் பதிலுக்கு “குட்மோனிங்” எனக் கூறாது ‘ம்....” என்பதோ அல்லது தலையசைப்பதோ தான் நம் அனுபவ உண்மைகள். இந்நிறுவனங்களில் காலப்போக்கில் குட்மோனிங் என்பதே மருந்துக்கு கூட கிடைக்காமல் போய்விடும்.

**முடிவுரை**

மனித சமூக இயக்கத்தில் குழுநிலைப்பட்ட செயற்பாடு என்பது தவிர்க்க முடியாத ஒன்று ஆகும். ஒரு சமூகம் தனது இலக்கை அடைந்து கொள்வதற்கும் தனது பாதுகாப்பை உறுதி செய்து கொள்வதற்கும் இது அவசியம். தலைமைத்துவப் பண்புகளைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்கும் இக்குழுக்கள் காரணமாக அமைகின்றன. குழுக்களின் நோக்கமே அதன் செயற்பாட்டின் நல்ல தீய அம்சங்களை உறுதிசெய்கின்றன. ஏனெனில் சமூக செல்நெறிக்குப் புறம்பான செயற்பாடு கொண்ட குழுக்கள் சமூகச் விரோதக்குழுக்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும் குழுக்களின் செல்வாக்கினால் பாதிக்கப்படும் தனிமனித நடத்தைகள் உயர்வானதாக இருக்கவேண்டுமெனில் குழுக்களின் நோக்கமும் நடத்தையும் உயர்வானதாக இருக்கவேண்டும்.

**திரு. ந. மனோரஞ்சிதன்**
ஆசிரியர்,
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

# தமிழில் சைவ சித்தாந்தம் வளர்ந்த வரலாறு

இந்து தத்துவ வரலாலற்றில் சைவ சித்தார்த்தம் தனித்தன்மை வாய்ந்த தத்துவமாகும். சைவசமயத்தவர்களிடையே சிறப்பானதோர் நெறியாகவும் விளங்குகிறது.சைவசித்தாந்தம் என்னும் சொற்றொடர் சிவ சம்பந்தமான சைவத்தின் முடிந்த முடிபு எனப் பொருள் தரும். சைவசித்தார்த்தத்தின் இலட்சியம் மனிதனுக்கு உலக துன்பங்களில் இருந்து விடுதலை அல்லது சுதந்திரம் அளித்து மீட்சி கொடுப்பதாகும். விடுதலை என்பது ஆன்ம விடுதலை ஆகும். இதனை அடைவதே மெய்யாடியார்களின் குறிக்கோளாகும். இது அரசியல், .பொருளாதார,சமூக, சுதந்திரங்களிலும் அப்பாற்பட்டதாகச் சைவ சித்தார்த அறிஞர்களால் எடுத்து விளக்கப்பட்டுள்ளது. இந்த விடுதலைப் பேற்றை அடைய ஒருவர் எத்தகைய ஒழுக்க நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதே சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். திருவாசகத்திற்கு உரை எழுதியவரான ஆங்கிலேய அறிஞரான ஜி.யு.போப் என்பவர் தமிழர்களின் பேரறிவின் பயன் சித்தாந்தக் கொள்கை எனக் குறிப்பிட்டுள்ளார்.

சைவசித்தாந்த தத்துவத்தை விளக்கும் நூல்களான பதிநான்கு மெய்கண்ட சாஸ்திர நூல்களும் 12ம் ,13ம்,14ம் நூற்றாண்டிலே தமிழில் எழுந்தன. ஆனால் மிக நீண்ட காலத்துக்கு முன்னரேயே தமிழ்நாட்டில் இத் தத்துவம் மக்களின் வாழ்க்கைத் தத்துவமாகக் கொள்ளப்பட்டுள்ளது என அறியமுடிகிறது. சங்கஇலக்கியங்கள், திருமுறைகள்,வரலாற்று மூலங்கள் இவற்றினூடகச் சைவசித்தாந்தக் கருத்துகள் வளர்ந்த வரலாற்றினை அறிய முடிகிறது.

பழமை வாய்ந்த, சங்க இலக்கியங்களில் சிவன் பிறவாயாக்கைப் பெரியோன், நீலமேனி வாலிழை,பாகத்து ஒருவன்,கறைமிடற்றண்ணல், நுதல்விழி நாட்டத்து இறையோன்,சூலம் பிடித்த சுடர்படைக்காலக் கடவுள், பிறங்கு நீர் சடைக்கராத்தான், ஏற்று ஊர்த்தியான், என்னும் பெயர்களால் போற்றப்பட்டு இறைவனுடைய பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இங்கு சிவன் "நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்" என உமையுடன் இணைத்துப் பேசப்படுவதை நோக்கும். பொழுது சிவமும் சக்தியும் ஒன்றிணைந்தவை என்ற கருத்து சைவசமயத்தில் ஆரம்காலத்திலையே தோன்றி விட்டது எனக் கொள்ளலாம்.

சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்குகள் நிறைந்த சங்கமருவிய காலம் அறநூல்கள் எழுந்த காலமாகும். அறநூல்களில் ஒன்றான மணிமேகலையில் சைவவாதி பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.இந்தச் சைவவாதி தனது பதியின் இலக்கணம் பற்றிக் கூறும்போது இருசுடர் ஐம்பூதம்,இயமானன் ஆகிய எட்டின் அம்சமாக விளங்குகிறான் எனக் குறிப்பிடுகிறார்.

அற நூல்களுள் ஒன்றான திருக்குறள் சமண சமய நூல் எனக் கொள்ளப்பட்டாலும் அதில் சைவசித்தாந்தக் கருத்துக்களின் தோற்றத்தினைக் காணமுடிகிறது.வள்ளுவருக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கிறது.இக் கடவைள "இறைவன்", "எண் குணத்தான" எனக் குறிப்பிடுகிறார்.இதனை

"இருள் சேர் இரு வினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு"
"கோள் இல் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்னும் குறள்கள் மூலம் எடுத்துக்காட்டலாம். மேலும் வள்ளுவர்.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

என்னும் குறள் மூலம் இறைவனை வகுத்தான் எனக்கூறிச் சிறப்பிக்கிறார். சைவசித்தாந்த தத்துவத்திலேயே வகுத்தானுக்குச் சிறப்பிடம் தரப்பட்டுள்ளது. சமண சமயத்தில் "பிராரப்த" வினைக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.ஆனால் வள்ளுவர் வகுத்தானாகிய இறைவனுக்கு முதன்மை கொடுக்கிறார். எனவே திருக்குறளிலும் சைவசித்தாந்த அடிப்படைக் கருத்துக்களைக் கண்டு கொள்ளலாம்.

பல்லவர்காலப் பகுதியில் எழுந்த தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலான திருமுறைகளிலும் சைவசித்தாந்தக் கருத்துக்களைக் கண்டு கொள்ளலாம் .திருமந்திரத்தில் முதன்முதலாகச் சைவசித்தார்ந்தம் என்ற சொல் வழக்கில் வந்துள்ளது.

"நவமான வேதாந்த ஞான சித்தாந்தமே"

எனவும்

"சிவ மாதல் வேதாந்த சித்தாந்தமாகும்"

எனவும்

திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளதோடு பதி , பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மைகளையும் விளக்கிக் கூறியுள்ளார்.
மேலும்

"கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோக
முற்பத ஞான முறை முறை நண்ணியே
தொற்பதமேவித் துரிசற்று மேலான
தற்பரங்கண்டுளோர் சைவ சித்தாந்தரே"

என்னும் பாடல் மூலம் சைவசித்தாந்தர் பற்றியும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

தேவாரங்களில் இறைவனின் முற்று முணர்தல் ,முடிவிலாற்றலுடமை,முதலான எல்லையில்லாத ஆற்றல்கள் ,அருட்டிறன்கள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. பக்தி நெறிக்காட்பட்ட நாயன்மார்கள் பல்வேறு உறவு முறைகளில் தம்மை இறைவனோடு தொடர்புபடுத்தி வழிபட்டார்கள். சம்பந்தர் தம்மை மகனாகவும் , இறைவனைத் தந்தையாகவும் கொண்டார். நாவுக்கரசர் இறைவனை ஆண்டான் ஆகவும்,தம்மை அடிமையாகவும் கொண்டு வழிபட்டார். சுந்தரர் இறைவனோடு தோழமை உறவு கொண்டு வழிபட்டார். மாணிக்கவாசகர் மேலான உயர்ந்த அறிவு நிலையில் தொடர்பு கொண்டு வழிபட்டார். இவர்கள் நால்வரும் வாழ்ந்து காட்டிய முறை பிற்காலத்தில் சைவசித்தாந்த தத்துவத்தில் சரியை , கிரியை , யோகம் ,ஞானம் என்னும் நான்கு நெறிகளாகவும் தாசமார்க்கம் , சற்புத்திரமார்க்கம் , சகமார்க்கம்,சன்மார்க்கம் என நான்கு மார்க்கங்களாகவும் இலக்கணம் வகுக்கப்பட்டது. எனவே சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சிக்கு நாயன்மார்களுடைய வாழ்க்கை முறைகளும் துணை புரிந்துள்ளன எனக்கூறலாம்.

நாவுக்கரசருடைய திருத்தாண்டகத்தில்

**"நிலை பெறுமாறெண்ணுதியேல்**
**நெஞ்சே நீவா**
**நித்தலுமெம் பிரானுடைய**
**கோயில்புக்கு**

எனத் தொடரும் பாடல் சரியை வழியாட்டின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. மேலும் எல்லாம் கடவுள் செயலே என்பதையும் நாவுக்கரசர்

**"ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே**
**அடக்குவித்தல் ஆர் ஒருவர் அடங்காதாரே......."**
**எனத்தொடரும் திருத்தாண்டகப் பாடல் மூலம்**
**அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.**

திருவாசகத்தில் இறைவனுடைய அருட்டிறன்கள் பற்றியும் , கன்மமலம் பற்றியும் , பலஇடங்களிலும் குறிப்பிடப்படுகிறது.திருவெம்பாவைப் பாடலான "காதார் குழையாடப்பைம்பூண் கலனாடக்....." எனத் தொடரும் பாடலில் "பேதித்து நம்மை வளஞ்தெடுத்த பெய்வளை" என்ற அடிகள் வருகிறது.(நம்மை நம் நிலையில் இருந்து மாற்றி வளர்த்த வளையல்கள் அணிந்தவள்) இது சைவ சித்தாந்தத் தத்துவக்கருத்தின் படி "திரோதான" சக்தியைக் குறித்து நிற்கிறது.

சைவ சித்தாந்தம் ஆகமத்தை முதனூலாகக் கொண்டது.ஆகமம் என்ற சொல் திருவாசகத்தில் பல விடங்களில் காணலாம்.

**"மன்னுமாமலை மகேந்திரமதனில்**
**சொன்ன ஆகமந் தோற்று வித்தருளியும் ........"**

என்றும்

"ஆகமமாகி அண்ணிப்பான் தாள் வாழ்க"

என்றும்

வருவதைச் சான்றாதாரமாகக் காட்டலாம் திருவாசகத்தில் அச்சோப் பதிபத்தில்

"முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்"

எனக்குறிப்பிடுகின்றார்

இவ்விளைகளே சைவ சித்தாந்தத்தில் கன்மம் எனக்குறிப்பிடப்படுகிறது.இக் கன்மத்தை நீக்க இறைவனுடைய அருள் தேவை. இதனை மாணிக்கவாசகர் தனது திருவம் மானையில்,

"கல்லா மனத்துக் கடைப்பட நாயேனை ........"

எனத் தொடரும் பாடலில்

**"தன் கருணை வெள்ளத்தழுத்தி வினைகடிந்த வேதியன்"** எனக் குறிப்பிடுகிறார் மேலும் சைவ சித்தாந்தக் கருத்தின் படி ஆன்மா திருவருளின் வழிச் செல்வதற்கு பஞ்சாட்சர மந்திரம் அவசியம்.இதனையே மாணிக்கவாசகர் "நமசிவாய வாழ்க"எனப்பாடி உணரவைத்துள்ளார்.

சோழர் காலத்தில் ஏற்பட்ட அரசியல் , பொருளாதாரம் முதலான பல்துறை வளர்ச்சியும்,சமய நிறைவுக்காலம் என்னும் தன்மையும் சமயதத்துவம் வளர்வதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கின. ஒரு புறம் வேதாந்த தத்துவங்களும் இன்னொரு புறம் சைவ சித்தாந்த தத்துவமும் வளருவதற்கு ஏற்ற வாய்ப்புகள் ஏற்பட்டன. ஆலய வழிபாடு , தேவாரங்களைப் பண்ணோடு ஓதும் முறை, நாயன்மார்களுடைய வரலாறுகளைத் தொகுத்து இலக்கியமாக்கும் பணி, ஆகியன சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சிக்கு ஏற்ற பின்னணிகளாக அமைந்தன எனலாம். எனவே தான் இக்காலத்தில் சைவசித்தாந்த சாஸ்திர நூல்கள் (14) தோற்றம் பெறத்தொடங்கின.

இந்நூல்கள் அனைத்தும் சைவசித்தாந்த தத்துவம் முடிந்த முடிவுகளைக் கூறும் முழுமையான தத்துவம் என்னும் கருத்துக்கு ஆதாரமாக அமைந்து இன்று வரை சமய வளர்ச்சிக்கும் தத்துவ வளர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்குகின்றன.

**செல்வி. புஸ்பராணி இளையதம்பி**
பகுதித்தலைவர்,
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

# வைரஸ் மற்றும் தகவல் திருடுதல்

கணனி கண்டுபிடிக்கப்பட்ட போதும் சரி, தற்போது வளர்ந்து புகழ்பெற்று விளங்கும் இந்த காலகட்டத்திலும் சரி, இது மக்களுக்கு நல்ல முறையில் பயன்தர வேண்டும். நமது அன்றாட வேலைகளில் சிலவற்றை கணனி உதவியுடன் செய்ய வேண்டும் என்பது போன்ற பல எண்ணங்களை மனதில் வைத்து தான் இந்த கணனி உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று பல குற்றங்கள் செய்யும் அளவிற்கு இந்த கணனியில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளது. இது போன்ற கணனி குற்றங்கள் தவிர்க்கப்பட வேண்டும். அதே நேரத்தில் கணனி குற்றங்கள் நிகழும் போது அதை சரியான முறையில் தடுத்து நிறுத்த வேண்டும்.




இந்தக் கணனிக் குற்றங்களை சில சமயங்களில் கண்டுபிடிப்பது கடினம். மேலும் அவற்றை கண்டுபிடிப்பது நிரூபிப்பதும் சற்று கடினம் என்பதாலும் பலர் அதைபற்றி கவலைப் படுவதில்லை. சாதாரணமாக ஒரு உலக அளவிலே செய்யும் போது அது தணிக்கை செய்யப்படும். ஆனால் இந்த கணனி செயற் பாடுகளில் இது போன்ற தணிக்கை (Audit) செய்யும் முறை கிடையாது. ஏனென்றால் மற்ற முறைகளில் தகவல்கள் என்பது ஒரு புத்தக வடிவிலோ அல்லது பேப்பர் வடிவிலோ முறையான விதத்தில் தயாரித்த அனுப்பப்படுவதால். Audit எனப்படும் தணிக்கை முறையை கையாள்வது என்பது சுலபம். ஆனால் இந்த கணனி மூலம் தகவல் அனுப்பும் முறையானது யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்றிருப்பதால்,. நம்மிடம் ஒரு சரியான தணிக்கை முறை கிடையாது.

**பொதுவாக இந்த கணனிக் குற்றமானது 3 வகையாக கருதப்படுகிறது.**

1. VIRUS எனப்படும் தகவல்களை அழிக்கம் புரோகிராம்கள்.
2. HACKERS எனப்படும் தகவல்கள் திருடுபவர்கள்
3. தவறான தகவல்ளை வெளியிடுபவர்கள்

கணனி உலகத்தில் தகவல்கள் அனுப்புவது என்பது எப்பொழுதுமே பாதுகாப்பு இல்லை. ஏனென்றால் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் என்ற கூறுவது போல ஒவ்வொரு நாளும் கணனி வைரஸ்கள் வந்து கொண்டே தான் இருக்கிறது.

இவற்றை தடுக்கவும் வந்த பிறகு அவற்றை அழிக்கவும் பலவிதமான software தயாரிக்கப்பட்டு வந்தாலும் அவற்றையும் மீறி இன்று வைரஸ்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இன்னும் சொல்லப்போனால் உலகிலே வைரஸ் வராத கணனி


என்று ஒரு கணனியைக் கூட சொல்ல முடியாது. ஏனென்றால் ஏதாவது ஒரு காலகட்டத்தில், ஏதாவது ஒரு வைரஸ் மூலம் நாம் பாதிப்புக்குள்ளாகி இருப்போம்.

தற்போதைய காலகட்டத்தில் கணனி வைரஸ் புரோகிராம் எழுதும் நபர்களுக்கும், அதை தடுக்கும் Antivirus எனப்படும் software தயாரிப்பவர்களும் இடையே கடும்போட்டி நடைபெறுவதை போன்ற ஒரு தோற்றத்தையே நம்மால் இன்று காண முடிகின்றது. இது போன்ற வைரஸ் புரோகிராம்கள் தானாக உருவாவதில்லை. ஆனால் நம்மைப் போன்ற மனிதர்கள் இது போன்ற வைரஸ் புரொகிராம்கள் எழுதி ஒரு கணனியில் இருந்து மற்றொரு கணனிக்கு அனுப்புவதால் தான் இந்த பாதிப்பு ஏற்படுகின்றது. கடந்த காலங்களில் பல வைரஸ்கள் பல விதமான பாதிப்புக்களை ஏற்படுத்தி இருந்தாலும், குறிப்பாக I LOVE YOU, MELLISSA மற்றும் மோரிஸ் WORM போன்ற வைரஸ்கள் ஏற்படுத்திய பாதிப்புக்களை கணனிப் பொறியில் பல ஆண்டுகள் பணிபுரியும் நபர்கள் மறந்திருக்க முடியாது.

சில கணனி வைரஸ்கள் Trojan horse, Worms, Bacerium, BackDoors and Logic Bombs

இன்றைய நிலவரப்படி ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் 10 முதல் 12 வைரஸ் புரோகிராம்கள் உருவாக்கப்படுகிறது. அதாவது ஒரு வருடத்தில் 3500 முதல் 4000 வைரஸ் புரோகிராம்கள் உருவாக்கப்படுகிறது. இந்த நவீன உலகில் வைரஸ்கள் விரைவில் பரவ internet மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆகையால் தான் இந்த வைரஸ் விரைவாக உலகெங்கும் பரவி விடுகின்றது.

## Antivirus software செயல்படும் விதம்



தற்பொழுது உபயோகத்தில் இருந்து வரும் பல Antivirus software மிகவும் எளிதான முறையில் வடிவமைக்கப்பட்டு உபயோகத்திற்கு சிறந்த வகையில் உள்ளது. இவையனைத்துமே, குறிப்பாக சில வகையான வைரஸ்களில் இருந்து பாதுகாத்த கொள்ளும் வகையிலேயே தயாரிக்கப்பட்டு உள்ளது. ஏனென்றால் இது போன்ற யுவெைைசைரள புரோகிராம்கள் எழுதும் போது சில வகையான கற்பனையான குறிப்புக்களை வைத்துத்தான் எழுத முடியும். ஆனால் வைரஸ் புரோகிராம்கள் எழுதுபவர்கள் அவர்களை விடபுத்திசாலிகள். ஏனென்றால் யாரும் எதிர்பாராத வகையில் பாதிப்பு இருக்கும் வண்ணம் வடிவமைத்து விடுவார்கள்.

வைரஸ் கண்டுபிடிக்கும் புரோகிராம்கள் சாதாரணமாக கணனியில் உள்ள அனைத்து தகவல்களையும் (File) எடுத்து வைரஸ் உடைய அறிகுறிகள் எனப்படும்


முகவரிகள் உள்ளதா என்று சோதித்து அவை கண்டறியப்பட்டால், வைரஸ் உள்ளது என்று தீர்மானிக்கப்படுகின்றது. இன்னும் சில Antivirus software எனப்படும் software களில் தத்துவம் சார்ந்த விதிமுறைகளைக் கொண்டு பரிசோதனை செய்யப்படுகின்றது.

இது போன்ற வைரஸ்கள் கண்டறியப்பட்டவுடன். உடனே Antivirus மையம் எனப்படும் இடத்திற்கு தெரியப்படுத்தப்படுகின்றது. அந்த Antivirus மையம் அது என்ன விதமான வைரஸ் என்பதை கண்டறிந்து அதற்கான குணமாக்கும் புரோகிராமை தயார் படுத்தி வைரஸ் சம்பந்தமான Progamme வரிகளை அழிக்கிறது. ஆகையால்தான் நாம் வைரஸ் இடமிருந்து வெளிவர முடிகிறது.

அவற்றில் சில Anti virus programe Norton Antivirus, McAfee VirusScan, syentec, Pc-cillin

உதாரணமாக Norton Anti Virus software ஐ www.nai.com என்ற வெப்தள முகவரியிலிருந்தும், Mc Afee VirusScan software ஐ www.msafee.com என்ற வெப்தள முகவரியிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்

## வைரஸ் பரவும் முறை



வைரஸ் என்பது ஒரு ஆபத்தான புரோகிராம் போல இருப்பதாக நாம் அறிந்திருந்தாலும் அவற்றால் ஏற்படும் பல விதமான பாதிப்புக்களை உணர்ந்திருந்தாலும் எவ்வாறு இந்த வைரஸ்கள் பரப்பபடுகின்றது என்பது பற்றி காணலாம்.

### 1. BBS எனப்படும் Bullet in Board Service முறைமூலம் பரவுதல்

இது ஒரு பொதுவான முறையாக கருதப்பட்டாலும், இந்த முறை மூலம்தான் சர்வதேச அளவில் வைரஸ்கள் பரவுகிறது இந்த Bullet in Board Service என்பது ஒரு அறிவிப்பு பலகையை போன்று ஏதேனும் செய்திகளை கொண்டிருக்கும். அந்த செய்தியை படிக்க முற்படும் போது வைரஸ்கள் நம்முடைய கணனியில் உள்ள மெமரியில் சென்று தங்கி விடுகிறது. ஏனென்றால் இது போன்ற வைரஸ்கள் வர முக்கிய காரணம் நாம் கணனி தொலைபேசி Wire மூலமாகவோ அல்லது Telnet என்ற முறையின் மூலமாகவோ தொடர்புகொள்ளும் போது இது நிகழக்கூடும்.

### 2. Network மூலம் வைரஸ் பரவுதல்

நாம் கணனியை உபயோகிக்கும் போது பலவிதமான தேவைகளுக்காக பயன்படுத்தினாலும் முக்கியமாக நெட்வொர்க் மூலம் கணனிகளை இணைத்து

ஒரு கணனியில் இருந்து மற்றொரு கணனி தகவல்களை அனுப்பும் போது இது போன்ற வைரஸ் புரோகிராம்கள் எளிதில் மற்ற கணனிக்கு சென்று விடுகின்றது. உதாரணமாக Email எனப்படும் மின்னஞ்சல் முறை மூலம் தகவல்களை அனுப்பும் போது நுஅயடை செய்தியுடன் வைரஸ் புரோகிராம்களும் சென்று விடுகின்றது. இதனால் பாதிப்புக்கள் ஏற்படுகின்றது.

## 3. இணையத்தளம் மூலம் வைரஸ் பரவுதல்

இன்றைய காலகட்டத்தில் இன்டர்நெட் பற்றி தெரியாத நபர்களே இருக்க முடியாது. ஏனென்றால் கணனியை உலகில் உள்ள எல்லா மக்களுக்கும், பிரபலமடைய வைத்ததே இந்த இன்டர்நெட் என்றால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட இந்த இன்டர்நெட் மூலம் சில இணையத்தளங்களை நாம் பார்க்கும் போது அவற்றின் இந்த வைரஸ் புரோகிராம்கள் நம்முடைய கணனிக்க பரவி விடுகின்றது.

இந்த இன்டநெட் வைரஸ் என்பது இன்று பொதுவான ஒரு வைரஸ் பரவும் முறையாகும். ஆகையால் நாம் எப்போது இணையத்தளத்தை உபயோகிக்க தொடங்குகிறோமோ, அப்போதே நம்முடைய கணனியில் Antivirus software எனும் புரோகிராம்களை வைத்து சோதனையிட்டுக் கொள்வது நல்லது.

## 4. File Server மூலம் வைரஸ் பரவுதல்

நாம் சாதாரணமாக நமது அலுவகங்களில் பல கணனிகளை ஒன்றாக நெட்வொர்க் முறையில் இணைத்திருக்கும் போத ஒரு கணனி Server என்றும் மற்ற கணனி Client என்றம் அழைக்கின்றோம். அந்த சமயங்களில் இந்த Client என்பவர் ஏதேனும் File களை Server கணனியில் இருந்து பெற அனுமதி கேட்கும் போதும், Server கணனியில் அனுப்பம் தகவலிகளில் வைரஸ் இணைந்து சென்றுவிடும். அவ்வாறு அனுப்பப்பட்ட வைரஸ் அந்த கணனியில் இருந்த கொண்டு பலவிதமான பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

நாம் வைரஸ் பற்றி தெரிந்து கொள்ள வேண்டம் என்ற விரும்பி சில சமயங்களில் வைரஸ் சம்பந்தமான புத்தகங்களை கணனியில் பதிவ செய்து ஆவற்றை படிப்பதன் மூலம் இந்த வைரஸ் புரோகிராம்கள் பரவி விடுகின்றன. இது ஒரு வித்தியாசமான முறையாகும். ஏனென்றால் வைரஸ் பற்றி தெரிந்து கொள்ள ஆசைப்பட்டு பலர் அந்த பத்தகங்களை படிக்க முயற்சிப்பர். ஆந்த நேரத்தில் வைரஸ் நமது கணனியில் பரவி விடும். இது ஒரு வித்தியாசமான முறை மூலம் நிகழும் குற்றமாகும்.

### வைரஸ் விற்பனை முறை

இன்னம் சிலர் இது போன்ற வைரஸ் புரோகிராம்களை எழுதி விற்பனை செய்கின்றனர். உதாரணமாக சில கணனி பற்றிய வார மற்றும் மாத இதழ்களில்

(Magazine) இது போன்ற கணனி வைரஸ் உடைய புரோம்கிராம் வரிகளை வெளியிடுகிறாகள். அது போன்ற புரோகிராம்களை படித்துவிட்டு சில மாணவர்கள் நாமும் முயற்சி செய்து பார்க்கலாமே என அந்த வைரஸ் புரோகிராம்கள் முழுவீச்சில் உருவாக்கி விளையாட்டாக பிறருடைய கணனிக்கு அனுப்பிவிடுகின்றனர். இது போன்ற வைரஸ் புரோகிராம்களின் விற்பனை அமெரிக்கா போன்ற நாடுகளில் சட்டப்படி அனுமதிபெற்று நடைபெறுகிறது. இன்னும் சில விற்பனை நிறுவனங்கள் வைரஸ் புரோகிராம்களையும் எழுதி பரவவிடுவதோடு, அவற்றை சரி செய்யும் Antivirus Software எனப்படும் புரோகிராம்களையும் எழுதி விற்பனை செய்கிறார்கள்

**திரு. வி. துஷ்யந்தன்**
ஆசிரியர்,
யூனியன் கல்லூரி.
தெல்லிப்பழை

## அரச அலுவலரும் விடுமுறையும் (LEAVE)............

ஆசிரியர் : பா. தர்மசீலன் ( B.sc. Dip. in.Edu)

"லீவு ழீவிடுமுறை" என்பது சலுகையே தவிர அலுவலரின் உரிமையல்ல....."

இது நாம் அடிக்கடி கேட்ட வார்த்தையல்லவா? அப்படியென்றால் தொடர் பணியிலிருந்து சற்று ஓய்வுபெற நாம் தகுதியற்றவர்களா? என நாம் மனம் வெதும்புவதுடன் எமது தலைமை அதிகாரிகள் மத்தியில் தேவையற்ற மனக் கிலேசங்களுக்கும் உள்ளாகின்றோம். எனவே விடுமுறை பற்றி நாம் நன்கு அறிந்து கொள்வதுடன் *சலுகையாக இருக்கும் லீவினைப்* பொருத்தமான முறையில் பெற்று அனுபவிப்பதும் தேவையான விடயமாகும்.

வெவ்வேறு தேவைகளின் பொருட்டு பலவகையான விடுமுறைகள் வழங்கப்பட்டாலும் அவை அனைத்தும் திணைக்களத்தலைவரது அனுமதியுடனேயே பெற்றுக்கொள்ளமுடியும். திணைக்களத்தலைவர் நிறுவனத்தின் அவசியமான செயற்பாட்டின் பொருட்டு அலுவலரின் விடுமுறையை மறுக்கவும் முடியும். அதேவேளை அலுவலரது அவசிய தேவையைக் கருதி மாற்று ஏற்பாடுகளுடன் விடுமுறை வழங்க முயற்சிசெய்யவும் வேண்டும். அப்போதுதான் அலுவலரது மனத்திருப்தியுடனான சேவையைப்பெற்று நிறுவனத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்ல முடியும். இனி ஒவ்வொரு விடுமுறைவகைபற்றியும் அறிந்துகொள்வோம்.

### 1. அமைய விடுமுறை / சமயோசித விடுமுறை (Casual Leave)

- அரச அலுவலர்கள் சந்தர்ப்பவசத்தால் ஏற்படும் தனிப்பட்ட தேவையின் அவசியம் காரணமாக இதனைப் பெற்றுக்கொள்ளலாம்.
- ஆண்டொன்றிற்கு 21 நாள்கள் பெறமுடியும். தொடர்ச்சியாக 6 நாள்கள் பெறமுடியும்.
- நாள் சம்பள பணியாளர்கள் முன்னைய 12 மாதகாலத்தில் 250 வேலை நாள்கள் பணியாற்றியிருந்தால் ஆண்டொன்றிற்கு 21 நாள்கள் பெறமுடியும்.
- பயிலுநர்கள், பயிற்சியாளர்கள் ஒரு வருட பூர்த்தியின்போது 7 நாள்கள் அமைய விடுமுறையைப் பெறமுடியும்.
- அமையவிடுமுறையை பதில்விடுமுறை தவிர்ந்த ஏனைய விடுமுறைகளுடன், தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் தவிர்ந்த நேரங்களில் சேர்த்துப்பெறமுடியாது.
- வருடமொன்றின் எஞ்சிய விடுமுறைகளை அடுத்த வருடத்தில் சேர்த்துப் பெறமுடியாது.

### 2. ஓய்வு விடுமுறை (Vacation Leave)

- தொடர்பணியால் ஏற்படும் சலிப்பைப் போக்கி, அதனைத் தொடர்ந்து வரும் நாள்களில் சிறப்பான பணியைப்பெறும் பொருட்டு இது வழங்கப்படுகின்றது.
- வருடமொன்றுக்கு 24 நாள்கள் பெறமுடியும்.
- வாரத்தில் ஏழுநாள்களும் பணியாற்றுபவர்களுக்கு 28 நாள்கள் வழங்கப்படுகின்றது.

* வருடமொன்றின் எஞ்சிய விடுமுறைகளை அடுத்த வருடத்தில் சேர்த்துப் பெறமுடியும்.
* நடப்பு ஆண்டிலும், முன்னைய ஆண்டிலும் விடுமுறைகள் மிகுதியாக இல்லாத போது காலங்கடந்த விடுமுறையை திணைக்களத் தலைவரது அனுமதியுடன் பெற்றுக்கொள்ளலாம். காலங்கடந்த விடுமுறை என்பது முன்னைய காலப் பகுதியில் ஏதாவது இரண்டு அடுத்தடுத்த வருடங்களில் மீதமாக உள்ள விடுமுறையாகும்.
* காலங்கடந்த விடுமுறையானது அலுவலரின் சுகயீனம் அல்லது திருமணம், அலுவலரின் குடும்பத்தவரின் சுகயீனம் அல்லது இறப்பு, அலுவலரது குடும்பத்தில் தொற்றுநோய் ஏற்பட்டிருத்தல், சேவையோடு தொடர்பற்ற விடயம் தொடர்பாக நீதிமன்ற அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டிருத்தல். போன்ற சந்தர்ப்பங்களில் செயலாளரின் அனுமதி பெறப்பட்டு வருடத்தில் இரண்டு தடவை கூட பெறப் படலாம்.
* சிற்றூழியர்கள் ஓய்வுவிடுமுறை பெறத்தகுதியற்றவர்கள்.
* ஓய்வுவிடுமுறை வருடத்தில் 3 மாதங்கள் சேவையாற்றிய பின்பே வழங்கப்படும். எனினும் அவசியம் கருதி வருடத்தின் மூன்றிலொரு பகுதி ஒவ்வொரு மாத சேவைக்கு திணைக்களத்தலைவரால் வழங்கப்படலாம்.

## 3. நாளொன்றின் பகுதி விடுமுறை (Half Day)

* அலுவலரொருவர் நாளொன்றின் காலையிலோ அல்லது மாலையிலோ, அல்லது இரு காலத்திலும் 3½ மணித்தியாலம் வேலை செய்தால் அன்றைய நாளின் ½ நாள் வேலை செய்ததாக கருதப்படுவர். எனவே அந்நாளின் மிகுதி நேரத்தை விடுமுறையாகப் பெறலாம்.

## 4. சுகயீன விடுமுறை (Sick Leave)

* அலுவலர் சுகயீனம் காரணமாக அலுவலகத்திற்கு சமுகமளிக்காதிருந்தால் இவ்விடுமுறை வழங்கப்படமுடியும்.
* தொடர்ந்து இரண்டு நாள்களுக்கு மேல் விடுமுறைபெற்றிருந்தால் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். அரச அல்லது ஆயுள்வேத அல்லது தனியார் வைத்திய சாண்றிதழை சமர்ப்பிக்கலாம்.
* திணைக்களத்தலைவர் தனது பணியாளரின் தேகநிலை கருதி அல்லது வழமையாக 3 மாத காலமாக சுகயீன விடுமுறையில் உள்ள பணியாளரை அவரது தேக ஆரோக்கியம் சேவையாற்ற பொருத்தமாக உள்ளதா என்பதை அறிய பணியாளரை அரச வைத்திய சபைக்கு தோற்றுமாறு கோரமுடியும். இச்சந்தர்ப்பத்தில் பணியாளரது சம்பளம் நிறுத்தப்படலாம். வைத்திய சபைக் குறிப்பின்படி பணியாளரது சேவை பற்றி முடிவுசெய்யப்படும்.
* சிறுபணியாளர்கள் (Miner Staffs) 24 நாள்களும், ஆசிரியர்கள் 20 நாள்களும் இவ்விடுமுறையைப் பெறமுடியும்.

## 5. விபத்து விடுமுறை (Accident Leave)

* கடமையின்போது அல்லது கடமைநேரத்திற்கு புறம்பாக கடமைகளின் செயல் எல்லைக்குள் அடங்கும் செய்கைகளை நிறைவேற்றும்போதும் விபத்து ஏற்படும் போது இவ்விடுமுறை வழங்கப்படுகின்றது.
* இதன்படி அமைச்சின் செயலாளரது அனுமதியுடன் ஒரு வருடத்திற்கு முழுச் சம்பளத்துடன் 6 மாத காலத்திற்கு விடுமுறையும், பின்னர் 6 மாத காலத்திற்கு அரைச்சம்பளத்துடன் விடுமுறையும் வழங்கப்படும். மேலும் தேவையெனில் அவரால் உபயோகிக்கக் கூடியதாக உள்ள விடுமுறைகளைப் பயன்படுத்தலாம்.

## 6. கட்டாய விடுமுறை (Compulsary Leave)

* வைத்திய காரணங்கள் அல்லது குற்றவியல் நடவடிக்கை தொடர்பாக இவ் விடுமுறை வழங்கப்படலாம். ஒழுக்காற்று நடவடிக்கையின்போது விசாரணைக் குட்படும் பணியாளர் பணிக்கு வருவதால் விசாரணை பாதிக்கப்படலாம் எனக் கருதினால் நியமன அதிகாரியாலும், பணியாளரது நோய் காரணமாக ஏனைய பணியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம் எனக்கருதினால் திணைக்களத் தலைவராலும் இவ்விடுமுறை அனுமதிக்கப்படலாம்.
* வழங்கப்படும் கட்டாயவிடுமுறையானது பணியாளருக்கு உரித்தான விடுமுறை களில் இருந்து கழிக்கப்படும். கட்டாய விடுமுறைகளின் தொகை பணியாளருக்கு உரித்தான விடுமுறைகளின் தொகைகளிலும் அதிகமாயின் எஞ்சிய தொகை யானது சம்பளத்துடனான விசேட விடுமுறையாகக் கருதப்படும்.

## 7. கடமை விடுமுறை (Duty Leave)

* கடமையின் நிமித்தம் பணியாளர் சேவை நிறுவனத்திற்கு வெளியே தங்கும்போது இவ்விடுமுறை வழங்கப்படுகின்றது.
* அலுவலக கடமை தொடர்பாக கச்சேரிக்குச்செல்லல், நீதிமன்றம் செல்லல், அலுவலகப்பரீட்சையொன்றுக்கு முதல்முறைமட்டும் தோற்றுதல் போன்ற காரணங்களுக்காக இவ்விடுமுறை வழங்கப்படலாம்.

## 8. குறுகியகால விடுமுறை (Short Leave)

* மாதமொன்றிற்கு இரண்டு தடவைகள் இவ்விடுமுறையைப் பெறலாம். ஒரு தடவையில் 1½ மணித்தியாலம் கொண்டதாக பெற்றுக்கொள்ளலாம்.

## 9. சம்பளமற்ற விடுமுறை (No Pay Leave)

* வெளிநாட்டில் தொழில்புரிதல், வெளிநாட்டில் அல்லது உள்நாட்டில் கல்வி கற்றல், தண்டனை நிமித்தம், அனைத்து உரிய விடுமுறைகளும் முடிவடைந்து மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாத நிலை போன்ற சந்தர்ப்பங்களில் இவ்விடுமுறை வழங்கப்பட முடியும்.

* வெளிநாட்டில் தொழில்புரிதல் தொடர்பாக சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் 4 வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தருக்கு வழங்கப்படும். ஆகக்கூடியது 5 வருடகாலம் பெறலாம். 5 வருடகாலம் தொடர்ந்து இவ்வகை விடுமுறையை பெறவேண்டுமெனில் முதலில் 3 வருடத்திற்கு விண்ணப்பித்துவிட்டு பின்னர் வெளியூரிலிருந்து 2 வருடங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெளியூரில் இருந்த காலப்பகுதி சேவைக்காலமாக கருதப்பட மாட்டாது.
* கல்வி கற்றல் தொடர்பாக பணியாளர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள கற்கைநெறிக்குச் செல்வதால் அவரது சேவை வினைத் திறனுடையதாகும் எனவும் அக்கற்கைநெறிக்கு அவர் தகுதியானவர் எனவும் கருதினால் திணைக்களத்தலைவர் கருதினால் வழங்கமுடியும்.
* கணவனும் மனைவியும் சேவையிலுள்ளபோது அவர்களில் ஒருவருக்கு அரசினால் சம்பளத்துடன் கூடிய பதவி அல்லது புலமைப்பரிசில் வழங்கப்பட்டால், அரச உத்தியோகத்தர் வெளிநாடு செல்வதற்கான நடைமுறைகள் பூர்த்தி யாக்கப்பட்ட நிலையில் மற்றவருக்கு சம்பளமற்ற ஆனால் சம்பள ஏற்றத்துடன் கூடியதாக இந்த விடுமுறை வழங்கப்படும்.

## 10. பிரசவ விடுமுறை (Maternity Leave)

* பெண்அலுவலருக்கு ஒவ்வொரு பிள்ளைப்பேற்றின் போதும் பிள்ளையை பராமரிக்கும் நோக்கில் முதலில் சம்பளத்துடன் 84 நாள்களும் (வேலை நாள்கள் மட்டும்), அடுத்து அரைச்சம்பளத்துடன் 84 நாள்களும் (எல்லா விடுமுறை தினங்களும் உட்பட), மேலும் தேவையாயின் சம்பளமற்றதாக 84 நாள்களும் (எல்லா விடுமுறை தினங்களும் உட்பட) வழங்கப்படமுடியும்.
* பிரசவம் நிகழ்ந்து 4 வாரங்கள் முடியுமுன்னர் கடமைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
* மரணித்து குழந்தை பிறத்தல் அல்லது குழந்தை பிறந்து 6 வாரங்களுக்கு முன்னர் குழந்தை இறத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் 6 வாரங்கள் விசேட விடுமுறை வழங்கப்படும்.
* கரு கலைதலுக்கு சாதரண விடுமுறையைத்தான் கோரமுடியும்.

## 11. பாவிக்காத விடுமுறைக்கான ஊக்குவிப்புப்படி

* இதன்பிரகாரம் பணியாளர் வருடமொன்றில் பயன்படுத்தாது வைத்திருக்கின்ற அமைய,ஓய்வு விடுமுறைகளில் ஆகக்கூடியது 30 விடுமுறைகளுக்கு மாத அடிப்படை சம்பளமொன்றை வருட இறுதியில் ஊக்குவிப்புப் படியாக பெறமுடியும். எனினும் ஆகக்குறைந்தது 5 நாள்களாவது மீதமாக இருந்தால் மட்டுமே இப்படியைப் பெறமுடியும்.
* மீதப்படுத்திய விடுமுறைகளின் தொகை 30 இற்கு குறையும்போது மாதச் சம்பளத்தின் விகிதாசாரப்படி ஊக்குவிப்புப் படி வழங்கப்படும்.
* பணியாளர் தொடர்ச்சியாக 7 நாள்கள் விடுமுறைகளை பெற்றிருக்கவேண்டும். இல்லாதுவிடில் 7 நாள்கள் கழித்து கணக்கிடப்படும்.

## 12. பிணிகளும் விடுமுறைகளும்.

❋ கயரோகம்....வைத்திய சிபார்சுடன் முதலில் முழுச்சம்பளத்துடன் கூடிய 4 மாதங்களும், பின்னர் 4 வருடங்கள் சேவையாற்றிய பின்னர் அடுத்த முழுச் சம்பளத்துடன் கூடிய 4 மாதங்களும் விடுமுறையாக வழங்கப்படும்.

❋ தொழுநோய்...வைத்திய சிபார்சுடன் முழுச்சம்பளத்துடன் கூடிய 6 மாதங்கள் வழங்கப்படும். நோய் குணமாகாதபோது மேலும் முழுச்சம்பளத்துடன் கூடிய 6 மாதங்கள் (சேவை காலத்தில் இரு தடவைகள் மட்டும்) வழங்கப்படும்.

❋ புற்றுநோய்....வைத்திய சிபார்சுடன் முழுச்சம்பளத்துடன் கூடிய 6 மாதங்கள் வழங்கப்படும்.

❋ ஏனைய தொற்றுநோய் அல்லது வைத்தியசிபார்சுடன் கூடிய நோய்கள் அல்லது சத்திர சிகிச்சையின் பின்னரான பராமரிப்பு போன்ற சந்தர்ப்பங்களில் முழுச் சம்பளத்துடன் கூடிய 6 மாதங்கள் வழங்கப்படும

## 13. விடுமுறை விண்ணப்பப் படிவத்தின் மாதிரி

லீவு விண்ணப்பப் படிவம்.

1. ஆசிரியர் பெயர் :..................................
   தராதரமும் பதவியும் :..................................
   பதிவு இலக்கம் :..................................
2. முதல் நியமனத்திகதி :..................................
3. தேவையான லீவு நாள்களின் எண்ணிக்கை :................
   ..............................தொடக்கம் ..............................வரை
4. லீவு தேவைப்படும் காரணம் :..................................
5. சுகவீன லீவாயின் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் இணைக்கப் படுகின்றதா?........................
6. பதில் கடமை புரிவதற்கான ஒழுங்குகள்:........................
   ..................................................................
7. நடப்பு ஆண்டில் பெற்றுக்கொண்ட லீவுகளின் விபரம்:

| சமயோசித லீவு | சுகவீன லீவு | ஏனையவை |
|---|---|---|
| | | |

.................... ....................................
திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்

......நாள்கள் சமயோசித/சுகவீன லீவு அனுமதிக்கப்படுகின்றது.
பாடசாலை...............................................................

.................. ..................................................
திகதி அதிபர்/ பாடசாலைத்தலைவர் ஒப்பம்.

இத்தகைய விண்ணப்பப் படிவங்களில் இரண்டை பூரணப்படுத்தி அதிபரது ஒப்பம் பெற்று ஒன்றை உங்களிடம் வைத்துக்கொள்வது நல்லது.

முற்றும்.

# எனது பார்வையில் யூனியன் கல்லூரியின் ஒரு தசாப்தம்

அறிவைக் கூர்மைப்படுத்தி, தன்னடக்கமுள்ள, பண்பாடுடைய நற்பிரஜையை, வல்லுநரை உருவாக்குவது கல்வியின் நோக்கம். இதற்கான கல்வி வசதிகளை கல்வி நிர்வாகம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். நிதி, கட்டடங்கள், விளையாட்டுத் திடல், கல்விக்கான உபகரணங்கள், கலைத்திட்டம், கற்பித்தல் முறைகள், விதி முறைகள், ஆளணி போன்றவை நிர்வாகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை.

பாடசாலை என்கின்ற நிறுவனம் தனித்து இயங்க முடியாததொன்று. அது சமூகத்தோடிணைந்து செயலாற்றுவதாலேயே சமூக நிறுவனம் என்று கூறப்படுகிறது. இதற்கமைய எமது கல்லூரியும் வடபகுதி மக்களது அறிவுப்பசி போக்க அமெரிக்க மிசனரிமாரால் 1816 இல் தெற்காசியாவில் முதல் கலவன் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு, இன்று நூற்றூத்தொண்ணூற்றொரு வருடங்களைத் தொட்டுவிட்ட நீண்டகால வரலாற்றைக் கொண்ட பெருமைக்குரிய கல்லூரியாகத் திகழ்கின்றது.

அன்றைய காலத்து நிர்வாகிகளும், பொருளாதார நிலையும், கல்வியின் முக்கியத்துவமும் மத அடிப்படையில் காணப்பட்டது. இடையிடை தடங்கல்கள் வழிமறித்திட்ட போதும், அன்றைய கல்வியார்வலர்களது அயராமுயற்சியும், நன்னோக்கும் மெல்லென ஓடச் செய்தது. தமிழரல்லாத அந்நியமொழி பேசுகின்ற தலைவர்களின் கீழ் செயலாற்றிய பாடசாலை ஆரோக்கியமான விளைச்சலைக் கண்டது. இதனால் பல வல்லுநர்களை சமூகத்திற்குப் பெற்றுக்கொடுத்தது.

1816.10.15 இல் கருவாகியுருவாகிய இப்பாடசாலை தனது நூற்றிப் பத்தொன்பதாவது வயதில் தன்னை சுதேசிய அதிபர் திரு.ஐ.பி.துரைரட்ணம் அவர்களது கைகளில் வளரவிட்டது. நம்பிக்கை வீண்போகாது கல்லூரி துரித வளர்ச்சி கண்டது. கல்லூரியின் ஒளி எங்கும் பரவியது.

வரலாற்றுச் சக்கரம் வேகமாகச் சுழல்கின்றன. நிர்வாகம் புதிய புதிய தலைமைகளிடம் கைமாறுகிறது. கல்லூரிச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. கல்லூரியின் அமைவிடம் அதிகம் பேரை கல்வி கற்க அழைக்கிறது. தமிழர் தாயகம் என்பதால் போர் மேகங்கள் 1980 களில் வலி வடக்குப் பகுதியைச் சூழ்ந்து கொள்கிறது. யுத்த வடுக்களைப் பொறுக்காது 1990 இல் இதன் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைகின்றன. வலி. வடக்கின் பெரும்பகுதி வெளியேறுகிறது. கல்லூரியும் வெளியேறுகிறது. 1995 இல் இருந்து முழு வளங்களும் இழக்க நேரிடுகிறது. 1996 வரை போர் மேகங்கள் துரத்தத் துரத்த தென்மராட்சி வரை சென்று, போர் மேகங்களின் தாக்கங்கள் குறையத் தொடங்கியதும் வலி வடக்கை நோக்கி மீண்டது. ஆனாலும் கல்லூரியைச் சூழ பாதுகாப்பு அரண்கள் புதிது புதிதாக முளைக்கத் தொடங்கின. அவை இன்றுவரை அசைக்க முடியாத அளவிற்கு வேரூன்றி நிற்கின்றன. 1995 இல் இருந்து முழு வளங்களும் இழக்க நேரிட்டது. இராமநாதன் கல்லூரி அகதி முகாமாக மாறியது. தளபாடங்கள் அகதிகளின் அடுப்புக்குள் சென்றன.

மீண்டும் இந்நிலைமையில் இராமநாதன் வளாகத்தில் இரு அலுமாரிகளுடனும், சொற்ப தளபாடங்களுடனும் தன் செயற்பாட்டை பல எதிர்ப்புக்களின் மத்தியில் தொடங்கியது. மாணவர்களும், ஆசிரியர்களும் சிதறுண்டு பல பாகங்களிலும் தற்காலிகமாக தம் வாழ்விடங்களைத் தேடிக்கொண்ட நிலையில் பெரும் சிரமங்களின மத்தியிலும் வருகை தரும் இவர்களுக்குப் போதி கட்டட, தளபாட, மலசலகூட வசதிகளற்ற நிலையில் இருப்பதைக் கண்டு செயற்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையுருவானது. மாணவரதும் ஆசிரியரதும் வீழ்ச்சி, மனங்களில் பயத்தைச் சுமந்தபடி வருகின்ற நிலைமையும் கல்லூரி மீது பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

நிர்வாக மாற்றம் புதிய அதிபர் வருகையோடு மெல்ல மெல்ல நம்பிக்கையை துளிர்விடத் தூண்டியது. மாற்றானது வளாகமாயினும், கிடைத்த உதவிகள் கொண்டு தற்காலிக கொட்டகைகள், மலசலகூடம், குடிநீர் வசதி, திருத்தப்பட்ட மைதானம் என்பன வளாகத்தை அணிசெய்தன. குடாநாடெங்கும் பரவியிருந்த மாணவர் சிறிது சிறிதாகத் தம்மைக் கல்லூரியில் இணைத்துக்கொள்கின்றனர். ஆசிரிய ஆளணியும் மெல்ல மெல்ல அதிகரிக்கத் தொடங்குகிறது. வளங்கள் போதுமானவையாக இல்லாதபோதும் சகோதர பாடசாலை வளங்களைப் பயன்படுத்தி உயர்தர மாணவர் கல்வி நடைபெறலாயிற்று. பரீட்சைகளுக்கு மட்டுமல்ல போட்டிகள் பலவற்றிற்கும் மாணவர்கள் முகங்கொடுக்கின்றனர். கடின முயற்சியின் விளைவால் வருகின்றன நற்பேறுகள். இராமநாதன் கல்லூாயில் யூனியன் கல்லூரி தனக்கென ஒரு இருப்பிடத்தை ஸ்திரமாக்கிக் கொண்டிருக்கிற வேளையில் வருடங்கள் ஆறு ஆற்றொனாத் தடைகளின் மத்தியில் கல்லூரி தன் செயற்பாட்டை மேற்கொண்டது. ஆனாலும் மனங்களின் ஆறுதல், மாணவர் தம் அறிவு, திறன், வெளிப்பாடுகள் யாவும் அதீத வளர்ச்சியைக் காட்டியமையையே கல்லூரிச் செயற்பாடுகள் பற்றி எங்கும் கதை; அனுமதிபெற வரும் மாணவர் எண்ணிக்கையில் எழுச்சி; வளர்ச்சி இவை கல்லூரிப்புகழை கடல்கடந்தும் பரப்பி நிற்கின்றன.

அரசியல்வாதிகள், கல்வித்திணைக்களம், மண்ணை நேசிப்பவர்கள் ஆகியோரின் உந்தல்களால் 2002 புரட்டாதித் திங்கள் 10ம் நாள் கல்லூரி மீண்டும் சொந்த இடமேகுகிறது. சொப்பனத்திலும் காணமுடியாத நிலையில் கல்லூரி பரந்து விரிந்த வனாந்தரங்களின் நடுவே யுத்தவடுக்கள் சுமந்து காக்கிச்சட்டைக்காரர் நடமாடும் மனிதரோ, மிருகங்களோ நடமாடாத சூனியப் பிரதேசமாகக் காட்சி தருகிறது. கல்லூரியின் நிர்வாக மண்டபம், மலாயன் கட்டிடம், நூல் நிலையம், விஞ்ஞான ஆய்வுகூடம், விடுதிகள், வகுப்பறைகள், மனையியல்கூடம் எல்லாம் கற்குவியல்களாகவும், வனாந்தரப் பிரதேசமாகவும், கல்லூரி நிலையிழந்து, சோபையிழந்து யூனியன் கல்லூரி என அடையாளம் தெரியாத அளவுக்கு உருமாற்றம் அடைந்து காணப்பட்டது. எஞ்சிய கட்டடங்களும் எலும்புக்கூடுகளாகக் காணப்பட்டன. வகுப்பறை மதுபானசாலைகளாகவும், மலசலகூடங்களாகவும், சிற்றுண்டிச்சாலைகளாகவும் மாற்றியமைக்கப்பட்டிருந்தன. கல்லூரிக்கு அழகுபடுத்திய 200 வருட பழமைவாய்ந்த மலைவேம்புகள் சூறையாடப்பட்டிருந்தன. கல்லூரி வளாகமே எல்லைப்படுத்தலின்றிய

பிரதேசமாகக் காணப்பட்டது. கல்லூரி நிலைகண்டு விரைந்து செயலாற்றுகின்றது கல்லூரிச் சமூகம். கற்றல், கற்பித்தல் நிலை நிகழ்வுகள் தொடர்கின்றன. கல்லூரிக்கு வெளியே பாதுகாப்புக் கெடுபிடிகள் சூடுபிடிக்கத் தொடங்குகின்றன. அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர் தவிர்ந்த ஏனையோரது வருகைக்குத் தடைவிதிக்கப்படுகின்றது. வாகனங்கள் யாவும் 1000 மீற்றருக்கப்பால் நிறுத்தப் படுகின்றன. அடையாளங்கள் காண அட்டைகள் வழங்கப்படுகின்றன. ஆட்களை மேலிருந்து கீழ் சோதனை செய்யும் நிலையும் தொடர்கின்றன. ஆனாலும் முன்னர் குறிப்பிட்டது போன்று நம்பிக்கையோது வருகை தரும் மாணவருக்கான கல்வி வசதிகள் நிர்வாகத்தால் செய்து தரப்படுகின்றன.

ஆட்சியாளர்களாலும், அரசியல்வாதிகளாலும், கல்வியியலாளர்களாலும் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் எம் கல்லூரிக்கு கைகொடுக்காதபோதும் எந்த நேரத்திலும் அபாயம் வரலாம் என்று தெரிந்திருந்தும் நம்பிக்கையோடு தம் பிள்ளைகளை அனுப்பி வரும் பெற்றோரதும் பழைய மாணவர், அபிவிருத்திச் சங்கத்தினர் நலன் விரும்பிகளதும் ஆதரவும் உதவும் மனப்பாங்கும் இருக்கும் வரை கல்லூரி தன் வளர்ச்சியில் வீழ்ச்சியைக் கண்டுவிடாது.

கடந்த தசாப்தகாலத்து முடிவுகள் யாவற்றையும் பார்க்குமிடத்து அவை யாவும் ஏற்றம்பெற்றே செல்கின்றன. காலம் ஒன்றுகூட கல்லூரி பெற்றுக்கொள்ளும் சாதனையும் கூடிச்சென்றது. மாணவர் ஒவ்வொருவரதும் மனங்களில் தம்மாலும் முடியும் என்ற நம்பிக்கை, "பயிற்சி திறன் வளர்க்கும் முயற்சி திருவினையாக்கும்" என்ற வாக்கு, இவை யாவற்றுக்கும் மேலாக உந்து சக்தியாக உழைத்து நிற்கும் ஆசிரியர் குழாம் யாவும் இன்றைய வளர்ச்சிக்கு உதவி நிற்கின்றன என்பதில் மிகையேதுமில்லை.

கலைத்திட்டத்தைப் பொறுத்தவரையில் க.பொ.த (சா/த) ஆயினும் சரி க.பொ.த (உ/த) ஆயினும் சரி, மாகாண மட்டப் பரீட்சையாயினும் சரி மாணவர் சிறந்த பெறுபேறுகள் பெற்றுவருவதும், அத்துடன் பாடரீதியாக சித்திவீதம் உயர்ந்து செல்வதையும் காணக்கூடியதாகவுள்ளது (அதிபர் அறிக்கை - 2007). உயர்கல்விக்காகப் பல்கலைக் கழக அனுமதி பெறுவோரது தொகையும் அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது. O/L பரீட்சையில் கடந்த 8 வருடங்களாக வலிகாம் கல்வி வலயத்தில் முதல் இடம் கிடைத்ததுடன், மாவட்ட வமட்டத்தில் முதல் ஐந்து இடங்களுக்குள் தனது இடத்தை எமது கல்லூரி தக்கவைத்துக் கொள்கிறது.

இணைப்பாடவிதானத்தைப் பொறுத்தவரையில் இதுவரையிருந்த நிலைமை மாறி மாணவர்கள் பெற்றுவரும் சாதனைகள் கல்லூரி வளர்ச்சியில் பாரிய பங்களிப்பைக் காட்டிநிற்கின்றது. வலைப்பந்தாட்ட அணிகள் கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களையும் தாண்டி மாகாண மட்டத்தில் 1998 இலிருந்து இன்று வரை தொடர்ச்சியாக வெற்றிக்கேடயங்களைப் பெற்றதுடன், 2005 இல் தேசிய மட்டத்தில்

மூன்றாம் இடம் பெற்றமையும், மேசைப்பந்தாட்ட அணி 2006, 2007 இல் மாகாணத்தில் முதலிடம் பெற்றமையும், மெய்வன்மைப் போட்டிகளில் 2005, 2006, 2007 இல் மாகாணப் போட்டிகளில் வெற்றியீட்டி தேசியப் போட்டிகளில் பங்குகொண்டமை, மேலும் சதுரங்கம், துடுப்பாட்டம், காற்பந்து, பூப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக் களிலும் சாதனைகளை நிலைநாட்டியது.

கல்விப்புலத்தினரால் நடாத்தப்படும், தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள், கணித விஞ்ஞானப் போட்டிகள், வணிகப் போட்டிகள், சித்திர ஆக்கத்திறன் போட்டிகள், மனைப்பொருளியல் போட்டிகள் போன்றவற்றில் வெற்றிகள் குவிந்து வருகின்றமை கல்லூரியின் வளர்ச்சிப்போக்கின் ஆதாரங்களாகும். 1997 இல் இருந்து இன்றுவரை தங்கங்களையும், வெள்ளிகளையும், வெண்கலத்தையும் தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகளிலும், ஆங்கிலதினப் போட்டியில் 2005 இல் தங்கத்தையும் பெற்றுக்கொண்டது கல்லூரி.

இந்த வெற்றிகளை ஒப்பீட்டு ரீதியில் நோக்குமிடத்து கோட் மட்டத்தில் மட்டுமல்ல, வலிகாம வலயத்திலும் எமது கல்லூரி முன்னணியில் திகழ்வதைக் காணலாம். தனியார் அமைப்புகளாலும், நிறுவனங்களாலும் நடாத்தப்படும் போட்டிகளிலும் கல்லூரி மாணவர் பங்குகொண்டு பரிசில்கள் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. 1998, 2006 இல் "ஹெல்ப்ஏஜ்" கட்டுரைப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றமையும், 2004 இல் சின்மயா மிஷன் நடாத்திய தேசியப் போட்களில் முதலாம், இரண்டாம் இடங்களைப்பெற்றமையும், கடந்த தசாப்த பதிவுகளாகும்.

மக்கள் வங்கியின் "சிசுஉதான சாதனையாளர் விருது" 2005 இல் எமது கல்லூரி மாணவி செல்வி.ஜீவிகா அவர்களுக்கும், 2006 இலும் எமது கல்லூரி மாணவி செல்வி.இ.மைதிலி அவர்கட்கும் கிடைக்கப்பெற்றமையும், மாவட்ட, தேசிய மட்டப் பதிவுகளாகும். ஜனாதிபதி சாரணர் விருது 2003, 2006, 2007 இல் முறையே செல்வன்கள் ந.தேவரூபன், ஆ.தர்சன், இ.அஜன் ஆகியோர் பெற்றுக்கொண்டமையும் கல்லூரியின் சாரணியத்தின் உயர்ச்சிக்குச் சான்றாகும்.

இத்தகைய உயர்ச்சிகளுக்கு உரிய வாய்ப்புகள், கல்லூரி வளாகத்தில் மறுக்கப்பட்ட நிலையிலும் விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும், தொடர் பயிற்சியும் பெற்று களங்கள் சந்தித்து வரும் மாணவர்களின் பங்கு குறிப்பிடத் தக்கவை. நகர்ப்புறப் பாடசாலைகளை மையமாகக் கொண்டு குடாநாட்டின் தென்பகுதி நோக்கி பயணம் செய்யும் மாணவர்கள் மத்தியில், பொருளாதார நெருக்கீடுகள் கொண்ட குடும்பங்களிலிருந்த வரும் இம்மாணவர்களுக்காக இவர்தம் எதிர்கால உயர்ச்சிக்காக கல்லூரி ஆவன செய்துவருகிறது.

இம்மாணவரது நலன்களைக் கருத்திற்கொண்டு அவர்கள் திறன் அறிந்து, தகுதியறிந்து அவர்களுக்கான கற்றலுக்கு வழிகாட்டி மேலதிக நேரங்களை

இவர்களுக்காகச் செலவழித்து அர்ப்பணிப்புள்ள சிந்தையுடைய ஆசிரியர் குழாமும், இக்கட்டான காலகட்டங்களில் பணிகள் முடக்கப்பட்ட காலங்களில் துரித நடவடிக் கைகளை மேற்கொண்டு கல்லூரி உயர்ச்சிகள் சரிந்துவிடாது உதவிநிற்கின்ற நிர்வாகமும் கடந்த தசாப்தத்தில் ஆற்றியவை பற்பல. இவை மட்டுமல்ல, பௌதீக வள ரீதியில் வளாகத்தில் பிரவேசிப்பவர் பிரமிக்கத்தக்க வகையில் அழகான முறையில் திட்டமிடப்பட்டு புதிய மாடிக்கட்டடங்களாகவும் விஞ்ஞானகூடம், வகுப்பறைகள், கணனி அறை, நூல் நிலையம், கட்புல செவிப்புல அறை, மனையியல் கூடம், ஆலய வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயக்கட்டிடம் என்பவற்றுடன் புதுப்பொலிவு பெற்றுக் காட்சிதருகின்றது. மற்றும் கற்பித்தல் சாதனங்கள், நிர்வாகத் தளபாடங்கள், கட்புல செவிப்புல சாதனங்கள், பாடசாலைக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் கல்லூரி திகழ்கிறது. தற்போது வளாகத்தின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு பாடசாலைக்குக் கேற் போடப்பட்டு கல்லூரி புதிய வடிவத்தில் தோற்றமளிக்கிறது.

கல்லூரியின் உயர்ச்சியில் கைகொடுப்போரான பழைய மாணவர் சங்கங்களில் கடல்கடந்த நாடுகளில் வாழும் கனடா, இலண்டன் கிளைகளது உருவாக்கமும் கடந்த பத்தாண்டுகளில் நிகழப்பெற்றவை. இக்கிளைகள் கல்லூரித் தேவையறிந்து உதவி நிற்பது குறிப்பிடத்தக்கது.

1996 இற்குப் பிற்பட்ட இந்த வளர்ச்சிப்போக்கிற்கு குறிப்பிடத்தக்க காரண கர்த்தாவாக அமைந்தவர், நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்ற மனத்துனிவும், எத்தகை பிரச்சினைகளாயினும் அவற்றை எதிர்கொண்டு செயலாற்றும் வல்லமையும், மாணவர்களால் இவ்வளவுதான் சுமக்கமுடியும் என்றறிந்து அவர்களை அவ்வத் துறைகளில் கற்றலை மேற்கொள்ள வழிகாட்டும், களங்களில் நின்று மாணவர் களுக்கு உற்சாகம் கொடுத்துப் பாராட்டி, கௌரவம் அளிக்கும், மாணவர்களை மட்டுமல்ல ஆசிரியர்தம் செயற்பாங்குகளுக்கும் பாராட்டும் கௌரவமும் அளிக்கும், இத்தனைக்கும் மேலாக திறந்த நிர்வாகமும், பரவலான செயற்பாங்குக்கு வழிகாட்டியும், குடும்பத்தை விட கல்லூரியை அதிகம் நேசிக்கின்ற அர்ப்பணிப்புள்ள சிந்தனை கொண்ட தற்போதைய அதிபர் திரு.சு.புண்ணியசீலன் அவர்களே காரணம் என்பதில் மிகையேதுமில்லை.

இவ்வகையில் கடந்த பத்தாண்டுகளில் கல்லூரி வருடாந்தம் தம் வளர்ச்சிப் போக்கை அதிகரித்தது. அது இனிவரும் காலங்களிலும் தொடரும் என்பதில் ஐயமேதுமில்லை.

"வெற்றிமேல் வெற்றி நல்கும் எங்கள் கல்லூரி அன்னை நீடூழி வாழ்க"

**திரு. இ. சண்முகேஸ்வரன்**
பிரதிஅதிபர்,
யா/யூனியன் கல்லூரி.
தெல்லிப்பழை

# TUTORIAL STAFF

| | | |
|---|---|---|
| 1. | Mr.S.Punniyaseelan (Principal) | B.Ed (Hons), S.L.P.S I |
| 2. | Mr.R.Shanmugeswaran (Deputy Principal) | B.Sc, Dip.In.Ed, M.Ed, S.L.T.S I |
| 3. | Mr.V.Chandrasekar (Vice Principal) | B.Sc, Dip.In.Ed, M.Ed, S.L.T.S 2 (II) |
| 4. | Mrs.N.Sivagnanarajah (Sectional head) | Sp.Trd. Life Skill, S.L.T.S I |
| 5. | Miss.P.Elayathamby (Sectional Head) | B.A, Dip.In.Ed, S.L.T.S I |
| 6. | Mr.S.Jeyaruban (Sectional Head) | B.A, Dip.In.Ed, S.L.T.S 2 (I) |
| 7. | Mr.A.Thayaparan | B.Sc, Dip.In.Ed, S.L.T.S 2 (II) |
| 8. | Mr.K.Seeralan | Sp.Trd. Maths, S.L.T.S 2 (II) |
| 9. | Mr.N.Manoranjithan | B.A (Hons), Dip.In.Ed, M.A, S.L.T.S 2 (II) |
| 10. | Mr.B.Tharmaseelan | B.Sc, Dip.In.Ed, S.L.T.S 2 (II) |
| 11. | Mr.E.Anushanthan (Pandit, Saivapulavar) | B.A (Hons), Sp.Trd.Tamil, S.L.T.S 3 (I) |
| 12. | Mr.R.Navaketheeswaran | B.AF, Dip.In.Ed, S.L.T.S 2 (II) |
| 13. | Mr.P.Arunthavam | B.A, Sp.Trd. Agriculture, S.L.T.S 2 (II) |
| 14. | Mr.M.Sivanantham | Sp.Trd.English, S.L.T.S 2 (II) |
| 15. | Mr.M.Joojin Calistrus | B.Sc, S.L.T.S 3 (I) |
| 16. | Mr.T.Mathiyalagan | B.Sc, S.L.T.S 3 (I) |
| 17. | Mr.R.Rajarajan | B.A (Hons), Dip.In.Ed, S.L.T.S 3 (I) |
| 18. | Mr.R.Vijendran | Dip.In.Teach (Sc), S.L.T.S 3 (I) |
| 19. | Mr.M.Raveeswaran | Dip.In.Teach (Sc), S.L.T.S 3 (I) |
| 20. | Mr.P.Vamadevan | Dip.In.Teach (Social), S.L.T.S 3 (I) |
| 21. | Mr.V.Thusyanthan | B.Sc, S.L.T.S 3 (I) |
| 22. | Mr.K.Lampotharan | (Part Time English Teacher) |
| 23. | Miss.J.Senthilvel | B.Com, Dip.In.Ed, S.L.T.S I |
| 24. | Mrs.L.S.Lloyd | Sp.Trd. Art, S.L.T.S 2 (II) |
| 25. | Mrs.J.Jeyatharan | B.A, Dip.In.Ed, Sp.Trd.Phy.Edu, S.L.T.S 2 (II) |
| 26. | Mrs.K.Nathasorupan | B.A, Dip.In.Ed, S.L.T.S 2 (I) |
| 27. | Mrs.K.Thevathasan | Dip.In.Music, Dip.In.Ed, S.L.T.S I |
| 28. | Mrs.N.Kamalanathan | Sp.Trd.Science, S.L.T.S I |
| 29. | Mrs.M.Premkumar | Dip.In.Dance, Dip.In.Ed, S.L.T.S 2 (II) |
| 30. | Mrs.J.Thavendrarajah | B.A (Hons), Dip.In.Ed, S.L.T.S 2 (II) |
| 31. | Mrs.N.Lister Joseph | B.A (Hons), Dip.In.Ed, S.L.T.S 2 (II) |
| 32. | Miss.V.Vaithilingam | B.A, Sp.Trd.English, Dip.In.Ed, S.L.T.S 2 (II) |
| 33. | Mrs.M.Raveendran | B.Sc, Dip.In.Ed, S.L.T.S 2 (II) |
| 34. | Miss.K.Sivasamy | B.A, Dip.In.Ed, S.L.T.S 2 (I) |
| 35. | Mrs.S.Ganeshamoorthy | B.A, Dip.In.Ed, S.L.T.S 2 (II) |
| 36. | Miss.J.Murugaiah | B.A (Hons), S.L.T.S 3 (I) |

| | | |
|---|---|---|
| 37. | Mrs.R.Tharmaseelan | Sp.Trd. Home Economics, S.L.T.S 3 (I) |
| 38. | Mrs.J.Thavalingam | Sp.Trd.Maths, S.L.T.S 3 (I) |
| 39. | Miss.A.Sarvajini | Sp.Trd.Science, S.L.T.S 3 (I) |
| 40. | Mrs.A.C.Volantine | B.Sc, S.L.T.S 3 (I) |
| 41. | Miss.P.Parameswaran | B.F.A, S.L.T.S 3 (I) |
| 42.. | Mrs.C.Jeyamohan | B.A, S.L.T.S 3 (I) |
| 43. | Mrs.R.Pakeetharan | B.A, S.L.T.S 3 (I) |
| 44. | Miss.P.Pathmanathan (Teacher Librarian) | B.A (Hons), S.L.T.S 3 (I) |

## PLANNING AND FINANCIAL ASSISTANTS

| | | |
|---|---|---|
| 1. | Mrs.Selvarajane Ravirajan | B.B.A (Hons) |
| 2. | Mrs.Nishanthi Ramesh | B.Com |

## OTHER STAFF

| | | | |
|---|---|---|---|
| 1. | Mr.A.Panchadsaram | Lab Assistant | Grade I |
| 2. | Mr.T.Thavarajan | School Labourer | Grade I |
| 3. | Mr.I.Pushparajah | School Labourer | Grade III |
| 4. | Mr.R.Yogaratnam | School Labourer | Grade III |
| 5. | Mr.M.Kamalanathan | School Labourer | Grade III |

# J/PON PARAMANANTHAR M.V. KURUMPASIDDY

## TUTORIAL STAFF

| | | |
|---|---|---|
| 1. | Mr.S.Ramanathan (Principal) | B.Com, Dip.In.Ed, S.L.T.S 2 (II) |
| 2. | Mr.N.Thavasothinathan | B.A, Primary Trd, Dip.In.Ed, S.L.T.S 2 (II) |
| 3. | Miss.P.Thavaranjini | Sp.Trd.Science, S.L.T.S 2 (II) |

# நவிலும் நன்றிகள்

கல்லூரியின் இன்றைய உயர்ச்சிக்கு அருளும், ஆசிகளும் நல்கும் விக்கினங்கள் தீர்த்திடும் அன்னை புவனேஸ்வரிக்கு முதற்கண் சிரந்தாழ்த்தய நன்றிகளைத் தெரிவித்து இன்றைய பரிசுத்தினத்திற்கு மதிப்பளித்து கடமைகளை எமக்காக ஒதுக்கி எம் அழைப்பையேற்று எம் கல்லூரிக்கு கௌரவமளித்திருக்கும் பிரதம அதிதி அவர்கட்கும், கல்லூரி வளர்ச்சியில் அக்கறை காட்டும் சிறப்பு விருந்தினர்கட்கும், ஆசிகள் நல்கிய அனைவருக்கும் கல்லூரி சார்பில் தனித்தனி நன்றிகள் உரித்தாகுக.

அத்துடன் கல்லூரி மீது அக்கறை கொண்டு தேவைகளறிந்து சேவைகளும், பொற்குவைகளும், பொருள் வளங்களும் உதவிடும் பழைய மாணவர்கட்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும், ஆர்வலர், அபிமானிகள், நல்லிதயங்கள் அனைவருக்கும் மனமுவந்த நன்றிகள்.

இன்றைய தினம் வெளியாகும் "யூனியன்ஸ்" நான்காவது மலர் மலர்ந்திட முழு ஆதரவு நல்கிய லண்டன் பழைய மாணவர் சங்கத்தினருக்கும், ஒத்துழைத்த மாணவர்கள், ஆசிரியர்களுக்கும், மலர்க்குழுவினருக்கும், விளம்பரங்கள் அன்பளிப்புகள் நல்கிய அன்புள்ளங்களுக்கும், ஆசிகளும் வாழ்த்துரைகளும் தந்திட்ட மதிப்புரியோருக்கும், இந்நூலை அச்சிட்ட Sunshine Graphics (Inuvil) க்கும் கல்லூரி சார்பில் நன்றிகள் கூறிக்கொள்கின்றோம்.

வணக்கம்.

**2007.10.15**

**யா/யூனியன் கல்லூரி,**
**தெல்லிப்பழை.**

# கல்லூரிக் கீதம்

இராகம்: ஆனந்தபைரவி　　　　தாளம்: ஆதி

### பல்லவி

வாழ்த்தி வணங்கி மகிழ்வோம் - உவந்துதலை
தாழ்த்திப் பணிந்து தொழுவோம் - யூனியன் தாயை - வாழ்

### அநுபல்லவி

தெல்லி மணிநகர்க்கோர் திலகமெனத் - திகழ்ந்து
செல்வங் கொழிக்குங் கலைக் கோயிற் பணிபுரிந்து - வாழ்

### சரணம்

ஆதி பகவன் வழி அறிவுச் சுடர்விரித்தே
நீதி நெறியில் நெஞ்ச நிறைவுக் கருளளித்து
சாதி சமய இன சமரச ஞான மொளிர்
சோதிச் சுடரி லீசன் சுருதிப் பொருளுணர்ந்தே - வாழ்

வாழ்வுக் கிலக்கணமாய் வளர்ச்சிக் கிலக்கணமாய்
ஆழ்கடல் லுக்குயிரை அர்ப்பணித் திங்குயிர்த்தே
சூழிருள் கொய்தேயன்று சுடரொளி ஏத்த வந்த
ஊளிய ருள்ளமென உயர்ந்த தன்னை வாழ்கவென்றே - வாழ்

அன்பின் வழியறிந்தும் அறனின் திறமுணர்ந்தும்
பண்பின் பண்ணறிந்தும் பாலித் தளித்து நின்றே
இன்ப நினைவலைகள் இதயத் தொலிக்க வென்று
நட்புக் கினிய தாயை நாடியணைந்து நின்றே - வாழ்

இயற்றியவர்: கவிஞர் அம்பி

*Sunshine Graphics - K.K.S Road, Inuvil. Tel: 0777 592593*


# இ.ச.பேரம்பலம்

## சக நிறுவனம்



மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

மிதிவண்டிகள், மிதிவண்டி உதிரிப்பாகங்கள்
மற்று வானொலிப் பெட்டிகள்,
தொலைக்காட்சிப் பெட்டிகள்
மற்றும் நாளாவித மின்சாரப் பொருட்கள்



50, 52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலை.பே.இல : 021-222-2988
பக்ஸ் இல : 021-222-2368

நீங்கள் ஏன் எமது வாடிக்கையாளர் ஆகக்கூடாது?

BOC

## இதோ எங்கள் உறுதித்தன்மைக்கான

# சான்றுகள்!

இலங்கையின் முதற்தர வங்கி (No. 01 வங்கி)

01. வங்கியாளர்களைத் தரப்படுத்தலில் அதியுயர் மதிப்பீடு பெற்ற வங்கி
02. ரூ.400 பில்லியனுக்கு மேற்பட்ட மிகப்பெரிய சொத்துத்தளம் (40,000 கோடி ரூபாய்கள்)
03. ஒப்பீட்டு ரீதியில் உள்நாட்டு வங்கிகளிடையே அதிகூடிய தொகையான ரூ.18 பில்லியன் கொண்ட முதலீட்டு அடித்தளம்
04. ரூ.7.3 பில்லியன் வரையான உயர்ந்த தனிநபர் கடன் வசதி
05. 62 லட்சத்துக்கு அதிகமான வாடிக்கையாளரை கொண்ட வங்கி
06. 500 ற்கு அதிகமான சேவை நிலையங்களில் ஒன்றிணைக்கப்பட்ட பாரிய வங்கிச்சேவை
07. 50% ற்கு அதிகமான பங்குகளைத் தன்னகத்தே கொண்டு திறைசேரியின் வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கலில் தலைமை வகிக்கும் வங்கி.
08. கடல் கடந்த வங்கிச் சேவையில் 38 % க்கும் அதிகமான சந்தைப் பங்கை கொண்ட வங்கி.
09. இலங்கையின் நிதி வர்த்தகத்தில் 33 % க்கும் அதிகமான சந்தைப்பங்கு
10. வெளிநாட்டு பண அனுப்புகையில் 58 % ற்கு அதிகமான பங்கினை உள்வாங்கும் வங்கி
11. இலங்கையின் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் 32% த்தினை தன்னகத்தே கொண்டது
12. ரூ.230 பில்லியனுக்கு (23,000 கோடி ரூபா) அதிகமான கடன்களை வாடிக்கையாளருக்கு வழங்கியுள்ள வங்கி
13. 550ற்கு அதிகமான வெளிநாட்டு முகவர்களுடன் உலகளாவிய வலைப்பின்னல் உள்ள வங்கி
14. இலண்டனில் கிளையை கொண்டுள்ள ஒரேயொரு சுதேச வங்கி
15. சர்வதேச நிதி நிறுவனங்களின் கணக்கியல் தரப்படுத்தலில் AA (LKA) எனும் உயரிய ஸ்தானத்தை கொண்ட முதன்மைச் சுதேச வங்கி

**இன்றே எமது வாடிக்கையாளராகிப் பயனடையுங்கள்..**

*Visit our new showroom*

# சுந்தர்சன்

# SUNDHARSON

**Distributors of Electrical items and Electrical Appliances, Water Pumps, Sanitary Ware, Floor & Wall Tiles**

DISTRIBUTORS FOR ANTON PVC PIPES & FITTINGS

DISTRIBUTORS FOR KELANI CABLES

AUTHORISED DEALERS FOR LG ABANS



**யாழ் வீதி, மானிப்பாய்**

**Jaffna Road, Manipay**

**T.P. No : 021 222 2751, 4591569**

ரஞ்சனாஸ் புடவையகம்

புடவைத் தினிசுகளின் சங்கமம்

சிறந்த புடவைத் தெரிவுக்கு
இன்றே நாடுங்கள்

# RANJANAS TEX




*Thank You Visit Again*

இல 4A, மத்திய சந்தை
சுன்னாகம்.

*Tel : 021-2226278*

**NO 4A, Centrl Market**
**Chunnakam.**


கொமர்ஷல் வங்கி
சுன்னாகம்
8 ஆவது ஆண்டாக
1 ஆவது இடம்
நியூயோர்க்கில் அமைந்துள்ள குளோபல் பினான்ஸ் சஞ்சிகை தொடர்ச்சியான 8 ஆவது ஆண்டாக இலங்கையின் தலைசிறந்த வங்கி என்ற மதிப்பார்ந்த விருதை எமக்கு வழங்கி யுள்ளது. நாம் இச் சாதனையினால் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்துள்ள அதே வேளையில், வாடிக்கையாளர்களாகிய உங் களுக்கும் இப்புகழில் பங்கு உண்டு என்பதை ஏற்றுக் கொள்கிறோம். நீங்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் எம்முடன் கைகோர்த்து முன்னேறிச் செல்வதில் காட்டும் ஆர்வத்திற்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.
GLOBAL FINANCE
COMMERCIAL BANK

EDUCATIONAL & CAREER ADVANCEMENT LOANS

Your Survival
in the
Future Economy
entirely depends on

KNOWLEDGE.

HNB
offers you an
opportunity
to

ENHANCE YOUR COMPETITIVENESS !




For
School Levers
Under graduates
& Graduates

HATTON NATIONAL BANK LTD
CHUNNAKAM

No.110-116 K K S Road,Chunnakam.
Tel:021-2226473/9975 Fax:021-4591515

HNB

HNB Your Partner in Progress

நாட்டின் எதிர்கால

தூண்களாக உங்களுடன்

# என்றும் நாம் இருப்போம்!

மக்கள் வங்கி



## சிசு உதான

பிறந்த எதிர்கால சந்ததியின

"சிசு உதான" கணக்கு பற்றிய மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையை நாடுங்கள் அல்லது 2481320/2481447 என்ற தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொள்ளுங்கள்

மக்கள் மனமறிந்த வங்கி

# மக்கள் வங்கி

சகலவிதமான புடவை வகைகள், அழகு சாதனப் பொருட்கள் போன்றவற்றை இறக்குமதி செய்து மலிவான விலையில் விநியோகிப்பவர்கள்.

# சீமாட்டி புடவை அகம்





122 மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0094 21 222 2196
0094 21 222 2102

கிளை நிறுவனம் : மங்கை சில்க்ஸ்
15, நவீன சந்தை
மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

தேவையான மருந்துப் பொருட்களை சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

# ஜெகன் பார்மசி

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.